வெளியீடு 7-8-2001 Issued 7-8-2001

28/2002
935/02

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை நவம்பர் 10, 2000 – தொகுதி 110– எண் 2

Friday the 10th November, 2000 – Volume 110– No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

Y2I1,31 P00
P00·110·2
322457.

T.N.L.A. Debat
10-11-2000
V. 110 NO. 2

C

D
V211,31L pcc
pcc 110-2
222457

222457
10-11-2000

பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| வினாக்கள் - விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 179-218 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 8 முதல் 10 வரை) | 219-584 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) சத்துணவுப் பணியாளர்கள் தங்களை நிரந்தரப்படுத்தக் கோரி உண்ணாவிரதம் | 584 |
| (ஆ) ஓர் அமைச்சர்மீது கொடுக்கப்பட்ட புகார் | 603-605 |
| சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| பத்திரப் பதிவு அலுவலகங்களில் வீட்டுமனை ஆவணங்களைப் பதிவு செய்ய உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெறுவதில் இடர்ப்பாடுகள் | 585-603 |
| திரு. சி. ஞானசேகரன் | 585-588, 592 599, 601 |
| *திரு. கே. சுப்பராயன் | 588-594, 602 |
| *மாண்புமிகு திரு. கோ. சி. மணி | 590, 591, 593, 594, 602 |
| திரு. இரா. விசுவநாதன் | 595-596, 602 |
| *மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 596-603 |
| 4. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 605 |
| (ஆ) மனுக்கள் குழு | 606 |
| 5. அறிவிப்பு— | |
| தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆசெ.) | 606 |

பக்கங்கள்.

*6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 606-607

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பன்னிரெண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 607-608

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 608

(ஈ) தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 608-609

7. தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, **2000-2001** மற்றும் திருத்திய மதிப்பீடுகள், **1999-2000**, விவாதம்—தொடர்ச்சி — 609-676

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் — 609-613
திரு. மா. இராமச்சந்திரன் — 613-617
*திரு. கே. சுப்பராயன் — 617-623
*திரு. குழந்தை தமிழரசன் — 623-629
திரு. ஜி.கே. மணி — 629-633
*திரு. மு. அப்பாவு — 633-634, 637-639
திரு. ச. அழகிரி — 635-636
டாக்டர் அ. செல்லக்குமார் — 639-648, 674-675
திரு. ப. மோகன் கந்தசாமி — 648
திரு. சி. ஞானசேகரன் — 663
மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 620, 621-622, 634-635, 636-637, 641, 643, 644, 646-647, 649-673, 675-676

*8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—* — 676-679

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 25, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 நவம்பர் 10, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.

### 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் - விடைகள். வினா எண் 41, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**41—**

**பள்ளிகளுக்குக் கட்டட வசதி**

*25665—**திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி எமனேஸ்வரம் எஸ்.என்.வி. உயர்நிலைப்பள்ளி, பரமக்குடி அரசினர் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவை போதிய கட்டட வசதியின்றிச் செயல்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் கட்டடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2000 நவம்பர் 10

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி எமனேஸ்வரம் எஸ்.என்.வி. உயர்நிலைப்பள்ளி, பரமக்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவது சார்பாக இவ்வாண்டு இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் இசைவு பெறப்படின், மேற்காணும் பள்ளிகளுக்குக் கட்டட வசதி செய்து தரப்படும்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டத்திலே ஒரெயொரு பள்ளி என்ற பெருமை பெற்றது. சட்டமன்ற உறுப்பினர் நிதி, பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கூடுதல் அறைகள் நிறைய இடங்களில் கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆனால், அந்தப் பிரதானக் கட்டடமானது 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஓர் ஓட்டுக் கட்டடமாக இருக்கின்ற காரணத்தினாலே மாணவிகள் மர நிழலிலே படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும், இந்தப் பள்ளி சாலையைவிட இரண்டு அடி பள்ளத்திலே அமைந்திருக்கின்ற காரணத்தினாலே, மழை நீர் பள்ளிக்குள் புகுந்துவிடுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அதேபோல, எமனேஸ்வரம் எஸ்.என்.வி. உயர்நிலைப்பள்ளியினுடைய பிரதான கட்டடத்தை மட்டுமாவது அரசு நிதியில் இருந்து கட்டித்தர அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டில் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும். அந்தக் காலகட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றிய வேண்டுகோளை அரசுக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2000 நவம்பர் 10]

**42—**

### பாலிடெக்னிக்

*36758—**திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதிக்கு உட்பட்ட ஒரத்தநாடு வட்டம், ஊரணிபுரத்தில் ஒரு பாலிடெக்னிக் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்தப்பட்ட விடையை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தற்போது இல்லை, வரும் ஆண்டில் கருதப்படும்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டு கருதப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் சொல்லியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே பாலிடெக்னிக் இல்லை. கிராமங்கள் சூழ்ந்திருக்கிற பகுதி என்பதால் அந்தப் பகுதியில் அவசியம் அடுத்த ஆண்டு ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலிடெக்னிக் ஒவ்வொரு சிறுசிறு வட்டாரத்திலேயும் ஏற்படுத்துவது என்பது இயலாத ஒரு காரியம். இப்போது அந்த மாவட்டத்தில் வல்லத்தில் ஒரு பாலிடெக்னிக்; பட்டுக்கோட்டையில் ஒரு பாலிடெக்னிக்; திருமலைசமுத்திரத்தில் ஒரு பாலிடெக்னிக்; குருவடி என்ற ஊரில் Chamber of Commerce மூலமாக நடத்தப்படுகிற ஒரு பாலிடெக்னிக்; இவற்றில் 1020 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். ஏற்கெனவே உள்ள பாலிடெக்னிக்குகளில் 100-க்கு 55/60 விழுக்காடு இடங்களில்தான் மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான இடங்களில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறவில்லை. ஏறத்தாழ நூற்றுக்கு 65-க்கு மேல் மாணவர்கள் சேரவில்லை. எனவே, புதிய பாலிடெக்னிக்குகள்

தொடங்குவது என்பதை அரசு மேற்கொள்வதற்கு அவசியமான காரணம் இல்லை என்ற விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**43—**

**குடிநீர்த் திட்டம்**

*2412—**திரு. இரா. தாமரைக்கனி:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்காக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?*

*(ஆ) மேற்படி குடிநீர்த் திட்ட வேலை எப்பொழுது முடிவடையும்?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி மம்சாபுரம் பேரூராட்சி குடிநீர்த் திட்டத்திற்குக் குறைந்தபட்சத் தேவை பூர்த்தி செய்யும் திட்டத்தின்கீழ் திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.66.50 இலட்சம் அரசால் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.58.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படித் திட்டப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டு 1-10-1999 அன்று இக்குடிநீர்த் திட்டம் பேரூராட்சியின்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9-35

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பேரூராட்சிக்கும், ஸ்ரீவில்லிபுத்தூர் நகரப் பேரூராட்சிக்கும் நீராதாரம், பையனாற்றின் படுகையிலே இருக்கிறது. அங்கு, இரவும் பகலும் சமூக விரோதிகள் மணல் அள்ளுவதால், நீராதாரம் குறைவதற்குரிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, நிர்வாகம்—மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுக்கும், மணல் அள்ளுவதைத் தடுப்பதற்காக—ரெவின்யூ அதிகாரிகள், முனிசிபல் மற்றும் பேரூராட்சி அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகளை வைத்து, செல்லூலார் போன் மூலம், மணல் அள்ளுவதைத் தடுப்பதற்காக—நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்திருக்கிறது. ஆகவே, அரசு இதில் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. கோ. தளபதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**44—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

*24702—**திரு. கோ. தளபதி:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான நீராதாரம் தேடும் பணி நடைபெற்று வருகிறது. நீராதாரம் கண்டறியப்பட்டவுடன், திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி தொகுதியிலுள்ள கிராமப்புறங்களிலே, நிலத்தடி நீர் பற்றாக்குறை இருப்பதாலும், நிலத்தடி நீர் உப்பு நீராக இருப்பதாலும்,

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டே அமைச்சர் நிறைவேற்றித் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலிருந்தே, நீராதாரத்திற்கு எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பது தெரிய வருகிறது. எனவே, அதைக்கூட இப்போது இரண்டாகப் பிரித்து, நீராதாரத்தைப் புதிதாக உருவாக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதை அறிந்து, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீராதாரம் கிடைத்து விடுமானால், நிச்சயமாக அந்தத் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**45—**

### கரும்பு பயிரிட நிலம்

*35316—**திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருகில் புதிய சர்க்கரை ஆலைக்கு கரும்பு பயிரிடுவதற்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் இரண்டு புதிய கரும்பு சர்க்கரை ஆலைகள் தொடங்க, அருணாசலம் சர்க்கரை மற்றும் பன்னாரி அம்மன் சர்க்கரை ஆலை நிறுவனத்தினர் உரிமம் பெற்றுள்ளனர். அதில், அருணாசலம் சர்க்கரை ஆலைக்கு ஏற்கெனவே கரும்பு சாகுபடி பகுதி, ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. பன்னாரி அம்மன் சர்க்கரை ஆலைக்குக் கேட்கப்பட்டுள்ள கரும்பு விளையும் பகுதிகளை ஒதுக்கீடு செய்தால், அப்பகுதியில் ஏற்கெனவே இயங்கிவரும் ஆலைகளுக்குத் தேவையான கரும்பு பற்றாக்குறை ஏற்படும் என்பதால், பன்னாரி அம்மன் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு விளையும் பகுதியை ஒதுக்கீடு செய்ய இயலவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**46—**

### பயணியர் விடுதி

*26837—**திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர்-பொள்ளாச்சி செல்லும் வழியில் உள்ள குடிமங்கலம் ஒன்றியம், பெதப்பம்பட்டியில் P.A.P. நிதியின் மூலம் பயணியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**47—**

### வெள்ளத் தடுப்புச் சுவர்

*26942—**திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

சீர்காழி தொகுதி, வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில், காரைமேடு பகுதியில் வெள்ள உடைப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதி, காரைமேடு கிராம எல்லையில் உள்ள வெள்ளப்பள்ளம் உப்பனாறு தொலைவு 13.45 கி.மீ. வலது கரையில் வெள்ளக் காலங்களில் ஏற்படும் கரை அரிப்பைத் தடுப்பதற்கு இரண்டு அலைவாரிகள் ரூ.12 இலட்சம் செலவில் புதிதாகக் கட்ட திட்டம் ஆய்வில் உள்ளது. நிதிநிலைமைக்கேற்ப பணி எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, வெள்ளப்பள்ளம், உப்பனாற்றில் காரைமேடு என்ற பகுதியில், மேற்கே இருந்து செல்லக்கூடிய உப்பனாறு ஒரு முக்கத்தில் திரும்பி மீண்டும் வடக்காகச் செல்கிறது. அந்த இடம் ஆண்டுக்காண்டு வருகிற வெள்ளத்தினால் அரிப்பு ஏற்பட்டு, ஆண்டுக்காண்டு இழப்பு ஏற்படுகிறது. கரை உடைபடுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட ரூபாய் பத்து இலட்சத்திற்கு மேலாக செலவிடப்பட்டு கரை உயர்த்தப்பட்டது. அந்த இடத்திலே தடுப்புச் சுவர் மிக அவசியமானது. கட்டிக்கொடுத்தால் அந்தப் பகுதியிலே பல ஆயிரக்கணக்கான விவசாயப் பயிர்கள் காப்பாற்றப்படும். எனவே, இதற்கு அரசு அங்கீகாரம் அளித்து, உடனடியாக நடப்பாண்டிலேயே கட்டிக்கொடுக்க மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமையினுடைய அத்தியாவசியத்தை உணர்ந்துதான், அதற்கு 12 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. உடைப்பு ஏற்படாமல் தற்காலிகமாக நிறுத்துவதற்காக அங்கே மணல் மூட்டைகளையும், சவுக்குகளையும் இப்போது வைத்திருக்கிறோம். அந்த முக்கத்திலே திரும்புகிற பகுதியிலே உள்ள மணல் மேட்டை இப்போது வாரி இருக்கிறோம். எனவே, ஆறு வேறு பக்கமாகத் திரும்பிப் போகும்.



2000 நவம்பர் 10]

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**48—**

### அலுவலக இடமாற்றம்

*33306—**திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையிலிருந்த தொழிலாளர் நல அலுவலர் அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் என்ன?

(ஆ) மீண்டும் அந்த அலுவலகம் சிவகங்கையில் அமைக்கப்படுமா?

(இ) எப்பொழுது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு ஆணை (நிலை) எண் 51, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 31-3-1995-ல் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்க அரசு ஆணை வெளியிடப்பட்டது. அதில், அவ்வாரியத்தில் செயலாளராக நியமனம் செய்வதற்காக, ஒரு தொழிலாளர் இணை ஆணையர் பணியிடம் புதிதாக உருவாக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஒரு தொழிலாளர் அலுவலர் பதவியைச் சரண் செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது. தொழிலாளர் துறையைச் சார்ந்த மற்ற சமரக அலுவலர்களது தொழிற் தாவாக்களை ஒப்பிடுகையில், சிவகங்கை, தொழிலாளர் அலுவலர் அலுவலகத்தில் பெறப்பட்ட தொழிற் தாவாக்கள் குறைவாக இருந்த காரணத்தால், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்குப் புதியதாக ஏற்படுத்தப்பட்ட ஒரு தொழிலாளர் இணை ஆணையர் பணியிடத்திற்குப் பதிலாக, சிவகங்கை, தொழிலாளர் அலுவலர் பணியிடத்தைச் சரண் செய்யவும் மேற்படி தொழிலாளர் அலுவலரின் ஆட்சி எல்லையை இராமநாதபுரம் தொழிலாளர் அலுவலரின் ஆட்சி எல்லையுடன் இணைக்கவும் முடிவு செய்து, அரசாணை (டி) எண் 90, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (இ1) துறை, நாள் 3-2-1999-ல்

ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவ்வாறான சூழ்நிலையில்தான் சிவகங்கை தொழிலாளர் அலுவலரின் ஆட்சி எல்லையினை இராமநாதபுரம் தொழிலாளர் அலுவலரின் ஆட்சி எல்லையுடன் இணைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

(ஆ) மற்றும் (இ): மேலே கேள்வி (அ)-விற்கு அளித்துள்ள பதிலின் அடிப்படையில் இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டதற்குப் பின்னால், சிவகங்கை-இராமநாதபுரம் மாவட்ட தொழிலாளர் நல அலுவலகம் சிவகங்கையிலே இருந்தது. நீண்டகாலமாக இருந்த அலுவலகம், திடீரென்று மாற்றப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே தொழில் தாவாக்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், சிவகங்கையில் தனியாக ஒரு தொழிலாளர் நல அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் முன்பே குறிப்பிட்டேன். சிவகங்கையிலே தாவாக்கள் குறைவாக இருக்கிற காரணத்தால், அதை இராமநாதபுரத்துடன் ஒன்றாக இணைத்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிற கோரிக்கை, அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானத் தொழிலாளர்கள் வாரியத்திலே இருக்கக்கூடிய நிதியை மற்ற அமைப்புச்சாரா வாரியங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து கட்டட வாரியத்திலிருந்து எடுக்கப்படுகிற நிதி அனைத்து வாரியங்களுக்கும் பொதுவாகப் பயன்படுத்துகிற ஓர் ஏற்பாட்டை மாநில அரசு செய்து வருவதாகத் தெரிகிறது. பிற அமைப்புச்சாரா வாரியங்களில் இருக்கக்கூடிய Employer-ம் மாநில அரசும் நிதி உதவி செய்யாமல், அதற்குரிய சந்தாக்களை வசூலிக்காமல் கட்டட கட்டுமான வாரியத்தில் வசூலிக்கப்பட்டிருக்கிற, அந்த நிதியை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவது பொருத்தம் இல்லை என்று தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. இதுகுறித்து, அரசு ஏதாவது ஆலோசித்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த வாரிய உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, கட்டுமானத் தொழிலாளர்களுடைய வாரியத்திலே இருக்கக்கூடிய தொகையை மற்றதுடன் சேர்க்கிற ஒரு செயற்குறிப்பு இதுவரை இல்லை. ஆனால், மற்ற அனைத்துக்கும் சேர்த்து, வேறு ஒன்று தனியாக, அதாவது அனைத்துக்கும் இணைப்பாக ஒன்று, இதுபோன்று நிதியை வைத்துக்கொள்வதற்காக அமைக்கலாம் என்கின்ற பரிசீலனை அரசிடம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இலட்சக்கணக்கான கல் உடைக்கும் தொழிலாளர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் கட்டுமானத் தொழிலாளர்கள் வாரியத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், தங்களுக்குள்ள தனித்தன்மையை இழந்துவிட்டதாக அவர்கள் கருதுகிறார்கள். பல்வேறு கோரிக்கைகளையும் அரசுக்கு வைத்திருக்கிறார்கள். எனவே, கட்டுமானத் தொழிலாளர் வாரியத்திடமிருந்து பிரித்து, கல் உடைக்கும் தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானத் தொழிலாளர் வாரியத்துடன் சமீபத்தில் கூட்டம் நடைபெற்றபோது அதிலே கூட இதுபோன்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். கல் உடைக்கும் தொழிலாளர்களையும் அதிலே இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவராமன்.

**திரு. ஆர். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் போதுமான உறுப்பினர் இல்லாத காரணத்தினால் இராமநாதபுரத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். இப்போது சிவகங்கை மாவட்டம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, உலகம் போற்றும் உத்தம தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய திட்டத்தால்

[2000 நவம்பர் 10

பல்வேறு பயன்களைப் பெற்று தொழிற்சாலைகள் பெருகி வரக்கூடிய ஒரு மாவட்டமாக வளர்ந்து வருகிறது. ஆகவே, போதுமான எண்ணிக்கை வரப்பட்டால் உடனடியாக சிவகங்கை மாவட்டத்தில் அந்த அலுவலகம் தொடங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் பதில் கூறியிருக்கிறேன். அதுபோன்று எண்ணிக்கை பெருகுகின்றபோது, அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும் என்றும் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்காக, நல வாரியம் அமைக்கப்படும் என்று இந்தப் பேரவையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதுவரையிலும், அந்த நல வாரியம் அமைக்கப்படவில்லை. அமைக்கப்பட்டிருக்கின்ற வாரியங்களுக்கும் உறுப்பினர்களோ அல்லது அலுவலர்களோ நியமிக்கப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறதே அதுபற்றிய தகவலை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கான வாரியம் அமைப்பது குறித்து வருவாய்த் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கான தனி வாரியம் அமைப்பது, தொழிலாளர் நல இலாகாவின் பிரச்சினையாக இருந்தாலும்கூட அதிலே ரெவின்யூ அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, வருவாய்த் துறையின் மூலமாக அந்த வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்று கொள்கை முடிவு எடுக்கப்பட்டு இப்போது வாரியம் அமைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் முடிவடைந்துவிட்டன. 3 தரப்பு உறுப்பினர்கள் போட வேண்டும். அதுவும் போட்டாகிவிட்டது. வருகிற 14 ஆம் தேதி முதல்தான் வாரியம் இயங்க முடியும். காரணம், statutory requirement கொடுத்த notification-னுடைய period 14 ஆம் தேதி



2000 நவம்பர் 10]

முடிகிறது. விவசாயத் தொழிலாளர்களை Manual Labour Schedule-லே இணைத்து notification கொடுத்து அது complete ஆவது 14 ஆம் தேதி. ஆகையினாலே 14 ஆம் தேதியிலிருந்து நம்முடைய முதல்வர் அவர்கள் அது குறித்து முறையான அறிவிப்பை சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு விதமான வாரியங்கள் இன்று அமைக்கப்பட்டுள்ளன. அதிலும், குறிப்பாக தையல் கலைஞர்களுக்கான வாரியம், வரப்போகின்ற நம்முடைய விவசாயத் தொழிலாளர்களுக்கான வாரியம், அதுபோன்று கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வாரியம் அமைக்கப்படவிருக்கின்றன. இந்த வாரியங்கள் எல்லாம் வந்திருந்தாலும் மாதம் ஒருதடவை அவர்கள் வங்கியிலே அடைக்க வேண்டிய பணத்தை அடைக்கச் சென்றால், எல்லா வங்கிகளிலும் அது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. குறிப்பாக, ஒரு நாளைக்கு மலைப்பாங்கான பகுதியிலே இருந்து, பசார் ஏரியாவிலேயிருந்து வந்து அந்தப் பணத்தை அடைக்கப் போனால், ஒரு நாள் வேலை போகிறது. ரூ.15 செலவாகின்றது. பலமுறை நடக்க வேண்டியிருக்கிறது. எனவே, இந்த வாரியங்களிலே பணத்தை அடைப்பதற்கான காசோலையை எல்லா வங்கிகளிலும் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் உறுப்பினரும் மாதந்தோறும் 20 ரூபாய் கட்டுகிற காரணத்தினால், அதை வாங்குவதற்கு பல வங்கிகள் தயங்குகின்றன. ஏனென்றால் இதில் அவர்களுக்கு Service charge போன்ற எதுவும் கிடைப்பதில்லை என்ற உணர்வோடு அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தும் இருக்கிறார்கள். ஆகவேதான், ஒருசில வங்கிகளோடு பேசி அவற்றின் மூலமாக இவை கட்டப்பட வேண்டும் என்று நிர்மாணிக்கப்பட்டது. ஆனால், பெரும்பாலான உறுப்பினர்கள் ஒரு சில வங்கிகளிலே மட்டும் கொடுக்கப்படுவதால் அதிலே கட்டுவதற்கு பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்ட காரணத்தினால், அரசு அதை பரிசீலித்து அங்கே இருக்கிற கிராம கூட்டுறவு வங்கிகளிலேயும் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதோடு, தொழிலாளர் நலத் துறை அலுவலகங்களிலேயும் அதைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளையும் இப்போது செய்து இருக்கிறது. ஆகவே இந்த இடர்ப்பாடு வெகு விரைவில் நீக்கப்படும்.

[2000 நவம்பர் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்பாண்டத் தொழிலாளர்கள் தமிழகத்தில் மிக அதிகமாக இருக்கின்றார்கள். இன்றுகூட அவர்கள் தனியாக தங்களுக்கு வாரியம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருப்பதை ஏற்று, மக்கள் தலைவர் ஐயா அவர்கள் இன்று இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, எல்லோருக்கும் வாரியம் அமைப்பது போன்று, மண்பாண்டத் தொழிலாளர்களுக்கும் வாரியம் அமைத்துத் தருவீர்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைவினைத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையிலேதான் ஒரு வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலேயே கைவினைத் தொழிலாளர்களாகிய அவர்கள் இணைந்து கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**49—**

**தொழிலாளர்களுக்கு நிவாரணம்**

*36946— **திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்தொழிற்சாலைகள் மூடப்படுவதால் தற்சமயம் எத்தனை தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள்?

(ஆ) இவர்களுக்கு அரசு என்னென்ன நிவாரண உதவிகள் செய்கிறது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெருந்தொழிற்சாலைகள் மூடப்படுவதால் தற்சமயம் 41,166 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளால் வேலையிழந்துள்ள தொழிலாளர்களுக்கு 1-5-1999 முதல் மாதம் ரூ.250/- வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டம், அரசாணை எண் 88, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28-6-1999 மூலம் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி உதவித்தொகை பெறத் தகுதியுடைய தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இது தவிர, ஒவ்வொரு ஆண்டும் தீபாவளியை முன்னிட்டு மேற்படி திட்டத்தில் தகுதி பெறாத தொழிலாளர்களுக்கு தலா ரூ.500/- வீதம் கருணைத் தொகையாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதுவன்றி பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு அரசு மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் செல்ல விருப்பமுள்ள தொழிலாளர்களுக்கு 'மாநில புதுப்பித்தல் நிதி'-யிலிருந்து தொகை வழங்கப்பட்டு வருகிறது.



2000 நவம்பர் 10]

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாதிக்கப்பட்ட 41,000 தொழிலாளர்களுக்கு அரசு அளிக்கும் நிவாரண உதவிகளை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இது ஒரு தற்காலிக நிவாரணம்தான். மூடப்பட்ட பின்னி தொழிற்சாலை, ஸ்டாண்டர்டு மில்ஸ், அரக்கோணம் ஸ்டீல்ஸ் போன்ற தொழிற்சாலைகள் மீண்டும் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியும் சேலம் உருக்காலையை தனியார் மயமாக்கும் முயற்சியிலே தொடர்ந்து மத்திய அரசு ஈடுபட்டு வருவதைத் தடுத்து நிறுத்தி, அங்குள்ள தொழிலாளர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் மூடப்படாமல் இருப்பதற்கு என்னென்ன வாய்ப்புகள் உள்ளனவோ அவற்றை ஆய்ந்து அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தக் கேள்வி குறித்து தொழிலாளர்களுக்கு 250 ரூபாய் தற்காலிக நிவாரணம் என்ற அடிப்படையிலேதான் அவை வழங்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

முற்பகல் 9-50

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கு கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிற 250 ரூபாய் நிவாரணம் பல ஆலைகளிலே இருக்கின்ற தொழிலாளிகளுக்கு சென்ற ஓர் ஆண்டு காலமாக கிடைக்கவில்லை என்றும் குறிப்பாக கோவை மாவட்டத்திலே இருக்கிற பல டெக்ஸ்டைல் மில்களிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை என்கிற புகாரும் அரசினுடைய கவனத்திற்கு

[2000 நவம்பர் 10

வந்திருக்கிறதா? அப்படியென்றால் அந்தத் தொழிலாளிகளுக்கு கொடுப்பதற்கு தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிவாரணத் தொகை வழங்குவதற்காக தொழிலாளர்களுக்கென சில தகுதிகளையும் அரசு நிர்ணயித்திருக்கிறது. 31-3-1990-க்குப் பிறகு மூடப்பட்ட ஆலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களுக்குத்தான் 1-5-1999 முதல் ரூ.250 மாதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே அந்தத் தகுதிக்குட்பட்ட விண்ணப்பித்த அனைவருக்கும் வழங்குவதற்காக அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு இருக்கிறது. சென்ற ஆண்டு மட்டும் 1999-2000-ல் 5,255 பேர்களுக்கு வழங்கப்பட்டது. 2000-2001-ல் 5,377 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே விண்ணப்பங்கள் வருகிறபோது அவற்றைப் பரிசீலித்து அந்தத் தகுதிக்கேற்ப அரசு நடவடிக்கைகளை எடுக்கிறது. அவ்வாறு அந்த தகுதிக்குட்பட்டிருக்கிற யாருக்கேனும் விடுபட்டிருந்து என்னுடைய பார்வைக்கு கொண்டுவரப்பட்டால் உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் மூடப்படுவதால் தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய உதவி விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். Lock Out என்ற முறையில் கதவடைப்போ அல்லது Closure என்ற முறையில் ஒரு நிறுவனத்தை மூடிவிடுவதோ நடக்கிறபோதுதான் இப்படி நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. ஆனால் இப்போது பல்வேறு தொழிற்சாலைகளில் தற்காலிக உற்பத்தி நிறுத்தம் (Suspended Operation) என்ற முறையில் பல்வேறு தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. இதுகுறித்து தொழிலாளர் நலத் துறை சிந்தித்து இருக்கிறதா? இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுத்து நிறுத்திட சட்டத்தில் உரிய திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் தெரிந்தவர். Operation என்பதைப் பொறுத்தமட்டிலே Closure என்ற வார்த்தையும் Suspension of Operation என்ற வார்த்தைகளும் சட்டத்தில் ஒன்றுதான். எனவே மூடப்பட்ட ஆலையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.



2000 நவம்பர் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை பற்றி இங்கே குறிப்பிட்டிருந்தேன். அந்தத் தொழிற்சாலையை தனியார் மயமாக்கினால்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொடர்புள்ள கேள்வி அல்ல.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** தொழிலாளர்களுடைய பிரச்சினைதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொடர்புள்ள கேள்வியே அல்ல. திரு. சி. ஞானசேகரன்:

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் இருக்கக்கூடிய Madura Coats-லே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். 9-10-2000 தேதி முதல் எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி சட்ட விரோதமாக அந்த ஆலை மூடப்பட்டுவிட்டதால் இப்போது தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கக்கூடியவர்கள் வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள். பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு இது தெரியுமா? உடனடியாக அரசு தலையிட்டு அந்த தூத்துக்குடி Madura Coats ஆலையைத் திறப்பதற்கு ஆவன செய்யுமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலை நிறுத்தம் குறித்து நேற்றுகூட என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. நேற்றே செயலாளருடனும் மற்ற தொழில் துறை அதிகாரிகளுடனும் அதுகுறித்து பேசுமாறு சொல்லியிருக்கிறேன். விரைவில் அவர்களுடைய பதில் வந்த பிறகு அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வினாவிற்கு பதில் அளிக்கிறபோதே நிவாரணத் தொகை அப்படி ஏதாவது கொடுக்கப்பட்டு நிறுத்தப்பட்டு இருந்த விவரத்தை என் கவனத்திற்கு கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை

எடுக்கப்படும் என்று இங்கே தெரிவித்தார்கள். கோவை மாவட்டத்தில் குறிப்பாக திருப்பூரில் இயங்கிக் கொண்டிருந்த தனலட்சுமி தொழிற்சாலை மூடப்பட்டு, அதற்கு நிவாரணத் தொகை மாதம் 250 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. திடீரென்று கடந்த 6 மாத காலமாக தவறான தகவல்களின் அடிப்படையில் அது நிறுத்தப்பட்டுவிட்டதே. இது குறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நேரடியாக விவரத்தை எடுத்துச் சொல்லி கவனத்திற்கு கொண்டு வந்ததற்குப் பின்னர் அதன்மீது Enquiry செய்யப்பட்டு கோவை J.C.L. அவர்கள் Positive report-ஐ அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அனுப்பியதற்குப் பின்னரும் இன்னும் திருப்பூர் தனலட்சுமி மில் தொழிலாளர்களுக்கு 250 ரூபாய் வழங்கப்படவில்லை. எனவே அந்தத் தொகை வழங்கப்படுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அது நியாயமாக இருக்குமானால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி.

*முற்பகல் 9-55*

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதிக்குட்பட்ட Madura Coats பற்றி அமைச்சரிடம் கேட்டார்கள். நானும் அமைச்சரிடம் கேட்க வாய்ப்பு கொடுத்தீர்கள். தூத்துக்குடி Madura Coats தொழிற்சாலையைப் பொறுத்த அளவில், நீண்ட நாட்களாக அங்கே பலர் அங்கீகாரமுள்ள சங்கங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். 1993-லேயிருந்து தொடர்ந்து தொழிலாளிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். இறுதியாக இந்த ஆண்டு, 1996 ஆம் ஆண்டிலேயிருந்து ஊதிய உயர்வு கேட்டுப் போராட்டம் நடத்தி, பல முறை அதிகாரிகளின் மத்தியிலேயும், அமைச்சர் அவர்களின் மத்தியிலேயும் பேச்சுவார்த்தை நடத்தி, எதிலேயும் 5 ஆண்டுகளுக்கான ஊதிய உயர்வு கிடைக்காத நேரத்தில் அமைச்சர் அவர்கள் advance-ஆக 250 ரூபாய் கொடுத்துவிட்டு, மீண்டும் அதிகாரிகள் மத்தியிலே பேச வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குள், தொழிலாளர்களிடையே ஒற்றுமையில்லாத காரணத்தினாலும், அங்கீகாரமுள்ள சங்கங்களை மதிக்காத காரணத்தினாலும், தொழிலாளர்களே இஷ்டப்பட்டு ஆலையை மூடக்கூடிய அளவிற்குச் சென்றது. அங்கீகாரம் உள்ள தொழிற் சங்கங்களை மதிக்காத காரணத்தினால், யாரிடம் management பேசுவது என்று தெரியாமல் அந்த ஆலை மூடப்பட்டுக்கொண்டிருக்கிறது. இருந்தாலும், தொழிலாளர்கள்



தவறு செய்தாலும், அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு, அந்தத் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களோ, நிர்வாகமோ யார் தவறு செய்தாலும் இந்தத் துறையினுடைய விதிமுறைகளுக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்து.....*

**HON. SPEAKER:** I won't give. Please sit down. Thiru L. Santhanam (Interruption) No, Thiru Gnanasekaran, I am not allowing you.

**THIRU C. GNANASEKARAN:** I want to raise only one point, Sir.

**HON. SPEAKER:** I have already allowed you one point which was not relevant to the main question. Please sit down. (Interruption) No.

**திரு. சி. ஞானசேகரன்:** *இல்லை, தொழிலாளர்களுடைய ஒற்றுமையின்மையினால்தான் மூடப்பட்டது என்று சொன்னார்கள்....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது அவருடைய கருத்து, நீங்கள் உட்காருங்கள். திரு. லா. சந்தானம்.*

**திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மூடப்பட்ட ஆலைகளிலேயிருந்து நிவாரணம் பெறுகின்ற தொழிலாளிகள் தங்களுடைய வைப்பு நிதியைப் பெறுவதற்காகப் பல்வேறு இடங்களிலே வருடக் கணக்கிலே முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். அது கிடைக்காத நிலை இருக்கிறதே? அந்த வைப்பு நிதியைப் பெறுவதற்கு அரசு ஒத்துழைப்பு நல்குமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு தனிப்பட்ட முறையிலே யாரேனும் பாதிக்கப்பட்டிருந்தால், மனு கொடுத்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

[2000 நவம்பர் 10

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு காரணங்களினால் தொழிற்சாலைகள் மூடப்பெற்று தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்படுகிறார்கள். தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற தொழிற்சாலையாக இருந்தாலும் அல்லது பொதுத் துறை நிறுவனங்கள் நடத்துகின்ற தொழிற்சாலைகளாக இருந்தாலும், தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. என்னுடைய தொகுதியில், விண்ணமங்கலம் தோல் பதனிடும் தொழிற்சாலை, 'TALCO' நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளாக அந்தத் தொழிற்சாலை மூடப்பெற்று, அங்கு பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் எந்தவிதமான வருமானமும், வாழ்க்கைக்கான வழியும் இல்லாது இன்றுவரையில், 4 ஆண்டுகளாக தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிவாரணத்திற்காக அரசு அறிவித்திருக்கிற இந்த நிலை அவர்களுக்குப் பாதுகாப்பு தருவதற்கு எந்தவகையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது? அதோடு, பொதுத் துறையைச் சேர்ந்த இந்தத் தொழிற்சாலை நிரந்தரமாக மூடப்பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அந்தத் துறையில் தொடர்புகொண்டு, தொழிலாளர் நலத் துறை மீண்டும் அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு என்ன நடவடிக்கை இதுவரையிலே மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறிப்பிட்ட தொழிற்சாலையைப் பற்றிய குறிப்புகள் என்னிடம் இப்போது எதுவும் இல்லை. தனியாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பினால் அதற்கான விளக்கத்தைச் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஃபரீதா தோல் தொழிற்சாலையிலும், அதைப்போல பல்வேறு தோல் தொழிற்சாலைகளிலும், தொழிலாளர்களை குறிப்பாக பெண்களை கட்டாய வேலை நிறுத்தம் செய்து, இப்போது அந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, நீண்ட நாட்களாக அந்தத் தொழிலாளர்கள் வேலையிழந்து இருக்கிறார்கள். ஆகவே, இப்படி குறைந்த ஊதியத்திலே நிரந்தரப்படுத்தாமல் நீண்ட நாட்களாக வைத்திருந்து அடிக்கடி இப்படி தொழிலாளர்களை மாற்றக்கூடியதனாலே வாழ்விழந்த இந்தச் சூழ்நிலையிலே அவர்கள் மீண்டும் அந்தத் தொழிற்சாலைகளிலே



2000 நவம்பர் 10]

வேலைக்குச் செல்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். அதைப்போலவே, கோவை, திருப்பூர் போன்ற பகுதிகளிலும் தொழிற்சாலைகள் நசிவடைந்துவிட்டதாகச் சொல்லி அவ்வப்போது கொத்தடிமைகளாக நடத்தப்படக்கூடிய நிலைமையெல்லாம் உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, உழைப்புக்கேற்ற ஊதியமும், தொழிலாளர் பணிக்குப் பாதுகாப்பும் ஏற்படுத்தக்கூடிய வகையிலே அரசு நிரந்தரமான முடிவுகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு தொழிலாளர்களுக்கான அனைத்து உரிமைகளையும் வழங்குவதற்கு இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. இதுபோன்ற பிரச்சினைகள் இருக்குமானால் ஆங்காங்கே இருக்கின்ற தொழிலாளர் துறை சார்ந்த அதிகாரிகளிடம் விண்ணப்பிக்கப்படுகிறபோது அவர்களே நிர்வாகங்களோடு பேசி அதற்கான சமரச முடிவுகளை எடுக்கிறார்கள். அதையும் மீறி செய்கிறபோது தொழிலாளர்களுக்கு நீதிமன்றத்திற்கு செல்வதற்கும் உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையிலே விதிமுறைகளுக்கு உட்பட்டு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அவற்றை எடுப்பதற்கு அரசு உதவியாக இருந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**50—**

**பாலம் கட்டுதல்**

*29312—**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, பேரணை அருகில் பாலம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எப்பொழுது நடவடிக்கை எடுக்கும்?

[2000 நவம்பர் 10

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி பேரணை அருகில் பாலம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தப் பாலம் அவசியம் என்பதை அரசு உணர்கின்றது. வருங்காலத்தில் அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

51—

**சைக்கிள் பாதை**

* 33967—**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சைக்கிளில செல்பவர்களுக்குத் தனிப் பாதை அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எங்கெல்லாம் அகலமான சாலை வசதிகள் உள்ளனவோ, அங்கு தேவைக்கேற்ப, சைக்கிளில் செல்பவர்களுக்கு, தனிப் பாதை அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும், வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும் என்கிற விதியினை நான்கு சக்கர வாகனங்களை ஓட்டுகிற நண்பர்கள் மறந்துவிடுகிறார்கள். குறிப்பாக சைக்கிளில் செல்பவர்கள் அவர்களுடைய சகோதரர்களாக இருக்கலாம் அல்லது அவர்களேகூட சைக்கிளில் பயணம் செய்யலாம். அலட்சியத்தினால் சைக்கிளில் செல்கிற நண்பர்கள் பல்வேறு வகைகளிலே உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சாலையைப் பராமரிக்கின்றபோது சைக்கிளில் செல்கின்ற மக்களுடைய நலனை அரசு மறந்துவிடுகிறதோ என்ற அச்சம்



2000 நவம்பர் 10]

ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, காந்தி மண்டபம் அருகே இப்போது கட்டப்பட்டிருக்கிற மேம்பாலத்தின் அருகே Pedestrian பாதை என்கிற நடந்து செல்பவர்களுக்குப் பாதையே கிடையாது. சுத்தமாக அது அகற்றப்பட்டுவிட்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி சைக்கிளில் செல்கின்ற நண்பர்களுக்கு, குறிப்பாக ஏழையெளிய மக்களுக்கு உதவுகின்ற வகையிலே, அவர்கள் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கின்ற வகையிலே புறநகர்ப் பகுதிகளிலே சைக்கிளுக்கு என்று, சைக்கிளில் செல்பவர்களுக்கென்று தனிப் பாதை அமைக்க வேண்டும் என்று அரசை வலியுறுத்துகிறேன். அதற்கான நடவடிக்கையை அரசு விரைவில் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு சக்கர வாகனம் ஓட்டுகிறவர்கள் மட்டும் தவறு செய்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள். இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் எல்லோருமே இந்தச் சாலை விதிகளை முறையாக அனுசரிக்க மறுக்கிறார்கள் அல்லது உணர மறுக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. இருந்தாலும் இந்தச் சாலை விதிகளுக்குட்பட்டு இங்கே தமிழ்நாட்டில அமைக்கப்பட்டிருக்கக்கூடிய Traffic Advisory Committee என்கிற அந்தக் குழுவினுடைய ஆலோசனையை அவ்வப்பொழுது பெற்று எங்கெங்கு தனிப் பாதைகள் சைக்கிள் போன்ற இரு சக்கர வாகனங்களுக்கு அமைக்கப்பட வேண்டுமோ அங்கங்கு அவற்றை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

52—

**ஆலயங்கள்**

*26033—**திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) பத்மநாபபுரம் தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் மொத்தம் எத்தனை ஆலயங்கள் உள்ளன?

(ஆ) தற்போது எத்தனை ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன?

(இ) எத்தனை ஆலயங்களைப் புதுப்பிக்க பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பத்மநாபபுரம் தொகுதியில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் மொத்தம் 116 ஆலயங்கள் உள்ளன.

(ஆ) தற்போது 3 ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

(இ) 8 ஆலயங்களைப் புதுப்பிக்க பூர்வாங்கப் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில் ஆலயங்கள் பல புதுப்பிக்கப்படுவதாக செய்தி சொன்னமைக்கு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இதுபோன்று தமிழகத்தில் பல ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அரசுக்குப் பாராட்டு. அதோடு வருமானம் குறைவாக உள்ள ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான பல ஆலயங்கள் புதுப்பிக்க முடியாத நிலையில் உள்ளன. காரணம் அரசாங்கத்தினுடைய வருமானம் போதாது. அதேசமயத்தில் அந்த ஆலயங்களை உடனே புதுப்பிக்க முடியாமல் இருந்தாலும்கூட பல கோபுரங்களில் அத்தி, அரசு போன்ற மரங்கள் வளர்ந்து அந்தக் கோபுரமே அழியக்கூடிய நிலையில் உள்ளது. பல அழிந்தும்கூட இருக்கின்றன. எனவே குறைந்தபட்சம் அந்த ஆலயங்களை உடனே பழுதுபார்க்க முடியாமல் இருந்தாலும்கூட இதுபோன்ற மரங்கள் வளர்ந்து அந்தக் கோபுரத்தைப் பாழ்படுத்தக்கூடிய நிலையை போக்கக்கூடிய வகையில் அந்த ஆலயங்களில் மட்டுமாவது உடனடியாக இந்த மரங்களை எல்லாம் அகற்றி அவற்றைப் பாதுகாக்கக்கூடிய நிலையில் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்



2000 நவம்பர் 10]

அவர்களே, கட்டடங்களில் இதுபோன்ற அரசு மற்றும் ஆல் செடிகள் முளைப்பதென்பது தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்ற ஒரு நிகழ்ச்சி. குறிப்பாக காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் அதற்குள்ள 29 ஏக்கர் பரப்பளவில் அந்தக் கோவில் அமைந்திருக்கிறது. அதற்கான ஏராளமான சொத்துக்கள் சென்னையில் பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரில் நீண்ட நெடுந்தொலைவில் இருக்கின்றன. ஆனாலும் அந்தக் கோவில் புதுப்பிக்கப்படாத சூழ்நிலை நெடுங்காலமாக இருந்தது. முற்றிலும் அந்த கோயிலில் உள்ள கற்களைக் கீழே இறக்கி, எண் இட்டு இப்போது அது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற வாய்ப்பு வசதிகள் உள்ள கோவில்களுக்கு உடனடியாக அதைச் செய்துவிட முடியும். ஆனால், சிறிய கோவில்களும் அதே நிலையில் இருக்கின்ற காரணத்தாலும், பல சிறிய கோவில்களுக்கு வருமானம் ரூபாய் 200, 300, 400, 500 என்ற அளவில் இருப்பதாலும் உடனடியாக அந்தக் கோவில்களை அல்லது கோபுரங்களை புதுப்பிக்க முடியாத நிலை இருக்கிறது. என்றாலும், முதல் கட்டமாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் சிறந்த இறைப்பற்றாளர் என்ற முறையில் அவருடைய தொகுதியில் இருக்கிற 116 ஆலயங்களில், குடமுழுக்கு செய்யப்பட்ட 3, பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றிருக்கிற 8, இந்த 11-யையும் நீக்கி எஞ்சிய 105-யையும் அவரே பார்வையிட்டு எங்கெங்கே அரசு, ஆல் இருக்கிறது என்று பட்டியலிட்டுத் தந்தால், உடனடியாக அமிலத்தை ஊற்றி அவற்றை அழிக்க ஆவன செய்யப்படும்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்கள் புதுப்பிக்கப்படுவது என்பதும், கோவில்கள் சீரமைக்கப்படுவது என்பதும் தினந்தினம் நடந்துகொண்டு வருகிற ஒரு விஷயம். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று 4½ ஆண்டுகாலம் ஆகிறது; இந்த 4½ ஆண்டுகாலத்திலே பலமுறை என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பல்வேறு கோவில்களினுடைய நிலங்கள் எல்லாம் கொள்ளைப் போய்க்கொண்டிருக்கின்றன. பூவிருந்தவல்லியிலே இருக்கின்ற வரதராஜ பெருமாள் கோவிலுக்குச் சொந்தமான குளத்தையே ஆக்கிரமித்து 20 நாட்களாக அங்கே கட்டடம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். நான் அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பேன், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வருகிறேன், பார்க்கிறேன் என்று சொல்கிறார்களே தவிர, வந்து பார்க்க

முடியாத ஒரு சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அருள்கூர்ந்து எப்படியாவது அந்தக் கோவில் சொத்துக்களை எல்லாம் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆறு மாத காலத்திலேயாவது முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொதுவாக வினா நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்று இருந்தாலும், வந்து பார்வையிட இன்னும் வரவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, அதனுடைய முழு புள்ளிவிவரங்களும் தொகுக்கப்பட்டு என்னுடைய துறையின் இணை ஆணையர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக பூவிருந்தவல்லி பேரூராட்சி, பேருந்து நிலையம் இப்போது ஆக்கிரமிப்பில் இருக்கிறது. அவர்களுக்கே இது தெரியும் என்று கருதுகிறேன். இதை பேரூராட்சித் தலைவரும், மற்ற உறுப்பினர்களும் சேர்ந்தே செய்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் கடுமையாக அகற்ற வேண்டுமென்றால் பெரிய அளவில் காவல் துறையினுடைய துணையோடு, தங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுடைய துணையோடுதான் செய்ய வேண்டும். ஒரு பக்கம் பேரூராட்சியில் உள்ளவர்களே ஆக்கிரமிக்கின்ற சூழ்நிலை இருக்கிறபோது, அதை அகற்றுவதற்கு எந்த அளவிற்குக் கடும் முயற்சி எடுக்க வேண்டும் என உங்களுக்குத் தெரியாதது அல்ல. அந்தவகையில் பார்த்தால், இந்த 4¼ ஆண்டில் இந்த அரசில் 2,000 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டிருக்கின்றன. 380 மனைகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டிருக்கின்றன. அதுபோக, குடமுழுக்கு என்ற வகையில் ஏராளமாகச் செய்வதற்கு இந்த அரசு முயற்சி எடுத்ததன் வாயிலாக, கடந்த ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகளில் 828 கோவில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், இந்த ஆட்சிக் காலத்தில் 2,580 கோவில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று காலையில்கூட திருஏரகம் என்று சொல்லப்படுகிற அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலையில் குடமுழுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அரசு இதில் கவனம் செலுத்தி அதிகப் பணிகளைச் செய்திருக்கிறது. தங்களுடைய கோரிக்கையும் ஏற்கப்படும்; ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.





**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியிலே ஏராளமான திருக்கோவில்களுக்குக் குடமுழுக்கு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை உண்மையிலேயே பாராட்டுகிறோம். அதே நேரத்தில் அண்மையிலே, பவானியிலேயே சங்கமேஸ்வரர் ஆலயம் மிகச் சிறப்பாக குடமுழுக்கு செய்யப்பட்டது. அந்த நிறைவு நாள் நிகழ்ச்சியிலே மாண்புமிகு நம்முடைய சபாநாயகர் அவர்களும் கலந்துகொண்டார்கள். அங்கே கூனம்பட்டி ஆதீனம் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஏராளமான கோவில்களுக்குக் குடமுழுக்கு செய்கிறார்கள் என்று சொன்னாலும்கூட, தமிழகத்திலே அமைந்திருக்கின்ற சிவன் கோவில்கள், நிறைய பழம்பெரும் கோவில்கள், ஆயிரம் ஆண்டுகளாக ஆன கோவில்கள் எல்லாம் பராமரிக்கப்படாமலும், அருமை நண்பர் வேலாயுதன் அவர்கள் சொன்னதைப்போல செடி, மரங்கள் முளைத்து கிடக்கின்றன. என்ன காரணமோ தெரியவில்லை, அந்தப் பழம்பெரும் பாடல் பெற்ற புகழ் பெற்ற அந்த சிவன் கோவில்களை மட்டும் ஏன் குடமுழுக்குச் செய்யாமல் அரசு புறக்கணிக்கிறது என்ற ஒரு கேள்வியையும் அங்கே எழுப்பினார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள்கூட பதில் சொன்னார்கள். ஆகவே, அதுபோன்ற பழைய கோவில்களை எடுத்து, நம்முடைய அரசு குடமுழுக்குச் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் ஏராளமான கோயில் குடமுழுக்குகளுக்கு எங்களுடன் உடன் வருபவர். அவருக்கு உண்மையான நிலைமைகள் தெரியும். இந்தத் துறையில் சைவக் கோயில்கள், வைணவக் கோயில்கள் மட்டுமல்ல; சமணக் கோயில்களும் அடங்கியிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், பெரும்பாலான ஆதீனங்கள் இத்துறையின் கீழ் வருகின்றன. வேறு சில அறக்கட்டளைகளும் வருகின்றன. இப்படி எண்ணிக்கையைப் பார்த்தால் 36,324 நிறுவனங்கள் இத்துறையின் கீழ் வருகின்றன. இவற்றைக் கவனித்து ஆவன செய்வது என்பது எவ்வளவு அரிய பணி என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல. இதிலே எங்களுக்கு அரி என்றும், அரன் என்றும் வேறுபாடு கிடையாது. சிவன் என்றும், திருமால் என்றும் வேறுபாடு கிடையாது. காரணம், எல்லா தெய்வங்களும் ஒன்றாகக் கருதுவது அல்லது இன்னும் சொல்லப்போனால் அதற்கு அப்பாற்பட்டு இருக்கிற இஸ்லாமிய சமயத்தையும், கிறிஸ்தவ

[2000 நவம்பர் 10

சமயத்தையும், சமண சமயத்தையும்கூடச் சமமாகக் கருதுவதுதான் எங்களுடைய நோக்கம். எனவே, இதிலே சிவன் கோயில்கள் விடப்பட்டன என்றோ, திருமால் கோயில்களிலேதான் கவனம் அதிகமாகக் காட்டப்படுகின்றன என்றோ சொல்ல முடியாது. இன்னும் சொல்லப்போனால், எண்ணிக்கையைப் பார்த்தால் சிவன் கோயில்கள்தான் தமிழ்நாட்டில் அதிகம். வைணவக் கோயில்கள் குறைவு. எனவே இதிலே அதிகக் கவனம் செலுத்தியிருக்கிறோம். முந்தாம்நாள் குடமுழுக்கு நடைபெற்றது திருச்செங்கோட்டில், அது அர்த்தநாரீஸ்வரர் கோயில். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது சுவாமிமலையில். அது முருகன் கோயில். எனவே இரண்டும் சைவம் சார்ந்தது என்பதைத் தாங்கள் உணர்வீர்கள் என்று கருதுகிறேன். என்றாலும் எனக்கும் தெரிகிறது. தமிழ்நாட்டில் பல கோயில்கள் எந்தவகையான அடிப்படை வருமானமும் இன்றி ஒரு காவலர், ஓர் அர்ச்சகர், இந்த இரண்டு பேரையும் அமர்த்தி அவர்களுக்கு முழுமையான ஊதியம் கொடுப்பதற்கே இடர்ப்பாடான நிலையில் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். என்றாலும்கூட கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு திருப்பணிக்கு என்று அரசு 100 கோயில்களுக்கு இந்த நிதியை ஒதுக்கித்தருகிறது. அது போக, ஆதிதிராவிடர் துறையின் சார்பில் இருக்கிற, எங்களுடைய கணக்கில் வராத கோயில்களுக்கு, 100 கோயில்களுக்கு 25,000 ரூபாய் என்ற அளவில் இப்போது உதவி செய்கிறது. அதுபோக அரசு தருகிற 75 இலட்சத்தையும் பிரித்து கிட்டத்தட்ட 37 கோயில்களுக்குத் தருகிறது. அதுபோக உங்களைப் போன்ற உபயதாரர்கள் மூலமாகவும் திருப்பணிகள் நடைபெறுகின்றன. எனவே இந்தப் பணிகள் தொடரும். இன்னும் அழுத்தமாகத் தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம், ஏற்கெனவே நீங்கள் கேட்டு விட்டீர்களே. என்ன, கேளுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி, அவர் மீது குற்றச்சாட்டாகக் கூறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மரபு மீற நான் விடமாட்டேன்.

**திரு. டி. சுதர்சனம்:** கோயில் திருக்குளத்திலே கட்டடம் கட்டுகிறார்கள். அதன்மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதுதான் என்னுடைய மூலக்கேள்வி. அதை விட்டுவிட்டு, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தார்கள்; பஸ் ஸ்டாண்டுக்கு ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். திருக்கச்சி நம்பி



2000 நவம்பர் 10]

வரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடம் சுமார் 300 ஏக்கர் நிலம் இருக்கிறது. அத்தனையையும் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள்.

**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வி கேட்க வேண்டுமேயொழிய, விவாதம் செய்யக்கூடாது. இந்த ஆட்சியிலே இவ்வளவு குடமுழுக்கு செய்யப்பட்டன என்று சொன்னார். அதிலே ஒன்றும் தவறு கிடையாது. உங்கள் கேள்வியை அடுத்த கேள்வியாக நான் அனுமதித்திருக்கக் கூடாது. உங்கள் முதல் கேள்விக்குப் பதில் திருப்தியாக இல்லை, திருப்பிக் கேட்க வேண்டும் என்றீர்கள். அதற்கு அனுமதி கொடுத்தேன். அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். இப்பொழுது நீங்கள் சொன்னது குறிப்பேட்டிலே ஏறாது. நீங்கள் இதைப் பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** தெப்பக்குளத்திலே கட்டடம் கட்டுவதைப்பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை மாத்திரம் கேளுங்கள், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வார்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதை நான் ஏற்கிறேன். இது நாங்களாகச் செய்வது; நீங்களாகச் செய்யவில்லை. ஏன் என்று சொன்னால், இந்த நாலேகால் ஆண்டுக்காலத்தில் 2,880 ஆகவும், கடந்த காலத்தில் 828 ஆகவும் இருந்தது. நீங்களாக அதிகமாகச் செய்திருந்தால் கருத்து வேறுபாடு இருக்காது. எனவே அரசு எடுக்கிற முயற்சிகளின் காரணமாக நீங்கள் ஒருங்கிணைக்கப்படுகிறீர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப் பார்த்தால் இந்த ஆக்கிரமிப்பை அகற்ற சுதர்சனம் அவர்களே நேரடியாக மறியலில் இறங்கிச் செய்திருந்தால் அந்த ஆக்கிரமிப்பை அகற்றியிருக்கலாம். நாங்களும் துணை செய்திருப்போம். அவரும்—சட்டமன்ற உறுப்பினரும்—இதற்குப் பொறுப்பு ஆவார். என்றாலும் இது உடனடியாக அகற்றப்படுவதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனது தொகுதியில் இருக்கக்கூடிய ராகவேந்திரர் திருக்கோயில் என்பது மிகவும் புகழ் வாய்ந்த ஒரு திருக்கோயிலாக இருக்கிறது. இந்தக் கோயிலுக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தமிழகத்தில் இருந்து மட்டுமல்ல; பல்வேறு வெளிமாநிலங்களில் இருந்தும் யாத்திரிகர்கள் வருகிறார்கள். தரிசித்து விட்டுச் செல்கிறார்கள். இந்த நிலையிலே அங்கே நடக்கக்கூடிய பூஜை, காலையில் நடக்கக்கூடிய பூஜைதான் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. எனவே, வெளிமாநிலங்களிலிருந்து வருகின்ற யாத்திரிகர்கள் அங்கே தங்கி காலையில் அந்தப் பூஜையில் கலந்துகொள்வதற்கு சிரமமாக இருக்கின்ற காரணத்தினாலே அங்கே ஒரு யாத்திரிகர்கள் ஸ்தலம் கட்ட வேண்டுமென்று அந்தக் கோயில் நிர்வாகத்தினரெல்லாம் மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். எனவே அரசு அந்த யாத்திரிகர்கள்மீது கருணை வைத்து அங்கே யாத்திரிகர்கள் ஸ்தலம் கட்டித்தர ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தாங்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கோயிலினுடைய வரவு-செலவுகளைப் பார்த்து எந்த அளவிற்கு நிதி ஒதுக்க முடியுமோ அதைக் கவனித்து ஆவன செய்யப்படும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**53—**

**பணி நிரந்தரம்**

*33026—**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழக அரக்கோணம் கிடங்கில் பணிபுரியும் சுமை தூக்கும்



தொழிலாளர்களில் தகுதி வாய்ந்த 30 சுமை தூக்கும் தொழிலாளர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் பணியாற்றுகின்ற 30 பேர்களை நிரந்தரம் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயம், மேலும் 7 பேர், அங்கே நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு பிங்க் கலர் கார்டு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆனால் பச்சை நிற அட்டை வழங்கினால்தான் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று கூறுகிறார்கள். எனவே அந்த 7 பேரையும் நிரந்தரமாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு மே திங்களில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு, சுமை தூக்கும் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவதாக அறிவித்தார்கள். அந்த அறிவிப்பையொட்டி, பத்தாண்டுக் காலம் தொடர்ந்து பணி புரிந்தவர்கள், அவர்கள் அந்த பணியைப் புரிந்ததற்கான சான்றிதழ்களை வழங்கினால், அவற்றை ஆய்வு செய்து அவர்களுக்கு பணி நிரந்தரப்படுத்தப்படும் என்று வாணிபக் கழகத்தால் அறிவிக்கப்பட்டது.

13-6-2000 வரை 1,951 சுமைதூக்கும் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் 31-10-2000 வரை 2,663 சுமைதூக்கும் தொழிலாளர்களின் பணி நிரந்தரம் செய்யப்பட்டு உள்ளது. ஆகவே, தகுதி வாய்ந்த சுமை தூக்கும் பணியாளர்களில் 95 சதவீத சுமைதூக்கும் பணியாளர்களின் பணி நிரந்தரமாக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோது 7 பேர் இன்னும் நிரந்தரப்படுத்தப்படவில்லை என்ற விவரத்தைச் சொன்னார். தனிப்பட்ட முறையில் அதுபற்றி எழுதித் தருவார்களேயானால், ஆய்வுசெய்து அது சரியாக இருக்குமானால், விரைவிலே அவர்களுக்கும் ஆணை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 நவம்பர் 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**54—**

**அலுவலகத்தைப் பழுதுபார்த்தல்**

*33444—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்குட்பட்ட கவுந்தப்பாடி, ஓலகடம் மற்றும் பவானி ஆகிய நில வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் பழுதுபார்க்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பழுதுபார்க்கும் பணிகளை நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ள வேண்டியிருப்பதால் எப்போது பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற இயலாது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கவுந்தப்பாடி, ஓலகடம் மற்றும் பவானி ஆகிய மூன்று பகுதிகளில் இருக்கக்கூடிய நில வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் மிக மிக மோசமாகப் பழுதடைந்து, மழைநீர் ஒழுகும் சூழ்நிலையில் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் இருப்பதை மாற்றி அமைப்பதற்கு அங்கே புதியதாக கட்டடங்கள் கட்டிக்கொடுக்க உடனடியாக முடியாவிட்டாலும்கூட, அவற்றைப் பழுதுபார்த்து, பழுது நீக்கி ஓரளவுக்கேனும் சரி செய்வதற்கு உடனடியாக நிதியை வருவாய்த் துறை மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்துகொடுக்கமுடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2000 நவம்பர் 10]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் மூன்று பகுதிகளை மட்டும் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் 7 நில வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களும் அதுபோலத்தான் இருக்கின்றன. இதுகுறித்து, ஈரோடு, பொதுப் பணித் துறையைச் சார்ந்த செயற்பொறியாளர் அளித்த செயற்குறிப்பிலே, அவற்றைப் பழுதுபார்ப்பதற்கு எவ்வளவு பணம் தேவை என்று எஸ்டிமேட்டை அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை 18-8-2000 அன்று நில வருவாய் ஆணையாளர் (C.R.A.) அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். எனவே நிதிநிலைமையைக் கணக்கிட்டு, நிர்வாக ஒப்புதல் (Administrative sanction) கொடுப்பதற்கான முயற்சிகள் விரைவிலே மேற்கொள்ளப்படும். அதோடு, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் இதுபோன்ற பணிகளுக்கு பணம் ஒதுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்தில் பழுதுபட்டிருக்கக்கூடிய எல்லா நில வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களையும் பழுதுபார்ப்பதற்கு நிதி நிலைமையையொட்டி விரைவில் ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**55—**

**உலமாக்களின் ஓய்வூதியம்**

*38389—**திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் உலமாக்களின் ஓய்வூதியம் ரூ.1500-ஆக அதிகரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமாக்களின் ஓய்வூதியம் 2200 பேர் வரை பெறலாம் என்ற நிலை இருந்தும் கூட, 1650 பேர்தான் உலமா ஓய்வூதியம் இன்றுவரை பெற்றுவருகிறார்கள். இதற்கிடையில் மிகப்பெரிய இடையூறு, அவர்கள் பல்வேறு பள்ளிவாசல்களில் பணி செய்கின்ற காரணத்தால் ஒழுங்கான முறையில் அவர்கள் அந்த நியமனங்களையெல்லாம் பெறமுடியவில்லை. அதற்கான அத்தாட்சிகளைப் பெறமுடியவில்லை. இது சிரமமாக இருக்கின்ற காரணத்தினாலே, இப்போது வாங்குகின்ற சம்பளமும் குறைவாக இருந்து, ஓய்வூதியம் பெறும்போது 500 ரூபாய்தான் பெறுகிறார்கள். எனவே, ஏழை உலமாக்கள்மீது அரசு கருணை வைத்து, இவர்களுடைய ஊதியத்தை 1500 ரூபாயாக உயர்த்துமா அல்லது குறைந்தபட்சம் 1000 ரூபாயாகவாவது உயர்த்த ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமா பென்ஷன் மூலமாக இதுவரை பயன் அடைந்தவர்கள் 2200 பேர். 73 மனுக்கள்தான் பைசல் செய்ய வேண்டியிருக்கிறது. அதுவும் விரைவில் பைசல் செய்யப்பட்டுவிடும். 400 ரூபாய் உலமாக்களின் பென்ஷனாக இருந்ததை கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் 500 ரூபாயாக மாற்றம் செய்திருக்கிறோம். நிதிநிலையையொட்டி நிச்சயமாக உறுப்பினருடைய கோரிக்கை கவனிக்கப்படும். அதேநேரத்தில், ஹஜ் யாத்திரை செய்வதற்காக பல பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஹஜ் யாத்திரீகர்களின் நலன்களைப் பேண சவூதி அரேபியாவிற்கு அனுப்பப்படும் 9 ஹஜ் தொண்டர்களுக்கு நபருக்கு ரூ.75,000 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இன்னும் இஸ்லாமிய சமுதாயத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு நலக் காரியங்கள் இந்த அரசின் சார்பாகச் செய்யப்படுகின்றன. எனவே, நிதிநிலைதான் இதற்கு அடிப்படைக் காரணம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.





**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமா பெருமக்களுக்கு அவர்கள் ஓய்வு பெறுகிற காலத்தில் நிதி உதவி அளிக்கின்ற சிறப்பான திட்டத்தின் மூலம் மாதம் 500 ரூபாய் தற்போது நிதி உதவி வழங்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய பதிலுரையில் 2200 பேர்களுக்கு தற்போது வழங்கப்படுவதாகச் சொன்னார். மேலும், இந்த உலமா பென்ஷன் பெறுவதில், அரசு விதிமுறைகள் மிகவும் நெருக்கமாக இருப்பதாக அவர்கள் தகவல் சொல்கிறார்கள். ஆகவே, விதிமுறைகளையும் தளர்த்தி, மேலும், அவர்களிடமிருந்து வந்திருக்கின்ற விண்ணப்பங்கள் முழுமைக்கும் அரசு உடனடியாக நிதி உதவியை வழங்கிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலமாக்கள் பென்ஷன் பெறுபவர்கள் அரபு மொழி பயிற்சி பெற்றவர்கள்; பள்ளிவாசலில் மத குருமார்களாக இருக்கக்கூடிய 'பேஷ்இமாக்கள்', 'மோதினார்கள்'. இவர்கள் 20 ஆண்டு காலம் பணியாற்றி இருக்க வேண்டும். 60 வயதை உடையவர்களாக இருக்க வேண்டும். மாத வருமானம் ரூபாய் 1000-க்குள் இருக்க வேண்டுமென்ற விதிமுறைகள் இருக்கின்றன. இது குறித்து நாங்களே பரிசீலித்து வருகிறோம். காரணம், இன்னும் அதிகப்படுத்திக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று. எனவே, 20 ஆண்டுகள் பணியாற்றுவது, 60 வயது, மாத வருமானம் ரூபாய் 1000 என்பதை எல்லாம் மறுபரிசீலனை செய்து, முதல்வர் அவர்களோடு கலந்து, அதிகாரிகளோடு கலந்து, நிதி நிலைமையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயம் என்று உணர்கின்ற காரணத்தினால் இது குறித்துப் பரிசீலிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, திரு. ப. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

56—

**தொழிற்பேட்டை**

*27801—**திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2000 நவம்பர் 10

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி விவசாயம் நிறைந்த பகுதி. அதைச் சுற்றிலும் பட்டுக்கோட்டை, திருவோணம், பேராவூரணி போன்ற பகுதிகள் இருக்கின்றன. பட்டுக்கோட்டையைப் பொறுத்தவரையில் அங்கே தொழில் செய்வதற்கு பலபேர் முன்வருகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து, தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

57—

**பட்டு முறுக்காலைகள்**

*28131—**திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் உள்ள 120 பட்டு முறுக்காலைகள் தொழில் இல்லாமல் மூடும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுத்திட எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) இது குறித்த விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

**அறிக்கை**

(அ), (ஆ) மற்றும் (இ) திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி மற்றும் சுற்றுப்பகுதியில் சுமார் 150 பட்டு முறுக்காலைகள் உள்ளன. இந்த முறுக்காலைகளில் 50 முறுக்காலைகள் தனியார் பட்டு கைத்தறி பெரும் வியாபாரிகளுக்குச் சொந்தமானது. மீதமுள்ள சுமார் 100 பட்டு முறுக்காலைகள் இம்மாவட்டத்தில் உள்ள பட்டு கைத்தறி நெசவு தனியார்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்து செயல்படுகின்றன.

ஆரணியில் உள்ள 120 பட்டு முறுக்காலைகளில் சுமார் 22 பட்டு முறுக்காலைகள் தமிழ்நாடு பட்டு கூட்டுறவு இணையத்தில் உறுப்பினர்களாகி உள்ளன. மற்றவை தனியாரின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

கைத்தறி கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் சுமார் 6400 தறிகள், 20 கூட்டுறவுச் சங்கங்களினால் ஏற்படுத்தப்பட்டு மேற்படி இருபது கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 9 கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையாக நலிவடைந்தும், மற்ற கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சுமார் 1200 தறிகள் மட்டுமே ஓட்டப்படுகின்றன. இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 1/6 பகுதி பாவு மற்றும் ஊடைப்பட்டு மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டு வருவதாலும், கூட்டுறவுச் சங்கங்களில் முறுக்கேறிய பட்டு தேவை குறைந்துகொண்டே வருவதாலும், இதனுடைய எதிரொலியாக பட்டு முறுக்காலைகளில் முறுக்கும் பணியும் குறைந்துகொண்டு வருகிறது. பட்டு கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகள் பலவித காரணங்களினால் விற்பனையாகாமல், தேக்கம் அடைந்துள்ள நிலையில், கூட்டுறவுச் சங்கங்களால் பட்டு தேவைக்கு குறைவு உண்டாகிறது. பட்டு முறுக்கேற்றும் ஆலைகள் தனியார் வியாபாரிகளுக்குச் சொந்தமானவை. பட்டு முறுக்காலைகள் எவையும் முழுமையாக மூடப்படவில்லை. அவை தேவைக்கு ஏற்றாற்போல் குறைவான அளவில் செயல்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

58—

## கால்நடை மருந்தகம்

*29435—**திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியம், மாந்தோப்பு கிராமத்தில் செயல்படும் நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவை நிரந்தர கால்நடை மருந்தகமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியம், மாந்தோப்பு கிராமத்தில் செயல்படும் நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவை நிரந்தர கால்நடை மருந்தகமாக மாற்றியமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய மாந்தோப்பு கிராமம் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பல்வேறு கிராமங்களுக்குத் தாய் கிராமமாக விளங்கக்கூடிய ஒரு மிகப் பெரிய கிராமம். சுற்றுவட்டாரங்களில் இருக்கக்கூடிய பல விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் அங்கே வந்து தங்களுடைய கால்நடைகளுக்கு வைத்தியம் செய்யக்கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து மறுபரிசீலனை செய்து, அங்கே விவசாயிகளுடைய நலன் கருதி, ஒரு நிரந்தரமான கால்நடை மருந்தகத்தை அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, காரியாப்பட்டி ஒன்றியம், மாந்தோப்பு கிராமத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் என்ற பெயரில் தற்போது செயல்பட்டு வரும் மருந்தகத்திற்கு அந்த ஒன்றியத்தின் கால்நடை விரிவாக்க அலுவலராக இருக்கும் கால்நடை உதவி மருத்துவர் மூலம் வாரத்தில் 3 நாட்கள் செவ்வாய், வியாழன், சனிக்கிழமை ஆகிய நாட்களில் அங்குள்ள கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஞ்சிய 4 நாட்களில் அவ்வூராட்சி ஒன்றியங்களில் கால்நடை தொடர்பான பிற பணிகளை கால்நடை விரிவாக்க அலுவலர்



மேற்கொண்டு வருகிறார். இந்த நிதியாண்டில் பகுதி-2 திட்டத்தில் புதிய கால்நடை மருந்தகம் எதையும் தொடங்குவது குறித்து இன்னும் பரிசீலிக்கப்படவில்லை. தற்போது நடமாடும் கால்நடை மருந்தகம் என்ற பெயரில் மாந்தோப்பு கிராமத்தில் செயல்பட்டுவரும் மருந்தகத்தை முழுநேர மருந்தகமாக மாற்ற எதிர்வரும் ஆண்டுகளில் கால்நடைகளின் எண்ணிக்கையையும், நிதிநிலைமையையும் கருத்திற்கொண்டு, பகுதி-2 திட்டத்தில் முன்னுரிமை கொடுத்து பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

59—

## மேல்நிலைப் பள்ளி

*36699—**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சி அரசினர் ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சி ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 60, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

[2000 நவம்பர் 10

60—

**மாவட்ட உலாத்தலம்**

*11192—**திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட உலாத்தலத் திட்டத்தில் கல்லணை மற்றும் மனோரா சேர்க்கப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்ட உலாத்தலத் திட்டத்தில் கல்லணை, மனோரா சேர்க்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட உலாத்தலத் திட்டத்தில் மனோரா சேர்க்கப்பட்டு மிகச் சிறப்பாக பணிகள் நடைபெற்று வருகின்றன. கல்லணையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். கல்லணைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் எத்தனை பேர்? அங்கே என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லணையைப் பொறுத்தவரையில் 1996-ஆவது ஆண்டில் 5,34,125 பேர் வருகை தந்திருக்கிறார்கள். அதேபோன்று, 1997-ஆவது ஆண்டு 6,20,000 பேரும், 1998-ஆவது ஆண்டு 7,18,000 பேரும், 1999-ஆவது ஆண்டில் 8,86,000 பேரும் வருகை தந்திருக்கிறார்கள். கல்லணைப் பகுதியைப் பொறுத்தமட்டில் சுற்றுலாப் பயணிகளின் அடிப்படைத் தேவைகள் சுற்றுலாத் துறையின் சார்பாக பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 நவம்பர் 10]

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் @**

**(ஆறாம் பட்டியல்) #**

1—

**தொழிற்சாலை**

**வினா எண் 5991—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட உள்ள மாலிப்டினைட் தொழிற்சாலையை மாவட்டத்தின் தலைநகரம் தருமபுரியில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மாலிப்டினைட் தொழிற்சாலையை மாவட்டத் தலைநகர் தருமபுரியில் ஏற்படுத்த திட்டம் ஏதும் இல்லை. எனினும், மாலிப்டினைட் தாதுப்பொருள் கிடைக்கும் காட்டூர் கிராமத்தில் (வேலம்பட்டி தெற்கு பகுதி) அமையவிருக்கும் சுரங்கத்திலிருந்து பாதுகாப்பான தொலைவில் மாலிப்டினைட் தொழிற்சாலை அமைக்கப்படும். இத்திட்டத்தை நிறைவேற்றத் தேவையான நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதைக் கையகப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2—

**பழுப்பு நிலக்கரி**

**வினா எண் 27052—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கனிம வளமான பழுப்பு நிலக்கரி ஓர் ஆண்டுக்கு எத்தனை டன் வெட்டி எடுக்கப்படுகிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

---

@ விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளவாறு அமைந்தனவாகும்.

# 8-11-2000 ஆம் நாளன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழகத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஆண்டொன்றுக்கு சுமார் 170 கோடி டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கிறது.

(ஆ) மேற்படி முதல் சுரங்கத்திலிருந்து (Mine-I) சுமார் 70 இலட்சம் டன் நிலக்கரியும், இரண்டாம் சுரங்கத்திலிருந்து (Mine II) சுமார் ஒரு கோடி டன் நிலக்கரியும் வெட்டி எடுக்கப்படுகிறது.

3—

## ராயல்டி தொகை

**வினா எண் 27053—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்கு 1998—99ல் பழுப்பு நிலக்கரி ராயல்டி மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) அதை மேம்படுத்த ராயல்டி உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழக அரசுக்கு 1998—99 ஆம் ஆண்டில் பழுப்பு நிலக்கரி ராயல்டி மூலம் கிடைத்த வருமானம் ரூ. 4,62,49,058 ஆகும்.

(ஆ) மத்திய அரசு பழுப்பு நிலக்கரிக்கான ராயல்டி தொகையை உயர்த்த வேண்டும் என்று கோரி, பாரதப் பிரதமர் அவர்களுக்கு 11—04—1999 அன்று கடிதம் எழுதப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

4—

## அரைவை ஆலைகள்

**வினா எண் 27070—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எத்தனை அரைவை ஆலைகள் உள்ளன?

(ஆ) அதன் மூலம் நாள் ஒன்றுக்கு எத்தனை டன் கரும்பு அரைவை ஆகிறது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு அரைவை ஆலை (One Milling Tandum) உள்ளது.

(ஆ) அவ்வாலை நாளொன்றுக்கு 2,500 டன்கள் கரும்பு அரைவைத் திறன் கொண்டது. அதன்படி நாளொன்றுக்கு 2,500 டன்கள் கரும்பு அரைவை செய்யப்படுகிறது.

5—

## கூட்டுறவு சர்க்கரை ஆலை

**வினா எண் 27071—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எத்தனை?

(ஆ) அந்த சர்க்கரை ஆலைகளில் இலாபகரமாக செயல்படுபவை எத்தனை?

(இ) நட்டத்தில் இயங்குபவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 16

(ஆ) மற்றும் (இ) அனைத்து ஆலைகளும் தற்போது நட்டத்திலேயே இயங்குகின்றன.

6—

## எரிசாராயத் தொழிற்சாலை

**வினா எண் 27167—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூம் வட்டம், தஞ்சாவூர்—திருச்சி பிரதான சாலையில் திருமலைசமுத்திரம் கிராமத்தில் சர்வே எண் 112—1 அரசு புறம்போக்கு நிலத்தில் அண்ணா சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை ஆகியவற்றின் மொலாஸஸைக் கொண்டு எரிசாராயத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நிதிப் பற்றாக்குறையால் அறிஞர் அண்ணா மற்றும் மதுரா சர்க்கரை ஆலைகளில் தற்போது எரிசாராய ஆலை அமைத்திட செயல்திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

7—

## கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்

**வினா எண் 29148—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நலிவுற்ற ஆலைகள் எத்தனை?

(ஆ) அவை நலிவுற என்ன காரணம் என்று ஆராயப்பட்டதா?

(இ) நலிவை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 10 ஆலைகள் மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளன.



(ஆ) (1) விரிவாக்கம் செய்யப்பட்ட ஆலைகள் குறித்த காலத்தில் இயங்க ஆரம்பிக்காதது.

(2) விரிவாக்கம் செய்த பின்பும் குறிப்பிட்ட அரைவைத் திறன் உடன் எட்டாதது.

(3) அபரிமிதமான கரும்பு உற்பத்தியின் காரணமாக அரைவைக் காலம் நீட்டிக்கப்பட்டு சர்க்கரைக் கட்டுமானம் குறைந்து, உற்பத்தி விலை கூடுதலானது.

(4) கரும்பு விவசாயிகள் பாதிக்கப்படாமலிருக்க மாநில அரசு பரிந்துரைக்கும் கரும்பு விலை.

(5) சர்க்கரை விற்பனை மீதான மத்திய அரசின் கட்டுப்பாடு.

(6) மைய அரசின் சர்க்கரை இறக்குமதிக் கொள்கை.

(இ) 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் புனரமைப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

8—

## சிறுபான்மையினர் நல ஆணையம்

**வினா எண் 30503—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்திற்கு எத்தகைய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மாநில சிறுபான்மையினர் ஆணையத்திற்கு அரசு ஆணைப்படி கீழ்வரும் பணிகளை நிறைவேற்றிட அரசு ஆணை வெளியிடப் பட்டுள்ளது:—

(அ) சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும், மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்படுகின்ற சட்டங்களிலும் வகை செய்யப்பட்டுள்ள பல்வேறு பாதுகாப்பு விதிமுறைகளின் செயல்பாடு பற்றி மதிப்பீடு செய்தல்.

[2000 நவம்பர் 10

(ஆ) அனைத்துப் பாதுகாப்பு விதிமுறைகளையும் செவ்வனே மேற்கொண்டு செயல்படுத்துவதை உறுதிப்படுத்த தக்க பரிந்துரைகளைச் செய்தல்.

(இ) சிறுபான்மையினத்தவரின் நலனுக்காக வகுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் திட்டங்கள் சரிவரச் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்தல்.

(ஈ) சிறுபான்மையினர்களுக்கெதிராக பாகுபாடுகள் காட்டப் படுவதைத் தவிர்ப்பது குறித்த ஆய்வுகள், ஆராய்ச்சி பகுப்பாய்வுகள் ஆகியவற்றை நடத்துதல்.

(உ) தேவையான சட்டப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள் மேற்கொள்வதற்கு அரசுக்குப் பரிந்துரைத்தல்.

(ஊ) சிறுபான்மையினத்தவரின் நலன் குறித்து அரசுக்கு காலமுறை அறிக்கைகள் சமர்ப்பித்தல்.

**9—**

## தொழில் வளர்ச்சி

**வினா எண் 30735—திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதி, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் ஒரு சதவீதம் அளவுக்குக்கூட தொழில் வளர்ச்சி அடையவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தை பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) பொள்ளாச்சி (வடக்கு) ஒன்றியத்தில் 4 பெருந் தொழில்களும் (டெக்ஸ்டைல்ஸ்) 1997—98 முதல் 1999—2000 முடிய 21 சிறு தொழில் நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

(ஆ) தொழிலில் பிற்படுத்தப்பட்ட பகுதியாக நிர்ணயம் செய்ய



2000 நவம்பர் 10]

அறிவித்த விதிமுறையின் அடிப்படையில் கணக்கிடும்போது பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் தொழிலாளர் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 2 சதவீதத்திற்கு அதிகமாக (4.09%) இருந்ததாலும், பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளின் தொழில் மூலதனம் 15 கோடிக்கு அதிகமாக (ரூ.23.78 கோடி) இருந்ததாலும் இந்த ஒன்றியம் தொழிலில் மிகவும் பின்தங்கிய/பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படவில்லை.

**10—**

## காகிதத் தொழிற்சாலை

**வினா எண் 30769—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் கிடைக்கும் வைக்கோல் மூல்மாகவோ அல்லது சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து கிடைக்கும் மூலப் பொருளைப் பயன்படுத்தியோ காகிதத் தொழிற்சாலை ஒன்றை பெரணமல்லூர் தொகுதியில் அமைக்க அரசு முயற்சி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**11—**

## கரும்பு உற்பத்தி

**வினா எண் 30775—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதியில் கரும்பு உற்பத்தி அதிகமாக உள்ளதால் சர்க்கரை ஆலை ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 நவம்பர் 10

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கெனவே செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையும், தனியார் துறையில் போளூரில் தரணி சுகர்ஸ் ஆலையும் இயங்கி வருகின்றன. மேலும் மலைபாம்பாடி என்ற இடத்தில் திருவாளர்கள் அருணாசலம் சுகர்ஸ் என்ற தனியார் நிறுவனம் சர்க்கரை ஆலை அமைக்க மைய அரசிடம் உரிமம் பெற்று ஆலை நிர்மாணிக்க பூர்வாங்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மேலும் ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்கத் தேவையான கரும்பு, அதைப் பயிரிடத் தேவையான கரும்பு நிலப்பரப்பு மற்றும் நீர்வளம் பெரணமல்லூர் பகுதியில் இல்லாததோடு புதிய சர்க்கரை ஆலை கூட்டுறவு அல்லது பொதுத் துறையில் அமைப்பது இல்லை என்ற கொள்கை முடிவை அரசு எடுத்துள்ளதால் பெரணமல்லூரில் புதிய சர்க்கரை ஆலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**12—**

## காகிதத் தொழிற்சாலை

**வினா எண் 31194—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கலில் காகிதத் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இதற்கு வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**13—**

## தொழிற்சாலை அமைத்தல்

**வினா எண் 31197—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் அதிகமாகக் கிடைக்கும் கிரானைட்டை வெட்டி எடுத்து, பாலிஷ் போட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஒரு தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஏற்கெனவே தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் அருகில் மாதேபள்ளியில் தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான கிரானைட் மெருகிடும் தொழிற்சாலை, இம்மாவட்டத்தில் கிடைக்கும் கிரானைட் கற்களை வெட்டியெடுத்து, மெருகிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றது.

(ஆ) எனவே, மற்றும் ஒரு கிரானைட் மெருகிடும் தொழிற்சாலை இம்மாவட்டத்தில் அமைக்கத் தேவையில்லை.

**14—**

## கிரானைட் கற்கள்

**வினா எண் 31198—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் அதிகம் கிடைக்கும் கிரானைட் கற்களை தொழிலாளர்கள் பயனடையும் வகையில் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக குத்தகைக்கு விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களைப் பொறுத்தமட்டில் தற்போது வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறை (சிறு கனிம சலுகை விதி 8—ஏ) நடைமுறையில் உள்ளது. தனியார் நிலங்களில் கிரானைட்

பாறைகள் இருப்பின் அவர்கள் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில், விதி 19ஏ—ன்கீழ் அரசுக்கு விண்ணப்பித்து குத்தகை பெற்றுக் கொள்ளலாம். சட்டமன்ற உறுப்பினர் எழுப்பியுள்ள வினாவில் குறிப்பிட்டது போன்று கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிரானைட் குத்தகை வழங்க மேற்கூறிய விதிகளில் வழிவகை இல்லை.

**15—**

## வேலைவாய்ப்பில் முன்னுரிமை

**வினா எண் 31200—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பொட்டனேரி சிஸ்கால் தொழிற்சாலையிலுள்ள பணியிடங்களை நிரப்பும்பொழுது அப்பகுதியைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பொட்டனேரியில் அமைக்கப்பட்டுள்ள சிஸ்கால் நிறுவனத்தில் பணிபுரியும் 673 நபர்களில் 241 நபர்கள் மேச்சேரி கிராமத்தைச் சேர்ந்தவர்கள். 66 நபர்கள் மேட்டூர் வட்டத்தைச் சேர்ந்தவர்கள். 57 நபர்கள் சேலம் மாவட்டத்தின் இதர பகுதியைச் சேர்ந்தவர்கள். ஆக, சிஸ்கால் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ள சேலம் மாவட்டத்திலிருந்து மட்டுமே மொத்தம் 364 பேர்களுக்கு சிஸ்கால் நிறுவனம் வேலைவாய்ப்பளித்துள்ளது. இது மொத்தப் பணியாளர்களில் 54% ஆகும். இதுதவிர, பக்கத்திலுள்ள தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 19 நபர்களுக்கும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த 21 நபர்களுக்கும், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த 37 நபர்களுக்கும், இதர மாவட்டங்களைச் சேர்ந்த 153 நபர்களுக்கும் சிஸ்கால் நிறுவனம் வேலைவாய்ப்பளித்துள்ளது. மொத்தமுள்ள பணியாளர்களில் 594 பணியாளர்கள் அதாவது 88% தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தகுதி, பணியின் தன்மை, முன் அனுபவம் ஆகியவற்றைப் பொறுத்து, மீதமுள்ள 79 நபர்கள் மட்டுமே (12%) இதர மாநிலங்களிலிருந்து பணியமர்த்தப் பட்டுள்ளனர்.



**16—**

## முகாம்கள்

**வினா எண் 33432—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதியில் உள்ள செங்கோட்டை, தென்காசி மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களில் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த ஒன்றிய அளவில் தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொழில் வணிகத் துறை சார்பில் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியத்தில் 12—1—2000 அன்று தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாம் நடத்தப்பட்டது. செங்கோட்டை மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) நடப்பு நிதியாண்டில் (2000—2001) திருநெல்வேலி உட்பட பல்வேறு மாவட்டங்களில் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

**17—**

## தமிழ்நாட்டில் முதலீடு

**வினா எண் 33491—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ள அந்நியக் கம்பெனிகள் எத்தனை?

(ஆ) எவ்வளவு முதலீடு செய்துள்ளன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ள அந்நியக் கம்பெனிகளின் எண்ணிக்கை 1496 ஆகும்.

(ஆ) அவை செய்துள்ள முதலீடு ரூ. 14122.64 கோடி ஆகும்.

**18—**

## தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்தல்

**வினா எண் 33693—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் பகுதியை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அங்கு புதிய தொழிலகங்கள் தொடங்க அரசு சலுகைகள் அளிக்குமா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) ஓர் ஊராட்சி ஒன்றியத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க தொழிற்சாலை மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 0.25 சதவீதம் அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற்சாலை, தொழிலாளர்களின் எண்ணிக்கை, மொத்த மக்கள் தொகையில் 0.37 சதவீதம் இருப்பதால் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க இயலாது.



**19—**

## கருங்கல் குவாரிகள்

**வினா எண் 33957—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில், தாம்பரம் வட்டத்தில் எத்தனை கருங்கல் குவாரிகள் ஏலம் விடப்பட்டன?

(ஆ) அதனால், என்ன வருவாய் வருகிறது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதியில், தாம்பரம் வட்டத்தில் மொத்தம் 8 (எட்டு) கல் குவாரிகள் ஏலம் விடப்பட்டன.

(ஆ) அதன் மூலம் ஆண்டுக்கு ரூ.41,90,424 (ரூபாய் நாற்பத்தொன்று இலட்சத்து தொண்ணூறாயிரத்து நானூற்று இருபத்து நான்கு மட்டும்) வருமானம் கிடைக்கிறது.

**20—**

## கடன் உதவி

**வினா எண் 36343—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள நலிவடைந்த கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகட்கு அரசு நீண்ட காலக் கடன் உதவி அளிக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த சர்க்கரை ஆலைகட்கு கடன் உதவி அளிக்க உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நலிவடைந்த சர்க்கரை ஆலைகளுக்கு நீண்ட காலக்

கடன் உதவி அளிக்கும் உத்தேசம் எதும் இல்லை. ஆயினும், ஆம்பூர், மதுராந்தகம், அமராவதி, சேலம், கள்ளக்குறிச்சி—I, நேஷனல், திருப்பத்தூர், செங்கல்ராயன் என்.பி.கே.ஆர்.ஆர்., எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகிய 11 நலிவடைந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் புனரமைப்பிற்கான திட்டம் (Rehabilitation package) ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**21—**

### சிப்காட் தொழிற்பேட்டை

**வினா எண் 37479–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் "சிப்காட்" தொழிற்பேட்டை எத்தனை இயங்கி வருகின்றன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் "சிப்காட்" தொழிற்பேட்டை எதும் இல்லை.

**22—**

### கூடுதல் கட்டடம்

**வினா எண் 17697–திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலத்திலுள்ள மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலத்திலுள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவது சார்பாக இவ்வாண்டு இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய





பணிகளுக்கு நிதி ஒதுக்கிட, தொடர்புடைய சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினரின் இசைவு பெறப்படின் இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்து தரப்படும்.

**23—**

### நூலகங்கள்

**வினா எண் 34250–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999—2000 ஆம் நிதி ஆண்டில் கிராமப்புறங்களில் புதிதாக ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் ஊர்ப்புற நூலகங்கள் திறக்க எண்ணியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 66, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 31—1—1996ல் 625 ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை மொத்தம் 592 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதில் 1999—2000 நிதியாண்டில் மட்டும் (31—3—2000) முடிய கீழ்க்கண்ட 61 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 3 |
| 2. | திருவள்ளூர் | 1 |
| 3. | வேலூர் | 5 |
| 4. | திருவண்ணாமலை | 2 |
| 5. | கடலூர் | 1 |
| 6. | விழுப்புரம் | 2 |
| 7. | தஞ்சாவூர் | 2 |

| | | |
|---|---|---|
| 8. | திருவாரூர் | 2 |
| 9. | திருச்சி | 1 |
| 10. | பெரம்பலூர் | 1 |
| 11. | புதுக்கோட்டை | 1 |
| 12. | மதுரை | 2 |
| 13. | தேனி | 2 |
| 14. | இராமநாதபுரம் | 1 |
| 15. | சிவகங்கை | 2 |
| 16. | விருதுநகர் | 2 |
| 17. | தூத்துக்குடி | 2 |
| 18. | தருமபுரி | 13 |
| 19. | சேலம் | 4 |
| 20. | நாமக்கல் | 3 |
| 21. | ஈரோடு | 2 |
| 22. | கோயம்புத்தூர் | 7 |
| | மொத்தம் | 61 |

**24—**

### நூலகங்கள்

**வினா எண் 34823—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எத்தனை ஊர்ப்புற நூலகங்கள் உள்ளன?

(ஆ) சொந்தக் கட்டடத்தில் இயங்கும் ஊர்ப்புற நூலகங்கள் எத்தனை?



(இ) வாடகைக் கட்டடத்தில் இயங்கும் ஊர்ப்புற நூலகங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் ஊர்ப்புற நூலகங்கள் ஏதுமில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**25—**

### பொது நூலகங்கள்

**வினா எண் 35627—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை பொது நூலகங்கள் செயல்படுகின்றன?

(ஆ) அவற்றில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு 88 பொது நூலகங்கள் செயல்படுகின்றன:

| | |
|---|---|
| 1. மாவட்ட மைய நூலகம் | 1 |
| 2. கிளை நூலகங்கள் | 52 |
| 3. ஊர்ப்புற நூலகங்கள் | 8 |
| 4. இயங்கும் நூலகம் | 1 |
| 5. பகுதி நேர நூலகம் | 26 |
| | 88 |

*அவற்றில் உள்ள மொத்தப் புத்தகங்களின் எண்ணிக்கை 8,25,940. மாவட்ட மைய நூலகத்தில் 56,075 தமிழ் நூல்களும், 32,015 ஆங்கில நூல்களும், கிளை நூலகங்களில் 6,78,048 தமிழ் நூல்களும், 27,555 ஆங்கில நூல்களும் உள்ளன. ஊர்ப்புற நூலகங்களில் 29,478 தமிழ் நூல்களும், நடமாடும் நூலகத்தில் 2,769 தமிழ் நூல்களும் உள்ளன.*

**26—**

## கிளை நூலகங்கள்

**வினா எண் 35290–திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் எத்தனை கிளை நூலகங்கள் உள்ளன?*

*(ஆ) அவற்றில் நிரப்பப்பட வேண்டிய நூலகர்கள் பணியிடங்கள் எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் 38 கிளை நூலகங்கள் உள்ளன.

(ஆ) அவற்றில் இரண்டாம் நிலை நூலகர் பணியிடம் ஒன்றும், மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் 23—ம் நிரப்பப்பட வேண்டியுள்ளன.

**27—**

## மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா எண் 35555–திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டத்தில் 1999—2000 ஆம் கல்வி ஆண்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு கருதியுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1999—2000 ஆம் கல்வி ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழையூர்,



திருமங்கலக்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

**28—**

## அளவுகோல்

**வினா எண் 37166–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த எவ்விதத் தகுதிகள் அளவுகோலாக எடுக்கப்படுகிறது?*

*(ஆ) அந்தத் தகுதிகள் மலைப் பிரதேசங்களில் தளர்த்தப் படுகின்றனவா?*

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) அரசாணை (நிலை) 235 ப.க.துறை, நாள் 24—5—1997—ன்படி ஊராட்சி ஒன்றிய அரசு நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த கீழ்க் கண்ட நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன:

(அ) ஆண்கள் அல்லது இருபாலர் பயிலும் பள்ளிகளை உயர்த்த 5 ஏக்கர் நிலம் விளையாட்டு இடவசதிக்காக (Playground facilities) இருக்க வேண்டும். பெண்கள் பள்ளியாக இருந்தால் 3 ஏக்கர் நிலம் போதுமானது.

(ஆ) அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் பொதுமக்கள் பங்குத் தொகையானது முழுவதுமாக செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(இ) ஆதிதிராவிடர்கள் அதிகமான அளவில் உள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

(ஈ) பெண்கள் பள்ளிகளாக இருப்பின் தரம் உயர்த்த முன்னுரிமை அளிக்கப்படும்.

(உ) உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தவுள்ள பள்ளியில் 8—ம் வகுப்பில் குறைந்தது 50 மாணவர்கள் இருக்க வேண்டும். இதில் ஆதிதிராவிடர்

[2000 நவம்பர் 10

பள்ளிகளைப் பொறுத்த அளவில் மாணவர் எண்ணிக்கை அளவு தளர்வு செய்யப்படும்.

(ஊ) தரம் உயர்த்தப்படவுள்ள பள்ளிக்குப் போதுமான கட்டடம், இடம் மற்றும் தளவாடச் சாமான்கள் இருக்க வேண்டும்.

(எ) தரம் உயர்த்தப்படவுள்ள உயர்நிலைப் பள்ளிக்கும் மற்றொரு உயர்நிலைப் பள்ளிக்கும் இடையே குறைந்தபட்ச தூரம் 5 கி.மீ. இருக்கவேண்டும்.

(ஏ) மலைப்பிரதேசங்களில் உள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**29—**

**விரிவுரையாளர்**

**வினா எண் 37962—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக்கழகத்தில் காலியாகவுள்ள விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிரப்பப்படும்?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சென்னைப் பல்கலைக்கழக நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்று 65 விரிவுரையாளர்கள் பணியிடங்களை நிரப்ப சென்னைப் பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) இக்கல்வி ஆண்டின் முதல் ஓரிரண்டு மாதங்களில் அப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**30—**

**மருந்தாளுநர் பணியிடங்கள்**

**வினா எண் 27108—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடங்கள் எத்தனை?

(ஆ) ஆம் எனில், அவற்றை நிரப்ப அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் 60 மருந்தாளுநர் பணியிடங்களும், ஏனைய மருத்துவமனைகளில் மொத்தம் 172 பணியிடங்களும் காலியாக உள்ளன. அவற்றை நிரப்ப உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**31—**

**விவசாயக் கிணறு மின்சாரம்**

**வினா எண் 33673—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல், ஈரோடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் விவசாயக் கிணறு மின்சாரம் பெறுபவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் வருடந்தோறும் உபயோகிக்கும் மின் அளவு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் விவசாயக் கிணறுகளுக்கு மின்சாரம் பெறுபவர்கள் விவரம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| (1) நாமக்கல் | 60323 |
| (2) ஈரோடு | 127674 |
| (3) சேலம் | 106144 |
| (4) தருமபுரி | 83476 |

[2000 நவம்பர் 10

(ஆ) அவர்கள் வருடந்தோறும் உபயோகிக்கும் மின் அளவு பின்வருமாறு:—

| | |
|---|---|
| (1) நாமக்கல் | 1046.44 மில்லியன் யூனிட் |
| (2) ஈரோடு | 961.27 மில்லியன் யூனிட் |
| (3) சேலம் | 2610.02 மில்லியன் யூனிட் |
| (4) தருமபுரி | 675.09 மில்லியன் யூனிட் |

**32—**

### கூடுதல் கட்டட வசதி

**வினா எண் 34303—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் எத்தனை அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மற்றும் குமாரபாளையம் அரசு மருத்தவமனைகளில் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

(ஆ) அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை தனியார் தொழிலதிபர்கள் தத்தெடுத்து பராமரிக்கும் திட்டத்தின்கீழ், வேலூர் நகர கூட்டுறவு வங்கி, வேலூர் அரசு மருத்துவமனையில் ரூ. 4 இலட்சத்திற்கு மகப்பேறு அறை மற்றும் மகப்பேறு வார்டு கட்டடம் அவர்களது சொந்தப் பொறுப்பில் கட்டி வருகிறது. இக்கட்டடப் பணி முடியும் தருவாயில் உள்ளது. குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் 24 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இது முடியும் தருவாயில் உள்ளது.



2000 நவம்பர் 10]

**33—**

### பராமரிப்புப் பணி

**வினா எண் 34342—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி அரசு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் மின் விளக்குகள், மின் விசிறிகள் பழுது நீக்கி பராமரிப்புப் பணிகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் மின் விளக்குகள், மின் விசிறிகள் புதியதாகப் பொருத்தப் பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

**34—**

### சுயநிதி விவசாய மின் இணைப்பு

**வினா எண் 34677—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சுயநிதி விவசாய மின் இணைப்புப் பெற 1999 ஆம் ஆண்டு டிசம்பர் வரை எவ்வளவு விண்ணப்பங்கள் பெறப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சுயநிதித் திட்டத்தின்கீழ் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 480 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

[2000 நவம்பர் 10

35—

### எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் பிரிவு இயக்குதல்

**வினா எண் 34684–திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் பிரிவு இயக்கும் பணியாளர் பல நாட்களாக நியமிக்கப்படாது இருப்பது அரசின் கவனத்திற்கு வரப் பெற்றதா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் எப்போது நியமனம் செய்யப்படுவார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை அரசு மருத்துவமனையில் நுண்கதிர் படப்பிடிப்பாளர் பணியிடம் 7—6—1996 முதல் நிரப்பப்பட்டு நுண்கதிர் பிரிவு தொடர்ச்சியாக செயல்பட்டு வருகிறது. மேலும், ஸ்கேன் பிரிவும் வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

36—

### வட்ட மருத்துவமனை

**வினா எண் 34874–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் உள்ள அரசு மருத்துவமனை வட்ட மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டுள்ளதால் அங்குள்ள பிரேதப் பரிசோதனை அறைக்கு குளிர்சாதன வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்ட மருத்துவமனை பிரேதப் பரிசோதனை அறைக்கு குளிர்சாதன வசதி செய்வது குறித்த கருத்துருவை இனிவரும் ஆண்டின் பகுதி—2 திட்டத்தில் சேர்க்க பரிசீலிக்கப்படும்.



37—

### மின் அழுத்தக் கம்பங்கள்

**வினா எண் 35052–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகர், 10—வது வார்டு, திருநீலகண்டபுரம், ஜவஹர் நகர், காமாட்சியம்மன் கோயில் வீதிகளில் உயர் மின் அழுத்தக் கம்பங்கள் நடுரோட்டில் செல்வதை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருப்பூர் நகர், 10—வது வார்டு, திருநீலகண்டபுரம், ஜவஹர் நகர், காமாட்சியம்மன் கோயில் வீதிகளில் 110 கி.வோ. மிக உயர் அழுத்த மின் பாதை செல்கிறது. அதனை மாற்றி அமைக்க இயலாது.

38—

### மின் மோட்டார் இணைப்பு

**வினா எண் 35066–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் 26—வது வார்டு, சூசையாபுரம் பொதுக் கழிப்பிடத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்றுக்கு மின் மோட்டார் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருப்பூர் 26—வது வார்டு, சூசையாபுரம் பொதுக் கழிப்பிடத்தில்

உள்ள ஆழ்குழாய்க் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்க சம்பந்தப்பட்ட துறையிடம் இருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்ட பின், உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு, விரைவில் மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**39—**

### மின் விநியோகம்

**வினா எண் 35448–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதியில் தொடர்ந்து மின்சாரம் அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை நிறுத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 13—3—2000 நாளிட்ட வாரிய உத்தரவின்படி நகர்ப்புற இடங்களுக்கு காலையில் அரை மணி நேரமும், மாலையில் ஒரு மணி நேரமும் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. தற்போது 18—5—2000 முதல் தடையில்லாத மின்சாரம் வழங்கப்படுகிறது.

**40—**

### பணி நிரந்தரம்

**வினா எண் 35470–திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மின் வாரியத்தில் நீதிபதி காலித்தின் தீர்ப்பின்படி எத்தனை தொழிலாளர்கள் 1—1—2000 வரை நிரந்தரம் செய்யப்பட்டனர்?





(ஆ) வகை வாரியாக ஒவ்வொரு வகையிலும் எவ்வளவு பேர் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நீதிபதி காலித் கமிசனின் பரிந்துரையின்படி 13,048 ஒப்பந்தத் தொழிலாளர்கள் களப் பணி உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டு பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி நீதிபதி திரு. காலித் கமிசனால் பரிந்துரைக்கப்பட்ட 18,006 ஒப்பந்தத் தொழிலாளர்களில், தேர்வுக் குழுவினால் தகுதியானவர்கள் என அடையாளம் காட்டப்பட்ட 13,048 ஒப்பந்தத் தொழிலாளர்கள் களப் பணி உதவியாளர்களாக பணி அமர்த்தப்பட்டார்கள். நீதிபதி காலித் கமிசனின் அறிக்கையினை வாரியத்தில் அமல்படுத்தியது சம்பந்தமாக வாரியத்தால் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு 15—2—1999 அன்று வழக்கை முடித்துக்கொண்டது.

**41—**

### ஜெனரேட்டர்

**வினா எண் 35582–திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தலைமை அரசு மருத்துவமனை புதிய வளாகத்தில் 75 கே.வி.ஏ. ஜெனரேட்டர் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமையிட மருத்துவமனை புதிய வளாகத்தில் ரூ.15.40 இலட்சம்

செலவில் 150 கே.வி.ஏ. ஜெனரேட்டர் நிறுவன 2000—2201 ஆம் ஆண்டுக்கான பகுதி—2 திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) இதற்கான வேலையை விரைவில் தொடங்க உள்ளார்.

**42—**

### கால்நடை நுழையா வாயில்

**வினா எண் 35612—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் கால்நடை நுழையா வாயில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் கால்நடைகள் நுழையா வாயில் அமைக்க நடப்பு நிதியாண்டில் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கல் பணியின்கீழ் நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கப்படும்.

**43—**

### ஆய்வகக் கூடம்

**வினா எண் 35615—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவ மனை புதிய வளாகத்தில் ஆய்வகக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் ஆய்வகக் கூடம் அமைத்துத் தருவது குறித்து, தேவையிருப்பின் வரும் ஆண்டில் பகுதி—2 திட்டத்தில் சேர்த்து நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கப்படும்.

**44—**

### தங்கும் வசதி

**வினா எண் 35617—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் நோயாளிகளின் உடன் ஆள் தங்குமிடம் அமைக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் நோயாளிகளின் உடன் ஆள் தங்குமிடம் அமைத்துத் தருவது குறித்து வரும் ஆண்டில் பகுதித் திட்டத்தில் சேர்த்து நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கப்படும்.

**45—**

### மின் இணைப்பு

**வினா எண் 35791—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவிற்கு மின் இணைப்பு வழங்க காலதாமதமாவது ஏன்?

(ஆ) இங்கு மின் இணைப்பு எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குழித்துறை அரசு மருத்துவமனையில் உள்ள மகப்பேறு பிரிவிற்கு ஏற்கெனவே மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**46—**

## மின் வெட்டு

**வினா எண் 36248—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மின்வெட்டு வராமல் தடுக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் என்னென்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழக அரசு இவ்வருட கோடை காலத்தில் மின்வெட்டு வராமல் இருக்க பல முயற்சிகள் மேற்கொண்டது. அவை பின்வருமாறு:

1999—2000 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் மார்ச் முடிய தமிழ்நாட்டில் மின்சார உற்பத்திக்கும், உபயோகத்திற்கும் இடையில் நிலவிய 14 சதவிகிதப் பற்றாக்குறையை சமப்படுத்த கிழக்குப் பிராந்தியத்திலிருந்து 150 மெகாவாட்டும், பஞ்சாப் மாநிலத்திலிருந்து 100 மெகாவாட்டும், மராட்டிய மாநிலத்திலிருந்து 100 மெகாவாட்டும், பாண்டிச்சேரி மின் கழகத்திலிருந்து 24 மெகாவாட்டும் பெற தமிழ்நாடு மின் வாரியம் ஒப்பந்தம் செய்து கொண்டது.

ஏப்ரல் 1999 முதல் மார்ச் 2000 முடிய கிடைக்கக்கூடிய மின் உற்பத்தி மற்றும் கிழக்குப் பிராந்தியம், பஞ்சாப், பாண்டிச்சேரியிலிருந்து பெறப்பட்ட



2000 நவம்பர் 10]

மின்சாரத்தைக் கொண்டும், கோடைக்கால மின் உச்சத் தேவையை மின் வாரியம் கீழ்க்கண்ட அவசர காலத் திட்டத்தின் மூலம் சமாளித்தது:

1. ஊரக மின் இணைப்புகளுக்கான முப்பிரிவு கட்டுப்பாடு

2. மாலை 6 மணி முதல் காலை 4 மணி வரையிலான உச்சக்கால மின் கட்டுப்பாடு

3. கீழ்க்கண்ட நகர்ப்புற கட்டுப்பாடுகள்:

(அ) காலை 10 மணி முதல் 12 மணி வரை அரை மணி நேர மின் கட்டுப்பாடு

(ஆ) மதியம் 12 மணி முதல் மாலை 4 மணி வரை ஒரு மணி நேர மின் கட்டுப்பாடு.

**47—**

## மருந்தாளுநர் பணியிடங்கள்

**வினா எண் 373190—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அதை 2000—2001—ல் நிரப்ப அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மருத்துவம் மற்றும் அரசு நலப் பணிகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அரசு மருத்துவமனைகளில் தற்போது 112 மருந்தாளுநர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

(ஆ) காலியாக உள்ள மருந்தாளுநர் பணியிடங்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாக நிரப்பிட அரசாணை (நிலை) எண் 105, மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 3—5—2000—ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

48—

## மருந்தாளுநர்கள் பணியிடங்கள்

**வினா எண் 37324–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் பணி புரியும் மருந்தாளுநர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் தற்போது இரண்டு மருந்தாளுநர் பணியிடங்கள் அரசால் ஒப்பளிக்கப் பட்டு, இருவர் பணிபுரிந்து வருகின்றனர். ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இரண்டு மருந்தாளுநர் பணியிடங்கள் இம்மருத்துவமனைக்கு போதுமான தாகும்.

(ஆ) வினா எழாது.

49—

## மருந்தாளுநர்களை நியமித்தல்

**வினா எண் 37431–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு தினந்தோறும் வருகை தரும் வெளிநோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) அதற்குத் தேவையான மருந்தாளுநர்கள் நியமிக்கப் பட்டுள்ளனரா?

(இ) இல்லையெனில், அதற்குத் தேவையான மருந்தாளுநர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு சரா சரியாக நாளொன்றுக்கு 650 வெளிநோயாளிகள் வருகின்றார்கள்.

(ஆ) இம்மருத்துவமனைக்குத் தேவையான இரண்டு மருந்தாளுநர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர்.

(இ) வினா எழாது.

50—

## தனி வட்டாட்சியர் அலுவலகம்

**வினா எண் 31151–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் கூட்டுப் பட்டா தாரர்களாக உள்ளவர்களுக்குத் தனிப் பட்டா வழங்கப்பட்டதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளைக் களைய எடப்பாடியில் மீண்டும் தனி வட்டாட்சியர் அலுவலகம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

51—

## சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா எண் 35731–திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம்,

மேலப்பாவூர் கிராமச் சாவடியைப் பழுது நீக்கம் செய்து தரவும், சுற்றுச் சுவர் கட்டித் தரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முழுவதும் செப்பனிடப்பட வேண்டிய நிலையிலுள்ள கிராமச் சாவடிகளை தற்போதுள்ள நிதிநிலையில் ஒட்டு மொத்தமாக செப்பனிட இயலாத நிலை உள்ளது. எனவே, ஆண்டு தோறும் நிதிநிலைக்கேற்ப பகுதி—2 திட்டத்தில் சேர்த்து கால கிரமத்தில் பழுதடைந்த கிராமச் சாவடிகளை பழுது பார்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இது ஒரு தொடர் நடவடிக்கையாதலால் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் மேலப்பாவூர் கிராமச் சாவடியை பழுது நீக்கம் செய்யும் பணியை எப்போது நிறைவேற்ற இயலும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற இயலாது. அரசுக் கட்டடங்களுக்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கு, பொதுவான தடையாணை உள்ளது.

**52—**

## கட்டட வசதி

**வினா எண் 35732–திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை கிராமிய நூற்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட செங்கோட்டை வட்டத்தில் புல எண் ஏ3/42—ல் உள்ள புறம்போக்கு நிலத்தில் தேவையான இடத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம் மற்றும் கிராமம், புல எண் ஏ3/42—ல் 118 சதுர மீட்டர் நிலத்தில் நகராட்சியினரால் கட்டப்பட்ட நீர்த்தேக்கத் தொட்டியை பொதுமக்கள்



பயன்படுத்தி வருவதாலும், மேலும் அந்நிலத்தில் ஒரு வட்டக் கிணறு உள்ளதாலும், கிராமக் கணக்குகளில் கிணறு புறம்போக்கு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்ய இயலாது. அதற்குப் பதிலாக செங்கோட்டை வட்டம் மற்றும் கிராமம் புல எண் ஏ2/129—ல் 155 சதுர மீட்டர் நிலத்தினை கிராமிய நூற்பு நிலையம் அமைக்கும் பொருட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**53—**

## சாதிச் சான்றிதழ்

**வினா எண் 36498–திரு. சி. கோபு:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டு தொகுதி, மீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை மற்றும் பாலாம்பட்டு ஊராட்சி மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்குவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி மீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை, பாலாம்பட்டு ஆகிய மலைக் கிராமங்களில் சாதிச் சான்று கோரி பெறப்பட்ட மனுக்களின்மீது தீவிர விசாரணை மேற்கொண்டு சாதிச் சான்று வழங்கப்பட்டு வருகின்றது.

**54—**

## குடிநீர் வடிகால் வாரியத் திட்டங்கள்

**வினா எண் 33070–திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்ட திட்டங்கள் எத்தனை?

(ஆ) அவை யாவை?

(இ) அவற்றில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) புவனகிரி தொகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்ட திட்டங்கள், புவனகிரி ஒன்றியத்தில் 30 மற்றும் பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் 21, ஆக மொத்தம் 51 ஆகும்.

(ஆ) அவை கீழ்க்கண்டுள்ளவாறு:

புவனகிரி ஒன்றியத்தில் ஆய்வு செய்யப்பட்ட குடியிருப்புகள்:

1. பி. ஆதனூர் காலனி
2. கும்பிடிமூலை
3. பாளையம் காலனி
4. முத்துகிருஷ்ணாபுரம்
5. சொக்கன்கொல்லை
6. நல்ல தண்ணீர்குளம்
7. மஞ்சக்கொல்லை
8. சீயப்பாடி
9. வாண்டையான் குப்பம்
10. நத்தமேடு
11. தைலாகுப்பம்
12. அம்மன்குப்பம் காலனி
13. பத்திரிமேடு
14. சின்னக்கொளக்குடி காலனி
15. காமராஜர் நகர்





16. கான்சாகிப் மண்டபம்
17. சின்னநற்குணம்
18. மருதூர்
19. மதுவானமேடு
20. எறும்பூர் காலனி
21. சுத்தாமை காலனி
22. கரிவெட்டி
23. அம்பலத்தடிகுப்பம்
24. பிரசன்னராமாபுரம்
25. விரக ஆலம்பாடி
26. ஜெயம்கொண்டான்
27. பூதவராயன்பேட்டை காலனி
28. பாலூத்தங்கரை காலனி
29. பாலூத்தங்கரை
30. மேட்டுக்குப்பம் எம்.ஆர்.வி. நகர்

பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் ஆய்வு செய்யப்பட்ட குடியிருப்புகள்:

1. சின்னக்குமட்டி
2. வில்லியநல்லூர்
3. புதுச்சத்திரம்
4. தாண்டவராய சோழகன்பேட்டை
5. மணல்மேடு
6. ஞானஅடைக்கலபுரம்
7. கீழ் அனுவம்பட்டு
8. மடுவன்கரை

9. அரியகோஷ்டி

10. கரிக்குப்பம்

11. இளந்திரமேடு

12. அம்பிகாபுரம்

13. வடுகதிரைமேடு

14. பெரிய காலனி

15. அண்ணாநகர் எச்

16. அரியநாட்டு கீழ்த்தெரு

17. பொன்னன்திட்டு

18. முடசல் ஓடை

19. சின்னவாய்க்கால்

20. கிள்ளை (ஊராகப் பேரூராட்சி)

21. முசுக்குத்துறை

(இ) இதில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்:

1. புவனகிரி ஒன்றியத்தில் குறிஞ்சிக் கொல்லை ஊராட்சியில் மதுவானமேடு குடியிருப்பு.

2. புவனகிரி ஒன்றியத்தில் பூதவராயன்பேட்டை ஊராட்சியில் பூதவராயன்பேட்டை காலனி.

3. பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சின்னக்குமட்டிபேட்டை.

4. பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் தாண்டவராயன் சோழகன்பேட்டை.

**55—**

## பொதுக் குழாய் அமைத்தல்

**வினா எண் 33903—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருப்பூர் 22—வது வார்டு ஸ்ரீவித்யா நகர் காமராசர் முதல் வீதியில் ஒரு பொதுக் குழாய் அமைத்துத் தரும்படி பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 22—வது வார்டு ஸ்ரீவித்யா நகரில் ஏற்கெனவே பொதுக் குழாய் உள்ளது. காமராசர் நகர் முதல் வீதியில் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேலும், பொதுக் குழாய் தேவை குறித்து நகரமன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரப்படும்.

**56—**

## சாக்கடை வசதி

**வினா எண் 33904—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 21—வது வார்டு பிரியா பள்ளி வீதி, ராஜீவ் நகர் வீதி, புத்தூரான் தோட்டம் போன்ற பகுதிகளில் சாக்கடை வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 21—வது வார்டு பிரியா பள்ளி வீதி, புத்தூரான் தோட்டம் போன்ற பகுதிகள் அங்கீகரிக்கப்படாத பகுதிகளாக இருப்பதால் இப்பகுதியில் சாக்கடை வசதி செய்ய இயலாது.

57—

## பூங்கா பராமரிப்பு

**வினா எண் 33931—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகராட்சி, முத்துசாமி பூங்கா பராமரிப்பிற்காக நிதி ஒதுக்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பூங்கா பராமரிப்பு எப்போது மேற்கொள்ளப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சியின் நிதிநிலைமை மிகவும் பின்தங்கி உள்ளதால், அந்நகரில் உள்ள முத்துசாமி பூங்காவின் பராமரிப்பிற்காக நகராட்சியால் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்ய இயலவில்லை.

58—

## அறிவியல் பூங்கா

**வினா எண் 34000—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சிப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் அறிவியல் பூங்கா அமைக்கத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகராட்சிப் பகுதியில் அறிவியல் பூங்கா





அமைக்க, குறைந்தபட்சம் 15 ஏக்கர் காலியிடம் தேவைப்படுகிறது. ஆனால் அந்நகராட்சிப் பகுதியில் அரசு மற்றும் நகராட்சிக்குச் சொந்தமான காலியிடம் மற்றும் புறம்போக்கு நிலம் ஏதுமில்லை.

59—

## குடிநீர்

**வினா எண் 34127—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகருக்குள் லாரி மூலம் தினசரி எவ்வளவு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது?

(ஆ) அதற்காக நகராட்சிக்கு ஆகும் செலவு என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகராட்சியில் குடிநீர்ப் பகிர்மானக் குழாய் இல்லாத பகுதிகளில் தினந்தோறும் லாரிகள் மூலம் சுமார் 9 இலட்சம் லிட்டர் தண்ணீர் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இதற்காக உத்தேச செலவினம் ரூ.11,000 ஆகிறது.

60—

## மின் கம்பம் மாற்றி அமைத்தல்

**வினா எண் 34211—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 20—வது வார்டு ராம்நகர் 3—வது வீதியில் எந்த நேரமும் கீழே விழுகிற நிலையில் ஒரு மின் கம்பம் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது மாற்றி அமைக்கப்படும்?

[2000 நவம்பர் 10

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 20—வது வார்டு, ராம்நகர் 3—வது வீதியில் பழுதடைந்த மின் கம்பம் மாற்றப்பட்டுவிட்டது.

**61—**

## மின் கம்பம் பழுதுபார்த்தல்

**வினா எண் 34212–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 10—வது வார்டு காமராசர் வீதி 1—ம், பி.என். ரோடும் சந்திக்கும் இடத்திலுள்ள மின் கம்பம் தொடர்ந்து பழுதுபட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது மாற்றியமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 10—வது வார்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மின்சார டிரான்ஸ்பார்மர் கம்பம் சரி செய்யப்பட்டுவிட்டது.

**62—**

## புதிய மின் கம்பங்கள்

**வினா எண் 34214–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் குமரானந்தபுரம், காமாட்சி அம்மன் கோயில் வீதி கீழ்ப்புறம் மூன்று மின் கம்பங்கள் கீழே விழும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?



2000 நவம்பர் 10]

(ஆ) ஆம் எனில், அது எப்போது அகற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், குமரானந்தபுரம் காமாட்சியம்மன் கோயில் வீதியில் பழுதுபட்ட மின் கம்பங்கள் மாற்றப்பட்டு, மூன்று புதிய மின் கம்பங்கள் நடப்பட்டுவிட்டன.

**63—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 34235–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 42—வது வார்டு, செல்லாண்டி அம்மன் துறை கோயில் குடியிருப்பில் தெரு விளக்கு வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு எப்போது விளக்கு அமைத்துத் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம், 42—வது வார்டு செல்லாண்டி அம்மன் துறை கோயில் குடியிருப்பில் ஏற்கெனவே இரண்டு தெரு விளக்குகள் உள்ளன. அத்துடன் நடப்பாண்டில் (2000—2001) மேலும் ஐந்து தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

**64—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 34237–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) திருப்பூர் 40—வது வார்டு, கருமாரம்பாளையம் அம்பேத்கர் நகர், வாய்க்கால்மேடு பகுதிகளில் தெரு விளக்கு வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம், 40—வது வார்டில் உள்ள கருமாரம்பாளையம் அம்பேத்கர் நகர், வாய்க்கால்மேடு ஆகிய பகுதிகளில் நடப்பு நிதியாண்டில் (2000—2001) தெரு விளக்குகள் அமைக்கப்பட உள்ளன.

**65—**

### தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 34238—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 30—வது வார்டு தனலட்சுமி லே அவுட், கே.வி.ஆர். நகர் மெயின் ரோடு, சிவசக்தி நகர் பகுதிகளில் தெரு விளக்கு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 30—வது வார்டு, தனலட்சுமி லே—அவுட் பகுதியில் 8 தெரு விளக்குகள் உள்ளன. இந்தப் பகுதியில் 1 மின் கம்பம், கே.வி.ஆர். நகர் மெயின் ரோடில் 1 மின்கம்பம் மற்றும் சிவசக்தி நகர் பகுதியில் 4 மின் கம்பங்களிலும் தெரு விளக்குகள் இல்லை. நடப்பாண்டில் (2000—2001) இந்தக் கம்பங்களிலும் தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.



2000 நவம்பர் 10]

**66—**

### தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 34239—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 26—வது வார்டில் புதிதாகத் தெரு விளக்கு மின் கம்பங்கள் அமைக்குமாறு அரசிற்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 26—வது வார்டு பகுதியில் தெரு விளக்கு வசதி உள்ளது. இருப்பினும், நடப்பாண்டிலும், அடுத்த ஆண்டிலும் அப்பகுதியில் புதிதாக எட்டு மின் கம்பங்கள் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

**67—**

### தெரு விளக்கு வசதி

**வினா எண் 34240—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 26—வது வார்டு குமரப்பபுரம் பகுதிகளின் வீதிகளில் தெரு விளக்கு வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம் 26—வது வார்டு குமரப்பபுரம்

பகுதிகளில் சமீபத்தில் 6 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. அப்பகுதியில் நடப்பாண்டில் (2000—2001) மேலும் எட்டு தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

68—

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 34244–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 10—வது வார்டு ஏ.கே.ஜி. நகரில் தெரு விளக்கு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 10—வது வார்டு ஏ.கே.ஜி. நகரில் ஏற்கெனவே 12 தெரு விளக்குகள் உள்ளன. அத்துடன் சமீபத்தில் மேலும் ஒரு தெரு விளக்கு அமைக்கப்பட்டு வசதி செய்யப்பட்டுள்ளது.

69—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 34246–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 7—வது வார்டு, இளங்கோ நகர் 1—வது வீதிக்குத் தெரு விளக்குகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 7—வது வார்டு, இளங்கோ நகர் 1—வது வீதியில் ஏற்கெனவே 2 தெரு விளக்குகள் உள்ளன. மேலும், சமீபத்தில் கூடுதலாக ஒரு தெரு விளக்கு அமைத்து வசதி செய்யப் பட்டுள்ளது.



70—

## தெரு விளக்கு

**வினா எண் 34247–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 27—வது வார்டு, அணைமேடு பகுதிக்குத் தெரு விளக்கு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு எப்போது தெரு விளக்கு அமைத்து தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 27—வது வார்டு, அணைமேடு பகுதியில் நடப்பாண்டில் புதிதாக மூன்று மின் கம்பங்கள் நடப்பட்டு, தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

71—

## சாலை வசதி

**வினா எண் 35031–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 39—வது வார்டு பாளையக்காடு முதல் வடக்கு வீதி, 2—வது வடக்கு வீதி ஆகியவற்றில் சாலை வசதி சரியாக இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சாலை வசதி அமைத்துத் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 39—வது வார்டு பாளையக்காடு

முதல் வடக்கு வீதி, 2—வது வடக்கு வீதி ஆகியவற்றில் சாலை வசதி செய்ய, நகரக் கூட்டாண்மைத் திட்டம், 2000—2001—ல் வகை செய்யப் பட்டுள்ளது.

72—

**வடிகால் வசதி**

**வினா எண் 35073—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 24—வது வார்டிலும், பல வார்டுகளில் இருந்தும் வெளியேறும் வடிகால் நீர் குளம் போல் தேங்கி நிற்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவை வடிந்து செல்ல அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 24—வது வார்டிலும் மற்ற வார்டுகளிலும் நீர்த்தேக்கம் இல்லை.

73—

**வடிகால் அமைத்தல்**

**வினா எண் 35078—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 26—வது வார்டு ஜெய்வாய்பாய் பள்ளி வீதி வடிகால் நீர் செல்ல வடிகால் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 26—வது வார்டு, ஜெய்வாய்பாய் பள்ளி வீதி வடிகால் நீர் செல்ல வடிகால் வசதி செய்ய நகரக் கூட்டாண்மைத் திட்டம், 2000—2001—ல் செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

74—

**ஆக்கிரமிப்பை அகற்றுதல்**

**வினா எண் 35097—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் 12—வது வார்டு, தியாகி குமரன் காலனி வடபுறமுள்ள 30 அடி சாலை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை அகற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரில் 12—வது வார்டு, தியாகி குமரன் காலனி வடபுறமுள்ள சாலை 20 அடி அகலம் உள்ளது. மேற்படி சாலையில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

75—

**கூடுதல் வகுப்பறை**

**வினா எண் 35109—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 50—வது வார்டு பெரிச்சிப்பாளையம் ஆரம்பப்

பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டப்பட வேண்டுமென அரசிற்கு கோரிக்கை வந்துள்ளதா?

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரில் வார்டு எண் 50—க்குட்பட்ட பெரிச்சிபாளையம் ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டப்பட வேண்டும் என அரசிற்கோ அல்லது திருப்பூர் ஊராட்சிக்கோ கோரிக்கை வரப்பெறவில்லை.*

**76—**

### மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 35172–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் தொட்டிப்பாளையம் ஊராட்சி, போயம்பாளையம் பிரிவு மற்றும் கங்கா நகர் பகுதி மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி காலதாமதப்பட்டு வருவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் தொட்டிப்பாளையம் ஊராட்சி, போயம் பாளையம் பிரிவில் திருப்பூர் மற்றும் 412 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*கங்கா நகர் குடியிருப்பு கடந்த (1999—2000) ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு 3/3/2000—ல் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.*





**77—**

### தொழிலாளர்கள்

**வினா எண் 35374–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் ஊராட்சிகளில் இருந்து துப்புரவுப் பணிகளுக்கு அதிகத் தொழிலாளர்களை அமர்த்திக்கொள்ள அனுமதி கோரி மாநில அரசிற்குத் தீர்மானங்கள் அனுப்பப்பட்டுள்ளனவா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் ஊராட்சிகளில் இருந்து துப்புரவுப் பணிகளுக்கு அதிகத் தொழிலாளர்களை அமர்த்திக்கொள்ள அனுமதி கோரி மாநில அரசிற்குத் தீர்மானங்கள் ஏதும் வரப்பெறவில்லை.*

**78—**

### நகராட்சி நிலம்

**வினா எண் 35441–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் இடுவாய் ஊராட்சி, சின்னக்காளிபாளையத்தில் நகராட்சிக்குச் சொந்தமான நிலம் எவ்வளவு ஏக்கர் உள்ளது?*

*(ஆ) அந்த நிலம் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) திருப்பூர், இடுவாய் ஊராட்சி, சின்னக்காளிபாளையத்தில் 12.27 ஏக்கர் நிலம் நகராட்சிக்குச் சொந்தமாக உள்ளது.*

(ஆ) புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகம், திருப்பூர் நகராட்சி எல்லைக்குள் அமைக்க உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுகளை சேமித்து வைக்க 10 ஏக்கர் நிலத்தை அக்கழகத்திற்குக் குத்தகைக்கு விட நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதியுள்ள 62.27 ஏக்கர் நிலம் காலியாக வைக்கப்பட்டுள்ளது.

**79—**

### ஊதிய விகிதங்கள்

**வினா எண் 35798—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சிகளில் எத்தனை விசைப் பம்பு இயக்குபவர்களும், துப்புரவுத் தொழிலாளர்களும் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) அவர்களின் ஊதிய விகிதங்கள் எவ்வாறு தீர்மானிக்கப் படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 12619 ஊராட்சிகளிலுள்ள 36610 விசைப் பம்புகளை, 26904 மேல்நிலைத் தொட்டி விசைப் பம்பு இயக்குபவர்கள் பராமரித்து வருகின்றனர். இதுவரை இவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 350 மதிப்பூதியம் பெற்று வந்தனர். கிராம ஊராட்சிகளின் பணியமைப்பினை சீரமைப்பது குறித்து அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையில், கிராம ஊராட்சிகளில் விசைப் பம்பு இயக்குபவருக்கு ரூ. 400 தொகுப்பூதியமாக நிர்ணயித்தும், இவர்கள் கூடுதலாக இயக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட விசைப் பம்பு ஒவ்வொன்றிற்கும் மாதம் ஒன்றுக்குத் தலா ரூ. 150 கூடுதல் தொகுப்பூதியம் வழங்கவும், அரசாணை நிலை எண் 119, ஊ.வ. துறை, நாள் 10—5—2000—ல் ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கிராம ஊராட்சிகளில் மொத்தம் 7503 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் மாதம் ஒன்றுக்குத்





தொகுப்பூதியமாக ரூ. 350 பெற்று வந்தனர். இதனை மாதம் ஒன்றுக்கு ரூ.400 ஆக உயர்த்தி, அரசாணை (நிலை) எண் 118, ஊ.வ. துறை, 10—5—2000—ல் வெளியிடப்பட்டுள்ளது.

**80—**

### கடைகளை அப்புறப்படுத்துதல்

**வினா எண் 37974—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் பேருந்து நிலையத்தில் பிளாட்பாரத்தில் பயணிகள் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள கடைகளை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) நகராட்சி நிர்வாகம் எந்த அடிப்படையில் இந்தக் கடைகளை வைக்க அனுமதித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் பேருந்து நிலையத்தில் உள்ள பிளாட்பாரத்தில் பயணிகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த கடைகள் அப்புறப்படுத்தப்பட்டு விட்டன. தற்போது பிளாட்பாரத்தில் கடைகள் எதுவும் வைக்கப்படவில்லை.

**81—**

### அரசு நிறுவனக் கடைகள்

**வினா எண் 37978—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான சாரதி நகர் (டான்சி எதிரில்) உள்ள கடைகள், ஏலம் போகாமல் உள்ள கடைகளை நகராட்சி மருந்தகம், ரேஷன் கடை போன்ற அரசு நிறுவனக் கடைகள் வைத்து மேம்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான காகிதப்பட்டடை சாரதி நகரில், நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள ஏலம் போகாமல் இருந்த 58 தரைக் கடைகளையும், 10 ஷட்டர் போட்ட கடைகளையும், உழவர் சந்தை ஆரம்பிக்கத் தேவைப்படுவதால் இக்கடைகளை வேலூர் வேளாண்மைத் துறை விற்பனைச் செயலாளர் அவர்களிடம் ஒப்படைக்க, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதின் அடிப்படையில் நகர மன்றத்தின் 28—4—2000 ஆம் நாளிட்ட 1069 எண் தீர்மானத்தின் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் நிர்ணயிக்கும் வாடகைத் தொகை குத்தகை அடிப்படையில் கடைகள் ஒப்படைக்கப்பட்டன. இக்கட்டடத்தில் 19—6—2000 ஆம் நாள் முதல் உழவர் சந்தை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**82—**

## விவசாய மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 24414—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மத்திய அரசின் அனுமதிக்காகக் காத்திருக்கும் தமிழக விவசாய மேம்பாட்டுத் திட்டங்கள் எத்தனை?

*(ஆ)* எவ்வளவு காலமாக அவை நிலுவையாக உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மத்திய அரசின் அனுமதிக்காகக் காத்திருக்கும் திட்டங்களாவன—

1. பாலாறு, பொறுந்தலாறு திட்டத்தில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

2. தொப்பையாறு திட்டத்தில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.



3. தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்தில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

*(ஆ)* மேற்படி திட்டங்கள் மத்திய அரசின் கடிதத்திற்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. மேற்படி திட்டங்கள் மத்திய அரசிற்கு முறையே 9—12—1999, 22—9—1999 மற்றும் 11—1—2000 தேதிகளில் அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**83—**

## குளிர்சாதனக் கிடங்கு

**வினா எண் 30181—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி நகரில் பழவகை, காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்சாதனக் கிடங்கு கட்டும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

*(இ)* இல்லையெனில், அங்கு கட்டித்தர அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை, ஆனால், சேலம் மாவட்டம் அயோத்தியாப் பட்டினத்தில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

*(ஆ)* எழவில்லை.

*(இ)* எழவில்லை.

**84—**

## எண்ணெய்ப் பயிர் சாகுபடி

**வினா எண் 33361—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எண்ணெய் பிழியும் ஆலைகளை நம்பி எண்ணெய்ப் பயிர்

[2000 நவம்பர் 10

சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உத்தரவாதம், பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையில் அரசு விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எண்ணெய்ப் பனை சாகுபடித் திட்டம் தமிழ் நாட்டில் 1993—94 ஆம் ஆண்டிலிருந்து முதற்கட்டமாக திருச்சி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங் களிலும், இரண்டாவது கட்டமாக 1997—98 முதல் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தேனி மாவட்டங்களிலும், மூன்றாவது கட்டமாக 1999—2000 முதல் திருவள்ளூர் மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உற்பத்தியாகும் பழக்குலைகளைக் கொள்முதல் செய்து எண்ணெய் பிழியும் ஆலைகள் அமைக்க தமிழ்நாட்டில் தனியார் தொழில் முனைவோர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எண்ணெய்ப் பனை சாகுபடி செய்ய, ஆரம்பிக்க 3—1/2 முதல் 4 ஆண்டுகள் கழித்துத்தான் பழக்குலைகள் அறுவடைக்கு வரும். எனவே, போதிய பழக்குலைகள் அறுவடைக்குத் தயாராகும் தருணத்தில் தனியார் நிறுவனத்தார் (தொழில் முனைவோர்) எண்ணெய் பிழியும் ஆலைகளை அமைத்திடுவார்கள்.

எண்ணெய்ப் பனை பயிர் செய்யும் விவசாயிகளின் நலனைக் காத்திட அரசு எண்ணெய்ப் பனைச் சட்டம் இயற்றி இருதரப்பு ஒப்பந்தம், குறைந்தபட்ச பழக்குலைகள் கொள்முதல் விலை நிர்ணயம் மற்றும் இத்திட்டத்திற்கென திட்ட மேலாண்மைக் குழு போன்றவற்றிற்கு வகை செய்துள்ளது.

தற்போது ஒரு மணிக்கு 2.5 மெட்ரிக் டன் திறன் கொண்ட மாதிரி எண்ணெய் பிழியும் ஆலையை மத்திய அரசு நிதியுதவியுடன் தனியார் தொழில் முனைவோர் மற்றும் வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலதனத்துடன் அமைத்திட அரசு ஆணை வெளியிடப்பட்டு ஆலையை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2000 நவம்பர் 10]

**85—**

### நிழற்குடை

**வினா எண் 34405–திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அருகே பயணிகள் நிழற்குடை வேளாண்மைத் துறை மூலம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தின் அருகே நிழற்குடை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**86—**

### தென்னை சாகுபடி

**வினா எண் 35343–திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி பகுதியில் தென்னை அதிக அளவில் சாகுபடி ஆவதால், தென்னையில் தென்படும் காண்டாமிருக வண்டு மற்றும் சிவப்பு கூன் வண்டு ஆகியவற்றைக் கட்டுப்படுத்திடத் தேவையான இனக் கவர்ச்சிப் பொறிகளை அரசு வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலம் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[2000 நவம்பர் 10

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் 25,000 எக்டேர் பரப்பிலுள்ள தென்னை மரங்களைத் தாக்கும் காண்டாமிருக வண்டு மற்றும் சிவப்பு கூன் வண்டு ஆகிய பூச்சிகளை அழிக்கும் வகையில் 12,500 எண்ணிக்கையிலான இனக் கவர்ச்சிப் பொறிகளை 50% மானியத்தில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு வழங்க 2000—2001 ஆம் ஆண்டில் ரூ. 31.25 இலட்சம் நிதி ஒப்பளித்து அரசாணை வெளியிடப்பட்டு இவ்வாண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**87—**

**டிராக்டர்கள் மற்றும் இயந்திரங்கள்**

**வினா எண் 35363—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரக் கலப்பைகளையும், உபகரணங்களையும் வழங்கும் திட்டத்தில் விவசாயிகள் தாங்கள் விரும்பும் நிறுவனங்களைச் சார்ந்த டிராக்டர்களையும், பவர் டில்லர்களையும் விவசாயிகளே நேரடியாக அந்த நிறுவனங்களில் வாங்கிக் கொள்ள அரசு வழிவகை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் 30 குதிரைச் சக்தி வரை திறன் கொண்ட சிறிய டிராக்டர் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கான திட்டம் 100% மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் வழிகாட்டுதலின்படி, விவசாயிகளே நேரடியாக டீலர்களிடம் இயந்திரங்கள் வாங்கிக்கொள்ள வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2000 நவம்பர் 10]

**88—**

**மூலிகை மற்றும் நறுமணப் பொருட்கள்**

**வினா எண் 36012—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

(ஆ) இத்திட்டத்தின் மூலம் எத்தனை விவசாயிகள் பயனடைந்து உள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 1999—2000 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பொருட்கள் பயிர்களின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல் விளக்கப் பாத்திகள் 40 எண்கள் ஒவ்வொன்றும் 0.10 எக்டேர் பரப்பில் குளோரியா சூப்பர் பா மற்றும் கோலியால் பயிர்களில் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இப்பயிர்கள் சாகுபடி செய்யும் ஒரு விவசாயிக்கு சுமார் ரூ. 1500 மதிப்பிற்கு விதைகள் (அல்லது) செடிகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டு, மொத்தம் ரூ. 60000 செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் 70 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**89—**

**நீர் வடிப்பகுதி திட்டங்கள்**

**வினா எண் 36021—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999—2000 ஆம் ஆண்டிற்கு ஓசூர் தொகுதிக்கு எத்தனை நீர் வடிப்பகுதி திட்டங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டன?

[2000 நவம்பர் 10

(ஆ) எதன் அடிப்படையில் நீர் வடிப்பகுதித் திட்டங்கள் தெரிவு செய்யப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1999—2000 ஆம் ஆண்டிற்கு ஓசூர் தொகுதிக்கு 8 நீர் வடிப்பகுதி திட்டங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ஓசூர் ஒன்றியம் | 3 |
| சூளகிரி ஒன்றியம் | 5 |
| மொத்தம் | 8 |

(ஆ) நீர் வடிப்பகுதி திட்டங்கள் பின்வரும் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன:

1. தேசிய ஆதார தகவல் அமைப்பில் (NRIS) குறிக்கப்பட்டுள்ள முன்னுரிமை.

2. நீர் ஆதாரங்கள் குறைவு மற்றும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள இடங்கள்.

3. அதிகப்படியான தரிசு நிலங்கள் உள்ள இடங்கள்.

4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதிகள்.

5. ஏற்கெனவே திட்டத்திலுள்ள நீர் வடிப்பகுதிக்கு அருகில் உள்ள பகுதிகள்

6. தோராயமாக 500 எக்டேர் நிலப்பரப்பில் அடங்கிய பகுதி.

**90—**

## பயிற்சி

**வினா எண் 38436—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) காளான் உற்பத்தித் தொழிலில் தரமான விதை போதுமான அளவு கிடைக்காததால் உற்பத்தி போதுமான அளவு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உற்பத்தியைப் பெருக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன என்பதுடன், காளான் விதை உற்பத்தியில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காளான் உற்பத்திக்குத் தேவையான விதைக் காளான் புட்டிகள் (Spawn bottles) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை காந்தி கிராமப் பல்கலைக்கழகம் மற்றும் சில தனியார் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வகைக் காளான் புட்டிகள் தேவையின் அடிப்படையில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது. மேலும் காளான் உற்பத்திக்குத் தேவையான ஸ்பான் (spawn) எனும் விதைக் காளான் புட்டிகள் தயாரிக்க இத்துறையின் மூலம் மாதவரத்தில் ஒரு யூனிட் நிறுவப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதைப் பொறுத்தமட்டில் வருடந்தோறும் காளான் பயிரிடுதல், காளான் விதைப் புட்டிகள் தயாரித்துப் பயிரிடுதல் தொடர்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1999—2000 ஆம் ஆண்டில், காளான் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள 1000 விவசாயிகளுக்கு ரூ.500 வீதம், ரூ.5.00 இலட்சம் செலவிடப்பட்டது. காளான் விதை உற்பத்தி தொடர்பாக சிறப்புப் பயிற்சி பெற விரும்புபவர்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், சிறப்புப் பயிற்சி அளிக்கிறது.

**91—**

## ரிவிட்மென்ட் புதுப்பித்தல்

**வினா எண் 29325—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் நகர்,

[2000 நவம்பர் 10

சத்தியா காலனி முதல் கூடங்குடி காவிரி, வடகரையில் பழுதடைந்துள்ள ரிவிட்மென்ட் புதுப்பித்துக் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் நகர், சத்தியா காலனி முதல் கடலங்குடி வரை காவிரி வடகரையில் பழுதடைந்துள்ள ரிவிட்மென்ட் புதுப்பிக்கும் வேலை, வரும் நிதியாண்டில் நிதிநிலையைப் பொறுத்து செய்து கொடுக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

92—

## சாலை செப்பனிடல்

**வினா எண் 29465—திரு. மு. ரங்கநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குன்னூர் தொகுதியைச் சேர்ந்த தெங்குமரஹடாவிற்கு வனத் துறைக்குச் சொந்தமான சாலையைச் செப்பனிட்டு தெங்குமர ஹடாவிற்குப் போக்குவரத்து வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

இச்சாலையின் மொத்த நீளம் 25.0 கி.மீ. ஆகும். இதைச் செப்பனிட ரூ. 3.00 கோடிக்கு மேல் தேவைப்படும். நிதிப் பற்றாக்குறை காரணமாக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலை உள்ளது.

93—

## பறவைகள் சரணாலயம்

**வினா எண் 33348—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) சேலம் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. இம்மாவட்டத்தில் வெளிநாட்டிலிருந்து அல்லது உள்நாட்டிலிருந்து, ஆண்டின் குறிப்பிட்ட காலங்களில் வந்து தங்க ஏதுவாக நீர்நிலைகளோ, உணவு வசதிகளோ ஏதுமில்லையாதலால், இம்மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

94—

## சந்தனக் கட்டைகளின் மதிப்பு

**வினா எண் 36108—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சந்தனக் கட்டைகளின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) எந்த அடிப்படையில் விற்பனை செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 4,51,098 துலக்கம் செய்யப்படாத சந்தன மரங்கள் இருப்பில் உள்ளன. இவற்றைத் துலக்கம் செய்தால் சுமார் 3,000 டன்கள் கிடைக்கும். இதைத்தவிர குற்ற வழக்கில் பிடிபட்ட 560 டன் சந்தனக் கட்டைகள் உள்ளன. ஆக மொத்தம் 3000+560=3560 டன் சந்தனக் கட்டைகள் இருப்பில் உள்ளன. இவற்றின் மதிப்பு டன் ஒன்றுக்கு ரூ.4,61,603 (ஏப்ரல் 2000 ஏலத்தில் சராசரி விலை) என்ற விலையில் மொத்த மதிப்பு ரூ. 165 கோடியாகும். மேலும், சந்தனக் கட்டைகளைத் துலக்கம்

செய்யும்போது 3075 டன் வெள்ளடை கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. டன் ஒன்றுக்கு ரூ. 26,000 என்ற விலையில் இதன் மதிப்பு சுமார் ரூ. 7.99 கோடியாகும். மேலும் ஜுன் 2000 ஏலத்தில் 100, 500 டன் சந்தனக் கட்டைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ. 6.28 கோடி அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

(ஆ) இரண்டு மாதங்களுக்கொரு முறை பொது ஏலத்தின் மூலம் மூன்று சந்தன மரக் கிடங்குகளில் (சேலம், திருப்பத்தூர் மற்றும் சத்திய மங்கலம்) சந்தனக் கட்டைகள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையத்தின்கீழ் வரும் கோவில்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையம் போன்ற நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத் துறையில் இயங்கும் இம்ப்காப்ஸ் மருந்து தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றிற்கு கடைசியாக நடைபெற்ற ஏல மொத்த சராசரி விலையில் 10 சதவீதம் கூடுதலாக நிர்ணயித்து விற்க மாவட்ட வன அலுவலருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சிறு விற்பனையாளர்களுக்கு சில்லறை விலையில் சந்தனக் கட்டைகள், ஒரேநேரத்தில் 10 டன்னிற்கு மிகாமல் விற்பனை செய்யவும் இந்த விற்பனை விலை முந்தைய ஏல விற்பனையில் 10 சதவிகிதம் கூடுதலாக இருக்குமாறும், முந்தைய ஏலத்தில் விற்பனை இல்லா விட்டாலும், அரசு நிர்ணயம் செய்துள்ள நியாய அடிப்படை விலையில் 10 சதவிகிதம் கூடுதலாக நிர்ணயம் செய்து விற்பனை செய்யப்படுகிறது. இவைதவிர பொது மக்களின் நியாயமான அன்றாடத் தேவைகளுக்கு சில்லறை விலையில் 5 கிலோ முதல் 50 கிலோ வரை விற்பனை செய்யப்படுகிறது.

95—

## முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள்

**வினா எண் 27359—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1998 நவம்பர் மாதம் முடிய எவ்வளவு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் (பி.ஜி.) வேலைக்காகப் பதிவு செய்துள்ளார்கள்?

(ஆ) அவர்களில் ஆங்கிலம், தமிழ், கணிதம், வரலாறு, இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல் பாடங்களில் எவ்வளவு பேர்?





**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1998 டிசம்பர் மாதம் முடிய 60,817 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் (பி.ஜி) வேலைக்காகப் பதிவு செய்துள்ளார்கள்.

(ஆ) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், பாடவாரியாகக் காத்திருப்போர் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| ஆங்கிலம் | 4340 |
| தமிழ் | 7432 |
| கணிதம் | 7347 |
| வரலாறு | 8765 |
| இயற்பியல் | 3360 |
| வேதியியல் | 4065 |
| உயிரியல் | 3697 |
| தாவரவியல் | 3567 |

96—

## தொழிற் பயிற்சி நிலையம்

**வினா எண் 36540—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதிகளில் மாணவியர் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**97—**

## தொழிற் பயிற்சி மையம்

**வினா எண் 36547—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**98—**

## நிலுவைத் தொகை

**வினா எண் 23061—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1997—98 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு நிலுவையில் எவ்வளவு தொகை உள்ளது?*

*(ஆ) அதை உடனே கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*



**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ) 1997—98 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் துணி கொள்முதல் செய்து வரவு வைக்கப்பட்ட வகையில் பட்டுவாடா செய்யப் பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 1.65 இலட்சம் மட்டுமே. இத்தொகையும் 1999—ல் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.*

*(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.*

**99—**

## தள்ளுபடி மானியம்

**வினா எண் 27003—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடியிலுள்ள சின்னமணலி, வெள்ளாண்டிவலசை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய தள்ளுபடி மானியம் நிலுவையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எடப்பாடி, சின்னமணலி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1998 ஏப்ரல் முதல் 1999 ஆம் ஆண்டு முடிய ரூ.4,86,426.00 தள்ளுபடி மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. வெள்ளாண்டிவலசை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1998 ஏப்ரல் முதல் 1999 ஆம் ஆண்டு முடிய ரூ.2,56,696 தள்ளுபடி மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1999 ஜூன் திங்களுக்கு தள்ளுபடி மானியம் கோரப்படவில்லை. 1999 ஜூலை மற்றும் ஆகஸ்டு திங்களுக்கு பெறப்பட்ட தள்ளுபடி மானியக்*

[2000 நவம்பர் 10

கோரிக்கைகள் தேவையான விவரங்களுடன் பெறப்படவில்லை. அவை திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவ்விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன் ஆகஸ்டு 1999 வரைக்கான தள்ளுபடி மானியத் தொகை வழங்கப்பட்டு விடும்.

**100—**

## இலவச வேட்டி, சேலை

**வினா எண் 34938—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1999—2000 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகைக்கு ஏழையெளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்க எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?*

*(ஆ) எவ்வளவு நபர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ) 2000 ஆம் ஆண்டு பொங்கலுக்குத் தேவையான வேட்டிகள், சேலைகள் உற்பத்தி செய்யும் பொருட்டு முன்பணமாக ரூ.89.00 கோடி வழங்கப்பட்டது.*

*(ஆ) 2000 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளுக்கு, பயனாளிகளின் எண்ணிக்கையின்படி 77.10 இலட்சம் சேலைகள், 80.42 இலட்சம் வேட்டிகள் என நிர்ணயம் செய்யப்பட்டு, அவை குறித்த காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டன.*



2000 நவம்பர் 10]

## ஏழாம் பட்டியல் #

**1—**

## தொழிற்சாலை

**வினா எண் 20210—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியப் பகுதியில் முருங்கைக்காய் பவுடர் செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைத்து முருங்கை சாகுபடியை ஊக்குவிக்கவும், முருங்கைப் பவுடர் தொழிற்சாலை அமைக்கவும் அரசு அனுமதி வழங்குமா?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியப் பகுதியில் முருங்கைக்காய் பவுடர் செய்யும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் இல்லை.*

**2—**

## சலுகைகள்

**வினா எண் 23881—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவையில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்?*

*(ஆ) அரசு அந்தக் குடும்பங்களுக்கு செய்த உதவி என்ன?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) 59 பேர்*

*(ஆ) குண்டு வெடிப்புச் சம்பவத்தினையடுத்து காவல்*

---

*# 8—11—2000 ஆம் நாளன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.*

[2000 நவம்பர் 10

துறையினரின் நடவடிக்கைகளின்போது இறந்த தீவிரவாதிகள் தவிர, உயிரிழந்த ஏனையோரின் குடும்பத்திற்குத் தலா ரூ. 2 இலட்சம் வீதம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, உயிரிழந்தவர்களின் குடும்பங்களில் வேலை கோரி விண்ணப்பித்த 35 குடும்பங்களில் வாரிசுதாரர் ஒருவர் என்ற விகிதத்தில் அரசு/அரசு சார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளித்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

3—

**கனிமங்கள்**

**வினா எண் 28926—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சென்ற ஆண்டு கனிமங்கள் மூலமாகப் பெறப்பட்ட வருவாய் (Royalty) எவ்வளவு?

(ஆ) ஒவ்வொரு கனிமமும் எத்தனை மெட்ரிக் டன் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்திலிருந்து சென்ற ஆண்டு கனிமங்கள் மூலம் ராயல்டி தொகையாக ரூ.5,71,31,787 பெறப்பட்டுள்ளது.

(ஆ) கனிமங்கள் வெட்டி எடுக்கப்பட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| கனிமத்தின் பெயர் | வெட்டி எடுத்த அளவு (மெட்ரிக் டன்) | வருவாய் (ராயல்டி ரூபாய்) |
|---|---|---|
| மேக்னசைட் | 1,76,042 | 39,70,286.00 |
| பாக்சைட் | 1,26,332 | 51,79,612.00 |
| குவார்ட்ஸ் | 25,260 | 3,28,380.00 |
| பெல்ஸ்பார் | 26,994 | 4,58,898.00 |
| குலம்லைம்ஸ்டோன் | 2,53,750 | 81,19,360.00 |
| சோப்ஸ்டோன் | 900 | 25,785.00 |
| டுனைட் | 4,837 | 3,24,714.00 |
| சாதாரண கற்கள் | 25,84,000 கனஅடி | 20,57,300.00 |
| கிரானைட் | 1,03,69,008 கன அடி | 3,66,67,452.00 |
| மொத்தம் | | 5,71,31,787.00 |



2000 நவம்பர் 10]

4—

**ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி**

**வினா எண் 32006—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் மாநில எல்லையில் உள்ள சோதனைச் சாவடிகளில், போக்குவரத்து நெரிசலையும், வாகனத் தேக்கத்தையும் தவிர்க்கும் பொருட்டு வணிக வரித் துறை, உணவு பொருள் வழங்கல் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் வனத் துறை போன்ற பல்வேறு துறைகளில் சோதனைச் சாவடிகளை ஒருங்கிணைத்து, ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் அமைப்பது குறித்து கொள்கை அளவில் நீதியரசர் திரு. இராமனுஜம் கமிட்டி அறிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், புளியரையில் அரசு நிலம் மற்றும் புறம்போக்கு நிலம் ஏதும் இல்லை எனவும், இவ்விடத்தில் தனியார் நிலம் பேச்சுவார்த்தை மூலம் கையப்படுத்துதல் மூலமாகவே பெறப்பட முடியும் எனவும், இதுகுறித்து தென்காசி வருவாய்த் துறை அதிகாரிக்கு, பொருத்தமான தனியார் நிலத்தினை தேர்வு செய்ய வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் நிலம் தெரிவு செய்த பின்னர் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைப்பது குறித்து நடவடிக்கை தொடரப்படும்.

5—

## சோதனைச் சாவடிகள்

**வினா எண் 34922—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தேவைக்கு அதிகமாக சோதனைச் சாவடிகள் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தேவையற்ற இடங்களில் உள்ள சோதனைச் சாவடிகளை எடுத்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வணிகர்கள் வணிகத்தில் செய்யும் வரி ஏய்ப்பினை முற்றிலும் அகற்றிட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் அரசு சோதனைச் சாவடிகளை அமைத்துள்ளது. பொது மக்கள் மற்றும்



2000 நவம்பர் 10]

வணிகர்களின் கருத்துக்களின் அடிப்படையில் மாநிலத்தில் உட்புறமுள்ள சோதனைச் சாவடிகளை படிப்படியாக அகற்றிவிடலாம் என்று கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. சோதனைச் சாவடிகள் ஆய்வுக் குழு கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் 31—3—1998 முதல் பின்வரும் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டு விட்டன:—

1. ஆவடி
2. ஒடந்துறை
3. பல்லடம்
4. சானாராப்பட்டி
5. சாத்தூர்
6. ஆளியாறு
7. கிணத்துக்கடவு
8. கடம்பர்கோயில்
9. தவிட்டுப்பாளையம்
10. ஒட்டன்சத்திரம்
11. கூட்டப்புளி
12. பழவூர் விலக்கு
13. பழவூர் கிராமம்
14. சங்கனாபுரம்
15. குமாரபுரம் விலக்கு

ஆகியவைகள் தற்போது மாநில எல்லைகளில் 31 சோதனைச் சாவடிகளும், உட்புறங்களில் 15 சோதனைச் சாவடிகளும், ஆக மொத்தத்தில் 46 சோதனைச் சாவடிகள் இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. தேவையற்ற இடங்களில் சோதனைச் சாவடிகளை அகற்றும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

6—

## கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 17702—திரு. ப. கோவிந்தன்**: *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பாடி அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக வகுப்பறைகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் (சின்னப்பம்பட்டி) பாப்பம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுவது சார்பாக இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்கிட, தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினரின் இசைவு பெறப்படின், இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும்.*

7—

## கூடுதல் ஆசிரியர்கள் நியமித்தல்

**வினா எண் 19086—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, மருங்குளம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*



**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, மருங்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பொருளியல், வணிகவியல் பாடப் பிரிவுகளில் போதிய மாணவ, மாணவியர் சேரும்போது கூடுதலாக முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்படும். அதேபோல் இடைநிலை வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கை கூடும்போது அல்லது உபரிப் பணியிட மாறுதலின் போது கூடுதல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்படும்.

8—

## புதிய பள்ளிக்கூடம்

**வினா எண் 31264—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேடசந்தூர் தொகுதி, வட மதுரை ஒன்றியம் கொசவப்பட்டி ஊராட்சியில் சித்துபோலகவுண்டன்பட்டிக்கு புதிய பள்ளிக்கூடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் சித்துபோலகவுண்டன்பட்டியில் ஒரு புதிய பள்ளிக்கூடம் திறப்பது சம்பந்தமான கருத்துரு பெறப்படவில்லை.*

9—

## பகுதி நேர நூலகம்

**வினா எண் 31742—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சி, நன்னகரம் கிராமத்தில் பகுதி நேர நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பகுதி நேர நூலகம் திறக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை நன்னகரம் கிராமத்தில் மக்கள் நிறைவு செய்யாத நிலையில் நன்னகரம் கிராமத்தில் பகுதி நேர நூலகம் அமைக்க இயலவில்லை.

**10—**

**நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக்குதல்**

**வினா எண் 40130—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல், தருமபுரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 2000—2001ல் எத்தனை நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) அது பற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 165, பள்ளிக் கல்வித் துறை, நாள் 14—6—2000ல், 2000—2001 ஆம் கல்வியாண்டில் பகுதி—2 திட்டத்தின்கீழ் 50 ஊராட்சி ஒன்றிய அரசு நகராட்சி, மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், இருபாலர் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து பிரித்து மகளிர் உயர்நிலைப் பள்ளிகளாகத் தொடங்கவும் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்கண்ட அரசாணையில் நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவொரு நடுநிலைப் பள்ளியும் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படவில்லை. தருமபுரி மற்றும் ஈரோடு மாவட்டங்களைப் பொறுத்தவரையில் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள் விவரம் கீழ்க்கண்டவாறு ஆகும்:



| மாவட்டம் | ஒன்றியம் | வ. எண். | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| தருமபுரி | கிருஷ்ணகிரி | 1 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. அகரம் இட்டிக்கல் 635 122. |
| தருமபுரி | பென்னாகரம் | 2 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. சின்னவத்தலாபுரம் 636 810. |
| தருமபுரி | சூளகிரி | 3 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. தேவசானப்பள்ளி 635 119. |
| தருமபுரி | பர்கூர் | 4 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. நக்கல்பட்டி 635 203. |
| ஈரோடு | கொடுமுடி | 1 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. சாலைப்புதூர் 638 151. |
| ஈரோடு | அம்மாப்—பேட்டை | 2 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. குப்பிச்சிபாளையம் 638 302. |

[2000 நவம்பர் 10

11—

## கட்டண சிகிச்சைப் பிரிவுகள்

**வினா எண் 13917—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் கட்டண சிகிச்சை பிரிவுகள் எத்தனை மருத்துவமனைகளில் செயல்படுகின்றன?

(ஆ) அத்திட்டத்தின் மூலம் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் மட்டும் கட்டண சிகிச்சைப் பிரிவு செயல்படுகிறது.

(ஆ) கடந்த ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரு மாதங்களில் ரூ.11,250 மட்டும் வருமானம் கிடைத்துள்ளது.

12—

## கட்டடங்கள்

**வினா எண் 14889—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு துணை கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் செயற்படுத்தப்படுமா?



2000 நவம்பர் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

13—

## தாய்சேய் நல விடுதி

**வினா எண் 16727—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கனாபுரம் ஊராட்சி ஒன்றியம், தங்காயூர் ஊராட்சியில் ஆலாக்கட்டில் உள்ள தாய்—சேய் நல விடுதி பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் தாய்—சேய் நல விடுதி இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கனாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கொங்கனாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது கோணாங்குட்டையூர் துணை சுகாதார நிலையமாகும். இந்த கோணாங்குட்டையூர் (இ) ஆலங்காடு துணை சுகாதார நிலைய கட்டடம் தன்னிறைவு திட்டத்தில் கட்டப்பட்டது. தற்போது தண்ணீர் வசதி இல்லை. கட்டட மேல் தளத்தில் நீர்க்கசிவு ஏற்படுகிறது. கட்டட பின்கதவு பழுதடைந்துள்ளது. மேற்படி கட்டடம் டானிடா திட்டத்தின்கீழ் பழுதுபார்ப்புப் பணிகள் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

14—

## சுகாதார நிலையம்

**வினா எண் 28646–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடப் பணி முடித்தும் மருத்துவமனை அங்கு மாற்றாமல் உள்ளது ஏன்?

(ஆ) எப்போது புதிய கட்டடத்திற்கு மாற்றப்படும்?

**விடை–**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் 12—4—1999 முதல் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

15—

## அம்மை நோய்

**வினா எண் 32959–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999—2000 ஆண்டு அம்மை நோய்க்கு தமிழ்நாட்டில் எவ்வளவு பேர் பலி ஆனார்கள்?

**விடை–**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அம்மை நோய் மூன்று வகைப்படும்.

(அ) பெரியம்மை (Small Pox)

(ஆ) சின்னம்மை (Chicken Pox)



இ) தட்டம்மை (Measles)

பெரியம்மை நோய் இப்பொழுது உலகில் எங்கும் இல்லை. ஆனால் சின்னம்மை, தட்டம்மை நோய்கள் இருக்கின்றன.

1999—2000 ஆண்டில் மார்ச் மாதம் முடிய விருதுநகரில் இருவரும், பரமக்குடியில் 12 நபர்கள் ஆக மொத்தம் 14 நபர்கள் நோயினால் இறந்துள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் எல்லா விதமான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், நாடு தழுவிய தடுப்பூசி திட்டத்தின்கீழ், தட்டம்மை வராமலிருக்க, ஒன்பது மாதம் முடிந்த எல்லா குழந்தைகளுக்கும் தட்டம்மை தடுப்பூசி வழக்கமான முறையில் போடப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு சுமார் 12 இலட்சம் குழந்தைகள் பயனடைகிறார்கள். சின்னம்மை நோயினால் இறப்பு ஏதும் நிகழவில்லை.

16—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 33200–திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியிலுள்ள புதூர் மற்றும் பாகல்பட்டி பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை–**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டடவசதி செய்திட வேண்டுமென 1996—97 மற்றும் 1997—98 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடும், நிர்வாக ஒப்புதலும் வழங்கி, கட்டடங்கள் பொதுப் பணித் துறையினரால் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால், சுற்றுச் சுவர் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. அரசு ஆரம்ப சுகாதார

நிலைய சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யும்போது, புதூர் மற்றும் பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுற்றுச் சுவர் கட்ட பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

17—

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 34304—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டத்தில் எத்தனை அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இன்றைய தேதியில் ஒன்றுமில்லை.*

18—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 34468—திரு. கே.சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் மங்கலம் ஊராட்சி, மங்கலம் சுகாதார மையத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**





*(அ) மற்றும் (ஆ) அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் அரசு கட்டடத்தில் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தில், 1996—97—ம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 1997—98—ம் ஆண்டில் 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடும், நிர்வாக ஒப்புதலும் அளித்தது. மக்கள் நல்வாழ்வினை மையமாகக்கொண்டு, நேரிடையாகச் சென்றடையும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதால் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களுக்கு சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆகவே, திருப்பூர் மங்கலம் ஊராட்சி, மங்கலம் சுகாதார மையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

19—

## மின் இணைப்பு

**வினா எண் 35007—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் சட்டமன்ற தொகுதிக்குள் கட்டி முடிக்கப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்காமல் நிலுவையில் உள்ள வீடுகள் எத்தனை?*

*(ஆ) அவற்றிற்கு எப்போது மின் இணைப்பு வழங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) திருப்பூர் கோட்டத்தைச் சார்ந்த திருப்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் 106—ம், அவிநாசி கோட்டத்தைச் சார்ந்த திருப்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் 153—ம் நிலுவையில் உள்ளன.*

*(ஆ) திருப்பூர் அவிநாசி கோட்டங்களுக்கு [illegible]*

*2000—2001—ம் ஆண்டிற்கான குறியீட்டின் அடிப்படையில் மேற்படி விண்ணப்பங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.*

**20—**

## மரங்கள் நடுதல்

**வினா எண் 35608—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனை, புதிய வளாகத்தில் மரங்கள் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருத்துவமனை வளாகம் முழுவதிலும் மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**21—**

## மின் அபிவிருத்தித் திட்டங்கள்

**வினா எண் 35933—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாய மின் இணைப்புகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கு எவ்வளவு மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளது?

(ஆ) தற்போதுள்ள பற்றாக்குறை மற்றும் எதிர்காலத்தில் தேவைப்படும் கூடுதல் மின்சாரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு அரசு மேற்கொண்டுள்ள புதிய மின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1999—2000—ம் ஆண்டு விவசாய மின் இணைப்புகளுக்காக 8194 மியூனிட்டுகள் செலவிடப்பட்டிருக்கிறது. இது மொத்த பயனீட்டளவில் 27.23 சதவீதமாகும். விவசாய மின் இணைப்புகளுக்கு 10 மணி நேரம் மின்சாரம் வழங்கும் நிலையிலேயே 8194 மி.யூ. பயனீட்டளவு இருக்கும்போது, 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கும்போது, சுமார் 15000 மியூ. மின்சாரம் தேவைப்படும். இது இலவச மின்சாரம் என்பதால் தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது மேலும் இழப்பை நோக்க தயாராக இல்லை. தொழிற்சாலைகளுக்கு ஏற்கெனவே 24 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது.

(ஆ) தற்பொழுது, தமிழகத்தின் மொத்த நிறுவுதிறன் மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பங்கான 1893 மெகாவாட்டையும் சேர்த்து 7203.555 மெகாவாட் ஆகும். 546 மெகாவாட் திறன் கொண்ட வெவ்வேறு திட்டங்களை 2000—2001—ல் நிறுவ உள்ளது. இவை தவிர, மொத்தம் 1156 மெகாவாட் திறன் கொண்ட 2 தனியார் துறை திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் 2000—2001ல் ஆரம்பிக்கப்படும். இதனால் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் தமிழ்நாட்டில் மின் நிலைமை போதுமானதாக இருக்கும்.

2000—2001 ஆண்டிற்குத் திட்டமிடப்பட்டுள்ள 546 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| 1. திருவாரூர் (கோவில்களப்பல்) எரிவாயு சுழலி மின் திட்டம் | 107.00 மெ.வா. |
| 2. ஆழியார் சிறு புனல் மின் திட்டம் | 2.50 மெ.வா. |
| 3. பெருஞ்சாணி புனல் மின் திட்டம் | 1.30 மெ.வா. |
| 4. சாமல்பட்டி டீசல் என்ஜின் மின் திட்டம் | 106.00 மெ.வா. |
| 5. பிள்ளைப்பெருமாள்நல்லூர் எரிவாயு சுழலி மின் திட்டம் | 330.00 மெ.வா. |
| | 546.80 மெ.வா |

[2000 நவம்பர் 10

கீழ்க்கண்ட 2 தனியார் துறை திட்டங்களின் கட்டுமானப் பணிகள் 2000—2001ல் தொடங்கப்படும்.

| | |
|---|---|
| 1. வடசென்னை அனல் மின் திட்டம் நிலை—2 | 1050 மெ.வா. |
| 2. சமயநல்லூர் டீசல் என்ஜின் மின்திட்டம் | 106 மெ.வா. |
| | 1156 மெ.வா. |

22—

## துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 35956—திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெண்காடு என்ற ஊரில் மின் அழுத்தக் குறைபாடுகளைப் போக்க துணை மின் நிலையம் அமைக்க இடம் வாங்கப்பட்டும், இதுவரை அமைக்காததால் விரைவில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகை மாவட்டம், திருவெண்காடு ஊரில் புதியதாக 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க 9—வது பெருந்திட்டத்தில் வாரியம் 27—6—1998—ல் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தும் தற்பொழுது கிடாரம்கொண்டான் மற்றும் அரசூர் துணை மின் நிலையங்களிலிருந்து உடனடியாக மின் பளு மாற்றக்கூடிய தேவை எழவில்லையாதலால், 2000—2001 ஆண்டில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கும் பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

மின் பளு வளர்ச்சி அடிப்படையில் தேவைப்படும்போது மேற்கண்ட மின் நிலையம் அமைக்க ஆவன செய்யப்படும்.



2000 நவம்பர் 10]

23—

## கூடுதல் ஒதுக்கீடு

**வினா எண் 36220—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாவட்டங்களைக் காட்டிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகள் மின் இணைப்புக்காக அதிக வருடம் காத்திருக்க வேண்டிய நிலை இருப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் ஒதுக்கீடு செய்து, காத்திருப்போர் பட்டியலை சமன்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்தைக்காட்டிலும் விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி, திண்டுக்கல், திருச்சி மாவட்டங்களில் விவசாய மின் இணைப்புகளுக்காக 1980—81 வருடங்களிலிருந்து காத்திருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் 1987—88 வருடத்திலிருந்துதான் காத்திருக்கிறார்கள். ஆயினும், விவசாய இணைப்புகளுக்கான மனுக்கள் அதிகம் உள்ள மாவட்டங்களுக்கு அதிகம் உள்ள மின் இணைப்பு மனுக்களுக்கேற்ப குறியீடு ஒதுக்கப்படும். மேலும், அரசு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டுக்கேற்ப வரிசைக்கிரமமாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) விவசாய மின் இணைப்புகள் (Free Supply) ஆதலால் மின் வாரியம் அரசு குறியீட்டினைக்காட்டிலும் அதிக மின் இணைப்புகள் கொடுக்க இயலாது. ஆயினும், காத்திருப்போர் பட்டியல் அதிகமாய் இருப்பின் அம்மாவட்ட விவசாயிகளை சுயநிதித் திட்டம் (SFS) Category I & II திட்டத்தின்கீழ் விவசாய மின் இணைப்புகள் கோரினால், அத்திட்டத்தின் வரிசைக்கிரமப்படி மின் இணைப்புகள் வழங்கப்படும்.

**24—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 28472–திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் அரசு அலுவலகங்களுக்கு கட்டடம் கட்ட அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?*

**விடை –**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அரசு அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணியை நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இந்த நிதியாண்டில் இப்பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.*

**25—**

## அலுவலகங்களில் கணினிகள்

**வினா எண் 33521–திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1999—2000 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வட்ட அலுவலகங்களில் கணினி மற்றும் இணையம் மூலம் இணைக்கும் முயற்சிகள் வருவாய்த் துறை மூலம் எவ்வளவு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?*

*(ஆ) மற்ற அலுவலகங்களுக்கு இதே போன்ற இணைப்புகள் எப்போது வழங்கப்படும்?*

*(இ) இந்த கணினி நிறுவ அரசு செலவிடும் தொகை எவ்வளவு?*





**விடை –**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) 1999—2000 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 50 வட்ட அலுவலகங்களில் கணினிகள் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கணினிகளை இணையம் மூலம் இணைக்கும் திட்டம் அனைத்து வட்டங்களிலும் கணினிகள் வழங்கப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*(ஆ) மீதமுள்ள 156 வட்டங்களுக்கு நடப்பு ஆண்டில் கணினிகள் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*(இ) மத்திய அரசின் முழு உதவி திட்டத்தின்கீழ் அளித்த ரூ.133.00 இலட்சம் தொகையில் 50 கணினிகள் முதற்கட்டமாக 50 வட்டங்களுக்கு வழங்கப்பட்டது. மீதமுள்ள 156 வட்டங்களுக்கு தற்போது 2000—2001 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசின் முழு உதவித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ.416.52 இலட்சம் விடுவித்துள்ளது.*

**26—**

## சாலை செப்பனிடல்

**வினா எண் 812–திரு. சி. வேலாயுதன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திக்கணம்கோடு முதல் மயிலோடு வரையிலான சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை –**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திக்கணம்கோடு முதல் மயிலோடு வரையிலான சாலை 50வது சுதந்திர தின பொன்விழா திட்டத்தின்கீழ் திக்கணம்கோடு பேரூராட்சி மூலம் செப்பனிடப்பட்டு வேலை முடிவு பெற்றுள்ளது.*

27—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 24799—திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கொள்ளிடம்—வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் மன்னார்குடி நகராட்சிக்கும், கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கிடும் கிராமங்கள், நகராட்சி வார்டுகளின் எண்ணிக்கை எவ்வளவு?*

*(ஆ) இல்லை எனில், மேற்படி நகராட்சி மற்றும் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்பொழுது வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டம் அரசு ஒப்புதல் பெற்று திட்டம் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, பணி ஏற்பு ஆணைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால், மன்னார்குடி நகராட்சியை வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்க இயலாது. மேலும், மன்னார்குடி நகராட்சி அபிவிருத்தித் திட்டத்திற்கு குடிநீர் திட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள அந்நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பவில்லை. மன்னார்குடி நகராட்சியின் தீர்மானம் கிடைக்கப்பெற்றதும், அந்நகராட்சியின் குடிநீர் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

28—

## தென்னங்கீற்று

**வினா எண் 28013—திரு. சி. வேலாயுதன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாநகரில் தென்னங்கீற்று பயன்படுத்தக் கூடாது என்று தடை விதிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?*



*(ஆ) ஆம் எனில், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓலை பின்னும் சுமார் 15,000 குடும்பங்களுக்கு அரசு மறு குடிசைத் தொழிலுக்கு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) சென்னை மாநகரில் தென்னங்கீற்று விற்பனை செய்வதை தடை செய்ய ஆணை ஏதும் பிறப்பிக்கவில்லை. சென்னை மாநகராட்சி எல்லைக்குள் தென்னங்கீற்று மூங்கில் விற்பனையை முறைப்படுத்துவதற்கு, அரசாணை (நிலை) எண் 109, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 5—5—1999—ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது)*

*(ஆ) வினா எழவில்லை.*

### சுருக்கம்

*சென்னை மாநகராட்சி எல்லைக்குள் தென்னங்கீற்று மற்றும் மூங்கில்களை பயன்படுத்தி புதிய குடிசைகள் அமைப்பதை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணைகள் வெளியிடப்படுகின்றன.*

நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை,

*அரசாணை (நிலை) எண் 109,* *நாள் 5—9—1999.*

*படிக்கப்பட்டது:*

*சென்னை மாநகராட்சி ஆணையரின் கடித கதுநகூ. எண் பி8/ 132098, நாள் 11—3—1999*

**ஆணை:**

*1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டப் பிரிவு 27—கின்படி சென்னை மாநகராட்சியும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியமும் சேர்ந்து அமைக்கப்பட்ட இணைக்குழுவின் கூட்டத்தில், சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகளில் தொடர்ந்து ஏற்படும் தீ விபத்துக்களை தடுப்பதற்கு ஏதுவாக, சென்னை மாநகர எல்லைக்குள் தென்னங்கீற்று ஓலை மற்றும் மூங்கில் விற்பனை செய்வதை தடை செய்ய வேண்டுமென*

முடிவெடுக்கப்பட்டுள்ளது இதன் அடிப்படையில், சென்னை மாநகருக்குள் இப்பொருட்களை கொண்டு வருவதை தடை செய்ய அரசு ஒரு தனிச்சட்டம் கொண்டு வரலாமென்று சென்னை மாநகராட்சி ஆணையாளர் கருத்து தெரிவித்துள்ளார்.

2. தென்னங்கீற்று மற்றும் மூங்கில் போன்ற பொருட்களை சென்னை மாநகருக்குள் கொண்டு வருவதை தடை செய்யும்போது, சொந்த இடங்களில் தற்காலிக பந்தல் போடுதல் போன்ற நியாயமான தேவைகளுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், தென்னங்கீற்று மற்றும் மூங்கில்களை விற்பனை செய்பவர்கள் 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் சட்டத்தின்படி சென்னை மாநகராட்சி ஆணையாளரிடமிருந்து உரிமம் பெறவேண்டும். எனவே, சென்னை மாநகரில் உள்ள குடிசைப்பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளை தடுப்பதற்கு வசதியாக முதலில் சென்னை மாநகருக்குள் புதிய குடிசைகள் அமைப்பதை கட்டுப்படுத்தலாமென ஆராயப்பட்டது. இவ்வாறு கட்டுப்படுத்துவதற்கு முதற்கட்ட நடவடிக்கைகளாக மேற்கொள்ள வேண்டியவைகளையும் அரசு விரிவாக ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:

(i) 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் சட்டத்தின்கீழ் தென்னங்கீற்று மற்றும் மூங்கில் போன்ற பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் சென்னை மாநகராட்சி ஆணையாளர் நிர்ணயிக்கும் வரையறைகளுக்குட்பட்டு உரிமம் பெற்று, அவற்றை விற்பனை செய்யவேண்டும்.

(ii) உரிமம் பெற்று விற்பனை செய்யப்படும் இப்பொருட்களை என்னென்ன தேவைகளுக்கு பயன்படுத்தலாம் என்பதை நிபந்தனைகளாக தெரிவித்து உரிமங்கள் வழங்கி சென்னை மாநகருக்குள் தென்னங்கீற்று மற்றும் மூங்கில்களை விற்பனை செய்வதை முறைப்படுத்தி கட்டுப்படுத்த சென்னை மாநகராட்சி ஆணையாளர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு நிபந்தனைகளை விதிக்கும்போது பொது இடங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிக்கும் வகையில் புதிதாக குடிசைகள் அமைப்பதற்கு இவைகளை விற்பனை செய்யக்கூடாது என்ற ஒரு நிபந்தனையை விதிக்கலாம்.

(iii) மேலும், சென்னை மாநகருக்குள் உள்ள பொது இடங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து புதிய குடிசைகள் அமைப்பதை





விழிப்புடன் கண்காணித்து, அவைகளை வரவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி ஆணையாளர் மேற்கொள்ள வேண்டும். சரியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுகின்ற சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் மாநகராட்சித் துறை அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையை சென்னை மாநகராட்சி ஆணையாளர் எடுக்க வேண்டும்.

3. சென்னை மாநகருக்குள் ஏற்கெனவே உரிமம் பெற்று தென்னங்கீற்று மற்றும் மூங்கில் போன்ற பொருட்களை விற்பனை செய்து வருபவர்கள் அனைவருக்கும் புதிய உரிமங்கள் புதுப்பிக்கும்போது, மேலே பத்தி 3—ல் தெரிவித்துள்ளவாறு தென்னங்கீற்று மற்றும் மூங்கில்களை விற்பனை செய்வதை கட்டுப்படுத்த நிபந்தனைகளை விதித்தும் நடவடிக்கைகள் எடுக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், சென்னை மாநகருக்குள் தென்னங்கீற்று மற்றும் மூங்கில் போன்றவைகளை தற்போது விற்பனை செய்து வரும் அனைத்து வியாபாரிகளுக்கும் இந்த ஆணைகள் குறித்து உடனடியாக தக்க அறிவுரைகள் வழங்கவும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. மாலதி,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆணையாளர், சென்னை மாநகராட்சி, (மேயர் மூலமாக) சென்னை—3.
மாநகர காவல் துறை ஆணையாளர், சென்னை—8
மாவட்ட அட்சியர், சென்னை 600 001.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
காமராசர் சாலை, சென்னை—5
நகல்: முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9
உள் துறை, சென்னை—9
வருவாய்த் துறை, சென்னை—9
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை—9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.1) துறை,
சென்னை—9

29—

## உதவியாளர்கள்

**வினா எண் 26345–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் கிராமப்புற ஊராட்சிகளில் பணியாற்றும் ஊராட்சி உதவியாளர்கள் எத்தனை பேர்?*

*(ஆ) அவர்களுக்கு காலமுறை ஊதிய விகிதம் அமலாக்க அரசு கருதியுள்ளதா?*

**விடை–**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்பொழுது தமிழ்நாட்டில் கிராமப்புற ஊராட்சிகளில் மொத்தம் 4398 ஊராட்சி உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

(ஆ) கிராம ஊராட்சிகள் பணியமைப்பு சீரமைப்பது குறித்த குழுவின் பரிந்துரைப்படி, நிலை 1 கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி முழுநேர எழுத்தர்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சியின் நிதிநிலைமை, வேலைப்பளு ஆகியவற்றின் அடிப்படையில் மொத்த சம்பள செலவினம் சொந்த வருவாய் ஆதாரத்தில் 10 சதவிகிதத்துக்கு மிகாமலும், மாதம் ஒன்றுக்கு ரூ.1800க்கு மிகாமலும் தொகுப்பூதியம் நிர்ணயித்து வழங்க ஊராட்சிகளுக்கு அனுமதி அளித்து அரசாணை (நிலை) எண் 116 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16—5—2000ல் ஆணையிடப்பட்டுள்ளது. நிலை 2 கிராம ஊராட்சி பகுதிநேர எழுத்தர் ஊராட்சி உதவியாளர்களுக்கு தொகுப்பூதியம் மாதம் ரூ800க்கு மிகாமல் நிர்ணயித்து வழங்க அரசாணை நிலை எண் 117, ஊரக வளர்ச்சி நாள் 10—5—2000ல் ஆணையிடப்பட்டுள்ளது.

30—

## தரைப்பாலம் பழுதுபார்த்தல்

**வினா எண் 30479–திரு. உ. திரைவீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) பரமக்குடி—எமனேஸ்வரம் தரைப்பாலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், பழுதை நிவர்த்தி செய்ய நடப்பாண்டில் நிதி ஒதுக்கப்படுமா?*

**விடை–**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998—99 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.5.00 இலட்சம் பரமக்குடி நகராட்சியின் நிதி 1.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.6.00 இலட்சம் செலவில் பழுதுபட்ட பரமக்குடி—எமனேஸ்வரம் தரைப்பாலத்தில் தடுப்புச் சுவர் மற்றும் தார்ச்சாலை அமைத்து செப்பனிடப்பட்டுள்ளது.

31—

## கூடுதல் கட்டடங்கள்

**வினா எண் 30911–திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி, பூலாங்குடியிருப்பு அரசு நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடங்களை கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

**விடை–**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதூர் பேரூராட்சி, பூலாங்குடியிருப்பு அரசு நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில்

[2000 நவம்பர் 10

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருநெல்வேலி நிர்வாக அனுமதி எண் அ8/1661/99, நாள் 11—1—2000ன்படி வழங்கப்பட்டு, செயற் பொறியாளர், கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டம், திருநெல்வேலி அவர்கள் மூலம் நடைபெற்று வருகிறது.

32—

## புதிய பள்ளிக் கட்டடம்

**வினா எண் 31308—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், இ.சித்தூர் ஊராட்சி தண்ணீர்பந்தம்பட்டி, கரிசல்பட்டி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் புதிய பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், இ.சித்தூர் ஊராட்சி, தண்ணீர்பந்தம்பட்டியில் கூடுதல் பள்ளிக்கூடம் நடப்பாண்டில் (2000—2001) வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் ரூ.2.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியக் குழு தீர்மான எண் 501ல், நாள் 31—3—2000 அன்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேலும், இ.சித்தூர் ஊராட்சி கரிசல்பட்டியில் கூடுதல் பள்ளிக் கட்டடம் நடப்பாண்டில் 2000—2001ல் கட்டித் தரப்படும்.

33—

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 31329—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) ஊராட்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது?

(ஆ) தற்போதைய நிலைக்குத் தக்கப்படி அடிப்படையை மாற்றியமைக்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசு திட்டங்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசு வெளியிடும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநில திட்டங்களைப் பொறுத்தளவில், மாநில அரசு வெளியிடும் அரசு ஆணை மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநில நிதிக்குழு மானியம் அரசு ஆணையின்படியும், மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மக்கள் தொகை அடிப்படையில் வழங்கப்படுகிறது. பத்தாம் நிதிக்குழு மானியம் ஆண்டுதோறும் அரசு வெளியிடும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி உள்ளாட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

(ஆ) இது குறித்து செயற்குறிப்பு ஏதும் பரிசிலனையில் இல்லை.

34—

## மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா எண் 32819—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வெட்டுவாகோட்டை ஊராட்சி, புதுவிடுதி, மேற்கு ராக்காயி தெரு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம்,

வெட்டுவாக்கோட்டை ஊராட்சி, புதுவிடுதி மேற்குராக்கப்பன் தெரு என்பது புதுவிடுதி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். (ராக்காயி தெரு என்று இல்லை) இக்குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி 1500 மீட்டர் பகிர்மான குழாய் மற்றும் 6 பொது குழாய்கள் கொண்ட புதிய குடிநீர்த் திட்டம் நடைபெற்று வருகிறது. விரைவில் இத்திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

35—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 32909—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவ நாடானூர் ஊராட்சி, சுப்பிரமணியபுரம் ராஜீவ் காலனி, வெண்ணியூர் ஆகிய கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து கூடுதல் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சுப்பிரமணியபுரம், வெண்ணியூர் மற்றும் ராஜீவ் காலனி ஆகியவை மடத்தூர் குடியிருப்பின் பகுதிகளாகும். சுப்பிரமணியபுரம் மற்றும் வெண்ணியூர் பகுதிகள் 1987—88 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட மடத்தூர் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் பெற்று வருகின்றன. புதியதாக உருவாகியுள்ள ராஜீவ் காலனியின் மக்கள் தொகை 120. இங்கு ஒரு கையிறைப்பான் பயனில் உள்ளது. எனவே, சுப்பிரமணியபுரம், ராஜீவ் காலனி மற்றும் வெண்ணியூர் பகுதிகளுக்காக புதிய குடிநீர்த் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.



36—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 34147—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நெறிப்பறைச்சல் ஊராட்சி, பொம்மநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து 2000—2001 ஆம் நிதியாண்டில் மேற்படி பணி நிறைவேற்றப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

37—

## சாதனங்கள்

**வினா எண் 34504—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி பூங்காவில் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையத்தின் மூலம் ஊசலாடும் தனி ஊசல், சாய்தளம், கம்பி ஒழுங்கு, கூண்டுக்கிளி, சூரிய கடிகாரம், நெம்புகோல் தவத்தும், இரு முனை கம்பு சுழற்பாதை, ஒத்த அசைவுள்ள ஊசல், இசை தட்டுகள் கோணத் திணிவு வேகம், பிரிதளப் பார்வை, குவிந்த நிலக்கூரை ஆழ அளவைக்கருவி, எதிரொலி குழாய், உலக கடிகாரம், புரவளைவுத் தட்டுகள், முப்பரிமான ஊசல், எளிய புகைப்படக் கருவி பேசும் கலை ஆகியவற்றை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை–**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி பூங்காவில் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பமையத்தின் மூலம் அறிவியல் தொடர்பான சாதனங்கள் அமைக்க நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் தற்போது இவைகளை நிறுவுவதற்கில்லை.

**38—**

**பணி நியமனம்**

**வினா எண் 34676–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர் (Town Planning Inspector) பணியிடம் காலியாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சியில் காலியாக இருந்த நகரமைப்பு ஆய்வர் பணியிடத்தில் 27—5—1999 ஆம் நாளிடப்பட்ட அரசாணை எண் 125ன்படி, தினக்கூலிப் பணியாளர் திரு. எம். பிச்சைமுத்து 2—6—2000 அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் 5—6—2000 முதல் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.





**39—**

**மயான வசதி**

**வினா எண் 35057–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 13வது வார்டு புதிய குடியிருப்பு விஸ்தரிப்பு பகுதிகளுக்கு மயான வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மயான வசதி செய்துத் தர அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை–**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 13வது வார்டு பகுதியில் போதிய இடவசதி இல்லாததால் மயானம் அமைக்க இயலவில்லை. ஆனால், தற்போது நகரின் மொத்த மக்களுக்கு பயன்படும் வகையில் திருப்பூர் ராம் லட்சுமணன் தியேட்டர் கிழக்கு புறமுள்ள நகராட்சிக்கு சொந்தமான சுடுகாட்டில் திருப்பூர் தெற்கு ரோட்டரியின் மயான அறக்கட்டளை சார்பாக ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் மின் மயானம் அமைக்க 22—4—2000 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மின் மயான அமைப்பு பணி பூர்த்தியடைந்தவுடன், எல்லா பகுதி மக்களுக்கும் பயன்படுமாதலால் தனியாக 10வது வார்டு பகுதி மக்களுக்கு மயானம் அமைக்கத் தேவையில்லை.

**40—**

**பள்ளிக்கு வசதி**

**வினா எண் 35177–திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நல்லூர் பேரூராட்சி, சென்னிமலைபாளையம் தொடக்கப் பள்ளி மாணவர்கள் அமர முடியாத அளவு பாழ்பட்டுள்ளதை அரசு அறியுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது பழுதுபார்க்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நல்லூர் பேரூராட்சிக்குப்பட்ட சென்னிமலைபாளையம் தொடக்கப் பள்ளியில் மாணவர்கள் அமர முடியாமல் பழுதுபட்டுள்ளது. மேற்படி கட்டடம் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டு பள்ளி நடைபெற்று வந்தது. தற்போது மேற்படி பள்ளியினை கடந்த நிதியாண்டில்தான் பேரூராட்சியின் பராமரிப்பிற்காக ஒப்படைத்துள்ளனர். மேற்படி பள்ளிக் கட்டடம் '60 ஈ 20' அளவுள்ள கட்டடம் ஆகும். கட்டடத்தில் தரைப்பகுதி மற்றும் ஜன்னல் கதவுகளும் பழுதுபட்டுள்ளன. இந்நிதியாண்டில் மேற்படி கட்டடம் பழுதுபார்க்க மதிப்பீடுகள் பெற்று வேலை செய்து முடிக்கப்படும்.*

**41—**

## பள்ளிக் கட்டடம் பழுதுபார்த்தல்

**வினா எண் 36040—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், இனாத்துக்கான்பட்டி ஊராட்சியில் இனாத்துக்கான்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஒன்றியம், இனாத்துக்கான்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டட பழுதுகள் அனைத்தும் சரி செய்யப்பட்டு நல்லமுறையில் உள்ளது.



**42—**

## மேல்கூரை செப்பனிடல்

**வினா எண் 36055—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், குருங்குளம் மேற்கு ஊராட்சிக்கு உட்பட்ட தோழகிரிப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி கட்டடம் மேல்கூரை பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தோழகிரிப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி கட்டடங்கள் மே 1999 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் சமத்துவபுரம் வருகையை ஒட்டி பழுதுகள் சரி செய்யப்பட்டு, சீரமைப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. இப்பள்ளியில் மாணவர்களின் வருகை மிக மிகக் குறைவாக உள்ளதால் கூடுதல் கட்டடங்கள் கட்டவும் வாய்ப்பு இல்லை.

**43—**

## சாலை அமைத்தல்

**வினா எண் 37688—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சி பகுதி—4 அரசு குடியிருப்புக்குச் செல்லும் சாலை பழுதடைந்துள்ளதால் புதிய சாலையாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது எடுக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதி—4 அரசு குடியிருப்புக்குச் செல்லும் சாலையில் 1999—2000 ஆம் ஆண்டு பொது நிதி வேலையின்கீழ் தார்ச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

**44—**

## போக்குவரத்து வசதி செய்தல்

**வினா எண் 37699திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் பேருந்து நிலையத்தில் சைக்கிள் நிறுத்த சுமார் 1000 சதுர அடிகள் பரப்பு கொண்ட இடம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தும், குத்தகைதாரர் சுமார் 6000 சதுர அடிகள் கொண்ட இடத்தை ஆக்கிரமித்திருப்பதால் பேருந்து போக்குவரத்து பாதிப்புக்குள்ளாவதை அரசு அறியுமா?*

*(ஆ) இதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (அ) வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான சித்தூர் பேருந்துகள் நிற்கும் இடத்தில் அமைந்துள்ள கட்டணக் கழிப்பிடத்திற்கு மேற்கு பக்கம் வார்டு—3 பிளாக் 14, 8 எண் 319/எல், 1500 அடிகள் பரப்பளவு இடம், வேலூர் நகராட்சியில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அதன் பரப்புள்ள இடம் எதுவும் வரைகட்டப்பு செய்யப்படவில்லை. பேருந்துகளுக்குப் போக்குவரத்து பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.*



**45—**

## பணி நியமனம்

**வினா எண் 7489—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேளாண் பொறியியல் துறையில் அடிப்படை நியமன ஆணை எண் 1987, நாள் 28—8—1981—ன்படி முதுநிலை வேளாண் பொறியியல் பட்டதாரிகளுக்கு 1:3:2 என்ற விகிதத்தில் நேரடி உதவி செய்றபொறியாளர் பணிக்கு அவர்கள் தகுதியானவர்கள் என்றிருந்தும் அரசு அதனைச் செயல்படுத்தாதது ஏன்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீராபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*வேளாண்மைத் துறையில் 1967, 1972, 1973 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் வேளாண்மை பொறியியல் மேற்பார்வையாளர் பதவிகளை நிரப்பிட நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. அத்தேர்வில் பொறியியல் பட்டம் மற்றும் பட்டயம் படித்தோர் கலந்து கொண்டனர். நேர்முகத் தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் சாதி விகிதாச்சார ஒதுக்கீடு நேர்காணலில் விண்ணப்பதாரரின் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு முதுநிலைப் பட்டியல் (seniority) பட்டம், பட்டயம் என்ற வேறுபாடின்றி ஒரே பட்டியலாக தயாரிக்கப்பட்டு, பதவி பெயரிலும் எந்தவித மாற்றமும் இன்றி வேளாண்மைப் பொறியியல் மேற்பார்வையாளராகப் பதவியில் அமர்த்தப்பட்டனர். அதில் 1967 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட பட்டியலில் 90 பேருக்கு வரிசைப்படி உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) பதவி உயர்வு அளிக்கப்பட்டது.*

*வேளாண்மைப் பொறியியல் துறை தனித்துறையாக அங்கீகரிக்கப்பட்டு 1—2—1981 முதல் இயங்கி வருகிறது. இதன் அடிப்படையில் இத்துறையில் உதவி செயற்பொறியாளர் பதவிக்கான நேரடி நியமனம், பதவி உயர்வு மற்றும் பதவி மாறுதல் முறை நியமனம் ஆகியவற்றினைச் செயல்படுத்திட 1:3:2 என்ற விகிதாச்சாரம் அரசு ஆணை எண் 1987, வேளாண்மைத் துறை, நாள் 28—8—1981ல் வழங்கப்பட்டு 1—2—1981 முதல் அமல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.*

17—11—1980 நாளிட்ட தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் அறிவிக்கையின் பேரில் உதவி செயற்பொறியாளர் (மண்வளப் பாதுகாப்பு) மற்றும் உதவி செயற் பொறியாளர் (இயந்திரம்) பதவிக்கான நேரடி நியமனத்திற்கு ஆறு உதவிப் பொறியாளர்கள் விண்ணப்பித்திருந்தனர். இவர்கள் தேர்வு செய்யப்பட்டதாக 16—4—1985 தேதிய தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆறு பெயர்களைத் தவிர நேரடி நியமனம் ஏதும் பின்னர் செய்யப்படவில்லை.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியாளர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரிலும், தலைமைப் பொறியாளர் (வே.பொ.) பரிந்துரையின் பேரிலும் 1:3:2 என்ற விகிதாச்சாரத்திற்குப் பதிலாக, பட்டயம் பெற்றவர்கள் அதிகமாக இருந்த நிலையில் பட்டம் மற்றும் பட்டயம் பெற்றுள்ளோரிடையே 3:12 என்ற விகிதாச்சாரத்தைப் பின்பற்றும்பொருட்டு, உதவி செயற்பொறியாளர் நேரடி நியமனத்தினை (வே.பொ.) 5 ஆண்டுகள் நிறுத்தி வைத்திட அரசாணை எண் 1696, வேளாண்மை (வேநி3) துறை, நாள் 3—9—1984—ல் உத்தரவிடப்பட்டுள்ளது. மீண்டும் இதே கோரிக்கை முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை எண் 631, வேளாண்மைத் துறை, நாள் 4—4—1988ன்படி மேலும் மூன்று ஆண்டுகட்கு நீட்டிக்கப்பட்டு 1—1—1981 முதல் மொத்தமாக எட்டு ஆண்டுகட்கு வழங்கப்பட்டுள்ளது. நேரடி நியமனம் செய்தால் ஏற்கெனவே பணியில் உள்ள உதவி பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு 20 ஆண்டுகளுக்குமேல் காத்திருக்க வேண்டிய தேக்கநிலை மேலும் பாதிப்புக்குள்ளாகும் என்ற காரணத்தினால் தடை செய்யப்பட்டது.

மே 1982 ஆம் ஆண்டில், அரசாணை எண் 1987, வேளாண்மைத் துறை, நாள் 28—8—1981—ல், 1:3:2 என்ற விகிதாரச்சாரத்தினை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட வழக்கு உச்சநீதி மன்றத்தினால் 3—5—1982—ல் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் அரசு ஆணை எண் 1210, வேளாண்மைத் துறை, நாள் 24—6—1983—ல் 78 உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்கட்கு தற்காலிகமாக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுளளது. இதனை எதிர்த்து திரு. இ. கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் நீதிப்பேரணை மனுக்கள் வாயிலாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். உயர் நீதிமன்ற நீதிபதிகள் 5—9—1986 தேதிய தீர்ப்பின்படி தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணி விதி 2(பி) (அதாவது) 1:3:2 விகிதாச்சாரம் நீக்கம் செய்யப்பட உத்தரவிடப்பட்டது. இதை அடுத்து பாதிக்கப்பட்ட திரு. இ. கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர்





தீர்ப்பினை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் குழுவிற்கு மேல்முறையீடு செய்தனர். 26—7—1989—ல் நீதிபதிகள் குழுவினால் வழங்கப்பட்ட தீர்ப்பில் ஏற்கெனவே நீதிபதியால் வழங்கப்பட்ட தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டு 1:3:2 விகிதாச்சாரம் சரியானதென்று உத்தரவிடப்பட்டது. திரு. இ. கிருஷ்ணமூர்த்தி மற்றும் சிலர், தங்களுக்கு பதவி இறக்கம் வருவதைத் தவிர்த்திட பல்வகை முறையீடு மற்றும் சிறப்பு விடுப்பு மனு வாயிலாக உச்சநீதிமன்றத்தில் தடையாணை பெற்றனர். பின்னர் அரசு தரப்பில் எதிர்உறுதி ஆவணம் உச்சநீதிமன்றத்தில் அளிக்கப்பட்டது. வழக்குகளைப் பரிசீலித்து தனது 13—9—1994 தேதிய தீர்ப்பின்படி 3:2 விகிதாச்சாரத்தினை உறுதி செய்து உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி 3:2 என்ற விகிதாச்சாரத்தினை அமலாக்கம் செய்யும்பொழுது, பட்டம் பெற்றவர்களைவிட பட்டயம் பெற்ற உதவி செயற்பொறியாளர்கள் அதிகமாக இருந்ததாலும், இவர்கள் 10 ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்து வந்ததாலும், பணியிறக்கம் செய்யாமல் விகிதாச்சாரத்தினைச் சமன்படுத்தும்பொருட்டு 55 உதவிப் பொறியாளர்கட்கு உதவி செயற்பொறியாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பட்டம் மற்றும் பட்டயம் பெற்றுள்ளோரிடையே காணப்பட்ட விகிதாச்சார வேறுபாட்டினை உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் சமன்படுத்தப்பட வேண்டிய நிலையில் 55 பதவி தரம் உயர்த்தப்பட்டன. இதன்மூலம் இயல்பான பதவி உயர்வு (promotion) செய்யப்படவில்லை. பதவி மேம்படுத்தப்பட்டுள்ளது (upgradation). எனவே நேரடி நியமனம் செய்ய இயலவில்லை.

1995—96 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) பதவிக்கு நேரடி நியமனம் எனவும் மற்றும் 1996—97 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) பதவிக்கு நேரடி—2 எனவும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அனுப்பப்பட்டது. தேர்வாணையத்தால் மேற்படி பதவிக்கான நேரடி நியமன அறிக்கை 13—7—1998 அன்று வெளியிடப்பட்டது. இதுசம்பந்தமாக தேர்வாணைக்குழு அனுப்பிய கடிதத்தின்பேரில் தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆய்வில் உள்ளது. மேலும் தேர்வாணையம் மூலம் உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்கு எதிராக தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் பல வழக்குகள் தொடரப்பட்டு தடை பெறப்பட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளன. மேற்படி வழக்குகள் முடிந்தவுடன் நேரடி நியமனம் செய்யப்படலாம்.

**46–**

## எண்ணெய் பனை உற்பத்தி

**வினா எண் 23255–திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எண்ணெய் பனை உற்பத்திக்காக மத்திய அரசு ஏதேனும் நிதியுதவி செய்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

**விடை–**

(அ) மற்றும் (ஆ) எண்ணெய்ப்பனை சாகுபடித் திட்டம் தமிழ்நாட்டில் 1993—94 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டமானது மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது. கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம், பராமரிப்பு, பயிற்சி மற்றும் விளம்பரத்திற்காக 75 விழுக்காடும், சொட்டு நீர்ப் பாசனத்திற்கு 90 விழுக்காடும் மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறது.

திட்டம் ஆரம்பித்தது முதல் மைய அரசு வழங்கி நிதி உதவி விவரம்:

| வருடம் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1992—93 | 68.38 |
| 1993—94 | 128.23 |
| 1994—95 | 199.55 |
| 1995—96 | 127.97 |
| 1996—97 | 173.92 |



| வருடம் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1997—98 | 215.52 |
| 1998—99 | 144.28 |
| 1999—2000 | 192.67 |

**47–**

## பரிசோதனை நிலையம்

**வினா எண் 30852–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிர்ப் பாதுகாப்பை மேம்படுத்த மாவட்டந்தோறும் அனைத்து பரிசோதனைகளையும் ஒரே இடத்தில் நடத்த ஏதுவாக பரிசோதனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்த அரசின் கொள்கைகளைத் தெளிவுபடுத்த இயலுமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கல்விப்பணி செய்வதோடு, வேளாண் கல்லூரிகளுடன் இணைந்து ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் பல மாவட்டங்களில் பல்வேறு ஆராய்ச்சிகளும், பரிசோதனைகளும் நடத்தி வருகிறது. தமிழக விவசாயிகள பயிர் செய்யும் பலவகையான நெற்பயிர்கள், தானியங்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றைப் பயிர் செய்வதன் மூலம் பயன் அடையும் வகையில் வேளாண் பல்கலைக்கழகம் சிறந்த வழிகாட்டியாக விளங்கி வருகிறது. மேலும், மாநிலத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 10 கல்லூரிகள் மற்றும் 31 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் (Agricultural Research Stations) 5 அறிவியல் வேளாண் மையங்கள் மற்றும் 5 பயிர் மருத்துவ மையங்கள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

[2000 நவம்பர் 10

(ஆ) மேற்சொன்ன விளக்கம் காரணமாக இக்கேள்விக்கான பதில் எழவில்லை.

**48–**

## பருத்தி உற்பத்தி

**வினா எண் 33865 திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் பருத்தி அபிவிருத்தித் திட்டத்தில் மானிய விலையில் உயிரியல் பூச்சிக்கொல்லி இனங்களை வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரை உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் காரணிகள் உபயோகத்தினை ஊக்குவிக்க செயல் விளக்கத்திடல்கள் பருத்தி அபிவிருத்தித் திட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 184 எண்கள் இனக்கவர்ச்சி பொறி செயல் விளக்கத்திடல்களும் என்.பி. வைரஸ் செயல் விளக்கத்திடல்கள் 632ம் அமைக்கப்பட்டன. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கத்தின்கீழ் மொத்தம் 185 வயல் வெளிப்பள்ளிகள் நடத்தப்பட்டு 9150 விவசாயிகள் பங்கு பெற்று பயனடைந்தனர். மேலும் இத்திட்டத்தில் உயிரியல் பூச்சி மருந்துகளும் வழங்கப்பட்டு, செயல் விளக்கம் செய்து அதன் உபயோகத்தினை விவசாயிகளிடையே ஊக்குவிக்க நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டத்தின்கீழ் 100 மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம், திருநெல்வேலி பாளையங்கோட்டை நாங்குநேரி, ராதாபுரம், வள்ளியூர், அம்பாசமுத்திரம், தென்காசி, செங்கோட்டை, சிவகிரி மற்றும் சங்கரன்கோவில் ஆகிய வட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, உயிரியல் பூச்சிக்கொல்லிகள் இலவசமாக வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.





**49—**

## நோய் தடுப்பு முறை

**வினா எண் 35318–திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் தென்னை மரங்களுக்கு என்னென்ன நோய் தடுப்பு முறைகள் கையாளப்படுகின்றன?

**விடை–**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நெல்லையில் பொதுவாக குருத்தழுகல் நோய், சாறுவடிதல் நோய் மற்றும் தஞ்சாவூர் வாடல் நோய் தென்படும் இந்நோய்களைக் கட்டுப்படுத்த கீழ்க்காணும் பயிர் பாதுகாப்பு முறைகள் கையாளப்படுகின்றன:

*1) குருத்தழுகல் நோய்:*

முதலில் நோய் தாக்கிய குருத்து மற்றும் குருத்தைச் சுற்றியுள்ள எல்லா மட்டைகளையும் அகற்றி அழித்துவிட வேண்டும். ஒரு சதவீத போர்டோ பசை தயாரித்து அறுத்த பாகங்களில் பூச வேண்டும். தோப்பில் உள்ள அனைத்து மரங்களுக்கும் குருத்து மற்றும் இலைப்பாகங்கள் நன்கு நனையுமாறு 1 சதவீத போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.

*2) சாறுவடிதல் நோய்:*

தென்னந்தோப்புகளை நன்கு உரமிட்டு, தேவைக்கேற்ப நீர்ப்பாய்ச்சி நன்கு பராமரிக்க வேண்டும்.

சாறுவடியும் பகுதிகளைச் சிறிய உளி கொண்டு நிறம் மாறிய சிசுக்கள் காணப்படும் பகுதிவரை தோண்டி எடுத்து அப்பகுதியில் ஒரு சதவீத போர்டோ பசையைத் தடவி பூசிவிட வேண்டும்.

**3) தஞ்சாவூர் வாடல் நோய்:**

1. நோய் தாக்கிய மரங்களை உடனுக்குடன் வேருடன் வெட்டி அகற்றி எடுத்துவிட வேண்டும்.

2. மரங்களுக்குப் பரிந்துரைக்கப்படும் உரங்களை இடுவதோடு, ஒவ்வொரு மரத்துக்கும் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கும் இட வேண்டும்.

3. மரத்தினைச் சுற்றி 2 அடி தூரத்தில் வட்டமாக 30 செ.மீ. அகலமாக. 60 செ.மீ. ஆழம் கொண்ட அகழியைப் போன்ற பள்ளம் தோண்டி, அதனுள் 500 கிராம் கந்தகத் தூளைப் பரவலாக இட்டு பின்னர் மூடிவிட வேண்டும். இந்த சிகிச்சையை 6 மாதத்திற்கு ஒரு முறை தொடர்ந்து அளிக்க வேண்டும்.

4. மரத்தின் மூட்டைச் சுற்றி அகழி போன்ற பள்ளம் தோண்டி மரத்திற்கு 25 லிட்டர் வீதம் ஒரு சதவீத போர்டோ கலவையை ஊற்ற வேண்டும். ஒரு மாத இடைவெளியில் நான்கு முதல் ஐந்து முறை இக்கலவையை ஊற்ற வேண்டும்.

**50—**

## தென்னங்கன்றுகள் உற்பத்தி

**வினா எண் 35327—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குட்டை மற்றும் நெட்டை தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்குப் போதுமான அளவில் கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குட்டை மற்றும் நெட்டை தென்னங்கன்றுகளை அதிக அளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில்? எப்போது நிறைவேற்றப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) (ஆ) மற்றும் (இ): குட்டை மற்றும் நெட்டை கன்றுகளை அதிக அளவில் உற்பத்தி செய்து விநியோகம் செய்திட திட்டம் ஏதும் இல்லை.

குட்டை மற்றும் நெட்டை கன்றுகள் உற்பத்தில் கீழ்க்கண்ட பிரச்சினைகள் உள்ளன:—

1. ஓட்டு சேர்ப்புப் பணியும் அதைத் தொடர்ந்து உற்பத்தியாகும் காய்களின் மகசூலும் குறைவு.

2. நெற்றுக்களிலிருந்து கன்றுகளின் உற்பத்தி சதவிகிதம் குறைவு.

3. நடவு செய்த மரங்களின் மகசூலில் காணப்படும் காய்களின் தரம் குறைவு.

4. கன்றுகள் உற்பத்தி குறைவாக இருக்குமாதலால் அரசுக்கு உற்பத்தி செலவு அதிகம் காணப்படுகிறது.

5. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், குட்டை மற்றும் நெட்டை கன்றுகள், நெட்டை குட்டை வீரிய ஒட்டுக் கன்றுகளைவிட எந்த வகையிலும் தரம் மற்றும் உற்பத்தி அதிகமில்லை எனத் தெரிவித்து, குட்டை நெட்டை வீரிய ஒட்டு ரக தென்னை கன்றுகள் உற்பத்தி செய்வதை நிறுத்திவிட ஆலோசனை வழங்கியுள்ளது.

6. குட்டை நெட்டை கன்றுகள் உற்பத்தி செய்வதற்கு ஓட்டு சேர்ப்புப் பணி மேற்கொள்ள அதிக அளவில் குட்டை தென்னை மரங்கள் தேவை. ஆனால், தற்சமயம் குட்டை மரங்கள் போதுமான அளவில் இல்லை. எனவே, குட்டை, நெட்டை கன்றுகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய வாய்ப்புகள் இல்லை.

**51—**

## தென்னை சாகுபடி

**வினா எண் 35328—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) தென்னங்கன்றுகளை மானிய விலையில் வழங்கி தென்னை சாகுபடியை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்னங்கன்றுகளை மானிய விலையில் வழங்குவது தொடர்பான திட்டம் ஏதும் இல்லை. வேளாண்மைத் துறை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படும் கன்றுகளின் விலை விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| நெட்டை இரகம் | ரூ.12 |
| நெட்டை குட்டை இரகம் | ரூ.20 |

**52—**

## எண்ணெய்ப் பனை ஆலை

**வினா எண் 35348—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எண்ணெய்ப் பனை ஆலை நிறுவ எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) விவசாயிகள் எத்தனை ஏக்கர் பரப்பில் எண்ணெய்ப் பனை சாகுபடி செய்துள்ளனர்?

(இ) மகசூல் எப்போது முதல் வரத் தொடங்கும்?

(ஈ) எவ்வளவு காலத்திற்குள் எண்ணெய்ப் பனை ஆலை நிறுவப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) எண்ணெய் பனை சாகுபடி திட்டம் 1998—99 முதல் திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் எண்ணெய்ப்பனை சாகுபடி மற்றும் எண்ணெய்ப்பனை பழத்திலிருந்து எண்ணெய் பிழியும் ஆலை அமைப்பது தொடர்பாக "டெனரா பிளேண்டேசன்ஸ்" என்ற நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் எண்ணெய்ப்பனை சாகுபடித் திட்டத்திற்குத் தேவையான கன்றுகளை வளர்த்து அரசு அளிக்கும் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வருகிறது. எண்ணெய்ப்பனை ஆலை அமைக்க போதிய பரப்பு விரிவாக்கம் (Area Extension) மற்றும் பழக்குலைகள் உற்பத்தி இன்னும் தொடங்கவில்லை.



2000 நவம்பர் 10]

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் பாமாயில் திட்டம் செயல்படுத்தத் தொடங்கியது முதல் 1999—2000 வரை சாகுபடி செய்த பரப்பு விவரம்:

| ஆண்டு | பரப்பு (ஏக்கர்) |
|---|---|
| 1998—1999 | 125.12 |
| 1999—2000 | 37.25 |

(இ) பாமாயில் திட்டம் செயல்பட ஆரம்பிக்கப்பட்ட 3 முதல் 4 ஆண்டுகளுக்குப் பிறகு தான் பழக்குலைகள் அறுவடைக்கு வரும்.

(ஈ) போதிய பாமாயில் பழக்குலைகள் அறுவடைக்கு தயாராகும் தருணத்தில் எண்ணெய் பிழியும் ஆலை அமைக்கப்படும்.

**53—**

## உர விற்பனை

**வினா எண் 35992—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு சர்க்கரை கழகத்தைச் சார்ந்த குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மூலமாக கரும்பு கோட்ட அலுவலகங்களில் உர விற்பனை செய்வதால் கடந்த மூன்று ஆண்டுகளாக ஆலைக்கு எவ்வளவு மதிப்பீடு உர விற்பனை செய்யப்பட்டது?

(ஆ) ஆலைக்கு உர விற்பனையால் லாபமா அல்லது நட்டமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 3 ஆண்டுகளாக உர விற்பனை செய்த விவரம் கீழ்வருமாறு:

| வருடம் | உர விற்பனை செய்த மதிப்பு |
|---|---|
| | ரூ. பை. |
| 1. 1997—98 | 1,88,27,123.99 |
| 2. 1998—99 | 2,63,30,527.14 |
| 3. 1999—2000 | 3,27,52,280.80 |

(ஆ) ஆலைக்கு உர விற்பனையால் லாபம் ஏற்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| 1. 1997—98 | ரூ.2.00 இலட்சம் |
| 2. 1998—99 | ரூ.4.21 இலட்சம் |
| 3. 1999—2000 | ரூ.3.56 இலட்சம் |

54—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 38441—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதிகளுக்கு விவசாயப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணிகள் தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கல்லணைக் கால்வாயில் கடைமடைப் பகுதிகளுக்கு விவசாயப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கத் திட்டம் ஏதும் இல்லை.

இப்பகுதியில் உள்ள விவசாயிகள் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க இத்துறையின் கருவிகளைக் கேட்டு அணுகும் போது, விதிகளுக்கு உட்பட்டு முன்னுரிமை கொடுத்து கருவிகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

55—

## வடிகால் தூர்வாருதல்

**வினா எண் 26742—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பாப்பாநாடு — சோழகன் கரை தார்ச் சாலையில் வேதபுரி வடிகால் வாய்க்காலில் பாலத்திற்கு வடக்கே ஒரு கிலோ மீட்டர் வரை காட்டாற்றை புல்டோசர் மூலம் சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பாப்பாநாடு சோழகன் கரை தார்ச் சாலையின் கீழ் செல்லும் வடிகால் வேதபுரி வடிக்கால் கடைமடை காட்டாறு என அழைக்கப்படுகிறது. இந்த வடிகால் தூர்வாரும் பணிகள் அனைத்தும் 1998—99 ஆம் அண்டு இயந்திரம் மூலம் ரூ.96,500 மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டன.

[2000 நவம்பர் 10

56—

## தூர் எடுத்தல்

**வினா எண் 32390—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஆழிவாய்க்கால் ஊராட்சியில் உள்ள கட்டக் குளத்திலிருந்து தண்ணீர் சுடும் பேறி குளம் வழிந்து விவசாய நிலம் மூழ்கி விட்டதால் ஆழிவாய்க்கால் வடிகால் வாய்க்காலை தூர் எடுத்து செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம் ஆழிவாய்க்கால் வடிகாலானது தெற்கூரில் உள்ள நீர்க்குழியில் ஆரம்பமாகி, பஞ்சநதிக்கோட்டை வழியாக சுமார் 4150 மீட்டர் தூரம் கடந்து வேதபுரி வடிகாலில் சேருகிறது.

ஆழிவாய்க்கால் வடிகால் 0 மீட்டர் முதல் 4150 மீட்டர் வரை தூர்வாரி சீரமைக்க 1999—2000 ஆம் ஆண்டில் தூர் வாரும் பணியின்கீழ் ரூ.6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணி 9/99ல் முடிக்கப்பட்டது. மொத்த செலவினம் ரூ.5.81 இலட்சங்கள் ஆகும்.

57—

## வாய்க்கால் தூர்வாருதல்

**வினா எண் 32796—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்த நாடு வட்டம், திருவோணம் ஒன்றிம், சோழபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட கைலாப்பிறை குளத்திலிருந்து மண்டலக் கோட்டை (கிளிஞ்சல் ஏரி) வழியாக வேதபுரி வாய்க்கால் வரை 2.1/2 கி.மீ. வாய்க்காலைத் தூர் வாரி செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?



2000 நவம்பர் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம் சோழபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட கைலாப்பிறை குளத்திலிருந்து மண்டலக் கோட்டை (கிளிஞ்சல் ஏரி) வழியாக வேதபுரி வடிகாலில் விழும் வாய்க்கால் நரியார் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. இந்த நரியார் வடிகாலின் மொத்த நீளம் 6.00 கி.மீ. ஆகும். இந்த வாய்க்காலில் முழு நீளமும் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு ரூ.5.14 இலட்சத்திற்கு மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டு இப்பணி 1/2000—ல் முடிவுற்றது. மொத்த செலவினம் 4.886 இலட்சங்கள் ஆகும்.

58—

## சந்தன மரங்கள்

**வினா எண் 36106—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டத்தில் வளர்ந்துள்ள சந்தன மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டத்தில் எண்ணிக்கையிடும் நிலையில் உள்ள சந்தன மரங்களோ, பட்டுப்போய் பிடுங்க வேண்டிய நிலையில் உள்ள சந்தன மரங்களோ எதுவும் இல்லை. சந்தன மரச்செடிகள் மறு உற்பத்தி மூலம் முளைத்து செடிகளாக நல்ல நிலையில் உள்ளன.

59—

## இரயில் போக்குவரத்து

**வினா எண் 25028—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மும்பையிலிருந்து கன்னியாகுமரி செல்லும் இரயில் நாங்குநேரியில் நின்று செல்ல மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது சென்னை எழும்பூர்—கன்னியாகுமரி விரைவு இரயில் வண்டிகள் (6121 / 6122) நாங்குநேரியில் நின்று செல்கின்றன. மதுரை வரை நீட்டிக்கப்பட்டுள்ள குருவாயூர்—நாகர்கோவில் இரயில் வண்டியும் (எண் 6725 / 6726) நாங்குநேரியில் நின்று செல்லும் சராசரியாக 27 பயணச் சீட்டுக்கள், இங்கிருந்து 150 கி.மீ.க்கு மேல் செல்ல வழங்கப்படுவதால் மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு இரயில் வண்டிகள் நின்று செல்வதே போதுமானதாகக் கருதப்படுகிறது. மேலும் நாகர்கோவில்—மும்பை (6339 / 6340) விரைவு இரயில் வண்டியையும் நாங்குநேரியில் நின்று சென்றால், இதுபோன்று மற்ற இரயில் நிறுத்தங்களிலும் நின்று செல்ல கோரிக்கை எழ வாய்ப்புள்ளதோடு மட்டுமின்றி, பயண நேரமும் கூடுதலாகும் என்பதால் நாங்குநேரியில், நாகர்கோவில்—மும்பை விரைவு இரயில் வண்டி நின்று செல்ல வாய்ப்பு இல்லை என தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.

**60—**

## புதிய அமுதம் அங்காடி

**வினா எண் 20482—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, நடுவூர் ஊராட்சிக்குட்பட்ட நாட்டரசன்கோட்டையில் ஒரு புதிய அமுதம் அங்காடி தொடங்க அரசு முன்வருமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நடுவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் நடுவூர் அங்காடியின் 588 குடும்ப அட்டைகளுடன் நடுவூர் ஏரிக்கரை நாட்டரசன்கோட்டை அரும்பாளை மற்றும் புதுப்பட்டி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. நடுவூர் அங்காடியுடன் இணைக்கப்பட்ட நாட்டரசன்கோட்டை பகுதிகளில் 167 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. நடைமுறையிலுள்ள விதிகளின்படி நாட்டரசன்கோட்டையில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**61—**

## விருப்ப ஓய்வுத் திட்டம்

**வினா எண் 21071—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவு பண்டக சாலையில் விருப்ப ஓய்வுத் திட்டத்தில் விலகிக் கொண்ட பணியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்குரிய கணக்கு முடித்து பணம் வாங்கப்பட்டுவிட்டதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொதுவிநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்ட சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் இதுவரை பணி விலகிக்கொண்ட பணியாளர்கள் 357 பேர்.

(ஆ) இவர்கள் அனைவருக்கும் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய பணப்பயன் வழங்கப்பட்டுவிட்டது.

[2000 நவம்பர் 10

62—

## செப்பனிடுதல்

**வினா எண் 21920—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, கிளாமங்கலம் கூட்டுறவு விவசாய வங்கிக் கட்டடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, கிளாமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் பழுதடைந்துள்ள கட்டடத்தை ரூ. 50,000 வரையில் செலவு செய்து பழுதுபார்த்துக் கொள்ளலாம் என வங்கியின் தலைவருக்கு தஞ்சாவூர் சரகத் துணைப் பதிவாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

63—

## வங்கிக் கடன்

**வினா எண் 30207—திரு. பெசு. திருவேங்கடம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சென்ற ஆட்சியின்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பினாமி கடன் பெற்றவர்களைக் கண்டறிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) அதன் விவரம் என்ன?

(இ) அதன் தற்போதைய நிலை என்ன?



2000 நவம்பர் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) (ஆ) மற்றும் (இ) தமிழ்நாட்டில் சென்ற ஆட்சியின்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பினாமி கடன் பெற்றவர்களைக் கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் மொத்தம் 9 மாவட்டங்களில் 34 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பினாமி கடன் வழங்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள்மீது சட்டப் பிரிவு 81ன்கீழ் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்சொன்ன 9 மாவட்டங்கள் நீங்கலாக இதரமாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் சென்ற ஆட்சியின்போது பினாமி கடன்கள் வழங்கப்பட்ட நிகழ்வுகள் ஏதுமில்லை.

64—

## நியாயவிலைக் கடை

**வினா எண் 30632—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாயவிலைக் கடைகளில் விநியோகம் சீராக நடைபெறுவதைக் கண்காணிக்க குழு ஒன்று ஏற்படுத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக மாவட்ட மற்றும் வருவாய்க் கோட்ட அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்களும், சென்னை நகருக்கென தனியாக ஒரு ஆலோசனைக் குழுவும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. அக்குழுக்களில் மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்ட ஆட்சியர் உள்ளிட்ட பொது விநியோகம் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பினர்கள்,

[2000 நவம்பர் 10

பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சிகளின் மேயர்கள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், தன்னார்வ நுகர்வோர் குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் தங்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நியாயவிலைக் கடைகளைப் பார்வையிட்டு குறைகளை நிவர்த்தி செய்ய ஆலோசனைகள் வழங்குவர். மேலும், கிராம பஞ்சாயத்திற்கு உதவியாக இருக்க பஞ்சாயத்து அளவிலான பொது விநியோகத் திட்டக் குழுவும் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. சரியான நேரத்தில் குறிப்பிட்ட அளவில் தரமுள்ள அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறதா என்றும், நியாய விலைக் கடைகள் அன்றாட இருப்பு விவரங்கள், விற்கப்படும் ஒவ்வொரு பொருட்களின் விலை விவரங்கள், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் விலை மற்றும் அளவு விவரங்கள் விவரப் பலகையில் எழுதி வைக்கப்பட்டுள்ளதா என்பனவற்றை இக்குழு கண்காணிக்கும். மேலும், பொது மக்களின் குறைகள் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் இக்குழு மேற்கொள்ளும். எனவே, நியாயவிலைக் கடை அளவில் குழு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

65—

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 31600—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் ஒப்பளிக்கப்படும் பணி நிலைத்திறனுக்கேற்ப அமையும் காலிப் பணியிடங்களுக்கு கூட்டுறவு நிறுவனங்கள்/வங்கிகள் பணி நியமனம் செய்வது குறித்த பணிகளை மேற்கொள்ளும்.





66—

## நியாயவிலைக் கிளைக் கடை அமைத்தல்

**வினா எண் 33097—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சிதம்பராபுரம் ஊராட்சிக்குட்பட்ட ஆத்துக்குறிச்சி, பிரகாசபுரம் கிராமத்திற்கு நியாயவிலைக் கிளைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சிதம்பராபுரம் ஊராட்சியைச் சேர்ந்த ஆத்துக்குறிச்சி மற்றும் பிரகாசபுரம் கிராமங்களுக்கு தற்போது ராதாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் நடத்தப்படும் சிதம்பராபுரம் நியாயவிலைக் கடை மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சிதம்பராபுரம் நியாய விலைக் கடையில் மொத்தம் 415 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடை கோரும் ஆத்துக்குறிச்சி மற்றும் பிரகாசபுரம் கிராமங்களுக்கும் சிதம்பராபுரம் நியாயவிலைக் கடைக்குமிடையே உள்ள தூரம் முறையே 1 மற்றும் 0.5 கிலோ மீட்டர் ஆகும். மேலும், இவ்விரண்டு கிராமங்களிலும் மொத்தம் 212 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், நியாயவிலைக் கடையானது இவ்விரு கிராமங்களிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளாகவே அமைந்திருப்பதாலும், ஆத்துக்குறிச்சி மற்றும் பிரகாசபுரம் கிராமங்களில் நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2000 நவம்பர் 10

67—

## அரிசி ஒதுக்கீடு

**வினா எண் 34027—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொதுவிநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்ட ரேஷன் கடைகளுக்கு மாதாந்திர அரிசி ஒதுக்கீடு எவ்வளவு?

(ஆ) ஒதுக்கீட்டிற்குரிய அளவுப்படி அரிசி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மாதாந்திர ஒதுக்கீடாக 625 மெட்ரிக் டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(ஆ) ஆம்.

68—

## மண்ணெண்ணெய்

**வினா எண் 35123—திரு.கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியில், வண்டிகளில் மண்ணெண்ணெய் விற்பதற்கு உரிமம் பெற்று அதை வெளிச் சந்தையில் லிட்டர் ஒன்று 14 ரூபாய்க்கு விற்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுத்து பிரிவு வாரியாக மண்ணெண்ணெய் விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், எப்போது?



2000 நவம்பர் 10]

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தென்காசி வட்டத்தில் திரு. கே. இராமசாமி கைவண்டி உரிமம் எண் 3/92 மற்றும் பேச்சிமுத்து பாண்டியன், கைவண்டி உரிமம் எண் 4/92 என்ற இருவர் மட்டுமே கைவண்டி உரிமம் பெற்றவர்கள். மேற்படி இருவரில் திரு. பேச்சிமுத்து பாண்டியன் என்பவர் மட்டுமே வியாபாரம் செய்து வருகிறார். அவர் அரசு நிர்ணயம் செய்த விலையிலேயே மண்ணெண்ணெய் விற்பனை செய்து வருகிறார். ரூ.14—க்கு மண்ணெண்ணெய் ஏதும் விற்பனை செய்யப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

69—

## பொருட்கள் கொள்முதல்

**வினா எண் 35127—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாயவிலைக் கடைகளுக்கு பொருட்கள் கொள்முதல் செய்யும்போது என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு. உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கொள்முதல் செய்யும்போது கீழ்க்காணும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன:

*1. அரிசி:*

மத்திய தொகுப்பிலிருந்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுவதற்காக தமிழகத்திற்கு விடுவிக்கப்படும் அரிசி, இந்திய உணவுக் கழகத்திடமிருந்து அரசு நிர்ணயம் செய்யும் விலையில்

கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் விவசாயிகளிடமிருந்து அரசு நிர்ணயிக்கும் விலையில் கொள்முதல் செய்யப்பட்ட நெல், கழகத்தின் நவீன அரிசி ஆலைகள் மற்றும் தனியார் அரவை முகவர்கள் மூலம் அரவை செய்யப்பட்டு, அதன்மூலம் பெறப்படும் அரிசி அரசு நிர்ணயம் செய்யும் விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. தேவையைக் கருத்தில் கொண்டு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம், குறைந்த விலைப் புள்ளி அடிப்படையில் பிற மாநிலங்களில் இருந்தும் அவசியம் எழும்போது மட்டும் கொள்முதல் செய்யப்படுகிறது.

*2. சர்க்கரை:*

தமிழகத்தின் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான லெவி சர்க்கரையினை மத்திய அரசு மாதந்தோறும் தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களில் இயங்கும் சர்க்கரை ஆலைகளிலிருந்து ஒதுக்கீடு செய்கிறது. அரசு நிர்ணயம் செய்யும் விலையில் அக்குறிப்பிட்ட ஆலைகளிலிருந்து நேரடியாக சர்க்கரை கொள்முதல் செய்யப்படுகிறது. பண்டிகை காலங்களில் மற்றும் சர்க்கரை இருப்பில் அசாதாரண சூழ்நிலை ஏற்படும்போது மட்டும் தேவையான ஈடுகட்டும் வகையில் சர்க்கரைத் துறை ஆணையர் வாயிலாக, லெவி அல்லாத சர்க்கரை அவர்கள் நிர்ணயம் செய்யும் விலையில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்து சர்க்கரை கொள்முதல் செய்யப்பட்டு, பொது விநியோகத் திட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

*3. கோதுமை:*

மத்திய தொகுப்பிலிருந்து விடுவிக்கப்படும் கோதுமை, மாதாந்திர ஒதுக்கீட்டின் அடிப்படையில் மத்திய அரசு நிர்ணயம் செய்யும் விலையில் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இதனை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கோதுமையாகவும், கோதுமைப் பொருட்களாகவும் வழங்கப்படுகிறது. 1—4—2000—லிருந்து மத்திய அரசு கோதுமை வழங்குவதை நிறுத்தியுள்ளது.

*4. சமையல் எண்ணெய்:*

மத்திய அரசின் ஒதுக்கீடு மற்றும் விலை நிர்ணயத்தின் அடிப்படையில் மத்திய அரசு நிறுவனமான ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் பாமாலின் எண்ணெய் கொள்முதல்



செய்யப்படுகிறது. பின்னர் மாநில அரசு நிறுவனமான தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் மூலம் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு அரசினால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், இந்துஸ்தான் தாவர எண்ணெய் கழகத்திடமிருந்து இந்திய அரசு ஒதுக்கீட்டின்படி, பாக்கெட்டில் அடைக்கப்பட்ட பாமாலின் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

*5. மண்ணெண்ணெய்:*

மத்திய அரசு நிர்ணயம் செய்யும் விலையில் ஒதுக்கீடு அளவு மண்ணெண்ணெய் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் முகவர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

*6. சமையல் உப்பு (அயோடைஸ்டு உப்பு):*

சமையல் உப்பு அதாவது அயோடைஸ்டு உப்பு, அரசு நிறுவனமான தமிழ்நாடு உப்பு கழகத்திடமிருந்து தமிழக அரசு நிர்ணயம் செய்துள்ள விலையில். தேவைக்கு ஏற்ப, நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது. முதற்கட்டமாக திருச்சி மாவட்டத்திலும், பின்னர் நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், கரூர், பெரம்பலூர், நாமக்கல் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கும் தற்போது அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு, நியாய விலைக் கடைகள்மூலம் 1 கிலோ, பாக்கெட் ஒன்றுக்கு ரூ. 2.50 வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அட்டவணையிடப்படாத பொருட்களான மைதா மற்றும் ரவை ஆகியன மத்திய அரசின் ஒதுக்கீட்டின்மூலம் இந்திய உணவுக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் கோதுமையின் ஒரு பகுதி தனியார் மாவு உருளை ஆலைகளின் மூலம் அரவை செய்யப்பட்டு, மைதா மற்றும் ரவைக்கு தனித்தனியே அரசாங்கத்தால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்தும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு அடிப்படையில், சம்பந்தப்பட்ட கூட்டுறவுத் துறை மூலம் அவற்றினால் நடத்தப்பெறும் நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

[2000 நவம்பர் 10

70—

## நியாயவிலைக் கடை பயன்படுத்துதல்

**வினா எண் 35136—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், முத்தாளம்பாளையம் ஊராட்சி, செட்டிபாளையத்தில் ரேசன் கடை கட்டப்பட்டும் பயன்படுத்தப்படாமல் பாழடைந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அது பயன்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்டம், முத்தாளம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த செட்டிபாளையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு நியாயவிலைக் கடை மாற்றப்பட்டு 20—4—2000 முதல் செயல்பட்டு வருகிறது.

71—

## நியாயவிலைக் கடை

**வினா எண் 35137—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரம், 29—வது பகுதியில் உள்ள ஆலங்காட்டில் ரேசன் கடை கட்டப்பட்டும், பயன்படுத்தப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பயன்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**



2000 நவம்பர் 10]

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் நகரம், வார்டு எண் 29, ஆலங்காட்டுப் பகுதியில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கு நியாய விலைக் கடை மாற்றப்பட்டு, அக்கடை 826 குடும்ப அட்டைகளுடன் 22—4—2000 முதல் செயல்பட்டு வருகிறது.

72—

## மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 35139—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்கு உட்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு தேவையான அளவு மண்ணெண்ணெய் வழங்கப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தேவையான அளவு மண்ணெண்ணெய் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்கு உட்பட்ட நியாய விலை அங்காடிகளுக்கான மண்ணெண்ணெய் மொத்த தேவை 550 கிலோ லிட்டராகும். மைய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் மண்ணெண்ணெய் அளவைக் கருத்தில்கொண்டு, பவானி வட்டத்திற்கு 540 கிலோ லிட்டர் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இருப்பினும், மொத்த வணிகர்கள் மற்றும் நியாய விலைக் கடை அங்காடிகளின் முந்தைய மாத விற்பனைபோக மீதம் சேமிப்பாக உள்ள இருப்பினைக் கணக்கில் எடுக்கும்போது, மொத்த தேவை அளவான 550 கிலோ லிட்டருக்கும் கூடுதலாக உள்ளது. எனவே, பவானி தொகுதிக்கு உட்பட்ட நியாயவிலை அங்காடிகளுக்குத் தேவையான அளவு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

73—

## அச்சகம்

**வினா எண் 36439—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் கூட்டுறவுத் துறை மூலம் ஒரு அச்சகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதிக்கு தனியே ஒரு கூட்டுறவு அச்சகம் ஏற்படுத்தினால், ஏற்கெனவே பாதிப்புக்குள்ளாகிய சேலம் கூட்டுறவு அச்சகத்தின் செயல்பாடு மேலும் பாதிக்கும் என்பதால், புதியதாக ஓமலூர் தொகுதிக்கு மட்டும் கூட்டுறவு அச்சகம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

74—

## கூட்டுறவு வங்கி

**வினா எண் 38731—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கருவாக்குறிச்சி, செருமங்கலம் (திருவாரூர் மாவட்டம்) ஆகிய கிராமங்களில் உள்ள வேளாண்மை தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோக முறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*



*(ஆ) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திருவாரூர் மாவட்டத்திற்கு ரூ.13.84 கோடி அளவிற்கு திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதில் 16 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கிடங்குடன்கூடிய அலுவலகக் கட்டடம் கட்ட தலா ரூ.5.50 இலட்சம் வீதம் ரூ.88.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் கருவாக்குறிச்சி மற்றும் செருமங்கலம் ஆகிய இரண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் கிடங்குடன் கூடிய அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தும்போது, இரண்டு வங்கிகளுக்கும் 2000—2001 நிதியாண்டில் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டப்படும் வாய்ப்பு உள்ளது.*

75—

## ஓய்வூதியத்தை உயர்த்துதல்

**வினா எண் 19371—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கடந்த 1995—ம் வருடம் நவம்பர் 16—ம் தேதி முதல் இந்தியாவிலுள்ள அனைத்து இ.பி.எப். செலுத்தும் தனியார் மற்றும் பொதுத் துறையில் பணியாற்றும் 58 வயது பூர்த்தியடைந்த தொழிலாளர்களுக்கு இ.பி.எப். பென்ஷன் திட்டத்தின்கீழ் மாத ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குவதற்கு மத்திய அரசினை மாநில அரசு கேட்டுக் கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதிய நிதியை வருடத்திற்கு ஒருமுறை மதிப்பீடு செய்வதற்கு 1995—ம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, ஓய்வூதியம் மற்றுமுள்ள பணப்பயன்களின் அளவினை மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்ய முடிகிறது. அதன் அடிப்படையில் 16—11—1996 உடன் முடிவடைந்த முதலாவது ஆண்டிற்குரிய ஓய்வூதிய நிதியும் மதிப்பீடு செய்யப்பட்டு, 4 சதவீதம் இடைக்கால நிவாரணத் தொகையாக வருங்கால வைப்புநிதி மத்திய குழுமத்தினால் உறுதி செய்யப்பட்டு வழங்கப்பட்டது.*

16—11—1996 முதல் 31—3—1998 முடிய உள்ள இரண்டாவது வருடத்திற்கு வருங்கால வைப்புநிதி ஆணையரால் ஓய்வூதியம் மதிப்பீடு செய்யப்படும் பணி தொடங்கப்பட்டு விட்டது. உறுப்பினர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்களுடைய குடும்ப விவரங்கள் பற்றிய விவரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. இரண்டாவது வருடத்திற்கு எவ்வளவு தொகை இடைக்கால நிவாரணமாக வழங்குவது என்பது பற்றி மத்திய அரசின் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது.

76--

### வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்தோர்

**வினா எண் 19721—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் எவ்வளவு பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 30—4—1998 நாளின்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட வேலையவாய்ப்பகங்களில் படித்து பட்டம் பெற்ற இளைஞர்களின் பதிவு எண்ணிக்கை மொத்தம் 4,73,512 பேர் ஆகும்.

(ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலையளிப்போரால் அறிவிக்கப்படும் காலியிட அறிவிப்புகளின் அடிப்படையில் பதிவுதாரர்கள் பதிவு மூப்பு வரிசைப்படியும், பிற விதிமுறைகளின்படியும் பரிந்துரைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

77—

### ஈவுத்தொகை

**வினா எண் 22693—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாடு கட்டட வாரியங்களுக்குச் செலுத்த வேண்டிய ஈவுத் தொகையை செலுத்தாத அரசு நிறுவனங்கள் எவை?

(ஆ) அதைச் செலுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ)

1) தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம்.

2) தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம்

3) விவசாயத் துறை

4) விவசாய பொறியியல் துறை

5) விவசாய மார்க்கெட்டிங்

6) மீன்வளத் துறை

7) ரூரல் சாலைகள் (நெடுஞ்சாலைகள்)

8) ரூரல் டெவலப்மெண்ட்/தோட்டக்கலை/தோட்டக் கழகம்

9) இந்து சமய அறநிலையத் துறை

10) தீயணைப்புத் துறை

11) இந்திய மருத்துவம்/ஓமியோபதி

12) காவல் துறை

13) சமூக நலத் துறை

14) கூட்டுறவு தணிக்கைத் துறை

15) சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை

[2000 நவம்பர் 10

16) தமிழ்நாடு சுற்றுலாத் துறை

17) தமிழ்நாடு அர்பன் டெவலப்மென்ட் திட்டம் (நெடுஞ்சாலை)

18) நெடுஞ்சாலை மற்றும் ரூரல் ஒர்க்ஸ் (தேசீய நெடுஞ்சாலை—4.5)

19) நெடுஞ்சாலை மற்றும் ரூரல் ஒர்க்ஸ் (நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்)

20) தொழில் மற்றும் வணிகத் துறை

21) மருத்துவ பணிகள் மற்றும் பொது சுகாதாரத் துறை

22) போக்குவரத்துத் துறை

23) அனைத்து அரசு மருத்துவமனைகள்

(ஆ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் அனைத்து அரசுத் துறைகளும், அரசு நிறுவனங்களும் அவர்கள் மேற்கொள்ளும் கட்டுமானப் பணியில் 0.3 சதவீதத்தை சந்தாவாகச் செலுத்த வேண்டும்.

உள்ளாட்சி நிறுவனங்களின் முன் அனுமதி தேவையில்லாத கட்டுமானப் பணிகளுக்கான சந்தா தொகையினை பொறுத்தவரையில், கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும், அரசுத் துறை நிறுவனங்களுக்கும், இவ்வாறு வாரியத்திற்கு சந்தா செலுத்தவேண்டிய சட்ட அவசியத்தை சுட்டிக்காட்டி கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. மேலும், இச்சந்தா தொகையினை தடையில்லாமல் பெறுவதற்கான வழிவகைகளை ஆராயும்பொருட்டு, 31—12—1998 அன்று தொழிலாளர் துறை அரசுச் செயலாளரளவில் சம்பந்தப்பட்ட அனைத்துச் துறைச் செயலாளர்களின் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்காக தனியாக அரசு கணக்கு தலைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, இக்கணக்கில் ஒவ்வொரு அரசுத் துறையும், ஒவ்வொரு ஆண்டிலும் கட்டுமானப் பணிகளுக்காக செலவிடும் மொத்தத் தொகையில் 0.3 சதவீதத்தை அத்துறையின் கணக்கிலிருந்து தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்காக திறக்கப்படும் கணக்குத் தலைப்பிற்கு நேரடியாக மாற்றல் மூலம் செலுத்தலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

78—

## விசைத்தறி நெசவுக் கூடங்கள்

**வினா எண் 37129—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஈரோடு மாவட்டத்தில் விசைத்தறி நெசவுக் கூடங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) இதில் ஒன்றியம் வாரியாக விவரம் என்ன?

(இ) பதிவு செய்யப்பட்டுள்ள தறிகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) 1995 ஆம் ஆண்டில் நடைபெற்ற விசைத்தறிகள் கணக்கெடுப்பின்படி ஈரோடு மாவட்டத்திலுள்ள விசைத்தறிக் கூடங்கள் எண்ணிக்கை 6867 ஆகும்.

(ஆ) ஒன்றியம் வாரியாக விசைத்தறி கூடங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1) விஜயமங்கலம் | — | 2189 |
| 2) அவல் பூந்துறை | — | 166 |
| 3) வெள்ளக்கோவில் | — | 1248 |
| 4) குண்டடம் | — | 11 |
| 5) காங்கேயம் | — | 224 |
| 6) தாராபுரம் | — | 32 |
| 7) மூலனூர் | — | 208 |
| 8) ஈரோடு | — | 1012 |
| 9) அந்தியூர் | — | 366 |

| | | | |
|---|---|---|---|
| 10) | பவானி | — | 198 |
| 11) | சிவகிரி | — | 269 |
| 12) | தாண்டாம்பாளையம் | — | 56 |
| 13) | சத்தியமங்கலம் | — | 216 |
| 14) | சென்னிமலை | — | 672 |
| | மொத்தம் | | 6867 |

(இ) பதிவு செய்யப்பட்டுள்ள விசைத்தறிகள் 4604 ஆகும்.

**79–**

### கூட்டுறவு நூற்பாலை

**வினா எண் 37254–திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் கூட்டுறவு நூற்பாலையை இலாபகரமாக செயல்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை–**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலைக்கு, புனரமைப்பு திட்டத்தின்கீழ், பின்வரும் நிதி மற்றும் பிற சலுகைகளை அரசு அளித்துள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| (அ) | அரசு வழிவகை கடன் நிலுவையை பங்கு மூலதனமாக மாற்றுதல் | 100.00 |
| (ஆ) | விளிம்பு நிதி | 50.00 |
| (இ) | புதிய காசுக் கடன் | 250.00 |



| | | |
|---|---|---|
| (ஈ) | காசுக் கடன் நிலுவையை நீண்ட கால கடனாக மாற்றுதல் | 300.00 |
| (உ) | தன் விருப்ப ஓய்வுத் திட்டம் | 20.00 |

(2) இந்த கூட்டுறவு நூற்பாலையை நிவாரணத்திற்குட்பட்ட நிறுவனமாக அரசு அறிவித்துள்ளது. இதனால் இந்நூற்பாலையிடமிருந்து சேர வேண்டிய தொகைக்கு யாரும் நெருக்குதல் செய்ய இயலாது.

(3) வணிக வரி நிலுவையை வசூலிக்க கடும் நடவடிக்கைகள் எடுப்பதை அரசு 1—1—2000 முதல் ஓராண்டிற்கு தள்ளி வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

(4) அதிகப்படியான தொழிலாளர்களை குறைத்து செலவைக் குறைக்க சேலம் கூட்டுறவு நூற்பாலையில் தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தினை அமுல் செய்து, 179 தொழிலாளர்கள் / பணியாளர்கள் அனைத்து நிதிப் பயன்களும் வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**80–**

### வசூல்

**வினா எண் 6023–டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் நிலுவை கேட்பு வசூல் சரியாக செயல்படாத காரணத்தால் வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் இழப்பினை சீரமைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

அறிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

பொதுவாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அனைத்துக் கோட்டங்களின் ஒரு மாத அதாவது, மார்ச் 2000—ல் மொத்த நிகர நிலுவை ரூ.2326.56 இலட்சங்களாகும். அதில் மார்ச் 2000 மாதத்தில்

மாதத் தவணைத் தொகையில் ரூ.693.42 இலட்சங்களும், பிற இனங்களில் ரூ.2244.20 இலட்சங்களும், ஆக மொத்தம் ரூ.2937.62 இலட்சங்களும் வசூலாகி உள்ளது. இதில் மார்ச் 2000 மாத நடப்புக் கேட்பு ரூ.753.59 இலட்சங்களாகும். மார்ச் மாத இறுதியில் மொத்த நிலுவையாக ரூ.1991.47 இலட்சங்கள் உள்ளது. இத்தொகையானது நடப்பு கேட்பில் சுமார் இரண்டரை மடங்கு உள்ளது. பொதுவாக, வாரிய சட்டவிதிகளின்படி, இரண்டு மாத தவணைத் தொகைகள் நிலுவை வைத்துள்ள ஒதுக்கீடுதாரர்கள் மீது வாரியம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாத நிலையில் உள்ளது. இரண்டு மாதத்திற்கு அதிகம் நிலுவை உள்ள ஒதுக்கீடுதாரர்களுக்கு வாரிய சட்ட விதிகளின்படி தாக்கீதுகள் அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கேட்பு வசூல் மற்றும் நிலுவையினைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாதமும், வழக்கமாக மேலாண்மை இயக்குநர் அவர்களால் அனைத்துக் கோட்ட் செயற்பொறியாளர்கள், ஒதுக்கீடு சேவை மேலாளர்கள் மற்றும் உதவி வருவாய் அலுவலர்கள் ஆகியோருடன் வருவாய் வசூல் குறித்து ஆய்வு செய்து, அக்கூட்டத்தில் நிலுவை அதிகமாக உள்ள கோட்டங்களில் வருவாய் வசூலை அதிகரிக்க தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொரு கோட்டங்களும் தலைமை வருவாய் அலுவலர், வருவாய் அலுவலர் ஆகியோரை அனுப்பி ஆய்வுகள் மேற்கொண்டு வருவாய் வசூலை மேம்படுத்த தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

1998—99 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையிலும் ரூ.20,784.61 இலட்சங்கள் வசூலாகி இருந்தது. ஆனால், 1999—2000 ஆண்டு மார்ச் வரையிலும் ரூ. 22,237.12 இலட்சங்கள் வசூலாகி உள்ளது. எனவே, வருவாய் வசூலைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாதமும் அதிகரித்துள்ளது. வாரியம் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் விளைவாக சென்ற ஆண்டை விட நடப்பு ஆண்டில் அதாவது 1999—2000—ல் ரூ.1452.51 இலட்சங்கள் அதிகமாக வசூல் செய்து வாரியம் சாதனை படைத்துள்ளது. மேலும், பராக்காசாலையில் கட்டப்பட்டுள்ள 238 உயர் வருவாய் குடியிருப்புகள் வருமான வரித் துறையினருக்கு மொத்த விற்பனை செய்யப்பட்டதன் விளைவாக 31—3—2000 அன்று ரூ.24.147 கோடியும், மொகப்பேர் மேற்கு திட்டப் பகுதியில் மத்திய கலால் துறையினருக்கு வீடுகள் விற்பனை செய்யப்பட்ட வகையில் ரூ.7.8800 கோடியும் வாரியத்தினால் பெறப்பட்டது. அத்தொகை மொத்தம் ரூ.32.027 கோடியும் ஏப்ரல் 2000 மாதக் கணக்கில் வரவு வைக்கப்படும்.



நிலுவை வைத்துள்ள ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து அத்தொகையினை வாரியம் வசூல் செய்யும்பொழுது தவணைத் தொகையுடன் அபராத வட்டியும் சேர்த்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஆகையால் கேட்பு மற்றும் வசூல் நிலுவையினைப் பொறுத்தவரையில் வாரியத்திற்கு எந்த வகையிலும் இழப்பு ஏற்பட சாத்தியக்கூறுகள் கிடையாது.

**81--**

## சமையற் கூடம்

**வினா எண் 20348—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சோழகன்குடிகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவு மாணவர்கட்கு சமையல் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சோழகன்குடிகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே உள்ள சமையல் கூடம் பழுது நீக்கம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**82—**

## உற்பத்தி வழிமுறைகள்

**வினா எண் 29052—திரு. கே. ரவிஅருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாறிவரும் வர்த்தகச் சூழலுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தற்காலத்திற்கு ஏற்றவாறு உற்பத்தி வழிமுறைகளையும் தொழில்நுட்பங்களையும் கையாள டான்சி நிறுவனம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

நவீன இயந்திரங்களைப் பொருத்தி, நவீன தொழில் நுட்பங்களைக் கையாள்வதன்மூலம் உற்பத்தி வழிமுறைகளை மாற்றியமைக்கத் தேவையான மூலதன வசதி டான்சி நிறுவனத்திடமில்லை. எனினும் முதலீடு தேவையில்லாத இனங்களில் நவீன தொழில் நுட்ப முறைகள் மூலம் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**83—**

**சத்துணவு மையம்**

**வினா எண் 29304—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திப்பன் விடுதி, வெங்கரை, இடையன்காடு, கோட்டைக்காடு உயர்நிலைப்பள்ளி (பாலர் பள்ளி) ஆகிய இடங்களில் புதிதாக சத்துணவு மையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், திப்பன் விடுதி, வெங்கரை, இடையன்காடு, கோட்டைக்காடு உயர்நிலைப்பள்ளி ஆகிய கிராமங்களில் தற்சமயம் பள்ளி சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. புதிய பாலர் பள்ளி மையங்கள் அங்கு தொடங்க தற்போது சாத்தியம் இல்லை.

**84—**

**சத்துணவுக்கூடம் செப்பனிடல்**

**வினா எண் 32015/அ—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வெங்கரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சத்துணவுக்கூடத்தைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், வெங்கரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி சத்துணவு மையம் ரூ. 7,000 மதிப்பீட்டில் பழுதுபார்க்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

**85—**

**சமையற்கூடக் கட்டடம்**

**வினா எண் 32108—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வெங்கரை கோட்டைக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சத்துணவிற்கு சமையற்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

வெங்கரை கோட்டைக்காடு உயர்நிலைப்பள்ளியில் ஏற்கெனவே உள்ள சத்துணவு சமையற்கூடம் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பழுதுபார்க்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது.

**86—**

**சத்துணவு சமையற்கூடம்**

**வினா எண் 32140—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

தஞ்சாவூர் மாவட்டம், விளார் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் சத்துணவிற்கு என தனியாக கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

விளார் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி சத்துணவு சமையற்கூடம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

**87—**

### சமையற் கூடம்

**வினா எண் 32145—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், வெங்கரைக் கோட்டைக்காடு, சின்னமங்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளுக்கு சத்துணவிற்கு சமையற்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், வெங்கரைக்கோட்டைக்காடு, சின்னமங்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே உள்ள பழுதடைந்த சமையற்கூடம் ரூ.7700/— மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

**88—**

### சத்துணவிற்கு சமையற் கூடம்

**வினா எண் 32158—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவிற்கு சமையற்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி சத்துணவு மைய சமையற்கூடம் ரூ.40,000/— மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒன்றியக் குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

**89-**

### சமையற் கூடம் கட்டுதல்

**வினா எண் 32172—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கல்விராயன்பேட்டை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவிற்கென சமையற்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

கல்விராயன்பேட்டை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி சத்துணவு மைய சமையற்கூடம் நல்ல நிலையில் உள்ளது.

**90—**

### சத்துணவுக் கூடம் செப்பனிடல்

**வினா எண் 32581—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், நெம்மேலி திப்பியக்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் உள்ள சத்துணவுக் கூடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், நெம்மேலி திப்பியக்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி சத்துணவு மைய சமையற் கூடம் ரூ.3,500/— மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

**91—**

## போலி பத்திரச் சான்றிதழ்

**வினா எண் 37594—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகங்களில் போலி பத்திரச் சான்றிதழ் பயன்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சில சார்பதிவாளர் அலுவலகங்களில் பதிவான சில ஆவணங்களில் போலி முத்திரைத் தாட்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பதிவு அலுவலர்கள் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். துறை அலுவலர்கள் மற்றும் துறையின் சிறப்பு விழிப்புக் குழுவினரால் முத்திரைத்தாள் விற்பனையிடங்களில் திடீராய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாதாந்திர சீராய்வுக் கூட்டத்தின்போது, இப்பொருள் தொடர்பாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. நாளிதழ்களின் வாயிலாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ.1000/— மற்றும் ரூ.5000/— மதிப்புள்ள முத்திரைத் தாட்களில் வரிசை எண் இடவும், முத்திரைத் தாட்கள் வழங்கப்படும்போது, கருவூலம் முத்திரையிட்டு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.





**92—**

## தொழிற் கூடங்கள் கட்டுமானப் பணி

**வினா எண் 12969—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்திற்கு அருகில் 'தாட்கோ' மூலம் அமைக்கப்படும் தொழிற் கூடங்களின் கட்டுமானப் பணி முடிவடைந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை தொழில் முதலீட்டாளர்கள் ஒதுக்கீடு கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தொழிற் கூடங்கள் கட்டி முடித்து தயார் நிலையில் உள்ளது.

(ஆ) 186 பேர் ஒதுக்கீடு கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு 18—2—2000—ல் நேர்காணல் நடைபெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**93—**

## மாணவர் விடுதி அமைத்தல்

**வினா எண் 13560—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள செவலப்புரையில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

மாநில திட்டக் குழு இத்துறையின் திட்டங்களை ஆய்வு செய்தபோது, புதிய விடுதிகள் ஏதும் திறக்கத் தேவையில்லை என்றும், ஏற்கெனவே உள்ள விடுதிகளை நன்கு பராமரிக்குமாறும் கூறியுள்ளது. எனவே, மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள செவலப்புரையில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி அமைக்க இயலாது.

94—

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 22097—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் முத்தாணம்பாளையம் ஊராட்சி/அமராவதிபாளையம் ஆதிதிராவிடர் காலனியில் போதுமான அடிப்படை வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை உருவாக்கித் தர அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முத்தாம்பாளையம் ஊராட்சி, அமராவதிபாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு அடிப்படை வசதிகள் உள்ளன.

(ஆ) மேலும் தேவைகளுக்கு ஏற்ப அடிப்படை வசதிகள் செய்து தர அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.



2000 நவம்பர் 10]

95—

## கடனுதவிகள்

**வினா எண் 27026—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் 1998—99 ஆம் ஆண்டில் தாட்கோவின் மூலம் விவசாயம் சார்ந்த தொழில் செய்யவும், சிறுதொழில் செய்யவும் மானியத்துடன் கூடிய கடனுதவிகள் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதியில் 1998—99 ஆம் ஆண்டில் தாட்கோவின் மூலம் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு மானியக் கோரிக்கைகள் எதுவும் பெறப்படாததால் மானியக் கடனுதவிகள் வழங்கப்படவில்லை. சிறுதொழில் செய்ய தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் விறகு கடை வைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி ஒரு நபருக்கு வழங்கப்பட்டது. தாட்கோ மானியம் ரூ.15,000/—ம் மற்றும் விளிம்புத் தொகை ரூ.10,000/—ம் வழங்கப்பட்டது.

96—

## விசை உழவு இயந்திரம்

**வினா எண் 33072—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1999 அக்டோபர் மாதம் வரை ஆதிதிராவிடர்கட்கு விசை உழவு இயந்திரம் வழங்கும் புதிய திட்டத்தில் எத்தனை பேருக்கு உழவு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) இதில் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு எவ்வளவு வழங்கப்பட்டது?

[2000 நவம்பர் 10

**விடை —**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 1999 அக்டோபர் மாதம் வரை ஆதிதிராவிடர்கட்கு விசை உழவு இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் 13 பேருக்கு உழவு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் ரூ.2.00 இலட்சம் மான்யம் மற்றும் ரூ.1.589 இலட்சம் விளிம்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இதில் மகளிரின் சுய உதவிக் குழுவிற்கு கடனுதவி வழங்கப்படவில்லை.

**97—**

## கடைகள் ஒதுக்கீடு

**வினா எண் 33413—டாக்டர் அ. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ மூலம் கட்டப்படும் கடைகள் ஒதுக்கீடு செய்வதில் தற்போது உள்ள நிலையில் மாற்றம் கொண்டு வரும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை —**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாட்கோ மூலம் கட்டப்படும் கடைகள் ஒதுக்கீடு செய்வதில் தற்போது உள்ள நிலையில் மாற்றம் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**98—**

## சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 34616—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் ஊராட்சி, பொடாரம்பாளையம் ஆதிதிராவிடக் காலனியில் ஒரு சமுதாயக்கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**விடை —**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் ஊராட்சி, பொடாரம்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**99—**

## மீன் வளர்த்தல்

**வினா எண் 28226—திரு. டி. மணி:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்வற்றாத குளங்களில் எத்தனை குளங்களில் ஊராட்சிகளால் மீன் வளர்க்கப்படுகிறது?

(ஆ) இந்த நிதியாண்டில் அரசுக்கு வருவாய் எவ்வளவு?

**விடை —**

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீனளத் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 709 பாசனக் குளங்களில் மீன்வளர்ப்பிற்குத் தகுதியான குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மீன்வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலமாக தற்பொழுது 273 குளங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்ட மீன்வள

[2000 நவம்பர் 10

மேம்பாட்டு முகமையின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள மேம்பலூரிலுள்ள வேம்பலூர்குளம் (அகஸ்தீஸ்வரம் தாலுகா) மற்றும் தாழக்குடியிலுள்ள வீராகேரளப்பநேரி குளம் ஆகிய இரண்டு குளங்களில் இம்முகமை நேரடியாக மீன்வளர்ப்பு மேற்கொள்கிறது.

(ஆ) மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையால் ரூ.1,68,328/— குத்தகை தொகை வசூல் செய்யப்பட்டு வருவாய்த் துறைக்கு செலுத்தப்படுகிறது.

100--

### இலவச வீடு

**வினா எண் 33577—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், அணைக்கரை உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீனளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000—2001 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் உள்நாட்டு மீனவர்களுக்கு இவ்வாண்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 1000 வீடுகள் கட்டித் தரப்படும் என அறிவித்துள்ளதையொட்டி, உள்நாட்டு மீனவர்களுக்கு 2000—2001 ஆம் நிதியாண்டில் இலவசமாக 1000 வீடுகள் ரூ.320.00 இலட்சம் செலவில் (வீடு ஒன்றுக்கு ரூ.32,000/— வீதம்) சில விதிமுறைகளுக்குட்பட்டு கட்டி வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், அணைக்கரை உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.



2000 நவம்பர் 10]

## எட்டாம் பட்டியல்

1—

### ஆசிரியர் தேர்வு வாரியம்

**வினா 24135—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரி ஆசிரியர், மொழி ஆசிரியர், பட்ட மேற்படிப்பு ஆசிரியர்களும் தேர்வு செய்யப்படுவது தற்போதுள்ள தேர்வுக் குழு போதுமானது என அரசு கருதுகின்றதா?

(ஆ) இதில் ஏதாவது மாறுதல் செய்ய அரசு எண்ணியுள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) போதுமானது என அரசு கருதுகிறது.

(ஆ) ஒவ்வோர் ஆண்டும் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் பட்டதாரி ஆசிரியர், மொழி ஆசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு பணி உரிய காலத்தில் முடிக்கப்படுகிறது.

2—

### பணி வழங்குதல்

**வினா 24654— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறிவொளி தொடர் கல்வித் திட்டம் நிறைவுற்ற மாவட்டங்களில் வளர்கல்வித் திட்டம் தொடங்கி பணியிழந்துள்ளவர்களுக்குப் பணி வழங்க அரசு முன்வருமா?

---

* உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அறிவொளி தொடர் கல்வித் திட்டம் ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டிய தற்காலிகத் திட்டம். இத்திட்டத்தில் யாரும் வேலைவாய்ப்பு என்னும் அடிப்படையில் பணியமர்த்தப்படுவதில்லை. தொண்டுள்ளம் கொண்டவர்கள் மட்டும் இவ்வியக்கத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு மதிப்பூதியம் மட்டுமே வழங்கப்பட்டது. இயக்கம் முடிவுற்றபின் அவரவர் தம் சொந்தப் பணிக்குத் திரும்பிவிட வேண்டும் என்பதுதான் அடிப்படை ஆகவே, அவர்களுக்குத் தொடர்ந்து பணி வழங்குவது திட்டத்தின் நோக்கமல்ல. இவர்களைப் பணியிழந்தவர்கள் என்று கருத இயலாது. தற்போது 9 மாவட்டங்களில் செயல்பாட்டிலுள்ள வளர்கல்வித் திட்டத்தில் ஊரக வளர்ச்சியில் பல்வேறு பணிகளுக்குத் தொடர்புடைய மக்கள் நலப் பணியாளர்கள் பொருத்தமானவர்கள் என்று நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே மீண்டும் இவர்களுக்கு வளர்கல்வி திட்டத்தில் பொறுப்பு வழங்க இயலாது.

அறிவொளி இயக்கத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வந்தது:

1. உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர்- ரூ.800 முதல் ரூ. 1,200 வரை.

2. ஒன்றியத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்- ரூ. 1,500.

3. மத்தியத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்- ரூ. 2,500.

3—

**குடிநீர்த் தொட்டி**

**வினா 32184- திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கருக்காடிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆழ்க்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கருக்காடிப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆழ்க்குழாய்க் கிணறு அமைத்து மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைத்துத்தர 2000-2001-ஆம் ஆண்டில் அரசின் நிதி ஒதுக்கீடு இல்லாததால் சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்க, சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினரின் இசைவு பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர் இசைவு பெறப்படின், இப்பள்ளிக்கு ஆழ்க்குழாய் கிணறு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

4—

**குடிநீர் வசதி**

**வினா 33593—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஒரு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டுவது சார்பாக, இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை எனவே சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற உறுப்பினரிடம் கோரப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினரின் இசைவு பெறப்படின், இப்பள்ளிக்கு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டித்தரப்படும்.

[2000 நவம்பர் 10

5—

### வகுப்பறைகள்

**வினா 35017—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பெருமாநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் இன்னும் எத்தனை வகுப்பறைகள் தேவைப்படுகின்றன?

(ஆ) அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், பெருமாநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மேலும் எட்டு வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தருவது சார்பாக இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் ஆவன செய்யக் கோரப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினரின் இசைவு பெறப்படின், இப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

6—

### கட்டட வசதி

**வினா 24024—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் அரசுக் கட்டடங்கள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்டிக் கொடுக்க ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 70 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இவற்றுள் 34 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே



2000 நவம்பர் 10]

அரசு கட்டடத்தில் இயங்குகின்றன. 1996-97 ஆம் ஆண்டு திட்டத்தில் 12 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 1997-98 ஆம் ஆண்டு திட்டத்தில் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அரசு கட்டடம் கட்டித்தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் உள்ள எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டட வசதிகள் போதுமானதாக உள்ளன.

7—

### அவசரக்கால ஊர்தி

**வினா 24025—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1998-வது நிதியாண்டில் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆம்புலன்ஸ் வண்டி இல்லாத மருத்துவமனை, சுகாதார நிலையங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1998 ஆவது நிதியாண்டில் 24 மணிநேர ஆரம்ப சுகாதார நிலையங்களில் 26 சுகாதார நிலையங்களுக்கு அவசரக்கால ஊர்திகள் வழங்கப்படவில்லை. மேலும் 30-க்கும் குறைவான படுக்கை வசதி கொண்ட 27 தாலுகா மருத்துவமனைகளுக்கும் 38 தாலுகா அல்லது மருத்துவமனைகளுக்கும் அவசரக்கால ஊர்தி வழங்கப்படவில்லை.

8—

### பெயர் சூட்டுதல்

**வினா 25787—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி நகரில் கட்டப்பட்டுள்ள அரசுப் பொது மருத்துவமனைக்கு முன்னாள் அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்களின் பெயர் சூட்டப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

**9—**

**பணியாளர்கள் நியமித்தல்**

**வினா 33592—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வாரியத்தில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் பொதுமக்களின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் பொதுமக்களின் பணிகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

(ஆ) மின் வாரியப் பணி விதிகளின்படி காலிப்பணியிடங்கள் உள்முகத் தேர்வு மூலமும் மற்றும் வேலை வாய்ப்பகம் மூலமாக நேரடித் தேர்வின் மூலமும் தேவைக்கேற்ப, கொள்கையின் அடிப்படையில், அவ்வப்போது நிரப்பப்படுகின்றன.

**10—**

**சுற்றுச் சுவர் அமைத்தல்**

**வினா 34340—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் அரியப்புரத்தில் உள்ள ஆரம்ப துணைச் சுகாதார நிலையத்தைச் சுற்றி பாதுகாப்புச் சுற்றுச் சுவர் இல்லாததால் கால்நடைப் பிராணிகள் சுகாதார நிலையத்தை ஆக்கிரமிப்பு செய்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப கட்டமாக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் அரசுக் கட்டடத்தில் செயல்படவேண்டும் என்ற நோக்கத்தில், 1996-97 ஆம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 1997-98 ஆம் ஆண்டில், 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடும் நிர்வாக ஒப்புதலும் அளித்துள்ளது. ஆனால் சுற்றுச் சுவர் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. நிதி ஆதாரத்தைப் பொறுத்து, அரியப்புரம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் தேவைகளை ஆய்ந்து தக்க நடவடிக்கை சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்படும் பொழுது, எடுக்கப்படும்.

**11—**

**புதிய ஊர்தி**

**வினா 35610—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி கழிவு செய்யப்பட்ட பின்பு புதிய ஊர்தி வழங்கப்படாமல் இருப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய ஊர்தி எப்பொழுது வழங்கப்ப்டும்?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இம்மருத்துவமனையிலுள்ள 2 ஆம்புலன்ஸ் மற்றும் ஒரு அமரர் ஊர்திகளை முதிரா நிலையில் கழிவு செய்ய 30-3-2000 இல் அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) கழிவு செய்யப்பட்ட வாகனங்களில் 1 ஆம்புலன்ஸ் மற்றும் 1 அமரர் ஊர்திக்கு மாற்றுப் புதிய வாகனங்கள் வாங்க செலவினங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஊர்திகள் எதிர்பார்க்கப்படுகிறது.

12—

**வி.சி.பி. நிறுவுதல்**

**வினா 36219—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி 66/11 உப மின் நிலையத்தில் இயங்கும் பழைய 11 கி.வோ. ஓ.சி.பி.-யை மாற்றி வி.சி.பி. அமைக்க அனுமதி பெறப்பட்டிருந்தும் வி.சி.பி. நிறுவிடத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படவில்லை என்பதையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) திரவிய நகர் பீடருக்கு வி.சி.பி. நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா? எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி 66/11 உபமின் நிலையத்திலுள்ள நான்கு 11 கே.வி. மின்னூட்டிகளில் கடையநல்லூர் மின்னூட்டில் வி.சி.பி. பொருத்தப்பட்டு இயங்கி வருகின்றது. டவுன் வி.சி.பி. அமைக்கும் பணி விரைவில் முடித்து இயக்கி வைக்கப்படும். ரூரல் மின்னூட்டியில் அமைக்க வி.சி.பி. வாங்கப்பட்டுள்ளது. ஆனால் கரண்ட் டிரான்ஸ்பார்மர்கள் இல்லை. அவை கிடைத்தவுடன் பணி முடிக்கப்படும்.



2000 நவம்பர் 10]

(இ) திரவிய நகர் மின்னூட்டிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெற்று பணி விரைவில் முடிக்கப்படும்.

13—

**மேம்பாடு கட்டணம்**

**வினா 36255—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் இணைப்பு நுகர்வோரிடம் பெறப்படும் டெவலப்மெண்ட் கட்டணம் மின் இணைப்புதாரர்களுக்கு திரும்பச் செலுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மின் இணைப்பு நுகர்வோரிடம் பெறப்படும் மேம்பாடு கட்டணம் மின் இணைப்புதாரர்களுக்குத் திரும்ப வழங்கப்படுவது இல்லை. இக்கட்டணம் மின் வழங்கலுக்கான அடிப்படைக் கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கான செலவினத்தை ஈடு செய்யும் பொருட்டு பெறப்படுவதால் இது திரும்பக் கொடுப்பதற்கல்ல.

14—

**வைப்புத் தொகை**

**வினா 36257—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின் இணைப்புப் பெறுவதற்காகச் செலுத்தப்படும் வைப்புத் தொகையையும் அதன் மூலம் வரப்பெற்ற வட்டித் தொகையையும் ஒவ்வோர் ஆண்டு இறுதியிலும் சந்தாதாரர்களுக்குத் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மின் நுகர்வோர்களிடமிருந்து மின் இணைப்பு வழங்கும் நேரத்தில் கட்டண விதிப்படி துவக்க வைப்புத் தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

மின் நுகர்வோர்கள் முந்தைய 12 மாத மின் இணைப்புக் கட்டணங்களின் சராசரியில் 3 மடங்கு தொகைக்கு இணையாக மின் தூய்ப்பு வைப்புத் தொகை வைத்திருக்க வேண்டும். தாழ்வு அழுத்த மின் இணைப்பு பெற்ற நுகர்வோர் போதிய மின் நுகர்வு வைப்புத் தொகை வைத்துள்ளனரா என்பதை இரண்டு ஆண்டுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்து ஆண்டு இறுதியிலுள்ள தொகைக்கு வட்டி கணக்கிட்டு வைப்புத் தொகையுடன் கட்டப்படுகிறது. இவ்விவரம் நுகர்வோருக்குத் தெரிவிக்கப்பட்டு நுகர்வோர் செலுத்தவேண்டிய மீதி வைப்புத் தொகை இருப்பின் செலுத்தக் கோரப்படுகிறது.

15—

## மின் உற்பத்தி

**வினா 36259—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆண்டு தமிழகத்தில் மொத்தம் எத்தனை மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது?

(ஆ) நடப்பு ஆண்டில் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த ஆண்டு தமிழக மின்சார வாரியம் 38313 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்துள்ளது மற்றும் மின் உச்சத் தேவை 5659 மெகாவாட்டுகள் ஆகும். அதன் விவரங்கள் பின்வருமாறு:—

| வரிசை எண் | நிலையம் | மின் உற்பத்தியின் அளவு மி.யூ. | எட்டிய மின் உச்சத் தேவை மெ.வா. |
|---|---|---|---|
| 1 | புனல் மின் நிலையங்கள் | 4444 | 1128 |
| 2 | அனல் மின் நிலையங்கள் | 18861 | 2615 |
| 3 | வாயு மின் உற்பத்தி நிலையங்கள் | 217 | 94 |
| 4 | காற்றாலை நிலையங்கள் | 27 | .. |
| 5 | மத்திய தொகுப்பு, பிற மாநிலங்கள் பிராந்தியங்கள் மற்றும் தனியார் நிலையங்களில் இருந்து பெறப்பட்ட மின் அளவு .. | 14764 | 1822 |
| | மொத்தம் | **38313** | **5659** |

(ஆ) 5 சதவீதம் வளர்ச்சி விகிதத்தில் தமிழகத்தின் மின் தேவை 2000-2001-க்கு 40229 மி.யூ. ஆகும். மேலும் மின் உச்சத் தேவை 6509 மெகாவாட்டாக இருக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக மின் வாரியத்தின் புனல், அனல் மற்றும் வாயு காற்றாலைகளிலிருந்து 24996 மி.யூ. மின்சாரம் உற்பத்தி செய்யவும் 4089

[2000 நவம்பர் 10

மெகாவாட்டுகள் மின் உச்சத் தேவையிலும் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு:—

| வரிசை எண். | நிலையங்கள் | திட்டமிடப் பட்டுள்ள உற்பத்தி யின் அளவு மி.யூ. | திட்டமிடப் பட்டுள்ள உற்பத்தி யின் அளவு மெ.வா. |
|---|---|---|---|
| 1 | புனல் மின் நிலையங்கள் | 4,974 | 1,285 |
| 2 | அனல் மின் நிலையங்கள் | 19,741 | 2,710 |
| 3 | வாயு மின் நிலையங்கள் | 250 | 94 |
| 4 | காற்றாலை நிலையங்கள் | 31 | .. |
| | மொத்தம் .. | 2,4996 | 4,089 |

ஆகவே மத்திய தொகுப்பு, பிற பிராந்தியங்கள், பிற மாநிலங்கள் மற்றும் தனியார் மின் நிலையங்களிலிருந்து 152.33 மில்லியன் யூனிட் மின்சாரம் மின் உச்சத் தேவையில் 6,509 மெகாவாட் எட்டுவதற்கு 2420 மெகாவாட்டுகள் மின்சாரத்தில் பெற வேண்டிருக்கும்.

16—

## துணை மின் நிலையங்கள்

**வினா 36478—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் கடந்த நான்கு ஆண்டுகளில் புதிதாக எத்தனை துணை மின் நிலையங்கள் எந்த ஊரில் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) புதிதாக கட்ட உள்ள மின் நிலையங்கள் எந்த ஊரில் கட்டப்படவுள்ளன?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா.வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் சாரத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் கடந்த நான்கு ஆண்டுகளில் துணை மின் நிலையம் எதுவும் நிறுவப்படவில்லை.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஊரணிபுரத்தில் ஒரு 33 கே.வி. ஆளில்லா துணை மின் நிலையம் ரூ.88.12 இலட்சம் செலவில் அமைக்க வாரியம் ஒன்பதாவது பெருந்திட்டத்தில் நிலை ஆணை எண் 116, 27-6-1998-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. அந்த துணை மின் நிலையம் நிறுவுவதற்கு ஆயத்தமாக (2000-2001), ஆண்டிற்கான (T and D) திட்டத்தில் பகுதிப்பணியாக சேர்க்கப்பட்டு ஆரம்பக்கட்ட செலவினங்கட்கு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17—

## நவீனப்படுத்துதல்

**வினா 36945—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் அரசினர் மருத்துவமனையிலுள்ள பிரேதப் பரிசோதனைக் கூடத்தை நடப்பாண்டில் நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

18—

## இலவச மின் விளக்கு

**வினா 37159—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் இலவச மின் விளக்கு வேண்டி எத்தனை விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன?

(ஆ) அவர்களுக்கு எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் இலவச மின் விளக்கு வேண்டி கீழ்க்கண்ட விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன:

| | |
|---|---|
| சேலம் மின் பகிர்மான வட்டம் | 214 |
| மேட்டூர் மின் பகிர்மான வட்டம் | 237 |
| | 451 |

(ஆ) நடப்பு ஆண்டில் நிலுவையில் உள்ள விண்ணப்பதாரர்களில் தகுதியுள்ள சேலம் மின் பகிர்மான வட்டத்தில் 73 எண்ணிக்கை குடிசைகளுக்கும், மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில் 150 எண்ணிக்கை குடிசைகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்படும். மீதமுள்ள குடிசை வீடுகளுக்கு எதிர் வரும் ஆண்டுகளில் ஒதுக்கப்படும் குறியீட்டிற்கு ஏற்ப மின் இணைப்பு வழங்கப்படும்.

19—

### தெருவிளக்கு வசதி

**வினா 37256—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், நடுப்பட்டி ஊராட்சி, காக்காயன்காட்டிலிருந்து பெருமாள்கோயில் வரை ஒருவிளக்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நடுப்பட்டி ஊராட்சி, காக்காயன்காட்டிலிருந்து பெருமாள்கோயில் வரை தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க வேண்டி தலைவர், நடுப்பட்டி ஊராட்சி அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ரூ.12,430-ஐ செலுத்துமாறு 26-6-2000 அன்று தலைவர், நடுப்பட்டி ஊராட்சி அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டவுடன் தெரு விளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20—

### சித்த வைத்தியப் பிரிவு

**வினா 37443—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் சித்த வைத்தியப் பிரிவில் கடந்த 1998-99 ஆம் ஆண்டில் சிகிச்சை பெற்ற புற நோயாளிகள் எத்தனை பேர்? மருந்து செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனை சித்த வைத்தியப் பிரிவில் 1998-99 ஆம் ஆண்டில் சிகிச்சை பெற்ற புறநோயாளிகள் 12,396 பேர்கள் ஆகும். மருந்து செலவு ரூ.28,959.

21—

## எரிசக்தி உற்பத்தி

**வினா 37956—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முறைசாரா எரிசக்தி உற்பத்தி மூலம் தமிழ் நாட்டிற்கு கடந்த 1999-2000-ல் கிடைத்த மின்சாரத்தின் அளவு எவ்வளவு என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அதை அதிகப்படுத்த அரசு எந்தவிதமான முயற்சிகள் மேற்கொண்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் பல்வேறு மரபுசாரா எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மின்சாரத்தின் அளவு கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

| | அரசுத் துறை | கூட்டுற வுத்துறை | தனியார் துறை | மொத்தம். |
|---|---|---|---|---|
| | (மில்லின் யூனிட் டுகள்) | | | |
| காற்றாலை | 27228 | - | 1129365 | 1156593 |
| உயர்சக்தி | - | 27.171 | 384229 | 405400 |
| சூரிய சக்தி | 0.010 | - | 0.035 | 0.045 |
| மொத்தம் | 27238 | 21.171 | 1513629 | 1562.038 |

(ஆ) காற்றின்மூலம் மின்சக்தி உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு காற்று அதிகமாக வீசும் இடங்களைக் கண்டறிந்து வருகின்றது. இதுவரை 39 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் 3 இடங்களில் காற்று விசை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் அரசும் மின்சார வாரியமும் தனியார் துறை முதலீட்டை ஈர்க்கும் வகையில் கீழ்க்கண்ட கொள்கைகளை அமல்படுத்தி வருகின்றன.



| வ. எண். | பொருள் | காற்றாலை மின் சாரம் | சூரிய ஒளி மின்சாரம் | உயர்சக்தி | நகரக்கழிவு களில் இரு ந்து மின் சாரம் |
|---|---|---|---|---|---|
| 1. | மின்சாரத்தை வாங்கும் விலை | ரூ.2.70 யூனிட் | ரூ.2.73 யூனிட் | ரூ.2.73 யூனிட் | ரூ.2.79 யூனிட் |
| 2. | வருடாந்திர உயர்வு | 5% | 5% | 5% | 5% |
| 3. | வழங்கும் விலை மறு ஆய்வு செய்தல் | 2000 ஏ.டி | 2000 ஏ.டி. | 2010 ஏ.டி | 2010 ஏ.டி. |
| 4. | சேமித்து வைக்கும் காலம் | 2 ஆண்டுகள் | 1 ஆண்டு | 1 ஆண்டு | 1 ஆண்டு |
| 5. | சேமித்து வைக்கக் கட்டணம் | 2% | 2% | 2% | 2% |
| 6. | மின்சாரத்தை எடுத்துச் செல்ல கட்டணம் | 2% | 2% | 2% 25 கி.மீ. சுற்றளவிற்குள் 10 சதவீதம் தமிழகத்தின் எவ்விடத்திற்கும். | 296.25 கி.மீ சுற்றளவிற்குள் 10 சதவீதம் தமிழகத்தின் எவ்விடத்திற்கும். |

தமிழக அரசின் சார்பாக தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், கண்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் வணிக கூட்டமைப்புகளின் ஒருங்கிணைத்தல் போன்றவற்றை நடத்துவதன் மூலம் பொதுமக்களிடத்திலும், தனியார் முதலீட்டாளர்களையும் இத்துறையில் ஈடுபட ஆவன செய்து வருகின்றது.

22—

## மின் உற்பத்தி

**வினா 37958—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் மின் உற்பத்தி மூலம் இதுவரை செலிவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதை மீண்டும் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை புனல் மின் திட்டத்திற்காக (1x20 மெ.வா.) இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ.151.16 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) கொல்லிமலை புனல் மின் திட்டத்தின் செயலாக்கத்திற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மத்திய அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் ஒப்புதல் மற்றும் திட்டச் செயலாக்கத்திற்குத் தேவையான வனத்துறைக்குச் சொந்தமான நிலங்கள் கிடைக்கப்பெற்றவுடன் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**23—**

**மின் இணைப்புகள்**

வினா 38266—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இதுவரை எத்தனை மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 31-3-2000 அன்று வரை மின் இணைப்புகள் கீழ்க் கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:



2000 நவம்பர் 10]

| | |
|---|---|
| உயர் மின்னழுத்த இணைப்புகள் | 4,718 |
| தாழ்வு மின்னழுத்த வீட்டு உபயோக இணைப்புகள் | 83,37,734 |
| குடிசை மின் இணைப்புகள் | 13,51,440 |
| தெரு விளக்கு மின் இணைப்புகள் | 1,27,523 |
| பொது குடிநீர்த் தொட்டி இணைப்புகள் | 54,593 |
| அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம், சினிமா மற்றும் ஸ்டுடியோ, மின் இணைப்புகள் | 1,30,325 |
| குடிசைத் தொழில் மின் இணைப்புகள் | 46,870 |
| தாழ்வழுத்த தொழிற்சாலை மின் இணைப்புகள் | 3,25,929 |
| விவசாய மின் இணைப்புகள் | 15,61,551 |
| வியாபார மற்றும் இதர மின் இணைப்புகள் | 13,80,105 |
| தற்காலிக மின் இணைப்புகள் | 10,045 |
| மொத்தம் | 1,33,30,833 |

**24—**

**துப்புரவுத் தொழிலாளர்கள்**

**வினா 24777—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சியின் தேவைக்கு ஏற்ப துப்புரவுத் தொழிலாளர்களை நியமனம் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சியில் தற்போது நிரந்தர அடிப்படையில் ஒரு துப்பரவுப் பணியாளர் பணிபுரிந்து வருகிறார். இப்பேரூராட்சியில் 20 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பேரூராட்சியில் சுகாதாரப் பணிகளை செம்மைப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோளின்படி போதிய சுகாதாரப் பணியாளர் பணியிடங்கள் தொகுப்பூதியத்தில் தோற்றுவித்திட நாகர்கோவில் மண்டல உதவி இயக்குநரிடம் இருந்து கருத்துரு கோரப்பட்டுள்ளது. அக்கருத்துரு பெறப்பட்டதும் இடைக்கோடு பேரூராட்சியில் தேவைக்கேற்ப துப்பரவுப் பணியாளர் பணியிடங்களைத் தோற்றுவிக்க பேரூராட்சிகள் இயக்குநர் அளவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

**குடிநீர்த் திட்டக் கிணறுகள்**

**வினா 29958—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு ஏழுதேசம் பேரூராட்சி குடிநீர்த் திட்டக் கிணறுகள் உடையும் தருவாயில் உள்ளதை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) இத்திட்டத்திற்கான குடிநீர்த் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளனவா? எப்போது முடிவடையும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2000 நவம்பர் 10]

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு ஏழுதேசம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டக் கிணறுகள் 5 ஆதங்கோடு என்னுமிடத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்டு, மணல் அள்ளும் நிலையில் உடையும் தருவாயில் உள்ள கிணறுகள் மேற்படி வாரியத்தால் சீர் செய்யப்பட்டு உள்ளன.

26—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 30669—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, ஜல்மாரம்பட்டி, உப்பனாம்பரம், காந்தி நகர், மேல்மருக்கம்பட்டி, தொன்மரத்துக்குழி, குழிப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு போதுமான குடிநீர் வசதியில்லாமல் இருப்பது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

1. ஜல்மாரம்பட்டி:

தருமபுரி மாவட்டம், பெண்ணாகர ஊராட்சி ஒன்றியம், வட்டுவனஅள்ளி ஊராட்சியில் உள்ள ஜல்மாரம்பட்டியின் தற்போதைய மக்கட்தொகை 250 ஆகும். தற்போது வழங்கும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 15 லிட்டர் ஆகும். இங்கு குடிநீர் பிரச்சனை உள்ளதால் ஒரு திறந்தவெளி கிணற்றை நீராதாரமாகக் கொண்டு விசை இறைப்பான் குடிநீர்த் திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீட்டுத் தொகை தோராயமாக ரூ.6.00 இலட்சம் ஆகும். இத்திட்டத்தை விரைவில் முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2000 நவம்பர் 10

2. மேல்மருக்கம்பட்டி:

பெண்ணாகரம் ஒன்றியம், மேல்மருக்கம்பட்டி என்ற மருக்கம்பட்டி குடியிருப்பின் 1991 ஆம் ஆண்டு கணக்குப்படி மக்கட்தொகை 520 ஆகும். தற்போது அளிக்கப்படும் குடிநீரின் அளவு நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 56 லிட்டர் ஆகும். தற்சமயம் ரெட்டியார்கொட்டாய் குடிநீர்த் திட்டத்திலிருந்து மருக்கம்பட்டிக்கு 7 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்புக்கு புதிய திட்டம் ஏதும் இல்லை.

**3. உப்பனாபுரம்:**

பெண்ணாகரம் ஒன்றியத்தின் வட்டுவனஅள்ளி ஊராட்சியில் உள்ள உப்பனாபுர குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 100 ஆகும். (வீடுகள் ஓரிடத்தில் இல்லாமல் பரவலாக உள்ளது.) தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர்கள் ஆகும் இக்குடியிருப்பில் குடிநீர் பிரச்சனை உள்ளதால் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசை பம்புத் திட்டம், 2000-2001 ஆம் ஆண்டில் குடிநீர் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4. காந்திநகர்:**

பெண்ணாகரம் ஒன்றியத்தின் வட்டுவனஅள்ளி ஊராட்சியில் உள்ள காந்திநகர் குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 100 ஆகும். (வீடுகள் ஓரிடத்தில் இல்லாமல் பரவலாக உள்ளது.) தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர்கள் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பில் குடிநீர் பிரச்சனை உள்ளதால் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசை பம்புத் திட்டம், 2000-2001 ஆம் நிதியாண்டில் குடிநீர் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. தொன்மரத்துக்குழி:

பெண்ணாகரம் ஒன்றியத்தின் வட்டுவனஅள்ளி ஊராட்சியில் உள்ள தொன்மரத்துக்குழி குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 80 ஆகும். (வீடுகள் ஓரிடத்தில் இல்லாமல் பரவலாக உள்ளது.) தற்சமயம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர்கள் குடிநீர் கிணற்றிலிருந்து பெறுகிறார்கள். இக்குடியிருப்பிலும் குடிநீர் பிரச்சனை உள்ளதால் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசை பம்புத் திட்டம் 2000-2001 ஆம் நிதியாண்டில் குடிநீரின் அவசியம் மற்றும் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

**6. குழிப்பட்டி:**

பெண்ணாகரம் ஒன்றியத்தின் வட்டுவனஅள்ளி ஊராட்சியில் உள்ள குழிப்பட்டி குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 1,160 ஆகும். ஒரு கையிறைப்பான் உபயோகத்தில் உள்ளது. தற்சமயம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர்கள் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் 1991-ம் ஆண்டு முடிக்கப்பட்ட கைப்பம்பு திட்டம் பயனில் உள்ளது. இக்குடியிருப்பில் குடிநீர் பிரச்சனை உள்ளது. நடப்பு நிதியாணடில் குடிநீர் திட்டம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. வரும் நிதியாண்டில் குடிநீரின் அவசியம் மற்றும் தேவையின் அடிப்படையில் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

**27—**

### சுய வேலை வாய்ப்புக் திட்டம்

**வினா 30881—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டு எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் (டிரைசம்) பயிற்சி எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 1998-99 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 27 நபர்களுக்கு (டிரைசம்) பயிற்சி அளிக்கப்பட்டது.

**28—**

### கூடுதல் கழிப்பிட வசதி

**வினா 34079—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) திருப்பூர் நகர், 30-வது வார்டு கே.வி.ஆர். நகர்ப் பகுதிக்குக் கூடுதல் கழிப்பிட வசதி கோரி அரசிற்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம், 30-வது வார்டு, கே.வி.ஆர். நகர்ப் பகுதியில் 1998-99 ஆம் ஆண்டு எட்டு இருக்கைகள் கொண்ட கழிப்பிடம் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. கூடுதலாக கழிப்பிட வசதி தேவைப்படும் நிலையில் நகர்மன்ற அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்படும்.

29—

**பெயர் சூட்டுதல்**

**வினா 34150—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி புதிய பேருந்து நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராசர் பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (2ப) எண் 56, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26-4-2000-ல் தென்காசி புதிய பேருந்து நிலையத்திற்கு பாரத ரத்னா கு. காமராசர் பேருந்து நிலையம் எனப் பெயரிட தென்காசி நகரமன்றத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.



2000 நவம்பர் 10]

30—

**தார்ச்சாலைகள் அமைத்தல்**

**வினா 34417—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி நகரிலுள்ள குறுக்கு தார்ச் சாலைகள் மிகவும் மோசமாக உள்ளதால் அவற்றைப் புதுப்பித்துக் கொடுக்கவும், இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பவானி நகராட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் 13.778 கி.மீ. தார்ச் சாலைகளில் ரூ.64.88 லட்சம் மதிப்பீட்டில் தார்த்தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 3.980 கி.மீ. சிறிய சந்துகளில் ரூ. 24.64 லட்ச மதிப்பீட்டில் சிமெண்ட் தளம் போடப்பட்டுள்ளது. 0.530 கி.மீ. கப்பிச் சாலை ரூ.2.85 லட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளில் தார் மற்றும் சிமெண்ட் சாலைகள் அமைக்க ரூ.80 லட்சம் கடன் வழங்கப்பட்டு நகரின் பல்வேறு பகுதிகளில் சாலைகள் அபிவிருத்தி செய்ய ஒப்பந்ததாரர்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. எனவே நகரின் அனைத்து சாலைகளும் நிதி வசதிக்கேற்பவும், கடன் பெற்றும் புதுப்பிக்கப்படுகின்றன.

31—

**திட்டச் சாலைகள்**

**வினா 34476—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சிப் பகுதியில் செயல்படுத்தப்படாமல் வரைப்பட நிலையிலுள்ள திட்டச் சாலைகள் எத்தனை?

(ஆ) அவை எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகராட்சி எல்லைக்குள் 23 நகரமைப்பு விரிவு அபிவிருத்தித் திட்டச் சாலைகள் உள்ளன. அவற்றில் சில திட்டச் சாலைகள் அபிவிருத்தி அடைந்துள்ளன. சில திட்டச் சாலைகள் தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நில உரிமையாளரிடம் நேரடி பேச்சுவார்த்தை நடத்தி, நிலம் கையைகப்படுத்தி திட்டச் சாலைகள் அமைக்க நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32—

### ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா 34952—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 18-வது வார்டு, லட்சுமி நகர் 1,2, 3-வது வீதிகளின் கிழக்குப் பகுதி சந்துகளை தனியார் ஆக்கிரமித்து இடையூறு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 18-வது வார்டு, லட்சுமி நகர் 1, 2, 3-வது வீதிகளின் கிழக்குப் பகுதியில் 14மீX19.4 மீ அளவிற்கு தனியார் ஆக்கிரமிப்பு உள்ளது. அது தொடர்பாக திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஆக்கிரமிப்புதாரரால் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. வழக்கு முடிவு பெற்றவுடன், நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ஆக்கிரமிப்பை அகற்றுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



33—

### சிமெண்ட் தளம் அமைத்தல்

**வினா 34957—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 26-வது வார்டு, சூசையாபுரம், கல்லாண்டித் தெரு, சூசையாபுரம் கிழக்கு, வடக்கு, மேற்கு மற்றும் மேட்டுப்பகுதி சாயப்பட்டறை வீதி, கோழிக்கடை சந்துகளில் சிமெண்ட் தளம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 26-வது வார்டு, பகுதியான சூசையாபுரம் வடக்கு பகுதியில் தமிழ்நாடு இரண்டாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 3.74 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் நடைபாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதர பகுதிகளில் 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் நகர கூட்டாண்மை திட்டத்தின்கீழ் சாலைப் பணிகள் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

34—

### பள்ளிக் கட்டடம் பழுது பார்த்தல்

**வினா 34988—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நல்லூர் பேரூராட்சி ராக்கியாபாளையம் சத்துணவு மையக் கட்டடம், ஆரம்பப் பள்ளிக் கட்டடம் பழுதுபட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுது பார்க்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், நல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட ராக்கியாபாளையத்தில், ஆரம்பப்பள்ளி கட்டடம் மற்றும் சத்துணவு மைய கட்டடம் ஏதுமில்லை.

35—

**நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 35041—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நெறிபறைச்சல் ஊராட்சி பொன்னம்மாள் நகர், ஜே.பி. நகர், சௌடாம்பிகை நகர், திருநகர் பகுதிகளுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

1. ஜே.பி. நகர்:

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், நெறிபறைச்சல் ஊராட்சியை சார்ந்த ஜே.பி. நகர் புதிதாக உருவான குடியிருப்பு ஆகும். தற்போதைய மக்கள் தொகை 130 ஆகும். இக்குடியிருப்புக்கு நெறிபறைச்சல் ஊராட்சியைச் சார்ந்த காமராஜ் நகருக்கான குடிநீர்த் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விஸ்தரிப்பு குழாய்கள் அமைக்கப்பட்டு தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி குழாய் விஸ்தரிப்பு திட்டம் 3/2000ல் முடிக்கப்பட்டு, ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



2. சௌடாம்பிகை நகர்:

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், நெறிபறைச்சல் ஊராட்சிக்குட்பட்ட புதியதாக உருவான சௌடாம்பிகை நகர் குடியிருப்புக்குத் தற்போது செயலில் உள்ள திருப்பூர் மற்றும் 412 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் ஏற்கெனவே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பின் மக்கட் தொகை 400 ஆகும். தற்போது நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்பு திருப்பூர் நகராட்சி எல்லைக்கு அருகாமையில் உள்ளதால், பெருகி வரும் மக்கட் தொகையை கருத்திற்கொண்டு, அருகிலுள்ள நல்லப்பா நகரில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு, சௌடாம்பிகை நகருக்கு, குழாய் விஸ்தரிப்புத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது.

3. பொன்னம்மாள் நகர் மற்றும் திருநகர்:

இவ்விரு குடியிருப்புகளும் திருப்பூர் ஒன்றியம், நெறிபறைச்சல் ஊராட்சியைச் சார்ந்த புதிய குடியிருப்புகளாகும். பொன்னம்மாள் நகரின் மக்கள் தொகை 170 ஆகும். திருநகரின் மக்கள் தொகை 210 ஆகும். நெறிபறைச்சல் ஊராட்சியைச் சார்ந்த சத்தியா காலனிக்கு நிறைவேற்றப்பட உள்ள தனி மின் விசைத் திட்டத்தில், பகிர்மானக் குழாய் விஸ்தரிப்பு மூலம் பொன்னம்மாள் நகர் மற்றும் திருநகர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

36—

**மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைத்தல்**

**வினா 35042—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மண்ணரை ஊராட்சி பாரப்பாளையத்தில் புதிய மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கும்?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர், மண்ணரை ஊராட்சிக்குட்பட்ட பாரப்பாளையத்தில் கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், ஒரு தனி மின்விசைத் திட்டம் சென்ற நிதியாண்டில் (1999-2000) செயல்படுத்தப்பட்டு, 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு 10 பொதுக் குழாய்கள் மூலம் மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) 3/2000-ல் முடிக்கப்பட்ட இத்திட்டம், ஊராட்சியின் வசம் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

37—

**வடிகால் அமைக்கும் பணி**

**வினா 35087—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 88-வது வார்டு, கே.பி.என். காலனி, 1-வது வீதியில் மழைநீர் தேங்கி விடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம் 88-வது வார்டு கே.பி.என். காலனி வடக்கு 1-வது வீதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி 2000-2001-ஆம் ஆண்டு நகர கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

38—

**நீர்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா 35100—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் குடிநீர் விநியோகம் செய்யும் மேட்டுப்பாளையம் நீரேற்று நிலையத்தில் கூடுதலாக நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முன் எச்சரிக்கையாக தேக்கி வைக்க அரசு கருதி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் குடிநீர் விநியோகம் செய்யும் மேட்டுப்பாளையம் நீரேற்று நிலையத்தில் முன் எச்சரிக்கையாக நீரைத் தேக்கி வைக்க தலைமை பணியிடத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

39—

**சாலை அமைத்தல்**

**வினா 35180—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 16-வது வார்டு டி.எஸ்.ஆர். லே-அவுட்டின் 9 வீதிகளிலும், ரோடுகள் வடிகால் வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு எப்போது சாலை அமைத்துத் தரப்படும்?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 16 வது வார்டு டி.எஸ்.ஆர். லே-அவுட்டில் மொத்தம் 9 வீதிகளில் 2-வது வீதி மற்றும் 3-வது வீதிக்கு தார்ச்சாலை மற்றும் வடிகால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 6-வது வீதியில் மழை நீர் வடிகால் கட்டப்பட்டுள்ளது. தார்ச்சலை அமைக்க டிஎன்யுடிஎப். 2-ம் திட்டத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதியுள்ள வீதிகளில் சாலை மற்றும் வடிகால் வசதிகள் நகர கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

40—

**சாலைகள் பராமரித்தல்**

**வினா 35399—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 42-வது வார்டு நொய்யல் வீதி, எம்.கே.எம். மில் வீதி, பெரியகடை வீதிகளில் சாலைகள் பாழ்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது அவை புனரமைத்துத் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 42-வது வார்டுக்குட்பட்ட நொய்யல்வீதி, எம்.கே.எம். மில் பகுதி, பெரிய கடைவீதி ஆகியவற்றில் உள்ள பழுதுபட்ட சாலைகளை சீரமைக்கும் பணியினை 2002-2003-ஆம் ஆண்டு நகர கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

41—

**சாலைகள் அமைத்தல்**

**வினா 35402—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 29-வது வார்டு, மங்கலம் ரோடு குறுக்கு வீதிகள், ஜெகநாதன் லேஅவுட், ராமசாமி லேஅவுட், ஆலாங்காடு பகுதிகளில் முறையான சாலைகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சாலை அமைப்பு செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் 29-வது வார்டு, மங்கலம் சாலை மற்றும் வெங்கடாசலபுரம் முதல் வீதி ஆகிய சாலைப் பணிகள் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஆலாங்காடு பகுதியில் விடுபட்டுள்ள அனைத்து பகுதிகளிலும் நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிலும் தமிழ்நாடு இரண்டாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டிலும் நடப்பு ஆண்டில் பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதர பகுதிகளான ஜெகநாதன் குடியமைப்பு ராமசாமி லேஅவுட் ஆகியவற்றில் நகர கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் 2000-2001 மற்றும் 2002-2003-ல் சாலைப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

42—

**சாலையை சீரமைத்தல்**

**வினா 36887—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி, கட்டளை குடியிருப்பு கற்குடி சாலையிலிருந்து தவணை செல்லும் சாலையை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதூர் (செ) பேரூராட்சிப் பகுதி கற்குடியிலிருந்து தவணை செல்லும் தார்ச்சாலையாக மாற்றி அமைத்து பணி முடிக்கப்பட்டுள்ளது.

43—

**பாதை சீர் செய்தல்**

**வினா 37671—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சியில் உள்ள சுடுகாட்டுப் பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சியில் உள்ள சுடுகாட்டுப்பாதை பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1999-2000-ன்கீழ் ரூபாய் 2.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் பாதையாக அமைக்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

44—

**சிமெண்ட் சாலை**

**வினா 37677—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி பேரூராட்சியில் உள்ள பெரிய தெரு சிமெண்ட் சாலையாக மாற்ற வேண்டியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சி பெரிய தெருவில் 1999-2000 ஆம் ஆண்டிற்கு வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

45—

**சாலைகள், பைப்லைன் அமைத்தல்**

**வினா 37681—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி பேரூராட்சியில் உள்ள திரு.வி.க. நகரில் சாலைகள் போடாமல் மோசமான நிலையில் உள்ளதையும் பைப்லைன் இல்லாததையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனே சாலைகள் அமைக்கவும் பைப்லைன் போடவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரியில் உள்ள திரு.வி.க. நகரில் சட்டமன்ற உறுப்பினர் திட்டம் (1999-2000) மற்றும் நகர்ப்புற சாலை மேம்பாடு திட்டம் (2000-2001) மூலம் தார்ச் சாலை அமைக்க ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. திருவிக நகர்ப் பகுதியில் ஆழ்துளைக் கிணறு ஒன்று உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

46—

### குடிநீர் வழங்குதல்

**வினா 37683—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், சத்துவாச்சாரி பேரூராட்சியில் உள்ள பாப்பாத்தியம்மன் கோயில் தெருவில் சரியான முறையில் குடிநீர், குழாய்களில் வராததால் போர்வெல் போட்டு குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சத்துவாச்சாரி பேரூராட்சியில் உள்ள பாப்பாத்தியம்மன் கோவில் தெருவில் வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் திட்டம் 1999-2000-ஆம் ஆண்டைய நிதி ஒதுக்கீட்டின் வாயிலாக ஆழ்துளைக் கிணறு ஒன்று 1-5-2000 அன்று அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.





47—

### சிமெண்ட் சாலை அமைத்தல்

**வினா 37684—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி பேரூராட்சியிலுள்ள பாப்பாத்தியம்மன் கோயில் தெருவை சிமெண்ட் சாலையாக மாற்றவேண்டி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) சிமெண்ட் சாலையாக மாற்ற நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சி பாப்பாத்தியம்மன் கோயில் தெருவினை சிமெண்ட் சாலையாக அமைக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1999-2000-ல் கீழ் ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

48—

### சாலைகள் அமைத்தல்

**வினா 37686—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், அல்லாபுரம் பேரூராட்சியிலுள்ள எழில் நகர் மற்றும் கிருஷ்ணா நகர் விரிவுப் பகுதியில் சரியான சாலைகள் இல்லாததை சரி செய்ய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அல்லாபுரம் பேரூராட்சிக்குச் சம்மந்தப்பட்ட எழில் நகர் மற்றும் கிருஷ்ணா நகர் விரிவுப் பகுதிக்கு சாலைகள் அமைக்க 2000-2001-ஆம் ஆண்டு பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூபாய் 2.00 லட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணா நகர் விரிவு விவேகானந்தா தெருவுக்கு ரூபாய் 1.85 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் பகுதி 2-ல் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

49—

**பாதை அமைத்தல்**

**வினா 37689—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் காகிதப் பட்டடையில் மயானத்திற்குச் செல்லும் பாதை சரியாக இல்லாததை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், சரியான பாதை அமைக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சுடுகாடுகள் மற்றும் இடுகாடுகள் பராமரிக்கப்படும் திட்டத்தின்கீழ் 200 மீட்டர் நீளத்திற்கு தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



50—

**விற்பனைக்கூடம் அமைத்தல்**

**வினா 6364—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூரில் அதிகமாக விளையும் முருங்கைக்காய்களுக்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியைச் சேர்ந்த மூலனூரில் ஈரோடு விற்பனைக் குழுவைச் சேர்ந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகின்றது. இவ்விற்பனைக்கூடத்தில் அதிக அளவில் பருத்தி, மிளகாய், நிலக்கடலை, நெல் மற்றும் தானிய வகைகள் வரப்பெற்று விற்பனை செய்யப்படுகின்றன. முருங்கைக்காய் ஈரோடு விற்பனைக் குழுவில் தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின்படி அறிவிக்கை செய்யப்படவில்லை. விவசாயிகள் முருங்கைக்காய்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்குக் கொண்டு வந்தால் நல்ல முறையில் விற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் முருங்கைக்காய்களுக்கு என தனியாக ஒரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

52—

**நிவாரணத் தொகை**

**வினா 30357—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) இயற்கைச் சீற்றத்தால் விவசாயிகளின் கிணறுகள் மூடிப்போனால் தூர் எடுத்து விவசாயத்திற்கு மீண்டும் பயன்படுத்த நிவாரணத் தொகையும் தவணை முறையில் கடனும் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை நிலை எண் 722, வேளாண்மைத் துறை, நாள் 17-12-1992-ன்படி இயற்கைச் சீற்றத்தால் விவசாயிகளின் கிணறுகள் மூடிப்போனால் தூர் எடுத்து விவசாயத்திற்கு மீண்டும் பயன்படுத்த நிவாரணத் தொகையும் கடனும் வழங்க கீழ்க்கண்டவாறு அரசு ஆணை வழங்கியுள்ளது:

1. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளைத் தூர் எடுக்க அதிக பட்சம் ரூ.5,000 உச்சவரம்புக்குட்பட்டு ஆகும் செலவில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

2 மீதமுள்ள தொகை மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கடனாக வழங்கப்படும்.

3. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூலித் தொழில் செய்யவும் அல்லது செலவினத் தொகையை ஏற்றுக்கொள்ள முன்வந்தாலும் மேலே இனம் (1)ல் நிர்ணயித்தபடி அவர்களுக்கு மானியம் அளிக்கப்படும்.

4. இப்பணி மாவட்ட ஆட்சியாளரால் வட்டார வளர்ச்சி அதிகாரி மூலம் செயல்படுத்தப்படும்.

**52—**

**உதவி வேளாண்மை அலுவலர் பணி**

**வினா 38445—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

**(அ) உதவி வேளாண்மை அலுவலர்ப் பணிக்கு இரண்டு ஆண்டுகள் டிப்ளமோ பயின்றவர்கள் வேலையின்றி தமிழ்நாட்டில் எத்தனை பேர் உள்ளார்கள்?**

**(ஆ) அவர்களுக்கு வாய்ப்பளித்து விவசாயத் தொழில் நுட்பங்கள் கிராம விவசாயிகளுக்குப் போய்ச் சேர ஆவன செய்யப்படுமா?**



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேளாண்மையில் டிப்ளமோ பெற்றவர்கள் 1,848 பேரும் தோட்டக்கலையில் டிப்ளமோ பெற்றவர்கள் 234 பேரும் ஆக மொத்தம் டிப்ளமோ பெற்றவர்கள் 2082 பேரும் பதிவு செய்து வேளாண்மை உதவி அலுவலர் பதவிக்காக காத்துள்ளனர்.

(ஆ) அரசாணை எண் 457, வேளாண்மை (வேநி 5) துறை, நாள் 28-7-1993-ன்படி வேளாண்மைத் துறையில் வயல் விளக்க அலுவலர் பணியிடங்கள் முழுவதும் நீக்கப்படவும், தற்போது வயல் விளக்க அலுவலராகப் பணிபுரிந்து வருவோர் அனைவரையும் வேளாண்மை உதவி அலுவலராகப் பதவி உயர்த்தவும் வழிவகை செய்யப்பட்டு வேளாண்மை உதவி அலுவலர் மொத்தப் பணியிடங்கள் 4500 என்ற எண்ணிக்கைக்கு மிகைப்படக்கூடாது என்றும் ஆணையிடப்பட்டுள்ளதையடுத்து, அரசாணை எண் 118, வேளாண்மை (வேநி 5) துறை, நாள் 7-3-1995 மற்றும் அரசாணை எண் 361, வேளாண்மை (வேநி 5) துறை, நாள் 30-6-1995 மூலம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையில் உள்ள வேளாண்மை உதவி அலுவலர் பணியிடங்களில் நேரடி நியமனங்கள் செய்வதற்கான விதிமுறைகள் நீக்கப்பட்டதால், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை டிப்ளமோ பயின்றவர்களைக் கொண்டு நேரடி நியமனம் செய்வதற்கு வழிவகை இல்லை. எனவே தற்போதுள்ள நடைமுறை விதிகளின்படி அரசு இவர்களுக்கு வேலை அளித்திட வாய்ப்பில்லை.

**53—**

**வன விலங்குகளால் தாக்குதல்**

**வினா 37140—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

**1999-2000 ஆம் ஆண்டில், கோவை மாவட்டம், வால்பாறை வட்டாரத்தில் சிறுத்தை மற்றும் யானை போன்ற வன விலங்குகளால் தாக்குண்ட மனிதர்கள் எத்தனை பேர்?**

[2000 நவம்பர் 10

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:

9-5-1999 அன்று பொள்ளாச்சி வட்டம் சேத்துமடை கிராமம், டாப்சிலிப் பகுதிக்குட்பட்ட கூமாட்டி செட்டில்மெண்டில் வசிக்கும் வேல்முருகன் என்பவரது 2 வயது ஆண் குழந்தை, பெயர் கருப்பசாமி, சிறுத்தை புலியால் தாக்குண்டு இறந்துள்ளது. மேலும் 5-2-2000 அன்று வால்பாறை வட்டம், பெரிய கல்லார் தேயிலை தோட்டத்தில் காட்டு யானையால் தாக்கப்பட்டு நாராயணசாமி என்பவர் இறந்துள்ளார்.

54—

சாலை செப்பனிடல்

**வினா 25808—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி, திருமக்கோட்டை-எனவனூர் சாலையை உடன் அகலப்படுத்தி செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

55—

மாவட்டச் சாலைகள்

**வினா 26005—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தற்போதுள்ள மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் எவ்வளவு?

(ஆ) மாநில நெடுஞ்சாலையாக மாற்றப்படவுள்ள மாவட்டச் சாலைகளின் விவரம் என்ன?



2000 நவம்பர் 10]

விடை—

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

(அ) 4,192 கி.மீ.

(ஆ) 3,280.40 கி.மீ. நீளமுள்ள பல்வேறு சாலைகள் பற்றிய கருத்துருக்கள் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

56—

தார்ச் சாலை அமைத்தல்

**வினா 32461—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் உஞ்சிய விடுதி ஊராட்சியில் உஞ்சிய விடுதி - ஆற்றங்கரை 2.00 கி.மீ. சாலையை தார்ச் சாலையாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை இதர மாவட்டச் சாலைகளில் மிகவும் பழுதடைந்த பகுதி மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் இப்பணியை ரூ.12.80 இலட்சம் மதிப்பீட்டில் சீர்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

57—

இருவழிச் சாலையாக மாற்றுதல்

**வினா 34568—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரளம்-காரைக்கால் சாலையில் தமிழ்நாடு எல்லையில் உள்ள 0/0 6/8, 8/0 8/6, வரையிலான 7.4 கி.மீ. தமிழ்நாடு எல்லைப் பகுதியில் Single Width-லிருந்து Double width சாலைப் பகுதியாக மாற்றி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

பேரளம் - காரைக்கால் சாலை தமிழ்நாடு எல்லையில் கி.மீ. 0/0 6/8, 8/0, 8/6 வரையிலான 7.4 கி.மீ. நீளமுள்ள ஒரு பெரிய மாவட்ட சாலையாகும். 3.66 மீட்டர் அகலத்திற்கு தார் தளம் கொண்ட ஒருவழிச் சாலையாக உள்ள இச்சாலையை 7.00 மீட்டர் அகலத்திற்கு இருவழிச் சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.130.00 இலட்சம் தேவைப்படும். நிதி நெருக்கடி காரணமாக பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை உடனடியாக மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**58—**

**பண்டகசாலை**

**வினா 21215—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு மொதத விற்பனை பண்டகசாலையில் ஏற்பட்டுள்ள மொத்த நட்டம் எவ்வளவு?

(ஆ) அதற்கான காரணம் குறித்து அரசு ஆராய்ந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் 28-2-2000 நிலவரப்படி ரூ.130 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ) ஆம். கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் நட்டத்திற்கு கீழ்க்கண்ட காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன:—



(அ) கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் வணிகத்தில் பெரும்பகுதியாக உள்ள பொது விநியோகத் திட்டத்தில் போதுமான விளிம்புத் தொகை வழங்கப்படுவதில்லை.

(ஆ) அவ்வாறு வழங்கப்படும் விளிம்புத் தொகையில் முதன்மைச் சங்கங்களுக்கு மொத்த விற்பனை பண்டகசாலையின் இணைப்பு சங்கங்களுக்கும் குறைந்த பங்கு விகிதமே கிடைக்கிறது.

(இ) கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனையில் குறைந்த லாபமே கிடைக்கிறது.

(ஈ) மத்திய கூட்டுறவு வங்கிகளில் காசுக்கடன் பெற்று, செய்யும் வணிகத்தால் வட்டி சுமை கூடுகிறது.

(உ) வரவேண்டிய நிலுவைத் தொகைகள் வசூலாவதில் ஏற்படும் தாமதம்.

(ஊ) பொருட்கள் விற்பனையாகாமல் தேங்குவதால் அவை சேதமுற்று ஏற்படும் நட்டம்.

(எ) சரக்கு இருப்புக் குறைவால் ஏற்படும் இழப்பு.

**59—**

**அரிசி கொள்முதல்**

**வினா 35131—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்ய எந்தெந்த மாநிலங்களிலிருந்து எவ்வளவு அரிசி ஆண்டு ஒன்றுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

[2000 நவம்பர் 10

நியாய விலைக் கடைகளில், அரிசி விற்பனை செய்ய மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியினைக் கொண்டும், சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை அரவை செய்வதின் மூலம் பெறப்படும் அரிசியினைக் கொண்டும் வழங்கப்படுகின்றது. இவ்வாறு பெறப்படும் அரிசி, பொது விநியோகத்திற்கு போதுமானதாக இல்லாத காலகட்டத்தில், வெளி மாநிலங்களிலிருந்து அரிசி கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது. வெளி மாநிலங்களிலிருந்து கடந்த ஐந்தாண்டுகளில் அரிசி கொள்முதல் செய்யப்பட்ட விபரம்:—

| | | |
|---|---|---|
| 1995-96 | .. | இல்லை. |
| 1996-97 | ,, | 2,46,021 மெட்ரிக் டன் (ஆந்திர மாநிலம்) |
| | .. | 5,845 மெட்ரிக் டன் (மத்திய பிரதேசம்) |
| | .. | 1,21,035 மெட்ரிக் டன் (மத்திய பிரதேசம்) |
| | .. | 80,622 மெட்ரிக் டன் (பஞ்சாப் மாநிலம்) |
| 1997-98 | .. | 79,982 மெட்ரிக் டன் (பஞ்சாப் மாநிலம்) |
| | .. | 3,01,861 மெட்ரிக் டன் (ஆந்திர மாநிலம்) |

1998-1999 மற்றும் 1999-2000 வருடங்களில் பொது விநியோகத்திற்கு போதிய அளவு அரிசி இருந்தமையால், எந்த மாநிலத்திலிருந்தும் அரிசி கொள்முதல் செய்யப்படவில்லை.

60—

### கூட்டுறவு நிறுவனங்கள்

**வினா 36001—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் நலிந்து வருவதை அரசு அறியுமா?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டத்தில் 5 மத்திய கூட்டுறவுச் சங்கங்களும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு நகர வங்கிகள், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் இதர வகைச் சங்கங்கள் என மொத்தம் 484 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது வேலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் 3 புதிய கிளைகள் கமலாட்சிபுரம், திமிரி மற்றும் கலவை ஆகிய இடங்களில் திறக்கப்பட்டுள்ளன. கடந்த 4 ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வந்த சங்கங்கள் ஏதும் கலைக்கப்படவில்லை. இம்மாவட்டத்தில் காட்பாடி கூட்டுறவு விற்பனைச் சங்கம், காட்பாடி கூட்டுறவு நகர வங்கி, வாணியம்பாடி (மற்றும்) வாலாஜா தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு (மற்றும்) ஊரக வளர்ச்சி வங்கிகள் ஆகியன புதியதாக திறப்பதற்குரிய முன்மொழிவுகள் பரிசீலனையில் உள்ளன. வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையில் செயல்பாடுகள் மட்டுமே சற்று தொய்வடைந்துள்ளது. மேற்படி பண்டகசாலைக்குச் சொந்தமான இடத்தை அரசு அனுமதியுடன் விற்பனை செய்வதன் மூலம் சங்க நிதி ஆதாரங்களை மேம்படுத்தி சங்கத்தை மீண்டும் சிறப்பாக, செயல்படச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே வேலூர் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்து வரவில்லை. நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

61—

### பட்டா வழங்குதல்

**வினா 17618—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்த தரிசு நிலப்பரப்பு எவ்வளவு?

(ஆ) அதை விளை நிலமாக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு, எத்தனை பேருக்கு அரசு பட்டா வழங்கி உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மொத்த தரிசு நிலம் 3,47,490 ஹெக்டேர்.

(ஆ) தரிசு நிலங்களில் சாகுபடி செய்வதற்கு அவரவர் தகுதியின் அடிப்படையில் நில ஒப்படை வழங்கப்படுகிறது. ஒப்படை பெற்ற பின்னர், ஒப்படைதாரர் ஒப்படை பெற்ற நிலத்தினை மூன்று ஆண்டுகளுக்குள் சாகுபடிக்கு கொண்டுவர வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது. இவ்வாறே ஒப்படைதாரர் நிலத்தை விளை நிலமாக மாற்றி வருகின்றனர். மேலும், இதற்கு அரசு கூட்டுறவுத் துறை மூலம் பல்வேறு கடனுதவிகள் செய்து வருகின்றது.

(இ) 1996-1997 முதல் 1999-2000 முடிய 49,335 நபர்களுக்கு 33,789.15 ஏக்கர் நிலம் ஒப்படை வழங்கப்பட்டுள்ளது.

62—

**கருணை அடிப்படையில் பணி**

**வினா 38385—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்குக் கருணை அடிப்படையில் பணி கோரும் மனுக்கள் ஏதும் வரப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி மிக அதிகமாக நிதிப் பற்றாக்குறை காணப்படுகிறது. அதாவது, 2000-2001 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வாரியத்தின் வரவு ரூ.145.17 இலட்சம். இதற்கு மாறாக எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 200.82 இலட்சம் ஆகும். இந்நிலையில், வாரியத்திலுள்ள ஊழியர்களுக்கு தற்போது ஊதியக் குழு பரிந்துரைத்த திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் மற்றும் இதரப் படிகளை அளிப்பதற்கே வாரியத்தின் வருமானம் போதுமானதாக இல்லை. எனவே, வாரியத்தின் நிதிநிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்ட பிறகே வாரியத்தில் உள்ள காலிப் பணியிடங்களைக் கருணை அடிப்படையிலோ அல்லது பிற பொதுவான நியமனங்கள் மூலமாகவோ நிரப்ப அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்க இயலும்.



63—

**வக்ஃபு வாரியம்**

**வினா 38391—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் புதிய ஊழியர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) அவ்வாரியத்தில் காலியாக உள்ள இடங்கள் நிரப்பப்படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி மிக அதிகமான நிதிப் பற்றாக்குறை காணப்படுகிறது. அதாவது 2000-2001 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வாரியத்தின் வரவு ரூ.145.17 இலட்சம். இதற்கு மாறாக எதிர்பார்க்கப்படும் செலவு ரூ.200.82 இலட்சம் ஆகும். இந்நிலையில், வாரியத்திலுள்ள ஊழியர்களுக்கு தற்போது ஊதியக் குழு பரிந்துரைத்த திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் மற்றும் இதரப் படிகளை அளிப்பதற்கே வாரியத்தின் வருமானம் போதுமானதாக இல்லை. எனவே, வாரியத்தின் நிதி நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்ட பிறகே வாரியத்தில் உள்ள காலிப் பணியிடங்களைக் கருணை அடிப்படையிலோ அல்லது பிற பொதுவான நியமனங்கள் மூலமாகவோ நிரப்ப அனுமதி வழங்குவது குறித்து அரசால் பரிசீலிக்க இயலும்.

[2000 நவம்பர் 10

64—

## சொந்தக் கட்டடம்

**வினா 38788—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்ற வட்டாட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சொந்தக் கட்டடம் இல்லாத வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கட்டடம் கட்ட நிதிநிலைக்கேற்ப ஆண்டுதோறும் பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி ஒப்பளிப்பு வழங்க நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) திருக்கழுக்குன்றம் வட்ட அலுவலகக் கட்டடம் கட்ட எப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற இயலாது.

65—

## நிலுவையிலுள்ள வழக்குகள்

**வினா 19670—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வழக்குகளை விரைவாக முடிக்க அரசு ஆவன செய்யுமா?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் 31-3-2000 அன்றைய நிலவரப்படி நிலுவையிலுள்ள வழக்குகள் கீழ் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | அசல் வழக்குகள் | .. | 1,029 |
| 2. | வாடகைக் கட்டுப்பாடு அசல் மனு | .. | 2 |
| 3. | நிறைவேற்று மனு | .. | 62 |
| 4. | உரிமையியல் பல்வகை மனு | .. | 602 |
| | மொத்தம் | .. | **1,695** |

(ஆ) நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குளை விரைவாக முடிக்கச் செய்வது நீதித் துறையின் செயல்பாடு ஆகும் என்றாலும், சென்னை உயர்நீதிமன்றம் இது குறித்து கூடுதல் நீதிமன்றங்கள் அல்லது புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்தால் அரசு நிதி நிலைக்கேற்ப புதிய நீதிமன்றங்களை உருவாக்க ஆணை பிறப்பிக்கிறது. சங்ககிரியில் உரிமையியல் நீதிமன்றத்தின் வழக்குகளை விரைவாக முடிப்பதற்கு சங்ககிரியில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க சென்னை உயர்நீதிமன்றம் அரசுக்குப் பரிந்துரைக்கவில்லை.

66—

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா 37545—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மத்திய சிறையில் காலியாகவுள்ள பணியிடங்கள் எவ்வளவு?

(ஆ) அப்பணியிடங்களை நிரப்ப அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மத்திய சிறையில் காலியாக உள்ள மொத்தப் பணியிடங்கள் 14 ஆகும். அவைகள் முறையே கீழ்க்கண்டவாறு பதவி வாரியாக கொடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண் செவிலி உதவியாளர் | .. | 1 |
| 2. | சிப்ப எழுத்தர் | .. | 1 |
| 3. | லாரி ஓட்டுநர் | .. | 1 |
| 4. | கைமுறை காகிதக் கூட மேற்பார்வையாளர் | .. | 1 |
| 5. | கூழ் செய்யும் உதவியாளர் | .. | 1 |
| 6. | முடி திருத்துபவர் | .. | 1 |
| 7. | இரண்டாம் நிலைக் காவலர்கள் | .. | 7 |
| 8. | முதல் நிலைக் காவலர் | .. | 1 |
| | மொத்தம் | .. | 14 |

(ஆ) (i) மேலே (அ)வில் வரிசை எண் 1 முதல் 6 வரையுள்ள பதவிகள் அனைத்தும் நிரப்புவதற்கான கருத்துரு சிறைத் துறைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ii) மேலே (அ) வில் வரிசை எண் 7-ல் உள்ள பதவிகளைப் பொறுத்தவரை நடைமுறையிலுள்ள அரசாணையின்படி இரண்டாம் நிலைக் காவலர்கள் பதவி தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட வேண்டும். அனைத்து சிறைகளிலும் உள்ள 396 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு தேர்வாணையத்திற்குக் கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது. வரிசை எண் 8-ல் உள்ள முதல் நிலைக் காவலர் பதவிகள் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மூலம் நிரப்பப்படுகின்றன.



2000 நவம்பர் 10]

67—

### ஓய்வூதியம்

**வினா 38270—திரு. எஸ்.எஸ். முகமது இஸ்மாயில்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் கூட்டுறவு நூற்பாலையில் தானாகவே ஓய்வு பெறும் திட்டத்தில் (VRS) செல்ல எத்தனை பேர் விருப்பம் தெரிவித்துள்ளனர்? அவர்களில் எத்தனை பேருக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது?

(ஆ) தற்பொழுது இந்நூற்பாலையில் வேலை புரியும் மொத்தப் பணியாளர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கரூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் தானாகவே ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் 148 தொழிலாளர்கள்/பணியாளர்கள் செல்ல விருப்பம் தெரிவித்ததன் பேரில் மேற்படி 148 நபர்களுக்கும் (தொழிலாளர்கள்-145, பணியாளர்கள்-3) பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது.

(ஆ) தற்போது கரூர் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரியும் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| நிரந்தரத் தொழிலாளர்கள் | .. | 388 |
| பணியாளர்கள் | .. | 33 |
| வாரிசுதார பயிற்சியாளர்கள் | .. | 16 |
| மொத்தம் | .. | 437 |

68—

### ஆசிரியர் பயிற்சி நிலையம்

**வினா 29947—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் புவனகிரியில் புதியதாக ஆசிரியர் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் மூலம் புவனகிரியில் ஆசிரியர் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

69—

**சாதிகளின் பட்டியல்**

**வினா 30285—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை சாதிகள் இருக்கின்றன?

(ஆ) மிக அதிக ஜனத்தொகை கொண்ட சாதி எது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சாதிகளின் பட்டியல் எதுவும் அரசால் பராமரிக்கப்படுவதில்லை. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பட்டியல்களில் அடங்கிய வகுப்புகள் குறித்த விவரங்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியல்களில் அடங்கிய வகுப்புகள் குறித்த விவரங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையிலும், பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 143 பதிவுகளும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 41 பதிவுகளும், சீர்மரபினர் பட்டியலில் 68 பதிவுகளும் இடம் பெற்றுள்ளன. இதேபோன்று



2000 நவம்பர் 10]

ஆதிதிராவிடர் வகுப்பினர் பட்டியலில் 78 வகுப்புகளும், பழங்குடியினர் பட்டியலில் 36 வகுப்புகளும் இடம் பெற்றுள்ளன. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் பட்டியலில் அடங்கியுள்ள. சாதிகளில் அதிக ஜனத்தொகை கொண்ட சாதி வன்னியர் ஆகும். 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு (அம்பாசங்கர் குழு) மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி வன்னியர் வகுப்பினர் மொத்த மக்கட் தொகை 65,04,855 ஆகும். முன்னேறிய வகுப்புகள் குறித்த பட்டியல் எதுவும் அரசால் பராமரிக்கப்படுவதில்லை.

70—

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்**

**வினா 25597—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டால் அதற்கு தேவையான இயந்திர சாதனங்கள் கிடைக்க அரசால் வசதி செய்யப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் திருத்தப்பட்ட 1974 ஆம் ஆண்டைய நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டைய காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டப்படி, அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள், தாங்கள் வெளியேற்றும் மாசினை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற வேண்டும். நீரை அதிக அளவு மாசுப்படுத்தும் தொழிற்சாலைகள் தனியாகவோ அல்லது பொதுவாகவோ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டும். கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் அமைக்கும் தொழிற்சாலைகள் தேவையான இயந்திரங்களை அவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிடமிருந்து நேரடியாகவோ அல்லது அங்காடி மூலமாகவோ தருவித்துக்கொள்கின்றன. இயந்திரங்கள் போதுமான அளவில்

தமிழ்நாட்டிலும்/இந்தியாவிலும் கிடைத்ததால்தான் 26 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும், 4000 தனியாக சுத்திகரிப்பு நிலையங்களும் அமைத்து செயல்பாட்டிலிருப்பதற்கு சாத்தியமாயிற்று. மேலும், சுத்திகரிப்பு இயந்திர சாதனங்கள் கிடைக்கவில்லையென்ற புகார் ஏதும் பெறப்படவில்லை.

71—

**நிதியுதவி**

**வினா 37138—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டத்திற்கு இதுவரை மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் எவ்வளவு நிதி வழங்கியுள்ளது?

(ஆ) அதன் பொருட்டு மாநில அரசு செலவிட்டுள்ள நிதி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) ஜனவரி 1990 முதல் டிசம்பர் 1999 வரை ரூ.34,15,235.

(ஆ) இதன் பொருட்டு, மாநில அரசு இதுவரை தனியாக நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

72—

**நிதியுதவி**

**வினா 21299—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிறு தொழில் வளர்ச்சிக்காக 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் அரசு செய்துள்ள நிதியுதவி எவ்வளவு?





(ஆ) இதன் மூலம் எத்தனை தொழிற்கூடங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்காக முறையே ரூ.3,150 இலட்சங்கள் மற்றும் ரூ.3,127.23 இலட்சங்கள் அரசு நிதியுதவி செய்துள்ளது.

(ஆ) இதன் மூலம் அவ்வாண்டுகளில் முறையே 5385 மற்றும் 4937 தொழிற்கூடங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

73—

**புதிய கட்டடம்**

**வினா 29305—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் ஊராட்சியில் உள்ள சத்துணவுக்கூடம் பழுதடைந்த பழைய கட்டடத்தில் உள்ளதால் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஆழிவாய்க்கால், சத்துணவு மையம் பழுது, ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட ரூ.10,000 மதிப்பீட்டில் வேலை செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

[2000 நவம்பர் 10

74—

### பரிசுத் தொகை

**வினா 29752—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலமாக பூம்புகார் மாநில விருதுபெறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை உயர்த்தித்தர அரசு முன் வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பூம்புகார் மாநில விருது பெறும் கைவினைஞர்களுக்கு அளிக்கப்படும் பரிசுத் தொகை, கைவினைஞர்கள் சிறந்த படைப்புகள் உருவாக்குவதை ஊக்குவிக்க தனது நிதியிலிருந்து தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது.

தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு பெறும் கைவினைஞர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000 ரொக்கமாகவும் சுமார் நாற்பது கிராம் எடையில் ஒரு வெள்ளிப் பதக்கமும் ஒரு சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. பரிசுத் தொகையான ரூ. 5,000-த்தை (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்), உயர்த்தும் எண்ணம் தற்போது இல்லை.

75—

### செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலை

**வினா 31195—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஐ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ)* தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசு பரிசீலனையில் இல்லை. எனினும், தொழில் முனைவோர் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால் மாவட்டத் தொழில் மையம், தொழில் தொடங்குவதற்கான அனைத்து உதவிகளையும் செய்யும்.

*(ஆ)* மேற்கண்ட பதிலின் அடிப்படையில் இவ்வினா எழவில்லை.

76—

### ஆராய்ச்சி மையம்

**வினா 31487 திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பொள்ளாச்சி வட்டம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், திப்பம்பட்டி கிராமத்தில் மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட தென்னை நார் ஆராய்ச்சி மையம் தொடங்க அடிக்கல் நாட்டும் நிலையில் நின்று போனதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது அந்த மையம் தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பொள்ளாச்சியில் தென்னை நார் ஆராய்ச்சி மையம் ஒன்று தொடங்க கயிறு வாரியத்தால் முதலில் முடிவு செய்யப்பட்டு அதற்கான நிலம் தேர்வு செய்வதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் சரியான நிலம் கிடைக்காமையால் இத் திட்டம் நின்றுபோனது. இத்திட்டத்திற்குப் பதிலாக பொள்ளாச்சியில் மத்திய கயிறு வாரியத்தின் மாநிலம் முழுவதற்குமான மண்டல அலுவலகம் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதன் காரணமாக தென்னை நார் ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டமானது கைவிடப்பட்டது.

[2000 நவம்பர் 10

77—

**சமையற்கூடம்**

**வினா 32171 திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பாப்பாநாடு சங்கரன் தெருவிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சத்துணவிற்கு என சமையற்கூடம் ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பாப்பாநாடு, சங்கரன் தெரு, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே உள்ள சத்துணவு மைய சமையற்கூடம் ரூ. 0.04 லட்சம் மதிப்பீட்டில் பழுது பார்க்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

78—

**சார்பதிவாளர் அலுவலகம்**

**வினா 32978—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகம் எத்தனை தனியார் (வாடகை) கட்டடத்தில் இயங்கி வருகிறது?

(ஆ) சார்பதிவாளர் அலுவலகங்களை அரசு கட்டடத்தில் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 13 சார்பதிவகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

(ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார்பதிவகங்களுக்கு அவற்றின் ஆவணப் பதிவு மற்றும் வருவாய் அடிப்படையில் முன்னுரிமை அளித்து அரசு கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

79—

**பட்டு வளர்ப்பு மையங்கள்**

**வினா 33358—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்பு மையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகள் மூலம் உற்பத்தியாகும் பட்டுத் துணியின் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் தாளவாடி, தென்காசி, சேலம், கோவை, பெண்ணாகரம், ஓசூர், வாணியம்பாடி, திண்டுக்கல், திருச்சி ஆகிய ஒன்பது இடங்களில் பட்டு வளர்ப்பு மையங்கள் பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) பட்டுத் துணி உற்பத்தி செய்யும் பணிகள் எதுவும் இம்மையங்களில் நடைபெறவில்லை.

[2000 நவம்பர் 10

80—

சார்பதிவாளர் அலுவலகங்கள்

**வினா 34687—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சார்பதிவாளர் அலுவலகங்கள் எத்தனை செயல்படுகின்றன?

(ஆ) சொந்தமாக அலுவலகக் கட்டடங்கள் உள்ளவை எத்தனை?

(இ) கட்டடங்கள் சொந்தமாகக் கட்டவேண்டியவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 21 சார்பதிவு அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் 14 அலுவலகங்கள் அரசு கட்டடத்தில் இயங்கி வருகின்றன. 7 அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டப்படவேண்டும்.

81—

சார்பதிவாளர் அலுவலகம்

**வினா 37357—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 1999-2000-ல் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் எத்தனை?

(ஆ) ஆம் எனில், இதன் மூலம் அரசுக்கு வருவாய் எவ்வளவு?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 1999-2000 ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை 2,125 ஆகும். இதன் மூலம் அரசுக்கு ரூ. 1.17 கோடி வருவாய் பெறப்பட்டுள்ளது.

82—

திரையரங்குகள்

**வினா 19918—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சென்ற ஆண்டில் சுகாதாரக் குறைவு என்ற காரணத்திற்காக தடை செய்யப்பட்ட திரையரங்குகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் 1997 மற்றும் 1998ஆம் ஆண்டுகளில் சுகாதாரக் குறைவு என்ற காரணத்திற்காக தடை செய்யப்பட்ட திரையரங்குகள் எண்ணிக்கை பின்வருமாறு:—

| மாவட்டம் | 1997 | 1998 |
|---|---|---|
| கரூர் | - | 3 |
| தருமபுரி | 31 | 39 |
| தேனி | - | 2 |
| கோயம்புத்தூர் | 12 | 5 |
| திருநெல்வேலி | 5 | 6 |
| தஞ்சாவூர் | - | 1 |
| | **48** | **56** |

[2000 நவம்பர் 10

83—

### நச்சுத் தன்மைப் படி வழங்குதல்

**வினா 26328—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாடு அரசு அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நச்சுத் தன்மைப் படி (Poison allowance) வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் நச்சுத் தன்மை வாய்ந்த அச்சுக்கள் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு பால் படியாக பணி நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாயும், அரசு அச்சகத்தில் இயங்கும் மருந்தகத்திலிருந்து சத்து மாத்திரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.*

*அரசு அச்சகங்களை நவீனமயமாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதாலும் அவ்வாறு நவீனப்படுத்தப்பட்டபின் அச்சுப்பணிகள் அனைத்தும் நச்சுத் தன்மையற்ற ஆப்செட் முறையில் அச்சிடப்படுமென்பதாலும் நச்சுத் தன்மைப் படி வழங்க வேண்டிய நிலை எழாது.*

84—

### மணிமண்டபம்

**வினா 29431—திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழில் அச்சுக் கலை வடிவத்தை கண்டுபிடித்த சீகன்பால்டு அவர்களுக்கு தரங்கம்பாடியில் மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?*



2000 நவம்பர் 10]

*விடை—*

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*அரசின் பரிசீலனையில் இல்லை.*

85—

### தேசப் பற்று

**வினா 30491—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திரைப்படங்களில் தேசப்பற்று உணர்வை தூண்டக் கூடிய நிகழ்ச்சிகளை இடம்பெறச் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*விடை—*

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*திரைப்படங்களில் தேசப்பற்று உணர்வை தூண்டக் கூடிய நிகழ்ச்சிகளை இடம்பெறச் செய்யும் பொறுப்பு அரசிடம் இல்லை.*

86—

### கட்டட வசதி

**வினா 29358—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பரமக்குடியில் இயங்கிவரும் கால்நடை துணை இயக்குநர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பரமக்குடியில் துணை இயக்குநர் அலுவலகம் இல்லை. பரமக்குடி கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் 14-11-1997 முதல் வாடகைக் கட்டடத்தில் ரூ. 4,000-க்கு இயங்கி வருகிறது.

(ஆ) சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

87—

### ஒட்டகங்கள் வளர்ப்பு

**வினா 29460—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஒட்டகங்கள் வளர்க்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஒட்டகங்கள் தற்சமயம் உள்ளன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் இத்துறையின் கட்டுப்பாட்டில் ஒட்டகங்கள் வளர்க்கப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

88—

### புதிய திட்டங்கள்

**வினா 36235—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

கால்நடைகளின் மேம்பாட்டுக்காக அரசு என்னென்ன புதிய திட்டங்களைக் கையாண்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

1. தமிழ்நாட்டிலுள்ள கால்நடைகளின் நலனை பாதுகாக்கவும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 18-1-2000 அன்று முதன் முதலாக திருக்கழுக்குன்றத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குக்கிராமங்களிலும் உள்ள கால்நடைகள் அனைத்தும் பஞ்சாயத்து யூனியனில் மாதாமாதம் நடைபெறும் கால்நடை முகாம்கள் மூலம் தேவையான சிகிச்சையும் கால்நடை வளர்ப்பு, நோய் பாதுகாப்பு முறைகள் போன்றவற்றை அறியவும் வகை செய்யப்படுகின்றது.

3. தென் மாவட்டங்களில் உள்ள கால்நடைகளின் தரத்தினை உயர்த்தவும் மற்றும் தென் மாவட்டங்களின் வளர்ச்சி திட்டம் தொடர்பாக நான்கு புதிய திட்டங்களை வகுத்துள்ளது. அவையாவன:—

(அ) ஆறு மாத கால 'செவக்லா' கிடா செம்மறி ஆட்டுக் குட்டிகள் விநியோகித்தல்.

(ஆ) ஆடு வளர்ப்போருக்கு பயிற்சித் திட்டம்.

(இ) நீல நாக்கு நோய்க்கான மண்டல ஆய்வுக்கூடம் சென்னையில் நிறுவுதல்.

(ஈ) கிரிராஜா கோழிகள் குறைந்த விலையில் வழங்கல்.

89—

### மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா 36466—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சித்திரக்குடி ஊராட்சியிலுள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கும் கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*விடை*—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கும்பொழுது சித்திரக்குடி கிளை நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**90**—

### பட்டா வழங்குதல்

**வினா 12880—திரு. மு. பன்னீர் செல்வம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி நகரத்தில் 40 அருந்ததியர் சமூகத்தினருக்குப் பட்டா வழங்க புல எண் 288-பி (R.S.No. 288-B)-இல் 2.50 ஏக்கர் புஞ்சை நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும் பட்டா வழங்கப்படாததை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

*விடை*—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி நகரம் புல எண் 288/3/பி1-ல் 1.01.0 ஹெக்டேர் (2 ஏக்கர் 40 சென்ட்) புஞ்சை நிலம் 1998-99 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் நில எடுப்புச் சட்டம் 31/78-ன்படி கையகப்படுத்தப்பட்டு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது.





**91**—

### மாணவியர் விடுதி அமைத்தல்

**வினா 13465—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல் மலையனூர் தொகுதி, மேல் மலையனூர் ஒன்றியத்தில் உள்ள அவலூர்பேட்டையில் மாணவியர் விடுதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

*விடை*—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

மாநிலத் திட்டக் குழு புதிய விடுதிகள் ஏதும் தோற்றுவிக்கத் தேவையில்லை என்றும், தற்போதுள்ள விடுதிகளை சரிவர பராமரிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளதால், அவலூர்பேட்டையில் மாணவியர் விடுதி ஏதும் தற்போது தொடங்க இயலாது.

**92**—

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 23572—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 1997-98 ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்காக வீட்டுமனைப் பட்டா எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது?

*(ஆ)* அதில் சேலம் மாவட்டத்தில் எத்தனை பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்காக 1,76,327 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) அதில் சேலம் மாவட்டத்தில் மட்டும் 11,811 இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**93—**

### சமுதாயக்கூடம் அமைத்தல்

**வினா 23644—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், இராவுசாப்பட்டி கிராமம் ஆதிதிராவிடர் தெருவில் ஒரு சமுதாயக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

முன்னுரிமை, நிதி நிலைமை தேவைகளுக்கேற்ப தஞ்சாவூர் மாவட்டம், இராவுசாப்பட்டி கிராம ஆதிதிராவிடர் தெருவில் ஒரு சமுதாயக்கூடம் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**94—**

### சமுதாயக்கூடம் அமைத்தல்

**வினா 23645—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கறம்பக்குடி ஒன்றியம், காட்டாத்தி ஊராட்சியில் ஒரு சமுதாயக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கறம்பக்குடி ஒன்றியம், காட்டாத்தி ஊராட்சி, காவிரி மேட்டூர் பாசன வசதி பெறும் கிராமமாக இருப்பதாலும், அங்கு சமுதாயக்கூடம் கட்டுவதற்கு தகுதியான புறம்போக்கு நிலம் இல்லை என்பதாலும், காட்டாத்தி ஊராட்சியில் சமுதாயக்கூடம் கட்டித்தர இயலாது.

**95—**

### ஆதிதிராவிடர் தெருவில் சமுதாயக்கூடம்

**வினா 24160—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், மணிக்கிரான் விடுதி கிராமத்தில் ஆதிதிராவிடர் தெருவில் ஒரு சமுதாயக்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

முன்னுரிமை, நிதி நிலைமை மற்றும் தேவைக்கேற்ப பின்வரும் ஆண்டுகளில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், மணிக்கிரான் விடுதி கிராமத்தில், ஆதிதிராவிடர் தெருவில் ஒரு சமுதாயக்கூடம் கட்டித் தர அரசு பரிசீலனை செய்யும்.

**96—**

### பள்ளிக்குக் கட்டடம்

**வினா 21497—திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

வரகூர் தொகுதி, குன்னம் வட்டம், பாடலூர் ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பாடலூர் கிராமம் ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி அரசு கட்டடத்தில் இயங்குகிறது. இப்பள்ளியின் ஒரு கட்டடத்தின் மேற்கூரைப் பகுதி இடிந்து விட்டது. இப்பகுதியினைக் கட்ட நடப்பு நிதியாண்டில் பள்ளிகள் பராமரிப்பிற்கான ஒதுக்கீட்டில் சிறப்பு முன்னுரிமை அளித்து பணி மேற்கொள்ளும்படி பெரம்பலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

**97—**

**சமுதாயக்கூடம்**

**வினா 26556—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், நீலகிரி ஊராட்சி, மனோஜிப்பட்டி தெற்கு ஆதிதிராவிடர் தெருவில் ஒரு சமுதாயக்கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

முன்னுரிமை, நிதிநிலைமை மற்றும் தேவைக்கேற்ப பின்வரும் ஆண்டுகளில் தஞ்சாவூர் மாவட்டம், மனோஜிப்பட்டி தெற்கு ஆதி திராவிடர் தெருவில் சமுதாயக்கூடம் அமைத்துத்தர அரசு பரிசீலனை செய்யும்.



2000 நவம்பர் 10]

**98—**

**பள்ளிக்கூடம்**

**வினா 27017—திரு. டி. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கடையாலுமூடு பேரூராட்சி பழங்குடியினர் வாழும் வட்டப்பாறை பகுதியில் பழங்குடியினரின் பிள்ளைகள் படித்து வந்த பள்ளிக்கூடத்தை திரும்பக் கட்ட அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

(ஆ) அதற்கான நிதி ஒதுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கடையாலுமூடு பேரூராட்சி வனச் சரகத்திற்கு உட்பட்ட இடமாகும். இப்பகுதியில் கானி மலைவாழ் நிறுவனத்தினர் மற்றும் மலைவாழ் பொதுமக்களால் நடத்தப்பட்டு வந்த நர்சரி பள்ளி 1994-ல் நிறுத்தப்பட்டது. இப்பகுதியில் புதிய உண்டு உறைவிடப் பள்ளி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**99—**

**பட்டா வழங்குதல்**

**வினா 27321—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குப்பட்டி கிராமம், மூங்கிலேரிப்பட்டி காலனியில் பட்டா வழங்குவதற்கான முன்மொழிவுகள் நிலுவையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குப்பட்டி தெற்கு கிராமம் மூங்கிலேரிப்பட்டியில் 57 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் ஓமலூர் தனி வட்டாட்சியர் மூலம் வழங்கப்பட்டுவிட்டன.

100—

**விட்டுமனைப் பட்டா**

**வினா 29595—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குப்பட்டி தெற்கு கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக சர்வே எண் 240/2பி, 375/1ஏ ஆகியவற்றில் நிலம் கையகப்படுத்தி மூன்று ஆண்டுகள் கடந்தும் இன்னும் வீட்டுமனைப் பட்டா வழங்காமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கொங்குப்பட்டி தெற்கு கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு மூங்கிலேரிப்பட்டியில் வசிக்கும் 57 ஆதிதிராவிடர்களுக்கும் மற்றும் எட்டுக்குட்டப்பட்டியில் வசிக்கும் 30 ஆதிதிராவிடர்களுக்கும் ஓமலூர் தனி வட்டாட்சியர் மூலம் பட்டாக்கள் வழங்கப்பட்டன.



2000 நவம்பர் 10]

## ஒன்பதாம் பட்டியல்

1—

**கூடுதல் பள்ளிக் கட்டடம்**

**வினா 17519—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, கோணகாபாடி ஊராட்சியிலுள்ள கே.ஆர். தோப்பூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கோணகாபாடி ஊராட்சியிலுள்ள கே.ஆர். தோப்பூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டிக்கொடுப்பது சார்பாக, இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் இசைவு பெறப்படின் இப்பள்ளிக்கு கூடுதல் கட்டட வசதி செய்து தரப்படும்.

2—

**தலைமை ஆசிரியர் நியமனம்**

**வினா 31395—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்கபுரத்தில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் தொடக்கப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர் நியமனம் செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 48, பள்ளிக் கல்வித் துறை, நாள் 19-2-1999-ல் தலைமை ஆசிரியர் பணியிடம் அனுமதிக்கப்பட்டு அப்பணியிடத்தில் 23-7-1999 அன்று தொடக்கக் கல்வி தலைமை ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டு அன்றுமுதல் தலைமை ஆசிரியர் பணிபுரிந்து வருகிறார்.

3—

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 31710—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி மேலச் செங்கோட்டை அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 165, பள்ளிக் கல்வித் துறை, நாள் 14-6-2000-ல் 2000-2001 ஆம் கல்வி ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம், மேலச் செங்கோட்டை அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4—

**நூலகக் கட்டடம்**

**வினா 32236—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் நகரில் புதிய நூலகக் கட்டடம் கட்டப்பட்ட பின்பும், ஆபத்தான நிலையிலுள்ள பழைய நூலகக் கட்டடம் இடிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்ட பொதுப் பணித் துறை செயற் பொறியாளரிடமிருந்து உரிய சான்றிதழை விரைவாகப் பெற்று உடனடியாக பழைய கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் துரிதப்படுத்துமாறும் இதனால் பொதுமக்களுக்கோ அவர்களின் உடமைகளுக்கோ எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5—

**வகுப்பறை பழுதுபார்த்தல்**

**வினா 33601—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வேதியியல் வகுப்பு அறை பழுதடைந்துள்ளதால் அதனை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வேதியியல் ஆய்வக வகுப்பு அறைகளது மேல் தளம் பழுது பார்த்து சீர் செய்யும் பணிகளை நடப்பு நிதி ஆண்டில் மேற்கொண்டு முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 10

6—

## சிமெண்ட் கிராதிகள்

**வினா 34018—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பள்ளிக்கூட புதிய கட்டடங்களில் வகுப்பறைகளில் ஜன்னலுக்குப் பதிலாக சிமெண்டிலான கிராதி பொருத்தப்படுவதால் வகுப்பறைக்குள் வெளிச்சம், காற்று குறைந்து மாணவ மாணவியர்க்கு இடையூறு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) சிமெண்ட் கிராதிகள் பொருத்துவதை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) அரசு பள்ளி வகுப்பறை கட்டடங்களில் ஒருசிலவற்றில் மட்டும் ஜன்னலுக்குப் பதிலாக சிமெண்டிலான கிராதிகள் சிக்கன நடவடிக்கைக்காக தவிர்க்க இயலாத சூழ்நிலை ஏற்படின் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) சிமெண்ட் கிராதிகள் பொருத்துவதை தடை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

(இ) கேள்வி எழாது.

7—

## ஊர்ப்புற நூலகங்கள்

**வினா 34828—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் எவ்வளவு ஊர்ப்புற நூலகங்கள் உள்ளன?



2000 நவம்பர் 10]

(ஆ) எந்தெந்தப் பகுதியில் உள்ளன? மேலும் புதிய ஊர்ப்புற நூலகங்கள் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் ஊர்ப்புற நூலகங்கள் ஏதுமில்லை. ஆனால் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் மகுடஞ்சாவடியில் ஒன்றும், எடங்கணசாலையில் ஒன்றும் ஆக இரண்டு நூலகங்களும் நடுவனேரி என்ற இடத்தில் ஒரு பகுதி நேர நூலகமும் உள்ளன. கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கொங்கணாபுரம் கிராமத்திலும் ஒரு கிளை நூலகம் உள்ளது. மேலும் புதிய நூலகங்கள் திறக்கத் தேவையான கீழ்க்காணும் ஐந்து நிபந்தனைகளை ஊர்மக்கள் பூர்த்தி செய்யும் பட்சத்தில் முதலில் பகுதி நேர நூலகம் திறக்கப்படும். பின்னர் இது ஊர்ப்புற நூலகமாக உயர்த்த ஆவன செய்யப்படும்.

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

(2) பின்னர் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனை நூலக ஆணைக்குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

(3) ரூ. 2000 மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

(4) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ. 1,000 செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

8—

## கழிப்பிட வசதி

**வினா 35249—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், அங்கேரிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு போதுமான கழிப்பிட வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், அங்கேரிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கழிப்பிட வசதி செய்து கொடுப்பது சார்பாக, இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினரின் இசைவு பெறப்படின், இப்பள்ளிக்கு கழிப்பறை வசதி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

## முழு நேர ஆசிரியர்களாக மாற்றி அமைத்தல்

**வினா 36913—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், தந்தை பெரியார் பொறியியல் கல்லூரியில் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றும் ஏழு நபர்களை முழு நேர ஆசிரியர்களாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) வேலூர், தந்தை பெரியார் பொறியியற் கல்லூரியில் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றும் ஏழு நபர்களை முழு நேர ஆசிரியர்களாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



10—

## நிபந்தனையை தளர்த்துதல்

**வினா 14520—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு வழங்கப்படும் டீசல், பெட்ரோல் அளவுக்கு உள்ள நிபந்தனையை தளர்த்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மாவட்ட/வட்டார அரசு மருத்துவமனை ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு வழங்கப்படும் டீசல்/பெட்ரோல் அளவுக்கு உள்ள நிபந்தனையைத் தளர்த்தி 23-8-1999 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

11—

## அறுவை அரங்கு உதவியாளர் நியமித்தல்

**வினா 27129—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கு உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை விரைவாக நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அறுவை அரங்கு உதவியாளர் பணியிடம் 23-7-1999 முதல் நிரப்பப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்வி எழாது.

12—

**மருத்துவக் கல்லூரிகள்**

**வினா 28558—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய மருத்துவக் கழகத்தின் ஒப்புதல் கோரி, ஒப்புதல் எதிர் நோக்கி ஆரம்பிக்கப்படவுள்ள மருத்துவக் கல்லூரிகள் தமிழகத்தில் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகளின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திய மருத்துவக் கழகத்தின் ஒப்புதல் கோரி மற்றும் ஒப்புதல் எதிர்நோக்கி ஆரம்பிக்கப்படவுள்ள மருத்துவக் கல்லூரிகள் ஏதுமில்லை.

13—

**வழிகாட்டிகளை அமர்த்துதல்**

**வினா 32353—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) சென்னை பொது மருத்துவமனையில் நோயாளிகள் பல்வேறு மருத்துவப் பிரிவுகளுக்குச் செல்ல வழி தெரியாது தடுமாறுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நோயாளிகளுக்கு உதவ போதுமான வழி காட்டிகளை அரசு அமர்த்துமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற புறநோயாளிகள் பிரிவில் பொது மக்கள் நுழையும் வாயிலிலிருந்து அவர்கள் செல்ல வேண்டிய பல்வேறு பிரிவுகளுக்கு சிரமமின்றிச் செல்ல வழிகாட்டும் வகையில் கீழ்க்கண்ட முறையில் வண்ணக் கோடுகள் போடப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| சிவப்பு | : | அறுவை சிகிச்சைப் பிரிவு |
| பச்சை | : | ஆய்வகம் |
| ஆரஞ்சு | : | எக்ஸ்ரே |
| மஞ்சள் | : | மருந்தகம் |
| நீலம் | : | மருத்துவ சிகிச்சைப் பிரிவு |

மேலும் புற நோயாளிகள் பிரிவில் உள்ள வரவேற்பாளரும் நோயாளிகளுக்கு உரிய தகவல்களை தெரிவித்து வழிகாட்டி உதவி செய்யும் பணியினை கவனித்து வருகின்றனர்.

14—

**மலேரியா காய்ச்சலைத் தடுத்தல்**

**வினா 33700—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய மலேரியா காய்ச்சலால் இறந்தவர்கள் எவ்வளவு பேர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 10

(ஆ) மலேரியா காய்ச்சலை ஒழிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்னென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டு (ஏப்ரல் முதல் நவம்பர் 1998 முடிய) 51,97,032 குருதி ஆடிகள் பரிசோதனை செய்ததில் 46,984 மலேரியா நிகழ்வுகள் கண்டறியப்பட்டன. அதில் ஒரு இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. அது சி.எம்.சி. மருத்துவமனையில் என்று தெரியவந்துள்ளது.

(ஆ) மலேரியா காய்ச்சலை ஒழிக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:—

1. தீவிரக் கண்காணிப்பு மூலம் காய்ச்சல் கண்டவர்களுக்கு இரத்தத் தடவல்கள் எடுத்து அதில் மலேரியா நோய் கண்டறியப்பட்ட நபர்களுக்கு பூரண சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

2. மலேரியா நோய் அதிகமாகப் பரவ வாய்ப்புள்ள பகுதிகளில், எல்லா வீடுகளுக்கும் வீட்டினுள் மலேரியா நோய் பரப்பும் கொசுக்களை ஒழிக்க பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது.

3. இது தவிர, புகை மருந்தும் கொசுப்புழு தடுப்புப் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

4. மக்களுக்கு மலேரியா நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த மலேரியா எதிர்ப்பு மாதம் ஒவ்வொரு வருடமும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இது தவிர, நகர்ப்புறங்களில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் அந்தந்த மாநகராட்சியால் எடுக்கப்பட்டு வருகின்றன:—

1. மலேரியா நோய் அதிகமாகக் காணப்படும் பகுதிகளைக் கண்டறிந்து அந்தப் பகுதிகளுக்கு களப்பணியாளர்கள் ஒதுக்கீடு செய்து மலேரியா நோய்த் தடுப்புப் பணிகள் செவ்வனே செய்யப்பட்டு வருகின்றன.

2. காய்ச்சல் கண்டவர்களுக்கு உடனுக்குடன் இரத்தத் தடவல்கள் எடுத்து பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்க மலேரியா மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



3. கொசுக்கள் வளரும் இடங்கள், கிணறு, மேல்நிலைத் தொட்டிகள் போன்ற நீர்நிலைகளை கொசுக்கள் புகாவண்ணம் மூடுவது, தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

4. குடிசைப் பகுதிகளில் மலேரியா நோய் தடுப்புப் பணி செயல் திறனுடன் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

15—

### ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்பாடு செய்தல்

**வினா 34299—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்பாடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு கட்டடத்தில் செயல்படுகிறது. மேலும் இரண்டு மருத்துவ அலுவலர் குடியிருப்புகளும் உள்ளன. பொதுப் பிரிவு குடும்ப நலப் பிரிவு கட்டடங்களும் உள்ளன. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தால் பயனடையும் வெளிப்புற நோயாளிகளின் அடிப்படையில் தற்போதுள்ள வசதிகளே போதுமானதாகும். எனவே, இதனை மேம்படுத்திடும் திட்டம் ஏதுமில்லை.

16—

### அவசரகால ஊர்தி ஓட்டுநர்கள்

**வினா 34570—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அவசரகால ஊர்திகள் வழங்கப்பட்டு இதுவரை ஓட்டுநர்கள் நியமிக்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக ஓட்டுநர்கள் நியமிக்கப்படுவார்களா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசு மருத்துவமனைகளுக்கு அவசரகால ஊர்திகள் வழங்கப்பட்டு, 78 ஓட்டுநர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, அவை அனைத்தும் நிரப்பப்பட்டு விட்டன. மேலும் அவசரகால ஊர்திகள் பணியில் இருக்கும் மற்ற ஓட்டுநர்களைக் கொண்டு தங்கு தடையின்றி இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

17—

## பதிவறை எழுத்தர் நியமித்தல்

**வினா 34866—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு மருத்துவமனையில் பதிவறை எழுத்தர் (Record Clerk) பணியிடம் காலியாக உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பதிவறை எழுத்தரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் பதிவறை எழுத்தர் பணியிடம் 26-2-2000 முதல் நிரப்பப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

18—

## மின்வசதி

**வினா 35575—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கல்விராயன்பேட்டை ஊராட்சிக்கு உட்பட்ட கல்விராயன்பேட்டை லெட்சுமிபுரம் நடுத்தெருவிற்கு ஒரு மின் கம்பம் நட்டு மின் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், கல்விராயன்பேட்டை ஊராட்சிக்கு உட்பட்ட கல்விராயன்பேட்டை லெட்சுமிபுரம் பகுதியில் அனைத்துத் தெருக்களுக்கும் மின் விஸ்தரிப்பு செய்யப்பட்டுள்ளது. எந்த ஒரு பகுதியிலும் மேற்கொண்டு மின் விஸ்தரிப்புப் பணி செய்வதற்கு எந்த விண்ணப்பங்களும் பெறப்படவில்லை. மேலும் மின் இணைப்பு கேட்டு தனி நபரோ அல்லது தெருவிளக்கு கேட்டு பஞ்சாயத்து தலைவரோ விண்ணப்பம் கொடுத்தால், உடன் மின் இணைப்பு வழங்கிட ஆவன செய்யப்படும்.

19—

## மின்னழுத்தம் மேம்படுத்துதல்

**வினா 36217—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், சில்லரைபுரவு ஊராட்சி குருக்கிட்டானூரில் அமைந்துள்ள மின்மாற்றியை கூடுதல் சக்தி மின்மாற்றியாக மாற்றித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தாலுகா, சில்லரைப்புரவு ஊராட்சிக்குட்பட்ட குருக்கிட்டானூரில் ஏற்கெனவே 100 கே.வி.ஏ. மின் திறனுடைய மின்மாற்றி உள்ளது. மேற்படி பகுதியின் மின்னழுத்தத்தை மேம்படுத்த மேலும் ஒரு மின்மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. அனுமதி வழங்கப்பட்டவுடன், விரைவில் இப்பணி முடிக்கப்படும்.

20—

### மின் அழுத்தம் சீர் செய்தல்

**வினா 36218—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி 66/11 கி.வோ. உப மின் நிலையத்திற்கு வந்து சேர வேண்டிய 10 கி.வா.ஆ. பதிலாக 7 முதல் 8 கி.வா.ஆ. மின் திறனே கிடைப்பதால் மின் அழுத்தக் குறையும், அடிக்கடி மின்தடையும் ஏற்படுவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தென்காசி உப மின் நிலையத்திற்கு 66 கே.வி. மின்சாரம் சேர்வலார் புனல் மின் நிலையத்திலிருந்து பெறப்படுகின்றது. தென்காசி 66/11 கே.வி. உப மின் நிலையத்தில் இரண்டு 5 எம்.வி.ஏ. மின்மாற்றிகள் உள்ளன. இரண்டு மின்மாற்றிகளும் உயர்ந்த அளவு மின் அழுத்த டேப்பில் வைக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் மாலை 7.00 மணி முதல் 8.30 மணி வரை 11 கி.வோ. உயர் மின் அழுத்தம், 10 கி.வோ. ஆக இருப்பதால் தாழ்வு மின் அழுத்தம் 190-200 வோல்டாக உள்ளது. ஆகவே இத்துணை மின் நிலையத்தை 110 கி.வோ. மின் நிலையமாக மாற்றி அமைப்பது குறித்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.



21—

### மின் இணைப்பு

**வினா 36246—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியிலுள்ள குடிசைகளில் வசிப்போர் மின் இணைப்புக் கோரி அனுப்பிய மனுக்களில் எத்தனை மனுக்கள் பைசல் செய்யப்பட்டு மின் இணைப்பு அல்லது ஒரு விளக்கு கொடுக்கப்பட்டது?

(ஆ) மின் இணைப்பு வேண்டி நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் குடிசைகளில் வசிப்போர் மின் இணைப்புக் கோரி அனுப்பிய மனுக்களின் பேரில் சேலம் மின் பகிர்மான வட்டத்தில் 2,494 மின் இணைப்புகளும், மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில் 2,825 மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) சேலம் மின் பகிர்மான வட்டத்தில் 214 விண்ணப்பங்களும் மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில் 237 விண்ணப்பங்களும் நிலுவையில் உள்ளன.

22—

### மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகம்

**வினா 36310—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை, வீரசிகாமணி, ஊத்துமலை ரெட்டியார்பட்டி, புதியதாக அமைக்கப்படும் பாவூர்சத்திரம் உப மின் நிலையங்களை உள்ளடக்கி சுரண்டையில் மின் வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை, வீரசிகாமணி, ஊத்துமலை ரெட்டியார்பட்டி, புதியதாக அமைக்கவுள்ள பாவூர்சத்திரம் உப மின் நிலையங்களை உள்ளடக்கி சுரண்டையில் மின் வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்கான தேவை தற்சமயம் இல்லை.

**23—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 37429—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் (2000-2001) தொடங்கப்பட உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அதில் எந்தெந்த ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப தோற்றுவிக்கப்படுகின்றன.





சேலம் மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் தொகைக்கு ஏற்ப தற்பொழுது 70 ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமான அளவில் செயல்படுவதால், சேலம் மாவட்டத்தில் 2000-2001 நிதியாண்டில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம் இல்லை.

**24—**

### ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா 37437—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வரும் நிதியாண்டில் (2000-2001) தொடங்கப்பட உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாவட்ட வாரியாக எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அதில் எந்தெந்த தொகுதியில் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், எழுமாத்தூர் தொகுதியில் எழுமாத்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் 2000-2001 ஆம் நிதியாண்டில் தொடங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் 47 ஆரம்ப சுகாதார நிலையங்களும், தருமபுரி மாவட்டத்தில் 69 ஆரம்ப சுகாதார நிலையங்களும் மக்கள் தொகைக்கேற்ப போதிய அளவில் செயல்படுவதால் 2000-2001 ஆம் நிதியாண்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டமில்லை.

**25—**

### மருத்துவப் பரிசோதனை

**வினா 37581—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

"வருமுன் காப்போம்" திட்டத்தின்கீழ் ஏழை எளிய மக்களுக்கு இதுவரை எத்தனை பேருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டவர்கள் விவரம் பின்வருமாறு (12-6-2000 வரை):—

நடந்த முகாம்கள்—3,341

மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டவர்கள்:—

| | | |
|---|---|---|
| ஆண்கள் | - | 9,95,544 |
| பெண்கள் | - | 12,30,856 |
| குழந்தைகள் | - | 7,90,401 |
| மொத்தம் | - | **30,16,801** |

26—

## மின் உற்பத்தி திட்டங்கள்

**வினா 37959—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் வாரியத்தின் மூலம் எடுக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலுள்ள மின் உற்பத்தி திட்டங்கள் எத்தனை?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 8 நீர் மின் உற்பத்தி திட்டங்கள் இதுவரை தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் எடுக்கப்பட்டு, முக்கியமாக வனத் துறையின் எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டுள்ளன.



2000 நவம்பர் 10]

(ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள நீர் மின் திட்டங்கள், அதற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தால் கைவிடப்பட்டன:—

| | |
|---|---|
| 1. மேல் அமராவதி திட்டம்/ திண்டுக்கல் மாவட்டம் (30 மெ.வா.) | வனத் துறையின் எதிர்ப்பின் காரணமாக. |
| 2. மேல் தாமிரபரணி திட்டம், திருநெல்வேலி மாவட்டம் (145 மெ.வா.) | வனத் துறையின் எதிர்ப்பின் காரணமாக. |
| 3. மணிமுத்தாறு திட்டம், திருநெல்வேலி மாவட்டம். (45 மெ.வா.) | வனத் துறையின் எதிர்ப்பின் காரணமாக. |
| 4. தாமிரபரணி அணை, திருநெல்வேலி மாவட்டம் (40 மெ.வா.) | உச்ச மின் உற்பத்தி தேவைப்படாததால். |
| 5. மோயாறு இறுதி நிலை, கோயம்புத்தூர் மாவட்டம் (50 மெ.வா.) | வனத் துறையின் எதிர்ப்பின் காரணமாக. |
| 6. கல்லார்பள்ளம் மின் திட்டம், நீலகிரி மாவட்டம் (6 மெ.வா.) | பொதுமக்களின் எதிர்ப்பின் காரணமாக. |
| 7. அக்காமலை மின் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், (20 மெ.வா.) | வனத் துறையின் எதிர்ப்பின் காரணமாக. |
| 8. நீர்வீழ்ச்சி மின் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டம். (5 மெ.வா.) | வனத் துறையின் எதிர்ப்பின் காரணமாக. |

27—

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா 38059—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பகுதி 1-ல் போதுமான தெரு விளக்குகள் இல்லாததும், இருக்கின்ற விளக்குகளும் பெரும்பாலும் எரியாமல் இருண்டு கிடப்பதும் பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரி பகுதி 1-ல் 30-6-2000 தேதியில்:-

| | | |
|---|---|---|
| 4 அடி குழல் விளக்குகள் | - | 350 எண்கள் (40 வாட்ஸ்) |
| சோடியம் ஆவி விளக்குகள் | - | 11 எண்கள் (250 வாட்ஸ்) |
| சோடியம் ஆவி விளக்குகள் | - | 13 எண்கள் (70 வாட்ஸ்) |
| ஆக மொத்தம் விளக்குகள் | - | 374 எண்கள் உள்ளன. |

இவற்றில் 4 அடி குழல் விளக்குகள் 10 எண்கள் மட்டுமே எரியாத நிலையில் உள்ளன.

பிரதி வாரம் புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளில் இந்த தெரு விளக்குகளை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 4 அடி குழல் விளக்குகள் கூடுதலாக 4 எண்கள் பொருத்தி விரிவாக்கப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. இவற்றில் குழல் விளக்குகள் இன்னும் ஒரு வாரத்திற்குள் பொருத்தப்படும்.

28—

### மின் விளக்கு

**வினா 38067—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் இருந்து கொணவட்டம் வரை பைபாஸ் சாலையில் மின் விளக்கு இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின் விளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பைபாஸ் சாலையில் மின் விளக்குகள் அமைக்க வேலூர் நகராட்சியிடமிருந்து விண்ணப்பம் பெற்ற பிறகு மின் விளக்குகள் பொருத்த இந்த நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

29—

### மின் விளக்குகள் அமைத்தல்

**வினா 38974—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, பாலமதி மற்றும் கெங்காநத்தம் ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் பாதைகளுக்கு மின் விளக்குகள் பொருத்த வேண்டிய அவசியத்தை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின் சாரத் துறை அமைச்சர்:**

பாலமதி மற்றும் கெங்காநத்தம் கிராமத்திற்குச் செல்லும் பாதையில் மின்விளக்குகள் பொருத்த இதுவரையில் விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. மேலும் ஊராட்சி மூலம் விளக்குகள் அமைக்க விண்ணப்பங்கள் பெறப்பட்ட பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

### கடை வளாகக் கட்டடப் பணி

**வினா 10332—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகராட்சியில் பழைய, புதிய பேருந்து நிலையங்களில் நடைபெற்று வந்த கடை வளாகக் கட்டடப் பணி நின்றுள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2000 நவம்பர் 10

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பவானி நகராட்சியில் பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் வணிக வளாகக் கட்டடப் பணிகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்பட்டு விட்டன.

31—

**குடிநீர் விநியோகம் செய்தல்**

**வினா 14571—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரி பேரூராட்சியில் குடிப்பதற்கு தகுதியற்ற குடிநீர் என்று சான்று வந்த நீரை குடிநீராக தொடர்ந்து விநியோகம் செய்வதை அரசு அறியுமா?

(ஆ) புதிய குடிநீர்த் திட்டத்தை அரசு எப்போது உருவாக்கும்?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சிக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் வேதியியல் பரிசோதனையின்படி தீமை பயக்கும் நுண்ணுயிர் கிருமிகள் (Bacterial Contamination) அளவு வரையறுக்கப்பட்ட அளவிற்கும் மிகுதியாக இருப்பது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு தேவையான அதிக குளோரின் கலந்து வழங்கும்படி பேரூராட்சி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) வேலூர் நகராட்சி, சத்துவாச்சாரி நகரப் பேரூராட்சி மற்றும் 12 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசாணை நிலை எண் 106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ-1) துறை, நாள் 11-8-2000-ல் நிர்வாக ஒப்புதல்



2000 நவம்பர் 10]

வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

32—

**சிறு பாலங்கள்**

**வினா 15712—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி பேரூராட்சி வயக்காடு ஆற்றில் சிறுபாலங்கள் மூன்று கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காடையாம்பட்டி பேரூராட்சி பகுதியில் ஓடுகின்ற சரபங்கா நதியின் குறுக்கே 1999-2000 ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ.1.86 இலட்சம் மதிப்பீட்டில் சிறு பாலம் ஒன்று கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளது. வயக்காடு பகுதியில் வெட்டுக்காடு செல்லும் வழியில் ஒரு பாலமும் ஆயிகவுண்டன்தோட்டம் செல்லும் வழியிலும் சிறுபாலம் கட்ட வேண்டியுள்ளது. பேரூராட்சியில் போதிய நிதி வசதியில்லை என்பதால் பணி எடுத்துக் கொள்ளவில்லை.

33—

**பணியாளர் நியமித்தல்**

**வினா 29269—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சி, கீழப்புலியூர் மகாத்மா காந்தி பூங்காவை பராமரிக்கவும், பூங்காவிற்கு பணியாளர் நியமிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகராட்சி, கீழப்புலியூர் மகாத்மா காந்தி பூங்காவில் சுற்றுப்புறச் சூழல் பசுமைப்படுத்துதல் திட்டத்தின்கீழ் சன் பேப்பர் நிறுவனத்தின் மூலம் 62 மரக்கன்றுகள் நகராட்சியால் நடப்பட்டுள்ளன. நகராட்சியின் நிதிப் பற்றாக்குறை காரணமாக கூடுதல் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. பூங்காவினுள் நடைபாதை அமைத்தல் மற்றும் மின்விளக்கு வசதிகள் செய்தல் போன்ற பணிகள் நகராட்சி நிர்வாக ஆணையரால் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு மேற்கொள்ளப்படும். பூங்காவினை பராமரிக்க தோட்டக்காரர் பணியிடம் தோற்றுவிக்க நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

34—

## பணி ஒப்பந்தங்கள்

**வினா 29562—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பணிகளுக்கான பணி ஒப்பந்தங்கள் எந்த முறையில் பெறப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1-4-1999 முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்டப் பணிகளுக்கு ஒட்டுமொத்த ஒப்பந்த முறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட வேண்டும் என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இம்முறையில் கம்பி, சிமெண்ட் குழாய்கள், மோட்டார்கள் போன்ற குடிநீர்த் திட்டத்திற்கு தேவைப்படும் அனைத்து பொருட்களையும் தன் முதலீட்டிலேயே வாங்கி, தன் சொந்தப் பொறுப்பிலேயே திட்டத்தினை முழுமையாக முடித்து, வாரியத்தின் திருப்திக்கு ஒரு வருட பராமரிப்பு செய்த பிறகு ஒப்பந்தக்காரர் மேற்படி திட்டத்தினை வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும்.



35—

## கூடுதல் பள்ளிக் கட்டடம்

**வினா 31350—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், ஸ்ரீராமபுரம் ஊராட்சி, தேவிநாயக்கன்பட்டிக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஒன்றியம் ஸ்ரீராமபுரம் ஊராட்சி, தேவிநாயக்கன்பட்டியில் கூடுதல் பள்ளிக் கட்டடம் நடப்பாண்டில் (2000-2001) ஏதேனும் ஒரு திட்டத்தில் ஒதுக்கீடு பெறப்பட்டு பள்ளிக் கட்டடம் கட்டப்படும்.

36—

## கூடுதல் பள்ளிக் கட்டடம்

**வினா 31434—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், எரியோடு பேரூராட்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு சொந்தமான அரசு நிலத்தில் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், எரியோடு பேரூராட்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குச் சொந்தமான அரசு நிலத்தில் கூடுதல் பள்ளிக் கட்டடம், நடப்பாண்டில் (2000-2001) ஏதேனும் ஒரு திட்டத்தில் ஒதுக்கீடு பெறப்பட்டு ரூ.2.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**37—**

**வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள்**

**வினா 33100—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் பட்டியல் அரசு புதிதாகக் கணக்கெடுக்க உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தக் கணக்கெடுப்பு எப்பொழுது முடியும்?

(இ) வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களின் விவரங்கள் குறித்து 1998-99 ஆம் ஆண்டில் புதியதாகக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

(ஆ) மேற்கண்ட கணக்கெடுப்புப்பணி 1999 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முடிவடைந்தது.

(இ) கணக்கெடுத்த விவரங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது தெரிய வருகிறது.



2000 நவம்பர் 10]

**38—**

**பள்ளிக் கட்டடங்கள்**

**வினா 33385— திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் சேலம் மாவட்டத்தில் எத்தனை உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டன?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு ரூபாய்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சித் துறை மூலம் சேலம் மாவட்டத்தில் 56 உயர்நிலைப் பள்ளிகள் ரூ.202.825 இலட்சம் மதிப்பிலும், 13 மேல்நிலைப் பள்ளிகள் ரூ.47.400 இலட்சம் மதிப்பிலும் கட்டப்பட்டுள்ளன.

**39—**

**நகராட்சி குடிநீர்**

**வினா 33410— திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் நகரில் சுந்தரவரதராஜுலு நகருக்கு கிராமக் குடிநீர்த் திட்டத்தை மாற்றி நகராட்சி குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஒன்றியம், அம்மனூர் ஊராட்சியைச் சேர்ந்த சுந்தரவரதராஜுலு நகருக்கான குடிநீர்த் திட்டம்

[2000 நவம்பர் 10

ரூ.4.14 இலட்சம் மதிப்பீட்டில் (குறைந்தபட்ச தேவை திட்டத்தின்கீழ்) சென்ற நிதியாண்டில் (1999-2000) எடுத்துக்கொள்ளப்பட்டது.

இக்குடிநீர்த் திட்டத்தின் பணிகளில் இதுவரை மின் அறை கட்டும் பணி, நீரேற்றுக் குழாய் பதிக்கும் பணி மற்றும் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணி ஆகியவை முடிவடைந்துள்ளன. இத்திட்டத்திற்கான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி, பொது நல்லிகள் அமைக்கும் பணி மற்றும் நீர் இறைப்பான் பொருத்தும் பணி ஆகியவை முன்னேற்றத்தில் உள்ளன.

இத்திட்டம் 9/2000-க்குள் முழுவதுமாக முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

40—

### பள்ளிக் கட்டட நிதி

**வினா 33819—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், முத்தணம்பாளையம் ஊராட்சி, முத்தணம் பாளையத்தில் தொடக்கப் பள்ளிக் கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், முத்தணம்பாளையம் ஊராட்சி, முத்தணம்பாளையத்தில் தொடக்கப்பள்ளிக் கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி இடம் தேர்வு செய்வதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பயன்படுத்தப்படாமல் குப்பாண்டாம்பாளையத்திற்கு மாற்றி பயன்படுத்தப்பட்டது.



2000 நவம்பர் 10]

41—

### குடிநீர் விநியோகம்

**வினா 33902—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் குடிநீர் விநியோகம் இரவு நேரங்களில் விநியோகிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 27.20 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட பெரிய நகரம். இதில் குடிநீர் விநியோகப் பகிர்மானக் குழாய் சுமார் 5 கிலோ மீட்டர் நீளம் வரை பல இடங்களில் உள்ளது. குடிநீர் விநியோகம் சீராக இருக்கும்பொருட்டு நகரம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் காரணமாக இரவு நேரங்களிலும் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டிய நிலை உள்ளது.

42—

### குடிநீர் வழங்குதல்

**வினா 34126— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 49-வது வார்டு பெரிச்சிபாளையம் கிழக்கு 3-வது வீதியில் குடிநீர்குழாய் உடைந்து குடிநீர் சரியாக வருவதில்லை என அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம் 49-வது வார்டு பெரிச்சிபாளையம் கிழக்கு 3-வது வீதியில் உடைந்த குடிநீர் குழாய் சரி செய்யப்பட்டு தற்பொழுது குடிநீர் வரத்து சரியாக உள்ளது.

43—

**வளர்ச்சிப் பணிகள்**

**வினா 34201— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சியின் வளர்ச்சிப் பணிகள் வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி முறையில்தான் ஒதுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 1997-98 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பணிகளின் மதிப்பு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் நகராட்சியின் வளர்ச்சிப் பணிகள் வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி முறையில்தான் வழங்கப்படுகின்றன.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் பொது நிதியிலிருந்து ரூபாய் 2 கோடி, 10-வது நிதிக்குழு பரிந்துரையின்படியான ஒதுக்கீட்டிலிருந்து ரூ.14.30 இலட்சம் தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.11.50 இலட்சம் விற்பனை வரி மீதான மிகுவரி ஒதுக்கீட்டிலிருந்து ரூ.34.01 இலட்சம் ஆக மொத்தம் ரூ.259.81 இலட்சம் வளர்ச்சிப் பணிகளுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டது.



2000 நவம்பர் 10]

44—

**சாக்கடை வசதி**

**வினா 34220—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 12-வது வார்டு, கட்டபொம்மன் நகர் பாப்பண்ணா நகர், அருள்ஜோதி நகர், பகுதிகளில் சாக்கடை நீர் தேங்கி நிற்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 12-வது வார்டு கட்டபொம்மன் நகர், பாப்பண்ணா நகர், அருள்ஜோதி நகர் பகுதிகளுக்கான சாக்கடை வசதித் திட்டம் 2001-2002 ஆம் ஆண்டு நகரக் கூட்டாண்மைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

45—

**கழிவுநீர் பணிகள்**

**வினா 34221— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 17-வது வார்டு பிரிட்ஜ்வே காலனி விரிவுப் பகுதிகளில் அருகிலுள்ள வார்டுகளில் இருந்து வரும் கழிவுநீர் வீடுகளில் தேங்கி நிற்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 17-வது வார்டு பிரிட்ஜ்வே காலனி விரிவுப் பகுதிகளில் அருகிலுள்ள வார்டுகளில் இருந்துவரும் கழிவுநீர் தேங்குவதைத் தடுப்பதற்கான பணிகள் 2000-2001 ஆம் ஆண்டு கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட உள்ளன.

46—

**அடிப்படை வசதிகள்**

**வினா 34224— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 21-வது வார்டு, திருமூர்த்தி நகர், துவாரகை நகர், என்.எம்.எஸ். நகர், சண்முகா நகர், சிந்தன் நகர், புத்துரான் தோட்டம், ராஜீவ் நகர், சுப்பராயன் வீதி, மாரியம்மன் கோயில் வீதி, நேரு நகர், அம்மன் நகர் ஆகிய பகுதிகளுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு அடிப்படை வசதி செய்துதர அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 21-வது வார்டு, திருமூர்த்தி நகர், துவாரகை நகர், எம்.ஜி.ஆர். நகர் என்.எம்.எஸ். நகர், சண்முகா நகர், சிந்தன் நகர், புத்துரான் தோட்டம், ராஜீவ் நகர், சுப்பராயன் வீதி, மாரியம்மன் கோயில் வீதி, நேரு நகர், அம்மன் நகர் ஆகிய பகுதிகள் அனைத்தும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் ஆகும். ஆகவே அங்கு அடிப்படை வசதிப் பணிகள் செய்ய நகராட்சியால் இயலாது.



2000 நவம்பர் 10]

47—

**நீர்க் கசிவு**

**வினா 34484—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், 1-வது வார்டு பாவேந்தன் பாரதிதாசன் நகரின் குடியிருப்பில் உள்ள வீடுகளில் நீர்க் கசிவு நிரந்தரமாக இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர், 1-வது வார்டு பாவேந்தன் பாரதிதாசன் நகர் பகுதியில் உள்ள சாலைகள் மற்றும் காலியிடங்கள் அனுமதியற்ற மனைப் பிரிவில் உள்ளன. எனவே திருப்பூர் நகராட்சி மூலம் இப்பகுதியில் உள்ள நீர்க்கசிவு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை.

48—

**சாலை வசதி**

**வினா 34959—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 25-வது வார்டு குமரப்பபுரம் பகுதிகள், கல்லம்பாளையம் ரயில்வே லைன் பகுதிகளில் முறையான சாலை வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு எப்போது சாலை அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 25-வது வார்டு, குமரப்பபுரம் குறுக்கு வீதிகளில் ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டிலும், கல்லம்பாளையம் ரயில்வேலைன் பகுதிகளில் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டிலும் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**49—**

**வகுப்பறைகள் கட்டுதல்**

**வினா 35028— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நெறிப்பறைச்சல் ஊராட்சி, கூலிபாளையம், பூலுவப்பட்டி, பாண்டியன் நகர் பள்ளிகளுக்கு போதுமான வகுப்பறை இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வகுப்பறை கட்டித் தரப்படும் ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நெறிப்பறைசசல் ஊராட்சியில் பூலுவபட்டி, பாண்டியன் நகர் பள்ளிகளுக்கு போதுமான வகுப்பறைகள் 2000-2001 க்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**50—**

**குடிநீர்**

**வினா 35063— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருப்பூர் நகர், 31 வது வார்டு வெத்தலாங்காடு பகுதியில் குடிநீர் விநியோகம் முறையாக இல்லை என்று அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 31-வது வார்டு வெத்தலாங்காடு பகுதியில் குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**51—**

**மயானம்**

**வினா 35067— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 34-வது வார்டு, தென்னம்பாளையம் மயானம் பயன்படுத்த முடியாத அளவு புதர் மண்டியும், அசிங்கப்படுத்தப்பட்டும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 34-வது வார்டு தென்னம்பாளையம் மயானம் பயன்பாட்டில் உள்ளது. அங்கு மண்டிக் கிடக்கும் செடி கொடிகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

52—

### கழிப்பிடம் சுத்தம் செய்தல்

**வினா 35083—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் நகர், 15-வது வார்டு, முத்துநகர் 3-வது வீதியிலுள்ள திறந்த கழிப்பிடம் சுத்தம் செய்யப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதைச் சுத்தம் செய்ய அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 15-வது வார்டு, முத்துநகர் 3-வது வீதியில் உள்ள குறுகிய சந்தை பொதுமக்கள் திறந்த கழிப்பிடமாக (சானிடரி சந்து) பயன்படுத்தி வருகிறார்கள். அதைத் தடுக்க நகராட்சியின் சுகாதாரப் பிரிவு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

53—

### சிமெண்ட் சிலாப் அமைத்தல்

**வினா 35084—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் நகர், 28-வது வார்டு, சின்னான் நகர், மிலிட்டரி காலனி வழியாகச் செல்லும் அகன்ற வடிகால் மீது பாதுகாப்புக் கருதி சிமெண்ட் சிலாப் போடப்படுமா—*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 28-வது வார்டு, சின்னான் நகர், மிலிட்டரி காலனி வழியாகச் செல்லும் சாக்கடை மீது சிமெண்ட் சிலாப் போடும் பணி 2001-2002ஆம் ஆண்டு நகரக் கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

54—

### குடிநீர்

**வினா 35101— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர், பத்மாவதிபுரம், 2-வது வார்டு, 2-வது வீதியில் குடிநீர் நன்றாக வருவதில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) இந்தக் குறையைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம், பத்மாவதிபுரம், 2-வது வார்டு, 2-வது வீதியில் குடிநீர் பகிர்மானம் தற்போது சரி செய்யப்பட்டு, குடிநீர் விநியோகம் சீராக நடைபெறுகிறது.

55—

### சாலை வசதி

**வினா 35187—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) திருப்பூர் 12-வது வார்டு, காந்தி நகர், 1,2-வது வீதிகளில் வடிகால் மற்றும் சாலை வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் 1-வது வார்டு, காந்தி நகர், 1-வது வீதியில் சாக்கடை வசதி செய்யப்பட்டுள்ளது. 2-வது வீதியில் சாக்கடை வசதிக்கான பணிகள் 2001-2002-ல் நகரக் கூட்டாண்மைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்படி இரண்டு வீதிகளிலும் தார்ச் சாலை அமைப்பதற்கான பணிகள் 2003-2004-ல் நகரக் கூட்டாண்மைத் திட்டத்தின் மூலம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

56—

## வடிகால் வசதிகள்

**வினா 35179—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 15-வது கே.ஜி. லே அவுட் வீதிகள், தனலட்சுமி தியேட்டர் சந்து, செங்காடு பகுதிகளில் சாலை மற்றும் வடிகால் வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 15-வது கே.ஜி. லே அவுட் வீதிகள், தனலட்சுமி தியேட்டர் சந்து, செங்காடு பகுதிகளில் 2001-2002 முதல் 2003-2004 வரை நகரக் கூட்டாண்மைத் திட்டம் மூலம் சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

57—

## குடிநீர் விநியோகம்

**வினா 35246—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 41-வது வார்டு, சத்தியா காலனி, வெங்கடேசா காலனி, பூலாவாரி சுகுமாரன் நகர்ப்பகுதி குடிநீரில் சாக்கடை நீர் கலந்து விடுவதாகப் பொது மக்கள் புகார் கூறி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 41-வது வார்டு, சத்தியா காலனி, வெங்கடேசா காலனி, பூலாவாரி சுகுமாரன் நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாயில் பழுது சரி செய்யப்பட்டு தற்போது நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

58—

## கழிவு நீர் வசதி

**வினா 35256—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 48-வது வார்டு, தங்கா கவுண்டர் லேஅவுட் தெற்குத் தோட்டம் பகுதியில், சாக்கடை நீர் பல பகுதிகளில் இருந்து வந்து தேங்கி நின்று விடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 48-வது வார்டு, தங்கா கவுண்டர் லே அவுட் பகுதியிலும், தெற்குத் தோட்டம் பகுதியிலும் சாக்கடை நீர் தேங்குவதைத் தடுக்க 2000-2001ஆம் ஆண்டு நகரக் கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ் தக்க நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

59—

**வடிகால் வசதிகள்**

வினா 35257— **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 89-வது வார்டு, சேர்மன் கந்தசாமி நகரில் 40-வது வார்டு, சென்னியப்பா நகர், ராமசாமி கவுண்டர் லே அவுட், 3வது வீதி, முல்லை நகர், செல்வபுரம், ஊத்துக்குளி ரோடு வரையும், தெற்கு வாய்க்கால், 41-வது வார்டு, சின்னசெம்மேடு, தாட்கோ காலனி, சொர்ணபுரி லே அவுட் 5-வது வீதி, சத்தியா நகர் வடக்குப் பகுதிகளில் சாலை வசதிகள், வடிகால் வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரில், குறிப்பிடப்பட்ட பகுதிகளில் சாலை மற்றும் சாக்கடை வசதிகள் 2000-2001 முதல் 2002-2003 வரையிலான நகரக் கூட்டாண்மைத் திட்டங்கள் மூலம் படிப்படியாக நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

60—

**பேரூராட்சிகள், ஊராட்சிகள்**

**வினா 35282—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆண்டில் எத்தனை பேரூராட்சிகள் கிராமப் பஞ்சாயத்துக்களாக மாற்றப்பட்டுள்ளன?

(ஆ) தற்போதைய நிலவரப்படி தமிழ்நாட்டில் எத்தனை பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் இருக்கின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கடந்த ஆண்டில் 25 பேரூராட்சிகள் ஊராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன.

(ஆ) தற்போதைய நிலவரப்படி தமிழ்நாட்டில் 611 பேரூராட்சிகளும் 12,619 ஊராட்சிகளும் உள்ளன.

61—

**பூங்கா பராமரித்தல்**

**வினா 35915—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் நகராட்சிப் பகுதியிலுள்ள பூங்கா சரியாகப் பராமரிக்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நல்ல முறையில் பராமரிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) குற்றாலம் பேரூராட்சி, விஸ்வநாதராவ் பூங்காவில் சுற்றுச்சுவர் அமைத்தல், புல்வெளி மற்றும் அழகிய பூச்செடி வைத்தல் மற்றும் மின் விளக்குகள் அமைப்பதற்கு ரூபாய் 8.15 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, இவற்றில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. புல்வெளி மற்றும் பூச்செடி வைத்தல் மற்றும் மின் விளக்கு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**62—**

**வீட்டுவரி ஈட்டு மானியம்**

**வினா 35978—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டிற்கான வீட்டுவரி ஈட்டு மானியம் திருப்பூர் தொட்டிப்பாளையம் ஊராட்சிக்கு வழங்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் வழங்கப்பட்டது ?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டிற்கான வீட்டுவரி ஈட்டு மானியம் ரூ.10,38,538-ல் 16-2-2000 அன்று ரூ.5,19,269 மற்றும் 17-6-2000-ல் ரூ.5,19,269-ம் வழங்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

**63—**

**சுற்றுச்சுவர் அமைத்தல்**

**வினா 36037—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், இராமநாதபுரம் ஊராட்சி, ரெட்டிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைச்சுற்றி சுற்றுச் சுவர் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், இராமநாதபுரம் ஊராட்சி, ரெட்டிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைச் சுற்றி உயிர்வேலி கொண்ட அமைப்பினை செய்துக்கொள்ள சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியருக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**64—**

**நிழற்குடை அமைத்தல்**

**வினா 36102—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நல்லூர் பேரூராட்சி, புதுப்பாளையம் பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், நல்லூர் பேரூராட்சிக் குட்பட்ட புதுப்பாளையம் பேருந்து நிறுத்தத்தில் நடப்பு நிதியாண்டில் நிழற்குடை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

65—

**கல்வெட்டு அமைத்தல்**

**வினா 36205—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துவாச்சாரி 57-வது தெருவும், சவுத் அவின்யூ சாலையும் சேரும் இடத்தில் கழிவு நீர்க் கால்வாய் இணைப்புப் பகுதி அடிக்கடி சேதமடைவதைத் தவிர்க்க கல்வெட்டு அமைக்க வேண்டிய அவசியம் குறித்து அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சத்துவாச்சாரி பேரூராட்சியில் 57-வது தெருவும், சவுத் அவென்யூ சாலையும் சேருமிடத்தில் 2000-2001 ஆம் ஆண்டு பொது நிதி வேலையில் புதியதாக கல்வெட்டு ஒன்று கட்டும் பணி தொடங்கப்பட உள்ளது.

66—

**சுற்றுச்சுவர்**

**வினா 36420—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், காட்டூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியைச் சுற்றி பாதுகாப்பு கருதி சுற்றுச்சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், காட்டூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியைச் சுற்றி உயிர்வேலி கட்டிக்கொள்ள தலைமை ஆசிரியருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

67—

**கழிவு நீர்க் கால்வாய் கட்டுதல்**

**வினா 37685—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், அல்லாபுரம் பேரூராட்சியிலுள்ள கிருஷ்ணா நகர் விரிவு பகுதியில் பல இடங்களில் கழிவு நீர்க் கால்வாய் கட்டப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கழிவு நீர்க் கால்வாய் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அல்லாபுரம் பேரூராட்சியில் உள்ள கிருஷ்ணா நகர் விரிவு பகுதிக்கு வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் 1999-2000 ஆண்டு தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் கழிவு நீர்க் கால்வாய் கட்டப்பட்டுள்ளது.

68—

**நகராட்சிக்கு வருவாய்**

**வினா 37703—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான 44 ஏக்கர் நிலப்பரப்பில் கழிவு நீர் பண்ணையில் பயிர் செய்பவர்கள் ஏலம் எடுக்காமல் குத்தகைப் பணம் செலுத்தாமல் விவசாயம் செய்து பயன் அடைவதும், நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சிக்குச் சொந்தமான 44 ஏக்கர் நிலப்பரப்பில் கழிவுநீர் பண்ணையில் பயிர் செய்து வரும் உரிமைதாரர்கள் தவறாமல் ஆண்டு குத்தகைப் பணம் செலுத்தி விவசாயம் செய்து வருகிறார்கள். நடப்பு ஆண்டு 2000-2001க்கு கேட்புத் தொகை ரூ.4,36,705ல் இதுவரை ரூ.4,04,160 வசூல் செய்யப்பட்டுள்ளது. நிலுவை ரூ.32,545-ஐ விரைவில் வசூல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

69—

### சுகாதாரக் கேடு

**வினா 37704—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி மீன் அங்காடி அருகிலுள்ள மின்சார "டிரான்ஸ்பார்மர்" உள்ள இடத்தில் குப்பைகளைக் கொட்டுவதை நிறுத்தவும், சுகாதாரக் கேட்டைத் தவிர்க்கவும் அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி மீன் அங்காடி அருகில் மின்சார " டிரான்ஸ்பார்மர்" உள்ள இடத்தில் தற்பொழுது குப்பைகள் கொட்டப்படுவதில்லை. அவ்வப்போது சேரும் குப்பைகள் உடனடியாக அகற்றப்பட்டு அவ்விடம் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.



2000 நவம்பர் 10]

70—

### கடைகள் அமைத்தல்

**வினா 37713—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் அரசு முஸ்லீம் மேல் நிலைப்பள்ளிக்கு பின்புறம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் குப்பைகள் கொட்டப்படுவதால் அங்கு கடைகள் கட்டி வாடகைக்கு விட்டு நகராட்சி வருவாயைப் பெருக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளிக்கு பின்புறம் உள்ள இடம் நகரளவு பதிவேடுகளின்படி வார்டு-5, பிளாக் 3, ந.அ.எண்.323ல் அமைகிறது. இவ்விடம் நகராட்சிக்கு சாலைப்பகுதிக்காக விடப்பட்டுள்ள அரசு புறம்போக்கு இடமாகும். இச்சாலைப் பகுதியில் நகராட்சி மூலம் கடைகள் கட்ட இயலாது.

71—

### தெருவிளக்குகள் எரியச் செய்தல்

**வினா 38410— திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி, பகுதி 1-ல் குருதோப்பு கிழக்கு 5-வது தெரு, குறுக்கு தெருக்களில் பெரும்பாலும் தெரு விளக்குகள் எரியாமல் இருப்பது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தெரு விளக்குகள் எரிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சிக்குட்பட்ட பகுதி-1 குருதோப்பு பகுதி குறுக்கு தெருக்களில் 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் 2-ம் 4 அடி குழல் விளக்குகள் 25-ம் ஆக மொத்தம் 27 விளக்குகள் உள்ளன. இவற்றில் 4 அடி குழல் விளக்குகள் 6 மட்டும் எரியாமல் பழுதடைந்து இருந்தன. அவை பழுது பார்க்கப்பட்டு அப்பகுதியில் உள்ள அனைத்து தெரு விளக்குகளும் தற்போது நல்ல முறையில் எரிகின்றன.*

72—

**தோட்டக்கலைப் பண்ணையை அபிவிருத்தி செய்தல்**

**வினா 35360—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் ஐந்தருவியில் உள்ள தோட்டக்கலைப் பண்ணையை அபிவிருத்தி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

*(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மற்றும் (இ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் ஐந்தருவியில் உள்ள தோட்டக்கலைப் பண்ணையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் 1999-2000 ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பண்ணையைச் சுற்றி முள்வேலி அமைப்பதற்காக அரசு ரூ.7.5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, அப்பணி தற்போது பொதுப் பணித் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 0.75 இலட்சத்தில் ஒரு நாற்றங்கால் பந்தல் அமைக்கப்பட்டு செடிகள் நன்கு பராமரிக்கப்படுகின்றன. ரூ.0.50 இலட்சம் செலவில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி பழுது நீக்கப்பட்டு இயங்கி வருகிறது.*





73—

**சொட்டு நீர்ப்பாசன அனுமதி**

**வினா 40183— திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1999-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சொட்டு நீர்ப்பாசனத்திற்காக எவ்வளவு பேர் மனு செய்து இருந்தார்கள்?*

*(ஆ) அவர்களில் எவ்வளவு நபருக்கு சொட்டு நீர்ப்பாசன அனுமதி வழங்கப்பட்டது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) 1999-2000 ஆண்டில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மானியம் கோரி 4,988 விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.*

*(ஆ) இத்திட்டத்தில் 3,324 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.*

74—

**விபத்துகளைக் கட்டுப்படுத்துதல்**

**வினா 33220—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெருகி வரும் சாலை விபத்துக்களைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பெருகிவரும் சாலை விபத்துக்களைக் கட்டுப்படுத்த மாநகர போக்குவரத்துத் துறையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:—

(1) வாகனப் போக்குவரத்து மிகுந்த சாலை சந்திப்புகளில் தானியங்கி சமிக்ஞைகள் (Road Traffic Signals) நிறுவப்பட்டு வாகனப் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படாவண்ணம் சீராகச் செல்ல வகை செய்யப்படுகிறது.

(2) விபத்துக்கள் அடிக்கடி ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து அதற்கான காரணங்களை ஆய்வு செய்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. அதாவது மையத்தடுப்பு, (Centre-meadians) சாலையை அகலப்படுத்துதல், போக்குவரத்து சமிக்ஞைகள் (Traffic Signals) நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(3) சாலை சந்திப்புகளில் போக்குவரத்து காவலர்கள் நியமிக்கப்பட்டு, விபத்து ஏற்படாவண்ணம் போக்குவரத்து சீர் செய்யப்படுகிறது. மேலும் கல்வி நிறுவனங்கள், அலுவலகங்கள் நிறைந்த பகுதிகள், மருத்துவமனைகள் போன்றவைகளுக்கு அருகில் காவலர்கள் பணியமர்த்தப்பட்டு பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் சாலைகளை பத்திரமாகக் கடக்கவும், போக்குவரத்து சீராகச் செல்லவும், விபத்துக்கள் ஏற்படாவண்ணம் தடுக்கவும் வகை செய்யப்படுகிறது.

(4) சாலை விதிகள் செம்மையாகச் செயல்படுத்தப்படுகிறது. சாலை விதிகளை மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 1999-ஆம் ஆண்டு சாலை விதிகளை மீறியவர்கள் மீது சென்னை மாநகரில் 10,13,738 வழக்குகள் பதியப்பட்டன.

(5) மேலும் பொதுமக்களிடையேயும், வாகன ஓட்டுநர்களிடையேயும் சாலை விதிகளைப் பற்றியும், சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சாலைப் பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. அச்சமயத்தில் வாகன ஓட்டுநர்களுக்கு சாலை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியத்துவம் மற்றும் பொது மக்களுக்கு சாலை விதிகளைப் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.



75—

**சாலை விபத்தில் இறந்தவர்கள்**

**வினா 33716—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99, 1999-2000 ஆண்டுகளில் சாலை விபத்தில் தமிழ்நாட்டில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் சாலை விபத்தில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாலை விபத்தில் இறந்தவர்கள் விபரம்:—

| | 1998 | 1999 | 2000 (மார்ச் மாதம் வரை) |
|---|---|---|---|
| தமிழ்நாட்டில் .. | 9801 | 9653 | 2288 |
| சேலம் மாவட்டம் .. | 494 | 419 | 127 |

76—

**சாலை செப்பனிடல்**

**வினா 28890—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டியிலிருந்து பொம்மியம் வழியாக இராமமூர்த்தி நகர் வரை செல்லும் சாலையைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது கீழ்க்காணும் மூன்றும் இதர மாவட்ட சாலைகளாக அமைந்துள்ளன.

| | |
|---|---|
| 1. பொம்மியம்பட்டி சாலை கி.மீ.0/0-2/6 | மாவட்ட இதர சாலைகள். |
| 2. டேனிஷ்பேட்டை சாலை கி.மீ.3/2-ல் இருந்து கோம்பை தாட்ராவூர் (வழி) கோம்பை சாலை கி.மீ.3/0-5/8 மற்றும் 8/4-14/0 | மாவட்ட இதர சாலைகள். |
| 3. டேனிஷ்பேட்டை-தாட்ராவூர் சாலை மற்றும் இராமமூர்த்தி நகர் (வழி) கோவிந்தபுரம் காலிக்கொட்டாய் சாலை கி.மீ.0/0-9/6 | மாவட்ட இதர சாலைகள். |

மேற்படி சாலைகளை மேம்பாடு செய்ய சுமார் ரூ. 109.00 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இப்பணி அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. தற்போது அரசின் நிதி வளம் குறுகிய காரணத்தால் இப்பணியினை உடன் எடுத்துச் செய்ய இயலாது. சாலையின் போக்குவரத்து தடை இன்றி செல்லத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

77—

## உதவித் தொகை

**வினா 37659—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, நாமக்கல், ஈரோடு, சேலம் முதலிய மாவட்டங்களில் கடந்த 1999-2000 ஆண்டில் கோயில்களில் முறைப்படி பூஜைசெய்ய உதவித்தொகை கோரி மனுக்கள் எத்தனை வந்துள்ளன?

(ஆ) அவற்றில் உதவித் தொகை வழங்கப்பட்ட மனுக்கள் எத்தனை?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆண்டில் கோயில்களில் முறைப்படி பூசை செய்ய உதவித்தொகை கோரி வரப்பெற்ற மனுக்களின் (திருக்கோயில்களின்) எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு:—

தருமபுரி மாவட்டம்-27, நாமக்கல் மாவட்டம்-19, சேலம் மாவட்டம்-22, ஈரோடு மாவட்டம்-37.

(ஆ) 1999-2000 ஆண்டில் உதவித் தொகை வழங்கப்பட்ட திருக்கோயில்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு:—

தருமபுரி மாவட்டம்-24, நாமக்கல் மாவட்டம்-17, சேலம் மாவட்டம்-20, ஈரோடு மாவட்டம்-33.

மீதமுள்ள திருக்கோயில்களுக்கு ஒருகால பூசைக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

78—

## நகை சரிபார்க்கும் அலுவலர்கள்

**வினா 38450—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் நகை சரிபார்க்கும் அலுவலர்கள் எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

(ஆ) எந்தெந்த கோயில்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையில் மொத்தம் 11 நகை சரிபார்க்கும் அலுவலர் பணியிடங்கள் உள்ளன. இவற்றில் தற்போது

[2000 நவம்பர் 10

சென்னை, சேலம், மதுரை, திருநெல்வேலி மண்டலங்கள் தவிர, இதர 7 பணியிடங்களிலும் நகை சரிபார்க்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(ஆ) நகை சரிபார்க்கும் அலுவலர்கள், திருக்கோயில்களுக்கு என்று தனியாக யாரும் நியமிக்கப்படுவதில்லை. மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் மட்டுமே நகை சரிபார்க்கும் அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

79—

### பண்ணை சாராக் கடன்

**வினா 20548—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் பண்ணை சாராக் கடன் எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதில் சங்ககிரி, எடப்பாடி தாலுக்காக்களில் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் 5,658 நபர்களுக்கு ரூ.1,170.86 இலட்சம் அளவிற்கு பண்ணை சாராக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சங்ககிரி வட்டத்தில் 539 நபர்களுக்கு ரூ. 147.94 இலட்சம் அளவிற்கும், எடப்பாடி வட்டத்தில் 640 நபர்களுக்கு ரூ. 88.97 இலட்சம் அளவிற்கும் பண்ணை சாராக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.



2000 நவம்பர் 10]

80—

### பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 20573—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியத்திற்குட்பட்ட ஏரியூரிலிருந்து நியாயவிலைக் கடையைப் பிரித்து கூர்க்காம்பட்டியில் பகுதி நேர நியாயவிலைக் கடையாக அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியத்திலுள்ள அஞ்சல் நத்தம் தாய்க் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து கூர்க்காம்பட்டி கிராமத்தில் 476 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்கப்பட்டு 12-3-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

81—

### பகுதி நேர நியாயவிலைக் கடை

**வினா 20574—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியத்திற்குட்பட்ட மூங்கில்மடுவு நியாயவிலைக் கடையிலிருந்து அஜ்ஜனஅள்ளியில் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியத்திற்குட்பட்ட மூங்கில்மடுவு நியாய விலைக் கடை பிரிக்கப்பட்டு அஜ்ஜனஅள்ளி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு 11-1-1999 முதல் செயல்பட்டு வருகிறது.

**82—**

### நியாயவிலை கிளைக் கடை அமைத்தல்

**வினா 30242—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், விநயாபதி ஊராட்சி மன்றம், இடிந்தகரை மேற்குக் காலனியில் வசித்து வரும் பொது மக்கள் தங்களுக்கு அரசு வழங்கும் பொருள்களை நியாயவிலையில் பெற நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நியாய விலை கிளைக் கடை அமைத்துக் கொடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், ராதாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் இடிந்தகரை நியாய விலைக் கடையிலுள்ள 1,378 குடும்ப அட்டைகளிலிருந்து 512 குடும்ப அட்டைகளைப் பிரித்து இடிந்தகரை மேற்குப் பகுதியில் ஒரு பகுதி நேரக்கடை அமைக்க 11-1-2000 நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு ஆணை (டி) எண் 11-ல் ஆணை வெளியிடப்பட்டு, 1-3-2000 முதல் செயல்பட்டு வருகிறது.



**83—**

### குடும்ப அட்டைகள்

**வினா 33133—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் தொடங்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற வரம்பை 3 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் உள்ள குக்கிராமங்களுக்குத் தளர்த்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-10-1998-ன்படி பகுதி நேரக் கடைகளை துவக்க வேண்டுமெனில் அப்பகுதியில் குறைந்தது 200 குடும்ப அட்டைகளாவது இருக்க வேண்டும். கடைகளுக்கிடையே உள்ள தூரம் 2 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். தாய்க்கடையின் விற்பனையாளரே பகுதி நேரக் கடையையும், வாரத்திற்கு மூன்று நாட்களாவது கவனித்துக் கொள்ள வேண்டும். அப்பகுதிநேரக் கடை அமைப்பதற்கு வாடகையின்றி இலவச கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும். மேலும் பகுதி நேரக் கடையை அமைப்பதற்கு அரசு மானியம் எதுவும் வழங்காது என ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியடையும் இனங்களில், தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அப்பகுதி நேர நியாய விலைக் கடைகளைத் திறக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, 200 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக இருந்தாலும், ஜாதிக்கலவரம், இனக்கலவரம் போன்றவைகளைத் தவிர்க்கும் பொருட்டும், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலும் மேற்கண்ட அரசின் விதிகளைத் தளர்த்தி பகுதிநேரக் கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன.

[2000 நவம்பர் 10

84—

## பகுதிநேர நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா 33782—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கொண்டலூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூர் கிராமத்தில் இயங்கி வரும் அமுதம் நியாய விலைக் கடையிலிருந்து கொண்டலூர் கிராம மக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இக்கடையில் மொத்தம் 1,063 குடும்ப அட்டைகள் உள்ளன. கொண்டலூர் கிராமத்தில் மொத்தம் 123 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், நியாய விலைக் கடை அமைந்துள்ள ஆவுடையானூர் கிராமத்திற்கும், கொண்டலூர் கிராமத்திற்கும் இடையே 1-1/4 கிலோ மீட்டர் தூரமே உள்ளது. மேலும், மேற்படி நியாய விலைக்கடைக்கு அரியப்பபுரத்தில் 386 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. எனவே, கொண்டலூர் கிராமத்தில் 123 குடும்ப அட்டைகள் மட்டுமே இருப்பதாலும் நியாய விலைக் கடைக்கும் கொண்டலூர் கிராமத்திற்கும் இடையே 1-1/4 கிலோ மீட்டர் தூரம் மட்டுமே இருப்பதாலும், கொண்டலூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

85—

## கூட்டுறவு அங்காடிக்குக் கட்டடம்

**வினா 35997—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், துறையூர் கிராமத்தில் கூட்டுறவு அங்காடிக்குத் தனியாக கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், துறையூர் நியாய விலை அங்காடி சங்கத்தின் சொந்தக் கட்டடத்திலேயே செயல்பட்டு வருகிறது. எனவே, இந்நியாயவிலைக் கடைக்கு தனியே கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

86—

## சொந்தக் கட்டடம்

**வினா 36716—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், சித்திரக்குடி ஊராட்சியிலுள்ள நியாய விலைக்கடை வாடகை கட்டடத்தில் உள்ளது. அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், சித்திரக்குடி அங்காடிக்கு கட்டடம் கட்ட உரிய பஞ்சாயத்து தீர்மானத்துடன் தஞ்சை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு 14-6-2000-ல் தஞ்சாவூர் மண்டல இணைப் பதிவாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

87—

## உணவு விநியோக அட்டைகள்

**வினா 36725—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் புதியதாக உணவு விநியோக அட்டைகள் முற்றாக வழங்கப்பட்டு விட்டதா?

(ஆ) பெறப்பட்ட மொத்த மனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் 30-6-2000 தேதி வரையில் புதிய குடும்ப அட்டை கேட்டு வந்த 28,406 விண்ணப்பங்களில் 27,163 விண்ணப்பங்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 289 விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள தகுதியான 954 விண்ணப்பதாரர்களுக்கும் விரைவில் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

**88—**

### நியாயவிலைக் கடைகள்

**வினா 40184—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மகளிரே பணியில் உள்ள நியாய விலைக் கடைகள் எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு.கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் மகளிரே பணியில் உள்ள மகளிர் நியாயவிலைக் கடைகள் மொத்தம் 7 உள்ளன. அவைகளின் விவரம் பின்வருமாறு:—



2000 நவம்பர் 10]

| வ. எண் | நியாயவிலைக்கடையின் பெயர் | மகளிர் சில்லறை விற்பனைக் கடைகள் உள்ள இடம் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | செல்லப்பிள்ளைக்குட்டை | மல்லைக்கவுண்டனூர் | 317 |
| 2. | சரக்கப்பிள்ளையூர் | ஆத்துக்காடு | 460 |
| 3. | மூங்கில்பாடி | சேனைக்கவுண்டனூர் | 160 |
| 4. | வெள்ளாளப்பட்டி | வார்டு எண் 1 ஆதிதிராவிடர் தெரு | 183 |
| 5. | தொளசம்பட்டி | வார்டு எண் 4, 5 | 172 |
| 6. | மஞ்குளாயூர் | புதூர்காடம்பட்டி | 254 |
| 7. | தோலூர் | சங்கனூர் | 234 |

**89—**

### உலமா ஓய்வூதியத் திட்டம்

**வினா 38388—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசினால் வழங்கப்படும் உலமா ஓய்வூதியத் திட்டத்தின்படி ஆண்டொன்றிற்கு எத்தனை பேர் பயனடைகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

தகுதி வாய்ந்த உலமா ஒருவருக்கு உலமா ஓய்வூதியம் வழங்கி ஆணை இடப்படும் நாளிலிருந்து அவர் மரணம் அடையும் நாள் வரை ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. எனவே, ஏற்கெனவே உலமா ஓய்வூதியம் பெற்று வருபவர்களும் புதிதாகப் பெறுபவர்களும் தொடர்ந்து உலமா ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள். அவர்களுக்கு ஆண்டு அடிப்படையில் உலமா ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. எனவே, இத்திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு எத்தனை நபர்கள் பயனடைகிறார்கள் என்ற கேள்வி எழவில்லை. அரசால் சேகரிக்கப்பட்ட விவரங்களின்படி 1981-ஆம் ஆண்டு

[2000 நவம்பர் 10

தமிழ்நாடு உலமா ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், தற்போது சுமார் 1,650 நபர்கள் மட்டுமே உலமா ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 2,200 நபர்கள் பயன் பெற முடியும். ஆனால், உலமா ஓய்வூதியம் வழங்கக் கோரும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் நிலுவையில் இல்லை.

90—

**கழிப்பிட வசதி**

**வினா 39496—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு வக்ஃபு வாரிய தலைமை அலுவலகத்தில் நவீன கழிப்பிட வசதி செய்து தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு வக்ஃபு வாரியம், சென்னை, சாந்தோமிலுள்ள ஒரு பழைய வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு வக்ஃபு வாரிய தலைமை அலுவலகத்திற்கென, சென்னை ஜார்ஜ் டவுனில் சொந்தக் கட்டடம் கட்ட அரசின் நிதியுதவி கோரும் வாரியத்தின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, தற்போதுள்ள வாடகைக் கட்டடத்தில் அரசு செலவில் நவீன கழிப்பிட வசதி செய்து தர இயலாது.*

91—

**ஓய்வு அறை கட்டுதல்**

**வினா 31820—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, இரணியல் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் ஓய்வு அறை போதுமான அளவிற்கு இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது கட்டடம் கட்டித் தரப்படும்?*



2000 நவம்பர் 10]

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, இரணியலில் இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கான ஓய்வு அறை கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் தற்சமயம் இல்லை.*

92—

**மாசு தடுப்புப் பணிகள்**

**வினா 26716—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தேசிய நீர் செயல் திட்டத்தின் கீழ் பவானி, ஈரோடு குமாரபாளையம், பள்ளிப்பாளையம் பகுதிகளில் மாசுத்தடுப்புப் பணிகள் எந்தத் துறை மூலம் நிறைவேற்றப்பட உள்ளன?*

*(ஆ) அந்தத் திட்டத்தின் விவரம் என்ன?*

*விடை—*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

*(அ) தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பவானி, ஈரோடு, குமாரபாளையம் மற்றும் பள்ளிப்பாளையம், பகுதிகளில் மாசு தடுப்புப் பணிகள் சுற்றுச்சூழல் துறையின் மேற்பார்வையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன.*

*(ஆ) இத்திட்டம், மத்திய அரசு தேசிய நதிநீர் பாதுகாப்பு இயக்ககம் மூலமாக சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு மைய அரசு ரூ.38.20 கோடிக்கு அனுமதி அளித்துள்ளது. இந்தியாவிலுள்ள பெருநதிகள் பாயும் இடங்களில்*

[2000 நவம்பர் 10

அதிக மாசு அடைந்த பகுதிகள் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் காவிரியாற்றில் திருச்சி, ஈரோடு, பவானி, குமாரபாளையம் மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய பகுதிகளில் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்படி, புதை சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. கழிவு நீரை சுத்திகரிப்பு செய்யும் தொழில் நுட்பம் குறித்து மத்திய அரசின் வேண்டுகோளின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க விரிவான திட்ட அறிக்கைகள் மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

93—

**பேக்டரிகளின் சுத்திகரிப்புப் பணி**

**வினா 28611—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலும், சுற்றுப்புற மாவட்டங்களிலும் சேகோ பேக்டரிகளின் சுத்திகரிப்புப் பணி முடிந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

94—

**வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு**

**வினா 33987—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு பகுதியில் பிளாட் எண் எம். 84 மற்றும் எம்.85 சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி, வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் எம்.84, எம்.85, ஆகிய வீடுகளுக்கு முன்புறமுள்ள சாலையில் வீட்டு எண். எம்.85-ல் வடபுறம், 2.10 மீட்டர், 2.25 மீட்டர் அளவில் பீடம் அமைக்கப்பட்டு விநாயகர் கோயில் ஒன்று அருகாமையில் உள்ள குடியிருப்புதாரர்களால் கட்டப்பட்டு உள்ளது. இது திட்டத்தில் முடிவுற்ற பகுதியில் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் எந்தவிதமான இடையூறும் இல்லை.

95—

**குறைபாடுகளை நீக்குதல்**

**வினா 33988—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு பகுதியில் நகராட்சி தெரிவித்துள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து நகராட்சியிடம் பராமரிக்கும் பொறுப்பை ஒப்படைக்க வீட்டுவசதி வாரியம் தேவையான நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி, வீட்டுவசதி வாரியக் குடியிருப்பை தென்காசி நகராட்சியிடம் ஒப்புவிப்பதற்கு கடந்த ஒரு வருட காலமாக முயற்சிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி தெரிவித்துள்ள குறைபாடுகள் சரிசெய்யப்பட்டு விட்டன. இருப்பினும் ஒப்புதல் பெறாத கட்டுமானங்களை அகற்றும் பொருட்டு எடுத்த நடவடிக்கைகள் நீதிமன்றம் வரை சென்றது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சாதகமாகவே நீதிமன்றமும் தீர்ப்பளித்துள்ளது. இதனை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென்காசி நகராட்சி கேட்ட திருத்தப்பட்ட வரைபடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தண்ணீர் மேல் நிலைத் தொட்டி

[2000 நவம்பர் 10

மூலம் குடிநீர் வழங்குதல் போன்றவை தென்காசி நகராட்சி தெரிவித்துள்ளவாறு சரி செய்யப்பட்டுவிட்டது.

96—

**சாலைகள்**

**வினா 33990—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி, வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சாலை 3.60 மீட்டருக்கும் குறைவாக உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி, வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள் அனைத்தும் 3.60 மீட்டர் குறையாமல் உள்ளன. இதில் எவ்விதக் குறைபாடும் இல்லை. மேலும் தென்காசி வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு நிலை 1-ன் சாலைகள் 30-10-1994-ல் முடிவுற்ற சாலையாகும்.

97—

**அரசு நிதியுதவி**

**வினா 8167—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 20 ஆண்டுகளுக்கு மேல் பத்திரிகைகளில் பணியாற்றி வரும் பத்திரிகையாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் ஓய்வு பெறுகிறபோது அரசு நிதியுதவி வழங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன். செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான நாளிதழ், வார இதழ் மற்றும் பருவ இதழ்களில் பத்திரிகையாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் அனைவரும் ஒரே பத்திரிகையில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணிபுரிவதில்லை. ஓரிராண்டுகள் ஒரு பத்திரிகையிலும், பிறகு வேறு பத்திரிகைகளிலுமாக மாறி மாறிப் பணியாற்றும் நிலையே தற்பொழுது உள்ளது. எனவே தமிழ்நாட்டில் 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிவரும் பத்திரிகையாளர்களின் எண்ணிக்கையைச் சரிவரக் கணக்கிட முடியாது.

(ஆ) தமிழ்நாட்டில் பல்வேறு பத்திரிகைகளில் இருபது ஆண்டுகள் பணிபுரிந்து வரும் பத்திரிகையாளர்கள் ஓய்வு பெறுகிறபோது அரசு விதி முறைகளுக்குட்பட்டு நலிந்த நிலையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1986 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பத்திரிகையாளர்களுக்குத் தற்போது மாதந்தோறும் ரூ. 2000 பத்திரிகையாளர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

(இ) தற்பொழுது, ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் 71 பேர் மாதந்தோறும் ரூ.2000 வீதம் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

98—

**தொகுப்பு வீடுகள்**

**வினா 24177—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, எளவனூர் ஊராட்சி, சோத்திரியம் கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு அகோபில மடத்துக்குச் சொந்த மான இடத்தை வாங்கி தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், வருமாண்டில் நிறைவேற்றிட அரசு ஆவன செய்யுமா?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, எளவனூர் ஊராட்சி சோத்திரியம் கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு அகோபில மடத்துக்குச் சொந்தமான இடத்தை வாங்கி தொகுப்பு வீடுகள் தற்போதைக்குக் கட்டித்தர இயலாது.

99—

**தனித்துறை**

**வினா 30288—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மலைவாழ் மக்களுக்கு தனித்துறை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும (ஆ) 31-3-2000 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை நிலை எண் 29-ல் பழங்குடியினர் நலனுக்கென தனி இயக்ககம் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

100—

**மாணவர் விடுதி, உணவு விடுதி**

**வினா 31688—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், லந்தக்கோட்டை ஊராட்சி, அரசு உயர்நிலைப்பள்ளிக்கு மாணவர் விடுதி, உணவு விடுதி ஒன்றினை அரசு அமைத்துத் தருமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநில திட்டக்குழு புதிய விடுதிகள் ஏதும் தோற்றுவிக்கத் தேவையில்லை என்றும், தற்போதுள்ள விடுதிகளைச் சரிவர பராமரிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளதால், புதிய விடுதிகள் ஏதும் தற்போது துவக்க இயலாது. மேலும் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில் லந்தக்கோட்டையில் ஏற்கெனவே ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி இயங்கி வருவதால் மீண்டும் அவ்விடத்தில் மாணவர் விடுதி தோற்றுவிக்க அவசியம் எழவில்லை.

## பத்தாம் பட்டியல்

1—

**மாக்னசைட் நிறுவனம்**

**வினா 33213—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் கடந்த ஆண்டு மொத்த உற்பத்தி எவ்வளவு?

(ஆ) இங்கே வெப்பம் தாங்கும் செங்கற்களைத் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் கடந்த ஆண்டு (1998-99) உற்பத்தி—

[2000 நவம்பர் 10

| | | (டன்கள்) |
|---|---|---|
| 1. | கச்சா மாக்னசைட் | 56,541 |
| 2. | முழுவதும் எரியூட்டப்பட்ட மாக்னசைட் | 23,106 |
| 3. | மித எரியூட்டப்பட்ட மாக்னசைட் | 10,693 |

(ஆ) மூலத்திட்டமான வேதியியல் தர மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த முடியாததால் மூடப்பட்டது. எனவே, இத்திட்டத்தின் துணைத் திட்டமாகச் செயல்படுத்த உத்தேசித்த வெப்பம் தாங்கும் செங்கற்களை தயாரிக்கும் திட்டத்தினையும் கைவிடுவது என முடிவெடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2—

### மகளிர் விடுதி கட்டுதல்

**வினா 31477—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலத்தில் உள்ள அருள்மிகு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் பெண்கள் விடுதிக்கான கட்டடம் கட்ட பல்கலைக் கழக மானியக் குழு தன் பங்காக வழங்கிய ரூ.10 (ரூபாய் பத்து லட்சம்) லட்சத்திற்கு இணையாக மாநில அரசு தன் பங்கான (மேச்சிங் கிராண்ட்) ரூ.8 லட்சம் வழங்கிட ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

விருத்தாசலத்தில் உள்ள அருள்மிகு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரிக்கு மகளிர் விடுதி கட்டுவதற்கு பல்கலைக்கழக மானியக் குழு தன் பங்காக ஏற்கும் தொகை ரூ.9.93 லட்சத்திற்கு (60 சதவிகிதம்) இணையாக மாநில அரசின் பங்குத் தொகை ரூ.6.67 லட்சம் (40 சதவிகிதம்) வழங்கி (அரசாணை நிலை எண் 324 உயர்கல்வித் துறை, நாள் 27-7-2000-ல்) ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

3—

### மகளிர் கல்லூரி அமைத்தல்

**வினா 37985—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரில் மகளிர் கல்லூரி எதுவும் இல்லை என்பதால் தனியாக மகளிர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வேலூர் நகரில் மகளிருக்கென டி.கே.எம். மகளிர் கல்லூரி என்ற தனியார் கல்லூரி உள்ளது. புதியதாக உதவிபெறும் தனியார் கல்லூரிகள் தொடங்க அரசு அனுமதி அளிப்பதில்லை. எனினும், மகளிருக்கென தனியார் கல்லூரி தொடங்குவது தொடர்பான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. அந்நகரில் சுயநிதி அடிப்படையில் மகளிர் கல்லூரி தொடங்க ஏதேனும் கல்வி முகமையிடமிருந்து விண்ணப்பம் பெறப்படின் அதன் மீது பரிசீலனை செய்யப்படும்.

4—

### நூலக நூல்கள்

**வினா 38041—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்ட நூலகங்களுக்கு 1999-2000 ஆண்டில் நூலக ஆணைக் குழுவின் நிதியிலிருந்து வாங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) மொழி வாரியாக எவ்வளவு நூல்கள் வாங்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்ட நூலகங்களுக்கு 1999-2000 ஆண்டில் நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து 3,299 தலைப்புகளில் மொத்தம் 76,753 நூல்கள் வாங்கப்பட்டுள்ளன.

[2000 நவம்பர் 10

(ஆ) தமிழ் மொழியில் 2305 தலைப்புகளில் 75,639 நூல்களும், ஆங்கில மொழியில் 994 தலைப்புகளில் 1,114 நூல்களும் வாங்கப்பட்டுள்ளன. தமிழ், ஆங்கிலம் தவிர பிறமொழி நூல்கள் வாங்கப்படவில்லை.

5—

**உயர்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்துதல்**

**வினா 40134—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடங்கண சாலை பேரூராட்சி கே.கே. நகர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை இந்த நிதியாண்டில் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) அது விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடங்கணசாலை பேரூராட்சி கே.கே. நகர், நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்த கருத்துரு பெறப்பட்டது. தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறையை நிறைவு செய்யாததால் உயர்மட்டக் குழுவால் பரிந்துரை செய்யப்படாததால் தரம் உயர்த்தப்பட வில்லை.

6—

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 16279—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பின் தங்கிய நிலையைக் கருத்தில் கொண்டு விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் முதுநிலைமை கடைபிடிக்கப்படாமல் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது வழங்கப்படும்?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் அதன் பின்தங்கிய நிலையினைக் கருத்தில் கொண்டு, விவசாய மோட்டார்களுக்கு, தனி முன்னுரிமையோ (அல்லது) வரிசைக்கிரமமாக அல்லாமல் மின் இணைப்பு வழங்குவதற்கோ எந்தக் கருத்துருவும் இல்லை. இருப்பினும் தருமபுரி மாவட்டத்தில் நிலுவையில் உள்ள அதிகப்படியான விண்ணப்பங்களைக் கருத்தில் கொண்டு மற்ற பல மாவட்டங்களைக் காட்டிலும் அதிகப்படியாக இந்த ஆண்டிற்கு 2,124 விவசாய மின் இணைப்பிற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

7—

**டேனிடா திட்டம்**

**வினா 18770—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் "டேனிடா" திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனைகள் எத்தனை?

(ஆ) அதில் எத்தனை மருத்துவமனைகள் செயல்படாமல் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் "டேனிடா" திட்டத்தில் கீழ்வருமாறு மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளன:-

| | | | |
|---|---|---|---|
| (i) | ஆரம்ப சுகாதார நிலையம் | - | 7 |
| (ii) | துணை சுகாதார நிலையம் | - | 96 |
| (iii) | சமுதாய ஒத்துழைப்புடன் கட்டப்பட்டுள்ள மருத்துவ நிலையங்கள் | | 42 |

ஆக மொத்தம் 145 மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) இவற்றில் 144 மருத்துவமனைகள் நன்கு இயங்கி வருகின்றன. இலுப்புளி என்னும் கிராமத்தில் உள்ள ஓர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தின் ஒருபகுதி மட்டும் பழுது ஏற்பட்டு சீர் செய்யப்பட்டு வருகிறது. ஆனாலும் இங்கு மருத்துவப் பணிகள் தடையின்றி நடைபெற்று வருகின்றன.

8—

## மருத்துவமனைக்கு வசதிகள்

**வினா 29896—திரு. ஆர். சக்கரபாணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் வட்ட மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் அரசு செய்து கொடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஒட்டன்சத்திரம் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போதுதான் வட்டத் தலைமையிட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. உள் மற்றும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து சிறப்புப் பிரிவுகள் துவங்கப்படுகின்றன. பணியாளர்கள் பணியமர்த்தப்படுகின்றனர். எல்லா வட்டத் தலைமை மருத்துவமனைகளும் முதன்மை ஆலோசனைப் பிரிவாக (F.R.U.) செயல்படுகின்றன. தற்போது இம்மருத்துவமனையில் பல் சிகிச்சைப் பிரிவு, பரிசோதனைக்கூடம் ஆகியவை சிறப்பாக இயங்கி வருகின்றன. மேலும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திலிருந்து மருந்து



தங்கு தடையின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனை முன்னேற்றத்திற்காக நவீன கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9—

## மின் திருட்டுகள்

**வினா 32675—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 1999-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய மின்சாரம் திருடியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொழிற் சாலைகள் எத்தனை?

(ஆ) திருடப்பட்ட மின்சாரத்தின் மதிப்பு எவ்வளவு கோடி ரூபாய்?

(இ) இது குறித்து வழக்குப் பதிவு செய்து எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா.வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1999-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதி வரை மின்சாரம் திருடியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொழிற்சாலை மின் இணைப்புகள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| குறைந்த அழுத்த மின் இணைப்பு | - | 1 |
| உயர் அழுத்த மின் இணைப்பு | - | 1 |
| மொத்தம் | - | 2 |

(ஆ) கணக்கிடப்பட்ட கூடுதல் லெவி (Extra levy) சுமார் ரூ.11.81 கோடி உயர் அழுத்த மின் இணைப்பில் ஒரு திருட்டும் குறைந்த அழுத்த மின் இணைப்பில் ஒரு திருட்டும் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு அவை விசாரிக்கப்பட்டு வருகின்றன.

[2000 நவம்பர் 10

(இ) குறைந்த அழுத்த மின் இணைப்புத் திருட்டால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். உயரழுத்த மின் இணைப்புத் திருட்டில் இருவர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

10—

### எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

**வினா 32800—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனம் எய்ட்ஸ் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு ரயில் நிலையங்களில் ரூ.18.97 இலட்சம் செலவில் நிறுவிய 50 Spectrum Colour Changing Display Board தற்போது இயங்காமல் இருப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) மீண்டும் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா.வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் பல்வேறு இரயில் நிலையங்களில் அமைத்துள்ள 50 ஸ்பெக்ட்ரம் (கலர்சேஞ்சர்) போர்டுகள் அனைத்தும் நல்ல நிலையிலேயே உள்ளன. அதில் எய்ட்ஸ் விழிப்புணர்வு தகவல்களை மக்களுக்குத் தந்து கொண்டுதான் இருக்கின்றன.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

11—

### மின் சக்தி

**வினா 33004—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

குறைந்த அழுத்த மின் சக்தியைப் பயன்படுத்தும் தொழிற் சாலைகளுக்கு அதிகபட்ச உச்சவரம்பை 150 குதிரை சக்தி என்று இருப்பதை 250 குதிரை சக்தியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரியம் கூடுதல் செலவினை ஏற்று அதிக பளு மின் மாற்றிகளை அமைக்கத் தயார் நிலையில் இல்லை. அதிக குதிரை திறன் 150-ல் இருந்து 250 ஆக உயர்த்துவதால் திறன் கூறு (Power Factor) குறைகிறது. மற்றும் மின் கம்பிகளினால் ஏற்படும் நஷ்டம் அதிகமாகும். (Line loss would increase) எனவே இப்பொழுது இருக்கும் குதிரை திறன் 150 என்று இருப்பதை உயர்த்துவதற்கு வாய்ப்பு இல்லை.

12—

### கணிப்பொறி வசதி

**வினா 33198—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்ட மருத்துவமனைகளுக்குக் கணிப்பொறி வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வட்ட மருத்துவமனைகளுக்குக் கணிப்பொறி வசதி செய்து தரும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

13—

## மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம்

**வினா 34302—திரு. ஜ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் 12 படுக்கைகளுடன் கூடிய மகப்பேறு வார்டு மற்றும் 12 படுக்கைகளுடன் கூடிய குழந்தைகள் வார்டு கட்டடப்பணி முடிவடைந்தது, பொதுப் பணித்துறையினரால் மருத்துவத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மேட்டூர் அரசினர் தலைமை மருத்துவமனையில் அறுவை அரங்கம் மற்றும் 16 படுக்கைகள் கொண்ட கண் கிசிச்சைப் பகுதி மற்றும் 48 படுக்கைகள் கொண்ட உள் நோயாளிப் பகுதி கட்டடப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

14—

## புதிய மின்மாற்றி

**வினா 35518—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சி, குடியிருப்பு தெற்குத் தெருவில் புதிய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலகரம் ஊராட்சி குடியிருப்பு தெற்குத் தெருவில் உள்ள மின்னழுத்தக் குறைவைப் போக்கிட ஒருமுனை மின் பாதையை மும்முனை மின் பாதையாக மாற்றி அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

15—

## கூடுதல் சக்தி மின்மாற்றி

**வினா 35519—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை, பெரிய குளம் தென் பகுதியில் உள்ள மின் மாற்றியை (எஸ்.எஸ். 19) கூடுதல் சக்தி மின் மாற்றியாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) சுரண்டை பெரிய குளம் தென் பகுதியில் உள்ள மின் மாற்றி (எஸ்.எஸ்.19)-ல் ஏற்பட்டுவரும் மின் அழுத்தக்குறைவைச் சீர் செய்ய மேலும் ஒரு மின்மாற்றி அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு தயாரானதும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

16—

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா 35932—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் உள்ள எழுத்தர், இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் எத்தனை காலியாக உள்ளன?

(ஆ) அவற்றை நிரப்ப அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 578 எழுத்தர் (Junior Assistant) பணியிடங்களும் 10,380 கள உதவியாளர்கள் (Helper) பணியிடங்களும் 200 உதவிப் பொறியாளர் (மின்னியல்)/இளநிலைப் பொறியாளர் (மின்னியல்) முதல் நிலைப் பணியிடங்களும், 55 உதவிப் பொறியாளர் (கட்டிடவியல்), இளநிலைப் பொறியாளர் (கட்டிடவியல்) முதல் நிலைப்பணியிடங்களும், 20 உதவிப் பொறியாளர் (இயந்திரவியல்)/ இளநிலைப் பொறியாளர் (இயந்திரவியல்) முதல் நிலைப் பணியிடங்களும் காலியாக உள்ளன.

(ஆ) ஆரம்ப நிலை பணியிடங்களுக்கான (Initial Level Categories) எழுத்தர் மற்றும் உதவியாளர் பதவிகளுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக நேரிடை ஆள்சேர்ப்பு செய்வது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காலியாக உள்ள உதவிப் பொறியாளர் (மின்னியல்) (கட்டிடவியல்) மற்றும் (இயந்திரவியல்) பணியிடங்கள் வேலை வாய்ப்பு அலுவலகம் வாயிலாக நேரடி ஆட்சேர்க்கை மூலம் நிரப்பப்படுகின்றன. காலியாக உள்ள இளநிலைப் பொறியாளர் (மின்னியல்) (கட்டிடவியல்) மற்றும் உள்முகத் தேர்வு மூலமாகவும் நிரப்பப்படுகின்றன. இவ்வகைத் தேர்வுகள் மின் வாரியத்தில் பல்வேறு தொழிற்சங்கங்கள் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்குகள் காரணமாக மேற்கொள்ளப்படாமலிருந்தன. ஆனால் இவ்வழக்குகள் தற்போது முடிவுற்றதால் ஆட்தேர்வுகள் விரைவில் செய்யப்படவுள்ளன.

17—

**மின் இணைப்பு**

**வினா 36322—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் கடந்த 1999-2000 ஆண்டில் குடிசை மின் விளக்குத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட இணைப்புகள் எத்தனை?

(ஆ) அங்கு இன்னும் கொடுக்கப்படாமல் நிலுவையிலுள்ள மனுக்கள் எத்தனை?

(இ) நிலுவையிலுள்ள மனுக்கள் மீது எப்பொழுது இணைப்பு கொடுக்கப்படும் என்பதை அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் கடந்த 1999-2000 ஆண்டில் குடிசை மின் விளக்குத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட இணைப்புகள் மொத்தம் 380.

(ஆ) நிலுவையில் உள்ள மனுக்கள் 729.

(இ) மீதம் உள்ள மனுக்கள் ஆய்வுக்குப் பின்னர் வரிசைக் கிரமப்படியும் ஆண்டு இலக்கீட்டின் அடிப்படையிலும் வரும் காலங்களில் மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

18—

**தெரு விளக்கு அமைத்தல்**

**வினா 37255—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம் முத்துநாயக்கன்பட்டியிலிருந்து பி. நல்லாக்கவுண்டம்பட்டி வரை உள்ள சாலையில் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன்பட்டியிலிருந்து பி. நல்லாகவுண்டம்பட்டி வரை உள்ள சாலையில் தெரு விளக்கு அமைக்கக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. உரிய விண்ணப்பங்கள் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க ஆவன செய்யப்படும்.

19—

**மின் இணைப்பு வழங்குதல்**

**வினா 37267—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுயநிதித் திட்டத்தில் விவசாய பம்பு செட்டுகளுக்கு வழங்கப்படும் மின் இணைப்பு ரூ.50,000 மதிப்பீடு எனில் மதிப்பீடு குறைவாக வந்தால் மின் இணைப்பு வழங்கப்படாததை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருத்தப்பட்ட சுயநிதித் திட்டத்தின்கீழ் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க திட்ட மதிப்பீடு ரூ.50,000த்திற்குக் குறைவாக இருந்தால் அரசு ஆணை 149, நாள் 9-11-1998-ன் படி விவசாய மின் இணைப்பு விரும்புவோர் ரூ.10,000 செலுத்தி மின் இணைப்பு பெறலாம்.

மேலும், திட்ட மதிப்பீடு ரூ.50,000க்குள் இருந்து விண்ணப்பதாரர்கள் தாமாகவே முன்வந்து ரூ.25,000 செலுத்தத் தயாராய் இருந்தால் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரசு ஆணை எண் 149 (எரிசக்தி), நாள் 9-11-1998-ன்படி மின் இணைப்பு வழங்கப்படும்.



2000 நவம்பர் 10]

20—

**வாழ்வொளி திட்டம்**

**வினா 37582—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளி மாணவ மாணவிகளுக்கு "வாழ்வொளி" திட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை பேருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1999-2000 ஆண்டில் "வாழ்வொளி" திட்டத்தின் கீழ் சுமார் 38,695 பள்ளிகளில் 75,91,171 மாணவ, மாணவியர் பரிசோதிக்கப்பட்டனர். இவர்களில் பல்வேறு நோய்களின் அறிகுறிக்காக 37,76,590 மாணவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர்களுள் 81,676 மாணவ, மாணவியர்கள் உயர் மருத்துவத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டு மாவட்ட மருத்துவமனைகளுக்குச் சிகிச்சை பெற அனுப்பி வைக்கப்பட்டனர்.

21—

**ஆழ்துளைக் கிணறு அமைத்தல்**

**வினா 30252—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

22—

**நமக்கு நாமே திட்டம்**

**வினா 30997—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் திருப்பூர் தொகுதிக்குள் எடுத்துக் கொண்ட பணிகள் எத்தனை?

(ஆ) அவற்றிற்கு அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு திருப்பூர் தொகுதிக்குள் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் திருப்பூர் வட்டாரத்தில் ஒரு பணி எடுத்துச் செய்யப்பட்டது.

(ஆ) இந்தப் பணிக்கு அரசு செலவழித்த தொகை ரூ.1.00 இலட்சம் ஆகும்.

23—

**கடன் வழங்குதல்**

**வினா 33102—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 1998-99ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் வரை கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களுக்காக மானியத்துடன் கூடிய கடன் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) எவ்வளவு ரூபாய் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 1998-99ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் 6,189 குடும்பங்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூ.238.99 இலட்சங்கள் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.

24—

**குடிநீர் விநியோகம்**

**வினா 33375—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ராசிபுரம்—எடப்பாடி கூட்டுக் குடிநீர் விநியோகத்தில் எடப்பாடி நகராட்சியில் வால்வு கட்டுப்பாடு சரிவர அமைக்கப்படாததால் குடிநீர் வீணாக சாக்கடையில் ஓடுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஏற்படும் கசிவுகள் அவ்வப்போது சரி செய்யப்பட்டு சீராக குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

[2000 நவம்பர் 10

25—

## ஷெட்கள் அமைத்தல்

**வினா 33976—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சி, பூங்காவை பருவ (சீசன்) காலங்களில் ஏழை எளிய மக்கள் உணவு அருந்துவதற்காக பயன்படுத்தி வருவதால் பூங்கா அருகே கொட்டில் (ஷெட்) அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்.

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குற்றாலம் பேரூராட்சி பூங்கா அருகில் டிசம்பர் 1999-ல் இரண்டு கொட்டில்கள் (ஷெட்கள்) அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பூங்காவைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

26—

## மாநகராட்சியாக தரம் உயர்த்துதல்

**வினா 34543—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வேலூர், கடலூர், ஈரோடு போன்ற நகரங்களை மாநகராட்சியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா? அதன் விவரம் என்ன?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர், கடலூர் மற்றும் ஈரோடு போன்ற நகராட்சிகளை மாநகராட்சியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

## பொதுக் குடிநீர்க் குழாய்

**வினா 35068—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 26-வது வார்டுப் பகுதிகளில் 15 பொதுக் குடிநீர் குழாய் வேண்டுமென பொதுமக்கள் கோரி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள முடிவென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 26-வது வார்டில் நடப்பு நிதி ஆண்டில் (2000-2001) 2 பொதுக் குழாய்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

28—

## மேற்கூரை பழுது பார்த்தல்

**வினா 35113—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நொய்யல் வீதி தொடக்கப்பள்ளி மேற்கூரை பழுதுபட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுது பார்க்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகராட்சி, வார்டு எண் 42-க்கு உட்பட்ட நொய்யல் வீதி தொடக்கப்பள்ளி மேற்கூரை பழுதுபட்டதை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

29—

**சுற்றுச்சுவர்**

**வினா 35437—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் செட்டிபாளையம் ஊராட்சி, ஆத்துப்பாளையம் தொடக்கப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தருமாறு அரசிற்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் செட்டிபாளையம் ஊராட்சி, ஆத்துப்பாளையம் தொடக்கப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தருமாறு அரசிற்கு கோரிக்கை எதுவும் வரவில்லை.

30—

**தொடக்கப்பள்ளிக்கு முள்வேலி அமைத்தல்**

**வினா 35439—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருப்பூர், தொறவலூர் ஊராட்சி, வாரணாசிபாளையம் தொடக்கப்பள்ளிக்கு முள்வேலி அமைத்துத் தர அரசிற்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் தொறவலூர் ஊராட்சி, வாரணாசிபாளையம் தொடக்கப்பள்ளிக்கு முள்வேலி அமைத்துத்தர கோரிக்கை எதுவும் அரசிற்கு வரவில்லை. இருப்பினும், இப்பணி 2000-2001-ல் நிதி ஒதுக்கீட்டின்படி செய்து தரப்படும்.

31—

**பேருந்து நிலையம்**

**வினா 35494—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி புதிய பேருந்து நிலைய கீழ்தளம் உயர்த்தப்படவும், மழைக் காலங்களில் கழிவுநீர் செல்ல வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் ரூ.13.50 லட்சம் செலவில் கப்பி தளம் முழுமையாக நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ளது. வடிகால் வசதியுடன், கான்கிரீட் தளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

[2000 நவம்பர் 10

32—

### தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா 35909—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர், நல்லூர் பேரூராட்சி, சுப்பிரமணியா நகர், சந்திராபுரம், இந்திரா நகர் பகுதிகளுக்குத் தெரு விளக்கு இல்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட சந்திராபுரம், இந்திரா நகர் பகுதிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 13 நான்கு அடி குழல் விளக்குகள், 7 சோடியம் ஆவி விளக்குகள் அமைககவும், சுப்பிரமணியா நகர் பகுதிக்கு பேரூராட்சி பொது நிதியிலிருந்து நான்கு அடி குழல் விளக்குகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

33—

### நவீன கழிப்பிடங்கள்

**வினா 35913—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மத்திய பேருந்து நிலையத்தில், தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் பயன்படுத்தும் இலவச சிறுநீர் கழிப்பிடம் மிக மிக குறுகிய அளவிலும், சுகாதாரக்கேடு ஏற்படுத்தும் வகையிலும் உள்ளதை அரசு அறியுமா?*



2000 நவம்பர் 10]

*(ஆ) ஆம் எனில், அதனை விரிவுபடுத்தவும், நவீனப்படுத்தவும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மத்திய பேருந்து நிலையத்தில் ஏற்கெனவே தென்கிழக்குப் பக்கம் அமைந்திருந்த இலவச கழிப்பிடங்களை சாலை வசதிக்காக இடிக்கப்பட்டதால், தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இலவசக் கழிப்பிடம் குறுகிய அளவில் உள்ளது. அதனருகில் கட்டணக் கழிப்பிடமும் உள்ளது. பேருந்து நிலையத்தின் தென்கிழக்கு பகுதியில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டிலும், தென்மேற்கு பக்கம் ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டிலும், நவீன கழிப்பிட வேலைகள் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட இரு நவீன கழிப்பிடங்கள் அமைக்கும் பணிகள் நிறைவடைந்தவுடன் தற்போது குறுகலான இடத்தில் இருந்து வரும் இலவச கழிப்பிட கட்டடமும் இடிக்கப்பட்டு நவீன முறையில் கட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

34—

### பள்ளிக்கட்டடம் பழுதுபார்த்தல்

**வினா 36051—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம் குருங்குளம் மேற்கு ஊராட்சிக்கு உட்பட்ட தங்கப்ப உடையன்பட்டி ஊராட்சி ஒன்றிய பள்ளி பழுதுபட்டுள்ளதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் மேற்கு ஊராட்சிக்குட்பட்ட தங்கப்ப உடையான்பட்டி பள்ளி மேற்கூரை மற்றும் சுவர்கள் கீழ்தளம் ஆகியவை பழுதுபட்டும் ஜன்னல்கள் சரிவர பொருந்தாமல் மூட இயலாமல் உள்ளது. இதனை ரூ.20,000 மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

35—

**செப்பனிடுதல்**

**வினா 36061—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், கல்விராயன்பேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டடம் பழுதாகி உள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், கல்விராயன்பேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடம் பழுதடைந்துள்ளதை சரி செய்ய ரூ.25,000 மதிப்பீட்டில் விரைவில் வேலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

36—

**தொடக்கப்பள்ளிக் கட்டடம் பழுதுபார்த்தல்**

**வினா 36062—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், மருதகுடி ஊராட்சி; அய்யாசாமிபட்டி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மருதகுடி ஊராட்சி, அய்யாசாமிபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடத்தில் சிறு பழுதுகள் உள்ளன. இதனால் எவ்வித பாதிப்பும் இல்லை. எனினும், இச்சிறு பழுதுகளை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

37—

**சாலை வசதி, வடிகால் வசதி**

**வினா 36147—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலகரம் பேரூராட்சி, பாறைகுளம் 6-வது வார்டு குறுக்குத் தெருவிற்கு சாலை வசதி, தெரு மின் விளக்குகள், வடிகால் வசதி மற்றும் 13வது வார்டு ஸ்டேட் பாங்க் காலனிக்கு சாலை வசதி, வடிகால் வசதியும் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலகரம் 6-வது வார்டு பாறைகுளம் தெருவில் 1999-2000 ஆண்டில் சுவர்ண ஜெயந்தி திட்டத்தின்கீழ் 120 மீட்டர் அளவில் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. இத்தெருவில் போதுமான சாலை வசதிகள் உள்ளன. 45 வீடுகள் கொண்ட இத்தெருவில் 5 தெரு விளக்குகள் உள்ளன. நடப்பு நிதியாண்டில் மேலும் ஒரு தெரு விளக்கு அமைத்துக்

[2000 நவம்பர் 10

கொடுக்கப்படவுள்ளது. 13-வது வார்டு ஸ்டேட் பாங்க் காலனியில் 2000-2001-ஆம் ஆண்டில் 2 தார்ச் சாலைகள் போடப்பட்டு உள்ளன. சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் சிமெண்ட் சாலை அமைத்திட பணிகள் நடைபெற உள்ளன. 1998-1999-ஆம் வருடத்தில் மேற்படி வார்டில் 300 மீட்டர் நீளத்திற்கு வடிகால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**38—**

**பள்ளிக் கட்டடம் செப்பனிடுதல்**

**வினா 36177—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், மருங்குளம் ஊராட்சி வடக்குப்பட்டில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மருங்குளம் ஊராட்சி, வடக்குப்பட்டு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடம் ரூ.30,000 மதிப்பீட்டில் பழுதுபார்க்கவும், மேலும் கூடுதலாக ஆர்.சி.சி. பள்ளிக் கட்டடம் ஜவஹர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**39—**

**பாதை சீரமைத்தல்**

**வினா 36309—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பேரூராட்சி, ஆலடிப்பட்டி மக்களின் சுடுகாட்டுக்குச் செல்லும் பாதையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை

**40—**

**பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா 36834—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் கடைநிலை ஊழியர், காவலர் பதவிகள் காலியாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிரப்ப அரசு அனுமதி அளிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றியங்களில் அலுவலக உதவியாளர் போன்ற பதவிகளில் ஏற்படும் நிரந்தர காலிப் பணியிடங்களை அந்தந்த ஊராட்சி ஒன்றிய நியமனக் குழு, பணி விதிகளைப் பின்பற்றியும், அரசாணை (நிலை) எண் 114, ஊ.வ, நாள் 6-5-2000-ல் வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகளையும் நெறிமுறைகளையும் கடைபிடித்து நிரப்பிக்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

**41—**

**ஆழ்துளைக் கிணறு அமைத்தல்**

**வினா 37665—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

வாலாஜாபேட்டை நகராட்சி, தக்கடி முத்தியால் தெருவில் ஆழ்துளை கிணறு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட தக்கடி முத்தியால் தெருவில், நகராட்சியால் பிரதான குழாய் மூலமாக தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. எனவே, அந்தத் தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

42—

**வரி வசூல் செய்தல்**

**வினா 37665—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையிலுள்ள கட்டடங்களுக்கு சி.எம்.சி. மருத்துவமனையே வரி செலுத்த முன் வந்தும், நகராட்சி மதிப்பீடு செய்து வரி வசூலிக்க ஆவன செய்யவில்லை என்பதனை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனே வரி வசூல்செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு வேலூர் நகராட்சியால், மொத்தம் 22 சொத்து வரிவிதிப்புகள் செய்யப்பட்டுள்ளன. இதில் அம்மருத்துவமனை கேட்டுக்கொண்டதன்பேரில் 1998-99 இரண்டாம் அரையாண்டு முதல் 3 கட்டடங்களுக்குப் புதிதாக வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வரி விதிப்புகளையும் சேர்த்து மொத்தமாக அரையாண்டிற்கு ரூ.1,00,694 அந்நிறுவனத்தால் நகராட்சிக்குச் செலுத்தப்படவேண்டும்.



2000 நவம்பர் 10]

43—

**மருந்தகங்களை மாற்றம் செய்தல்**

**வினா 37977—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியில் கூடுதலாக உள்ள நகராட்சி மருந்தகங்களை அருகாமையில் உள்ள பேரூராட்சிகளான சத்துவாச்சாரி, அல்லாபுரம், தொரப்பாடி, சேன்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு மாற்றம் செய்ய அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

44—

**பழ மார்க்கெட் அமைத்தல்**

**வினா 37979—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சண்முக அடிகளார் சங்கம் பின்புறம் மற்றும் மீன் மார்க்கெட் அருகாமையில் உள்ள நகராட்சி நிலத்தில் பழ மார்க்கெட் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் அமல்படுத்தப்படுமா?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சண்முக அடிகளார் சங்கம் பின்புறம் மற்றும் மீன் மார்க்கெட் பின்புறம் காலியாக உள்ள 2,795 சதுர அடி இடத்தில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பூங்கா மற்றும் பழ மார்க்கெட் ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் அமைக்க நகராட்சி திட்டமிட்டுள்ளது. இதற்கான கடன் கோரி தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு (டுபிட்கோ) விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கடன் கிடைக்கப் பெற்ற பின்னர், நகராட்சியால் நடவடிக்கை தொடரப்படும்.

45—

**பூங்காக்களைப் பராமரித்தல்**

**வினா 37980—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துவாச்சாரி பகுதியில் உள்ள பூங்காக்களை கம்பிவேலி அமைத்து பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். சத்துவாச்சாரி பகுதியில் உள்ள பூங்காக்களை கம்பிவேலி அமைத்து பராமரிக்க பேரூராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

46—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 38366—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சி, மூலலைன் காலனி கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சி, மூலலைன் காலனி குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 200 ஆகும். இக்குடியிருப்பு கடந்த ஆண்டு (1999-2000) திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதே ஊராட்சியில் ஏற்கெனவே இயங்கி வரும் டீக்கடை மற்றும் சந்தைப்பேட்டை குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டத்தின் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 1500 மீ. நீளத்திற்கு குழாய் நீட்டிப்பு செய்து 2 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கும் வகையில் திட்டம் முடிக்கப்பட்டு. 5/2000-ல் ஊராட்சியிடம் பராமரிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தண்ணீர் குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. திட்ட மதிப்பீடு ரூ.1.54 லட்சம் ஆகும். மூலலைன் காலனி குடியிருப்புக்கு குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, திட்டம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, மேற்படி கிராம குடியிருப்புக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தொழில்நுட்ப ரீதியாக தேவையில்லை.

47—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 38368—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, பலாமரத்துக் குட்டை, முனியப்பன் கோயில் கொட்டாய்

[2000 நவம்பர் 10

(நல்லாம்பட்டி) யில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, பலாமரத்துக் குட்டை, முனியப்பன் கோயில் கொட்டாய் (நல்லாம்பட்டி) குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 80. ஆதலால் வாரிய விதிமுறைகளின்படி, இக்குடியிருப்புக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வழியில்லை. எனவே, இக்குடியிருப்புக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கைப்பம்பு அமைக்கும் திட்டம் குடிநீர் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

**48—**

### சாலை அமைத்தல்

**வினா 38499—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி பேரூராட்சி, தென்றல் நகர் பகுதியில் பல சாலைகள் மோசமான நிலையிலுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனே புதிய சாலை அமைக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சிக்குட்பட்ட தென்றல் நகர் பகுதியில் உள்ள பிரதான சாலைகள் அனைத்தும் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள குறுக்குத் தெருக்களை தார்/சிமெண்ட் சாலைகளாக மாற்றிட பணி உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது.

**49—**

### சிமெண்ட் சாலை

**வினா 38502—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி பேரூராட்சி பகுதியில் விஜயராகவ புரம் 3-வது தெருவில் பாதி தெரு சிமெண்ட் சாலை போடாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சிமெண்ட் சாலை எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சிப் பகுதியில் விஜயராகவபுரம் 3-வது தெருவில் மீதி உள்ள தெரு முழுவதும் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது.

**50—**

### குடிநீர்க் கிணறு

**வினா 38525—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) வேலூர் தொகுதி, சேண்பாக்கம் பேரூராட்சியில் விநியோகம் செய்யும் குடிநீர் கிணறு வற்றிப் போனது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) வேறு புதிய கிணறு பாலாற்றில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) இப்பகுதியில் குடிநீர் பிரச்சினை தீர பாலாற்றில் கைதுளை ஆழ்துளை கிணறுகள் நான்கு அமைத்து, மின் மோட்டார் பொருத்தி, அதன் வாயிலாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**51—**

**சிமெண்ட் சாலை அமைத்தல்**

**வினா 38528—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சியில் உள்ள பிரதான சவுத் அவின்யூ ரோடில் லாரிகள், பஸ்கள் செல்ல தகுதி படைத்த வகையில் தரமான சிமெண்ட் சாலை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சத்துவாச்சாரி பேரூராட்சிக்குட்பட்ட சவுத் அவென்யு சாலையில் லாரிகள் பஸ்கள் செல்ல ஏதுவாக, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்திட வழி வகை இல்லை.



2000 நவம்பர் 10]

**52—**

**சிமெண்ட் சாலைகள் அமைத்தல்**

**வினா 38542—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி பேரூராட்சியிலுள்ள பாப்பாத்தியம்மன் கோவில் தெரு சாலை பழுதடைந்துள்ளதை சிமெண்ட் சாலையாக மாற்ற வேண்டியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சிமெண்ட் சாலை எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேலூர், சத்துவாச்சாரி பேரூராட்சியிலுள்ள பாப்பாத்தியம்மன் கோவில் தெரு சாலையை சிமெண்ட் சாலையாக்க 1999-2000 ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**53—**

**மயானப்பாதை சீரமைத்தல்**

**வினா 38554—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி, நேதாஜி நகரை அடுத்துள்ள மயானம் தெரியாமல் முழுமையாக ஆக்கிரமிப்புள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்றி மயான பகுதியை சீர்செய்ய நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

53-306—24a

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் சுடுகாடுகள், மற்றும் இடுகாடுகள் பராமரித்தல் மானியத் திட்டத்தின்மூலம் சத்துவாச்சாரி பேரூராட்சியில் நேதாஜி நகரை அடுத்துள்ள மயானம் செல்லும் பாதையை சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

54—

**மயானப் பாதை சீராக்குதல்**

**வினா 38948—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துவாச்சாரி பேரூராட்சியில் மயானப் பாதை செல்லும் ஓரம் மழை நீர் கால்வாய் கட்டி சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சியில் 2000-2001 ஆம் ஆண்டில் சுடுகாடுகள் மற்றும் இடுகாடுகள் பராமரித்தல் மானிய திட்டத்தின் மூலம் மயானப் பாதை ஓரம் மழை நீர் கால்வாய் கட்ட ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு பணி நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 10]

**55—**

**சாலை அமைத்தல்**

**வினா 38952—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், தாராபடவேடு பேரூராட்சியிலுள்ள கிளித்தான் பட்டறையில் சாலை சரியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-1999 ஆம் ஆண்டின் அடிப்படை வசதித் திட்டத்தில் கிளித்தான்பட்டறை பிள்ளையார் கோயில் தெருவில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வாண்டு குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சுந்தரியம்மன் கோயில் தெரு, ஒத்தவாடை தெரு மற்றும் ஜோதி குடிசை ஆகிய மூன்று தெருக்களிலும் தார்ச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**56—**

**பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா 38953—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி வள்ளலார் பேருந்து நிறுத்தத்தில் நகரப் பேருந்து நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டில் அமைக்கப்படுமா?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் தொகுதி சத்துவாச்சாரி பேருந்து நிறுத்தத்தில் நகரப் பேருந்து நிலையம் அமைக்க போதிய இடமின்மையால் பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

57—

**மானியத் தொகை**

**வினா 39294—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கு புதிய மின் விளக்குகள் அமைக்க அரசு கடந்த 1998-99 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) அதில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் புதிய மின் விளக்குகள் அமைக்க ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளுக்கு முறையே ரூபாய் 26.86 இலட்சம், ரூபாய் 18.650 இலட்சம், ரூபாய் 11.010 இலட்சம் மற்றும் ரூபாய் 8.590 இலட்சம் அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வழங்கப்பட்ட மானியத் தொகை முழுவதும் செலவிடப்பட்டு, புதிய தெரு மின் விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.



2000 நவம்பர் 10]

58—

**மானியத் தொகை**

**வினா 39297—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலுள்ள இடங்கணசாலை, கொங்கணாபுரம், புலாம்பட்டி, பேரூராட்சிகளுக்கு மின் கட்டணம் கட்ட 1998-99 ஆம் ஆண்டுக்கு அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) அங்கு புதிய மின் விளக்கு அமைக்க 1998-99-ல் வழங்கப்பட்ட மானியத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டுக்கு மின் கட்டணம் கட்டுவதற்கு என தனியாக பேரூராட்சிகளுக்கு மானியத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) 1998-1999 ஆம் ஆண்டில் இடங்கணசாலை, கொங்கணாபுரம் மற்றும் புலாம்பட்டி பேரூராட்சிகளுக்கு புதிய மின் விளக்கு அமைக்க மொத்தம் ரூபாய் 1,60,450 அரசு மானியம் வழங்கி உள்ளது.

59—

**நெல் சாகுபடி**

**வினா 33089—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சராசரியாக ஆண்டொன்றுக்கு எத்தனை இலட்சம் டன் நெல் சாகுபடியாகிறது?

(ஆ) இதில் அரசு கொள்முதல் செய்யும் அரிசி எத்தனை இலட்சம் டன்?

[2000 நவம்பர் 10

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 22.00 இலட்சம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு சுமார் 70.00 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்யப்படுகின்றது.

(ஆ) தமிழகத்தில் காவிரிப் பாசனப் பகுதிகளிலும் மற்றும் இதர பாசனப் பகுதிகளிலும் சம்பா மற்றும் குறுவை பருவங்களில் 1996 ஆம் வருடம் முதல் 2000 வரை நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலமாக கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவும் அதிலிருந்து பெறப்பட்ட அரிசியின் அளவும் பின்வருமாறு:-

| வருடம் | குறுவை | | | |
|---|---|---|---|---|
| | கொள்முதல் செய்யப்பட்ட நெல் | நெல்லிலிருந்து பெறப்பட்ட அரிசி | கொள்முதல் செய்யப்பட்ட நெல். | நெல்லிலிருந்து பெறப்பட்ட அரிசி |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | மெ.டன். | மெ.டன் | மெ. டன். | மெ.டன். |
| 1996 | 1,11,426 | 75,770 | 1,34,065 | 91,164 |
| 1997 | 7,04,767 | 4,79,242 | 9,77,426 | 6,64,650 |
| 1998 | 44,550 | 30,294 | 11,36,823 | 7,73,040 |
| 1999 | 1,63,453 | 1,11,148 | 10,50,099 | 7,14,067 |
| 2000 | .. | .. | 12,08,672 | 8,21,897 |

**60—**

### பங்குத் தொகை

**வினா 15642—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதியில், வனத் துறையின் மூலமாக ஏலம் விடப்பட்ட கருவேல கண்மாய்களுக்கு 60 சதவீதம் ஊராட்சிப் பங்கு கடந்த 3 வருட காலமாக வழங்கப்படவில்லையென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முருவார்பட்டி, கல்லணை மற்றும் விராலிப்பட்டி ஆகிய மூன்று பஞ்சாயத்துகளுக்கு 1993-94 ஆம் ஆண்டின் பங்குத்தொகையாக ரூ.1,77,870 இத்தொகுதிக்குட்பட்ட மேட்டுப்பட்டி, அச்சம்பட்டி, புதூர், சித்தாலங்குடி ஆகிய நான்கு பஞ்சாயத்துகளுக்கு 1994-95-ம் ஆண்டின் பங்குத்தொகையாக ரூ.4,32,949-ம் மதுரை சமூகக்காடுகள் கோட்ட வன அலுவலரால் வழங்கப்பட்டுவிட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போதுமானதாக இல்லாததால் 1995-96, 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளுக்கான பங்குத்தொகை அளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**61—**

### சாலை அமைத்தல்

**வினா 20904—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்திற்கு உட்பட்ட பாகல்பட்டி முதல் முத்தம்பட்டி வரை இணைப்புச் சாலை வனத்தில் செல்ல இருப்பதால் வனத் துறையின் மூலம் சுமார் 8 கி.மீ. புதிய சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்திற்கு உட்பட்ட பாகல்பட்டி முதல் முத்தம்பட்டி வரை ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள சாலையின் மொத்த நீளமான 8 கி.மீ. மற்றும் 4

மீட்டர் அகலத்தில் மேம்பாட்டுப் பணிகள் வனத் துறை மூலம் மேற்கொள்ள வனப்பாதுகாப்புச் சட்டத்தின்படி மைய அரசின் அனுமதி பெற வேண்டியதில்லை.

2. மேற்கண்ட சாலையை மேம்படுத்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அல்லது பிற துறை திட்டங்கள் மூலம் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறின் வனத் துறை மூலம் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

3. வனத் துறைக்கு ஒதுக்கப்படும் குறைந்தபட்ச நிதியினைக்கொண்டு தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட பாகல்பட்டி முதல் முத்தம்பட்டி வரையிலுள்ள 8 கி.மீ. இணைப்புச் சாலையை வனத் துறை மூலம் மேம்படுத்த இயலாத நிலை உள்ளது.

**62—**

**மதகுகள் சீர் செய்தல்**

**வினா 25415—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி, குத்தாலப்பேரி கால்வாயில் திரவியநகர் அருகே அவசர கால மதகுகள் பழுதடைந்துள்ளதைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப்பகுதி குத்தாலப்பேரி கால்வாயில் திரவியநகர் அருகே அவசரகால மதகுகள் சீர்செய்யும் பணி ரூபாய் 14,000 செலவில் 6-9-1999 அன்று முடிக்கப்பட்டுவிட்டது. இதனால் பயனடையும் ஆயக்கட்டு 650 ஏக்கர் ஆகும்.



**63—**

**சிற்றாறு பராமரித்தல்**

**வினா 25419—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி யானைபாலம் அருகே சிற்றாற்றில் உள்ள செடி கொடிகளை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், தென்காசி யானை பாலம் அருகே சிற்றாற்றிலுள்ள செடி கொடிகள் அப்புறப்படுத்தும் பணி ஆண்டு தோறும் பராமரிப்பு நிதியில் பொதுப் பணித் துறை விதிமுறையின்படி ஆறின் குறுக்கே உள்ள அணைக்கட்டுகளுக்கு மேலும் கீழும் 2 பர்லாங்கு தூரத்திற்கு செடி கொடிகள் அகற்றப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**64—**

**ஏரிக்கரை பலப்படுத்துதல்**

**வினா 28097—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், நம்பேடு ஏரியின் கரையைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:.**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரமணல்லூர் ஒன்றியம், நம்பேடு ஏரியின் கரையைப் பலப்படுத்தும் வேலை நிதி நிலைமைக்கு ஏற்ப வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**65—**

**தடுப்புச்சுவர் சீரமைத்தல்**

**வினா 32014—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் யூனியன் பகுதியிலுள்ள குத்தாலப்பேரி கால்வாயில் (எ. திரவிய நகரின் மேல்புறம்) கட்டப்பட்ட தடுப்புச்சுவர் விழுந்துவிட்டபடியால் கரை பலவீனமடைந்து விட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் தடுப்புச் சுவர் எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி வட்டம், கீழப்பாவூர் யூனியன் பகுதியிலுள்ள குத்தாலப்பேரி கால்வாயில் இடிந்து விழுந்துவிட்ட தடுப்புச் சுவர் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்ததின் அடிப்படையில் ரூ.6.008 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.



**66—**

**உதவித்தொகை**

**வினா 38847—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆண்டு முடிய சேலம் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள இடைநிலை ஆசிரியர் பயிற்சியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் உதவித்தொகை பெறுபவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 30-6-2000 அன்று உள்ளபடி சேலம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 646 இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றோர் பதிவு செய்து வேலை வாய்ப்புக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

(ஆ) இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு என்று உதவித்தொகை வழங்கும் திட்டம் தனியாக ஏதும் இல்லை.

**67—**

**சாலை பழுதுபார்த்தல்**

**வினா 34379—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் அங்கேரிபாளையம் சாலையிலிருந்து கஞ்சம் பாளையம் செல்லும் சாலை பழுது பார்க்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் அங்கேரிபாளையம் சாலையிலிருந்து கஞ்சம்பாளையம் செல்லும் சாலை இதர மாவட்ட சாலை வகையைச் சார்ந்ததாகும். இச்சாலையின் நீளம் 1.60 கி.மீ. (அதாவது கி.மீ. 1/8-3/4 வரை) தற்போது இச்சாலை வாகன போக்குவரத்து செல்ல ஏற்ற வகையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் கி.மீ. 0/2-ல் போதிய வடிகால் உள்ளாட்சி துறையால் கட்டப்பட்டதாகும். குப்பை கூளங்கள் சாலை ஓரத்தில கொட்டப்படுள்ளதாலும், சாலையின் தோற்றம் பழுது பட்டுள்ளது போல் தோன்றுகிறது. தற்போது இது நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சரி செய்யப்பட்டு விட்டது. மேலும் வருங்காலங்களில் குப்பைகளை சாலையின் இருமருங்கிலும் கொட்டாமல் பார்த்துக் கொள்ளும்படி ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**68—**

### தொடக்க வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகள்

**வினா 35689—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை தொடக்க வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன?

(ஆ) அவை எவையெவை?

(இ) அவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஏழு



(ஆ) அவையாவன—

1. குருவிக்குளம்
2. நாங்குநேரி
3. சங்கரன்கோவில்
4. தென்காசி
5. திருநெல்வேலி
6. வள்ளியூர்
7. வாசுதேவநல்லூர்

(இ) நாங்குநேரி, சங்கரன்கோவில் மற்றும் வள்ளியூர் ஆகிய மூன்று கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளும் அடிமனை பெற்று தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்தும், திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்தும் கடன் பெற்று வங்கிக்குச் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன.

வாசுதேவநல்லூர் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, நல்லூர் கிராமம், சர்வே எண் 389/பி1-ல் உள்ள 8,755 சதுர அடி பரப்பினை ரூ.2,45,140-க்கு கிரயம் பெற்றுள்ளது. இந்த வங்கி அலுவலகக் கட்டடம் கட்ட கடன் பெற்ற பின்னர் கட்டடப் பணி தொடங்கப்படும்.

திருநெல்வேலி கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி சொந்த அலுவலகக் கட்டடம் கட்டுவதற்காக திருநெல்வேலி ஜவஹர் நகரில் உள்ள அரசிதழ் பதிவுறா கூட்டுறவுக் கட்டடச் சங்கத்திற்குச் சொந்தமான காலி மனையினை கிரயத்திற்குப் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தென்காசி மற்றும் குருவிகுளம் ஆகிய கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளும் அடிமனை பெற உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன. இவ்வங்கிகள் அடிமனைகள் வாங்கியவுடன் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

[2000 நவம்பர் 10

69—

**பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்**

**வினா 34272—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் தொடங்க எத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

25 நபர்கள் ஒன்று சேர்ந்து தாம் வசிக்கின்ற கிராம விவகார எல்லையில் உள்ள கிராமத்தில் கறவை மாடுகளின் மூலமாக எவ்வளவு பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை நன்கு தெரிந்த பின்பு மேற்படி 25 நபர்கள் கையொப்பமிட்ட விண்ணப்பம் ஒன்றைத் தயார் செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட துணைப் பதிவாளர் (பால் வளம்) அவர்களுக்கு, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்கக் கோரி விண்ணப்பிக்க வேண்டும். அவ்விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட துணைப் பதிவாளர் (பால் வளம்), பரிசீலனை செய்த பிறகு, தமது மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய நிர்வாக இயக்குநர்/பொது மேலாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்து சங்கம் பதிவு செய்வதற்கான உரிய பிரேரணையை அனுப்பி வைக்குமாறு கோருகிறார்.

சங்கம் அமைக்கக் கோரும் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட நிர்வாக இயக்குநர்/பொது மேலாளர், தமது கட்டுப்பாட்டிலுள்ள துணை மேலாளர் அளவில் ஒரு குழுவினை அளவாய்வு (Survey) செய்ய, சங்கம் அமைக்கக் கோருகின்ற கிராமத்திற்கு அனுப்பி வைப்பார். இக்குழு சங்கம் அமைக்கக் கோரப்பட்ட கிராமத்தில் கறவை மாடுகள் எவ்வளவு இருக்கிறது என்றும், அதன் மூலம் எவ்வளவு பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும், மாடுகள் மேய்வதற்கு ஏற்ற புல்வெளிகள் உள்ளனவா என்றும், மேற்படி கிராமத்தில் சங்கம் அமைத்தால் நல்ல நிலையில் சங்கம் செயல்படுமா என்பன போன்ற சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து சாத்தியக் கூறுகள் இருக்கிறது அல்லது வாய்ப்பில்லை என்ற அறிக்கையை நிர்வாக இயக்குநர்/பொது மேலாளருக்குச் சமர்ப்பிக்கின்றனர்.



2000 நவம்பர் 10]

மேலும் பால் உற்பத்தி கூட்டுறவு சங்கம் அமைக்கக் கோருகின்ற கிராமத்திலிருந்து மூன்று மாத காலத்திற்குத் தொடர்ந்து, நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் பால் வீதம் சம்பந்தப்பட்ட மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு பால் ஊற்றிவந்த பிறகு உரிய பிரேரணையை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய நிர்வாக இயக்குநர்/பொது மேலாளர் அவர்களால் சம்பந்தப்பட்ட துணைப் பதிவாளர்(பால் வளம்) அவர்களுக்கு அனுப்பி வைக்கிறார். புதிய சங்கம் அமைப்பதற்கான பிரேரணையை பெற்றுக்கொண்ட துணைப் பதிவாளர் (பால் வளம்) புதிய சங்கத்திற்கு முதன்மை அமைப்பாளர் (Chief promoter) ஒருவரை நியமித்து அவர் உறுப்பினர்களாக சேர விரும்புபவர்களிடமிருந்து பங்கு அனாமத்து தொகை வசூலித்து வங்கியில் செலுத்த அதிகாரம் அளிக்கப்படுகிறது. அவ்விதம் வசூலிக்கப்பட்ட தொகை இருசால் செய்யப்பட்ட விவரத்துடன் முதன்மை அமைப்பாளர் சங்கத்தைப் பதிவு செய்யக் கோருவார், அவரின் கோரிக்கையை ஏற்று சரக துணைப் பதிவாளர் (பால்வளம்), அவர்களால் 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 9(1)-ன் கீழ் புதியசங்கம் துணை விதிகளுடன் பதிவு செய்யப்படுகிறது.

70—

**விட்டுமனைப் பட்டா**

**வினா 10053—திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் சிறு காவேரிபாக்கம் கிராமத்தில் ஜெ.ஜெ. மாதிரி நகர் என்கிற பெயர் வைத்து வீட்டுமனைப்பட்டா வழங்கியதில் ஊழல் நடந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1995 ஆம் ஆண்டு கடும் மழை பெய்ததால், காஞ்சிபுரம் நகரிலுள்ள மஞ்சள் நீர்க்கால்வாய் என்ற வாய்க்கால் புறம்போக்கில், இரு கரைகளிலும் கட்டடங்கள் கட்டி, ஆக்கிரமிப்புகள் பெருமளவில் செய்யப்பட்டதால், மழை நீர் வடிவதில் தடை ஏற்பட்டு

காஞ்சிபுரம் நகரில் வெள்ளம் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்ற முடிவு செய்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, மாற்று இடம் வழங்க சிறு காவேரிபாக்கத்தில் வருவாய்த் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பகுதியில் வீட்டுமனைகள் அளவு செய்யப்பட்டு பட்டாக்கள் தயாரிக்கப்பட்டு (1,010 மனைகள் பிரிக்கப்பட்டு) 905 நபர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டது. பட்டா வழங்குவதில் முறைகேடுகள் நடந்ததாக ஏற்பட்ட புகாரின் பேரில் ஆய்வு செய்ததின் அடிப்படையில் அப்போது பணியிலிருந்த திரு. தெய்வசிகாமணி, வட்டாட்சியரின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசாரணை அலுவலரின் அறிக்கையை எதிர்நோக்கி ஒழுங்கு நடவடிக்கைக் கோப்பு நிலுவையில் உள்ளது. முறைகேடாக வழங்கப்பட்ட பட்டாக்களைக் கண்டறிந்து இரத்து செய்ய காஞ்சிபுரம் வருவாய்க் கோட்ட அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

71—

### தனிப் பட்டாக்கள்

**வினா 17595—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள ஏழை விவசாயிகளின் நலன் கருதி கூட்டுப் பட்டாக்களை தனித் தனிப் பட்டாவாகப் பிரித்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு செய்ததற்கிணங்க கூட்டுப்பட்டாக்களை விரும்பாதவர்களுக்கு தனிப் பட்டாவாகக் கொடுப்பதற்கும் தீவிர பதிவு மாற்றம் மற்றும் உட்பிரிவு முனைப்புத் திட்டம் ஒன்றை ஆறு மாத காலத்தில் செயல்படுத்தவும் அரசு முடிவு செய்தது. அது தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அவர்களும் தக்க நடவடிக்கை எடுத்து, முன்னேற்ற அறிக்கைகளை அரசுக்கு திங்கள் தோறும் அனுப்பி வருகின்றனர். அரசு மட்டத்திலும் ஆய்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியர்களுக்கு மேலும் முன்னேற்றம் காண தக்க அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.





72—

### ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா 17624—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் பகுதிகளில் ஆறு வாய்க்கால்களை வீடுகளுக்காக ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களை அப்புறப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அதன் காரணமாகவே வடிகால் வாய்க்கால் இன்றி வெள்ளச்சேதம் ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த 1996 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெருமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளச் சேதங்களின் காரணத்தை ஆய்வு செய்தபொழுது போதுமான வடிகால் வசதி இல்லாத காரணத்தினாலேயே காவிரி டெல்டா பகுதிகளில் ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்கள் மற்றும் விளை நிலங்கள், பயிர்கள் ஆகியவை வெள்ளத்தினால் பலத்த சேதம் அடைந்தது தெரிய வந்தது. அதன் விளைவாக அரசு சுமார் 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள ஆறுகள், வடிகால்கள், வாய்க்கால்கள் மற்றும் ஏரிகளை தூர் வாரவும் கட்டுமானங்களைப் புதுப்பிக்கவும் பழுதடைந்த சட்டர் பலகைகளைப் புதுப்பிக்கவும் ஐந்தாண்டு திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி கடந்த 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆகிய நிதியாண்டுகளில் மொத்தம் திட்டமிடப்பட்ட பணிகளில் சுமார் 75 சதவிகித பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாகக் காவிரி டெல்டா பகுதிகளில் வெள்ளச் சேதங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், இவ்வாண்டும் சுமார் 25.75 கோடியில் மேற்கண்ட பணிகள் தொடரப்பட்டு போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. இதன் பயனாக வரும் ஆண்டுகளில் வெள்ளச் சேதம் பெருமளவில் குறைய வாய்ப்புகள் ஏற்படும். ஆறுகள், வடிகால்கள் மற்றும் வாய்க்கால்கள் தூர் வாரப்பட்டபொழுது நீர்போக்கிற்குத் தடையாக உள்ள கட்டடங்கள்,

படுகை நிலங்கள், மரங்கள் போன்ற அனைத்து தடைகளும் வருவாய்த் துறை, காவல்துறை மற்றும் பொதுப்பணித் துறை ஆகியோர்களின் உதவியோடு ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டன. ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டதனால் வெள்ளச் சேதம் ஏற்படுவது தடுக்கப்பட்டு வருகிறது.

**73—**

**கண்மாயில் ஆக்கிரமிப்பு**

**வினா 17923—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மேலப்பட்டமங்கலம், அரிசனங்குடிபட்டி கிராமத்திலிருந்தும் அப்பாகுடிபட்டி கண்மாயில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்ற அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மேலப்பட்டமங்கலம் குரூப் அரிசனங்குடிபட்டி கிராமம், புல எண் 202 (பரப்பு 12.06.5 ஹெக்டேர்) இல் உள்ள அப்பாகுடிபட்டி கண்மாயில் கழுங்கில் தண்ணீரை தேக்குவதற்காக வைக்கப்பட்டிருந்த மணல் மூட்டைகள் அகற்றப்பட்டுவிட்டன. தற்போது மேற்படி கண்மாயில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை.

**74—**

**இலவச விட்டுமனைப் பட்டா**

**வினா 25326—திரு. க. மணிவர்மா:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலை வட்டம், கீழ்செட்டிப்பட்டு ஏரியில் நீர்ப் பிடிப்பு இல்லாத பகுதியில் வீடுகட்டி வாழும் மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

கீழ்செட்டிப்பட்டு கிராம ஏரியின் ச. எண் 15, இதன் பரப்பு 13.69.5 எக்டேர் ஆகும். இந்த ஏரியின் கிழக்கு பக்க ஓரத்தில் திருவண்ணாமலை-தண்டராம்பட்டு மெயின் ரோட்டிற்கு அருகில் சுமார் 41 நபர்கள் தலா 0.01.0 ஏக்கர்ஸ் விஸ்தீரணத்தில் வீடுகட்டி ஆக்கிரமணம் செய்துள்ளனர். இவர்கள் தங்கள் வீடுகளுக்குப் பட்டா வழங்குமாறு ஏற்கனவே கோரியுள்ளனர். மேற்கண்ட வீடுகள் ஏரியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு தொடர்ச்சியாக பலத்த மழை பெய்யும் காலங்களில் ஏரி நிரம்பி மேற்கண்ட வீடுகளில் நீர் புகுந்து சேதத்தை ஏற்படுத்துகிறது. மேலும் சாதாரணமாக மித மழை பெய்யும் காலங்களில் கூட ஏரியில் உள்ள நீரின் ஓதம் தாங்காமல் மேற்கண்ட வீடுகளின் சுவர்கள் விழுந்துவிடுகின்றன என விசாரணையில் தெரிய வருகிறது.

கடந்த 1997 ஆம் ஆண்டு பெய்த பலத்த மழையில் மேற்கண்ட ஏரி நிரம்பி சேதத்தை ஏற்படுத்தியது. அதன்பின் மேற்கண்ட தண்ணீரை கால்வாய் வெட்டியும், வேறு வழிகளில் திருப்பிவிட்டும் நீர்மட்டம் குறையவில்லை. இந்நிலையில் சாத்தனூர் அணையிலிருந்து கீழ்செட்டிப்பட்டு கிராம ஏரிக்கு தண்ணீர் எடுத்துவர விரைவில் கால்வாய் கட்டும் பணி தொடங்க உள்ளது. இப்பணி முடிவடைந்து நீர் வரப்பெற்றால் மேற்கண்ட வீடுகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

எனவே, இந்நிலையில் கீழ்செட்டிப்பட்டு ஏரியின் அருகில் வீடுகட்டி வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கினால் மழைக் காலங்களில் அவர்களின் வீடுகளுக்கு சேதம் ஏற்பட வாய்ப்புண்டு என்பதாலும், நஞ்சை ஆயக்கட்டுதாரர்கள் ஆட்சேபனை செய்யும் வாய்ப்பு உள்ளதாலும், மேற்கண்ட பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**75—**

**விட்டுமனைப் பட்டா**

**வினா 33296—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

அரக்கோணம் நகரம், கிருபில்ஸ்பேட்டை பகுதி, சாய்நகர் போன்ற பகுதிகளில் வீடுகட்டி வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரக்கோணம் நகரம், கிருபில்ஸ்பேட்டை பகுதி, சாய்நகர் போன்ற பகுதிகளில் வீடுகட்டி வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

76—

## வருவாய் அலுவலர்கள் தங்கும் திட்டம்

**வினா 33318—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வருவாய் அலுவலர்கள் பணி செய்யும ஊரிலேயே தங்க திட்டம் உருவாக்க வாய்ப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வருவாய்த் துறை அலுவலர்களைப் பொறுத்தவரை, மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய்க் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் சரக வருவாய் ஆய்வர்கள் ஆகிய அலுவலர்களுக்கு அவரவர்கள் பணிபுரியும் நகரம் மற்றும் கிராமங்களிலேயே குடியிருப்பு கட்டப்பட்டு, இருப்பிட வசதி அரசால் செய்து கொடுக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. அவர்களும் அந்தந்த தலைமையிடங்களில் தங்கி பணிபுரிந்து வருகிறார்கள். இதர வருவாய் அலுவலர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளிலும், மற்றவர்கள் வாடகை வீடுகளிலும் தங்கி பணிபுரிந்து வருகிறார்கள்.

77—

## உதவித் தொகை

**வினா 37459—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) தமிழ்நாட்டில் 1998-99-ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக தீ விபத்தில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் அரசிடம் உதவித் தொகை பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டில் 21 மாவட்டங்களில் மொத்தம் 114 நபர்கள் தீ விபத்தில் இறந்துள்ளார்கள். தீ விபத்தில் உயிரிழந்த அனைத்து நபர்களின் குடும்பங்களுக்கும் அரசால் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில், மாவட்ட வாரியாக தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### இணைப்பு

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | இறந்தவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | சென்னை | 22 |
| 2. | காஞ்சிபுரம் | 4 |
| 3. | திருவள்ளூர் | 7 |
| 4. | திருவண்ணாமலை | 5 |
| 5. | விழுப்புரம் | 10 |
| 6. | கடலூர் | 11 |
| 7. | திருச்சிராப்பள்ளி | 7 |
| 8. | கரூர் | 3 |
| 9. | பெரம்பலூர் | 3 |
| 10. | புதுக்கோட்டை | 4 |
| 11. | தஞ்சாவூர் | 4 |
| 12. | நாகப்பட்டினம் | 1 |
| 13. | மதுரை | 9 |
| 14. | திருநெல்வேலி | 2 |
| 15. | தூத்துக்குடி | 1 |
| 16. | திண்டுக்கல் | 3 |
| 17. | விருதுநகர் | 1 |
| 18. | கன்னியாகுமரி | 2 |
| 19. | சேலம் | 5 |
| 20. | ஈரோடு | 3 |
| 21. | கோயம்புத்தூர் | 7 |
| | மொத்தம் | 114 |

[2000 நவம்பர் 10

78—

### சிறையில் இடவசதி

**வினா 37546—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மத்திய சிறையில் எவ்வளவு கைதிகள் தங்கும் அளவிற்கு இடவசதி உள்ளது?

(ஆ) தற்போது அங்கு வைக்கப்பட்டுள்ள கைதிகள் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேல் உள்ளது குறித்து அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், கூடுதலாக 200 பேர் தங்கும் அளவிற்கு 3 பிளாக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) பாளையங்கோட்டை, மத்திய சிறையில் 1,132 கைதிகள் தங்கும் அளவிற்கு இடவசதி உள்ளது.

(ஆ) ஆம், அரசு அறியும், தற்பொழுது கைதிகளின் எண்ணிக்கை 1,615 ஆகும்.

(இ) கூடுதலான கைதிகள் தங்குவதற்காக, நாங்குநேரி கிளைச் சிறையைச் சிறப்பு கிளைச் சிறையாக மாற்றம் செய்ய 28-7-2000 நாளிட்ட உள் துறை, அரசாணை (நிலை) எண் 820-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பாளையங்கோட்டை மத்திய சிறையில் இடநெருக்கடியைக் குறைப்பதற்கு அருகிலுள்ள ஸ்ரீவைகுண்டம் கிளைச் சிறையை, மாவட்ட சிறையாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு 2001-2002-க்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

79—

### குடிநீர்த் தொட்டிகள் பராமரித்தல்

**வினா 37796—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

வேலூர் மத்திய சிறைச்சாலையில் உள்ள குடிநீர்த் தொட்டிகள், நன்கு பராமரிக்கப்படாததால் சிறைக் கைதிகள் நோய்வாய்ப்படுவதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

வேலூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள குடிநீர்த் தொட்டிகள் நன்கு பராமரிக்கப்படுகின்றன. கடந்த ஒரு வருட காலமாக எந்த ஒரு சிறைவாசிக்கும், சிறையில் வழங்கப்பட்ட குடிநீரினால் எந்தவித நோய்களும் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்படவில்லை.

80—

### கணினிப் பயிற்சி அளிக்கும் திட்டம்

**வினா 38759—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலுள்ள தகுதி வாய்ந்த கைதிகளுக்கு கணினிப் பயிற்சி அளிக்கும் திட்டம் குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

மத்திய சிறைகளிலுள்ள சிறைவாசிகளுக்கு கணினிப் பயிற்சி அளிப்பதற்கென கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

1. ஸ்டெர்லைட் பவுண்டேஷன், மும்பை (M/S. Sterilite Foundation, Mumbai) என்ற தன்னார்வுத் தொண்டு நிறுவனத்தினரால் திருச்சி மத்திய சிறையிலுள்ள சிறைவாசிகளுக்கு 6 மாத கால கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 30 சிறைவாசிகளுக்கு அளிக்கப்பட்ட இப்பயிற்சி 31-3-2000 உடன் முடிவுற்றது.

2. மற்றொரு தன்னார்வுத் தொண்டு நிறுவனமான எஸ்.ஏ.எஸ். இந்தியா இன்பாடெக், மதுரை என்ற நிறுவனத்தினரால் மதுரை மத்திய சிறையில் சிறைவாசிகளுக்கு 6 மாத கால கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 5-7-2000 முதல் தொடங்கப்பட்ட இப்பயிற்சியில் 43 சிறைவாசிகள் கலந்துகொண்டு பயனடைகின்றனர்.

[2000 நவம்பர் 10

3. இந்திராகாந்தி தேசிய பல்கலைக்கழகம் மூலம் கோவை மத்திய சிறையிலுள்ள 8 சிறைவாசிகளுக்கு கீழ்க்கண்ட கணினிப் பயிற்சி பயில ரூ. 23,000-க்கான செலவின அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| எம்.சி.ஏ. | 2 | சிறைவாசிகள் |
| சி.ஐ.சி. | 6 | சிறைவாசிகள் |
| | 8 | சிறைவாசிகள் |

4. இதுபோன்று, திருச்சி மத்திய சிறையிலுள்ள 7 சிறைவாசிகளுக்கும் இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம் மூலம் கீழ்க்கண்ட கணினிப் பயிற்சி பயில ரூ. 58,400-க்கான செலவின அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| எம்.சி.ஏ. | 4 | சிறைவாசிகள் |
| பி.சி.ஏ. | 3 | சிறைவாசிகள் |
| | 7 | சிறைவாசிகள் |

மேலும் சிறைகளை நவீனமயமாக்கும் (2000-2005) திட்டத்தின்கீழ் சிறைவாசிகளுக்கு தொழில் பயிற்சி அளிக்கும் செயல் நோக்கோடு கணினிப் பயிற்சி அளிப்பதற்கான மையங்கள் ரூ. 135 இலட்சத்தில் தொடங்குவதற்கான திட்டத்திற்கு மைய அரசிடமிருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்படுகிறது.

81—

### இலவச வேட்டி சேலைகள்

**வினா 34946—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச வேட்டி, சேலைகள் இந்த 1998-99 ஆம் ஆண்டு எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) ஆதிதிராவிடர் அனைவருக்கும் விடுபடாமல் வழங்கப்பட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் 77.10 இலட்சம் சேலைகள் மற்றும் 70.42 இலட்சம் வேட்டிகள் வழங்கப்பட்டன.



2000 நவம்பர் 10]

(ஆ) தகுதி வாய்ந்த ஆதிதிராவிடர் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

82—

### நெசவுத் தொழில் பாதிக்கப்பட்ட பகுதி

**வினா 38095—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எந்தெந்த மாவட்டம், எந்தெந்த இடங்களில் நெசவாளர் மழைக் காலத்தில் நெசவுத் தொழிலில் பாதிக்கப்பட்ட பகுதி (Flood prone Area) என்று கண்டறியப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் மழைக் காலத்தில் அந்தந்த சமயங்களில் பெய்கின்ற பெருமழையின் காரணமாக, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிவிப்பின்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என அரசினால் உறுதி செய்யப்படுகின்ற பகுதிகளையே, மழைக் காலத்தில் நெசவுத் தொழில் பாதிக்கப்பட்ட பகுதி (Flood Prone Area) என கண்டறியப்படும்.

83—

### சத்துணவு சமையற்கூடம்

**வினா 23627—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெய்வேலி தெற்கு அரசினர் உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் மற்றும் சமையற்கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெய்வேலி தெற்கு அரசு உயர்நிலைப் பள்ளியில்

[2000 நவம்பர் 10

சத்துணவு சமையற்கூடம் ரூ. 25,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

84—

**சமையற்கூடம் கட்டுதல்**

**வினா 25215—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், காசாநாடு கோவிலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவு சமைப்பதற்கு சமையல் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், காசாநாடு கோவிலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி சத்துணவு சமையற்கூடம் ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதியிலிருந்து ரூ. 40,000 மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது.

85—

**குழந்தைகள் நல மையம் பராமரித்தல்**

**வினா 34990—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நல்லூர் பேரூராட்சி, விஜயாபுரம் குழந்தைகள் நல மையம் பள்ளத்தில் அமைந்துள்ளதால் மழை நீர் புகுந்து விடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், நல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட விஜயாபுரம் குழந்தைகள் நல மையம் பள்ளத்தில் அமைந்துள்ளதால் மழை நீர் புகுந்து விடுவதைத் தடுக்கும் பொருட்டு தற்போது மண் போட்டு மேடாக்கப்பட்டுள்ளது.

86—

**போலி முத்திரைத் தாட்கள்**

**வினா 36970—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் போலிப் பத்திரப் பதிவு சான்றிதழ்கள் விற்பனை செய்ததில் 2000 ஆண்டு பிப்ரவரி மாதம் வரை எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?

(ஆ) அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட போலிப் பத்திரங்கள் மதிப்பு எவ்வளவு?

(இ) அவர்கள்மீது அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) போலி பதிவுச் சான்றிதழ்கள் விற்பனை என்று ஏதுமில்லை. பதிவான ஆவணங்களில் போலி முத்திரைத் தாட்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு பதிவுத் துறை மூலம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டதன் பேரில் மொத்தம் 25 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

[2000 நவம்பர் 10

(ஆ) பதிவுத் துறை மூலம் முத்திரைத் தாட்கள் ஏதும் பறிமுதல் செய்யப்படவில்லை. ஆனால் பதிவான ஆவணங்களில் ரூ. 6,80,470 மதிப்புள்ள போலி முத்திரைத் தாட்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

(இ) இது குறித்து காவல் துறையில் எட்டு புகார்கள் பதிவு செய்யப்பட்டு குற்றப் புலனாய்வு பிரிவின் விசாரணையில் இருந்து வருகிறது.

**87—**

### சேகோ ஆலைகள்

**வினா 37349—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் சேகோ பேக்டரிகள் எத்தனை இயங்கி வருகின்றன?

(ஆ) ஆலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படாமையால், மூடப்பட்ட ஆலைகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 388 சேகோ ஆலைகளும், நாமக்கல் மாவட்டத்தில் 259 சேகோ ஆலைகளும் இயங்கி வருகின்றன.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 37 ஆலைகளும், நாமக்கல் மாவட்டத்தில் 4 ஆலைகளும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படாமையால் மூடப்பட்டுள்ளன.

**88—**

### அனாதை விடுதிகள் விவரம்

**வினா 29364—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 10]

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனாதை விடுதிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இவற்றில் தனியாரால் நடத்தப்படுபவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்நாட்டிலுள்ள அனாதை விடுதிகளின் மொத்த எண்ணிக்கை .. | 207 |
| 2. | இவற்றில் தனியாரால் நடத்தப்படுபவை .. | 182 |
| 3. | அரசால் நடத்தப்படுபவை .. | 25 |

4. தனியார் இல்லங்களில் 13,252 குழந்தைகளும் அரசு இல்லங்களில் 4,518 குழந்தைகளும் உள்ளனர்.

5. 25 அரசு ஆதரவற்றோர் இல்லங்களில் மூன்று இல்லங்கள் சொந்த கட்டடத்திலும், இரண்டு இல்லங்கள் அரசுக் கட்டடத்திலும், ஒரு இல்லம் வாடகையற்ற கட்டடத்திலும் மீதி இல்லங்கள் வாடகை கட்டடங்களிலும் தற்போது இயங்கி வருகின்றன.

6. தனியார் இல்லக் குழந்தைகளுக்கு அரசால் பராமரிப்பு மானியமாக ஒரு குழந்தைக்கு மாதமொன்றிற்கு ரூ.200 வழங்கப்பட்டு வருகிறது.

**89—**

### வீட்டுமனை வழங்குதல்

**வினா 5590—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், பொங்கலூர் ஒன்றியம், வேலம்பட்டி மற்றும் கண்டியாங்கோயில் கிராமம், பெரியாரிப்பட்டி ஆகிய ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் குடியிருப்போருக்கு வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

திருப்பூர் வட்டம், கண்டியன்கோயில் கிராமம், மஜரா பெரியாரிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 22 ஆதிதிராவிட மக்களுக்கு மேற்படி கிராமம் க.ச. 275-3-ல் 1.05 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து 8-7-1998-ல் 22 ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. இதில் நவம்பர் 1999-ல் 18 தொகுப்பு வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. இதேபோன்று கண்டியங்கோயில் கிராமம் க.ச. 660-1-ல் 1.00 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து, கண்டியங்கோயில் கிராமத்தைச் சேர்ந்த 25 நபர்களுக்கு 8-7-1998-ல் பட்டா வழங்கப்பட்டது. வேலம்பட்டி கிராமம் க. ச. 165 நத்தத்தில் 30 ஆதிதிராவிடர் மக்களுக்கு திருப்பூர் வருவாய் வட்டாட்சியரால் 5-9-1984-ல் பட்டா வழங்கப்பட்டுள்ளன. மேலும் வேலம்பட்டி மஜரா வேலம்பட்டிபுதூரில் க.ச. 283 நத்தத்தில் 4-10-1989-ல் 34 ஆதிதிராவிடர் மக்களுக்கு திருப்பூர் வருவாய் வட்டாட்சியரால் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது வேலம்பட்டி கிராமத்தில் 15 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும், வேலம்பட்டி மஜரா வேலம்பட்டிபுதூரில் 10 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியுள்ளது. இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, மேற்படி கிராம நத்தம் புறம்போக்கில் போதுமான காலியிடம் உள்ளது. இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க, திருப்பூர் வருவாய் வட்டாட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**90—**

### பட்டா வழங்குதல்

**வினா 16200—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, இடுவாய் ஊராட்சி, சின்னக்காளி பாளையத்தில் ஆதிதிராவிடக் காலனித் தொகுப்பு வீடுகளில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா இல்லையென்பதை அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில், அவர்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் தொகுதி, இடுவாய் கிராமம் சின்ன காளிபாளையத்தில் க.ச. 250-ல் உள்ள நத்தத்தில் 25 நபர்களுக்கு தொகுப்பு வீடு கட்டப்பட்டது. இதில் 3 வீடுகள் தவிர மற்றைய 22 வீடுகளுக்கு பட்டாக்கள் பெற்ற நபர்கள் வீடுகளைக் காலி செய்து விட்டு வேறிடம் சென்றுவிட்டதால் வீடுகள் காலியாயின. இந்த 22 நபர்களின் பட்டாக்களும் திருப்பூர் வட்டாட்சியரால் இரத்து செய்யப்பட்டு புதியதாக 22 நபர்களுக்கு திருப்பூர் வட்டாட்சியரால் பட்டா வழங்கப்பட்டது. இதில் 20 நபர்கள், வீடுகளை காலி செய்துவிட்டு சென்றுவிட்டனர். தற்பொழுது மேற்படி பகுதியில் 5 வீடுகளில் மட்டும் குடியிருந்து வருகின்றனர். மேற்படி இடத்திற்கு புதியதாக பயனாளிகள் தேர்வு செய்து 20 நபர்களுக்கு பட்டா வழங்க, திருப்பூர் வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**91—**

### சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா 22098—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் மங்கலம் ஊராட்சி சின்னப்புத்தூரில் ஆதிதிராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் ஊராட்சி, சின்னப்புத்தூரில் ஆதிதிராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 நவம்பர் 10

92—

சுடுநீர் சாதனம் அமைத்தல்

**வினா 26576—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை அரசு ஆதிதிராவிடர் மாணவியர் விடுதியிலும், குற்றாலம் அரசு ஆதிதிராவிடர் கல்லூரி மாணவியர் விடுதியிலும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை மற்றும் குற்றாலம் ஆதிதிராவிடர் நல மகளிர் விடுதிகளில் சுடுநீர் சாதனம் அமைக்க 2001-2002 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்குமாறு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திற்கு பரிந்துரை செய்யப்படும்.

93—

பள்ளிக் கட்டடம் பழுதுபார்த்தல்

**வினா 30890—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுபரமக்குடியில் இயங்கிவரும் ஆதிதிராவிட நல நடுநிலைப் பள்ளி பழுதடைந்த கட்டடத்தில் இயங்குவதால், கான்கிரீட் கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் உள்ள காட்டுபரமக்குடி ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட ஊரக வளர்ச்சித் துறை மூலம் தேர்வு செய்யப்பட்டு, தற்பொழுது கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இப்பள்ளியில் பழுதடைந்துள்ள மூன்று கட்டடங்கள் தற்காலிகமாக சீர்செய்யப்பட்டு, வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

94—

உதவித் தொகை

**வினா 33360—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-1999 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்/பழங்குடி மாணவ/மாணவியர்கள் வெளிநாடு சென்று உயர்கல்வி பயிலுவதற்கு அரசு அளிக்கும் உதவித் தொகை எத்தனை மாணவ/மாணவியர் பெற்றனர்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் உதவியின் மூலம் நிதியுதவி பெற்று எவர் ஒருவரும் உயர்கல்வி பயில்வதற்கு வெளிநாடு செல்லவில்லை.

95—

பட்டா

**வினா 33412—டாக்டர் அ. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர்களுக்குப் பட்டா வழங்க நிலம் ஆர்ஜிதம் செய்வதிலுள்ள சிக்கல்களைக் களைய அரசு சட்டத் திருத்தம் கொண்டுவர செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

96—

## தாட்கோ மூலம் கடன்

**வினா 35552—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் 1996-1999 டிசம்பர் வரை 'தாட்கோ' மூலம் கடன் கேட்டு எத்தனை பேர் மனு செய்துள்ளனர்?

(ஆ) எத்தனை பேர் கடன் பெற்றுள்ளனர்?

(இ) மீதம் உள்ளவர்கட்கு எப்போது கடன் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் 1996 முதல் 1999 டிசம்பர் வரை 'தாட்கோ' மூலம் கடன் கேட்டு மனு செய்தவர்கள், கடன் பெற்றவர்கள் மற்றும் மீதம் உள்ளவர்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:—



| வருடம் மற்றும் திட்டம் (1) | கடன் கேட்டு மனு செய்தவர்கள் (2) | கடன் பெற்றவர்கள் (3) | மீதம் உள்ளவர்கள் (4) |
|---|---|---|---|
| **1996-97** | | | |
| தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் | 7 | 2 | 5 |
| விவசாயம் சார்ந்த திட்டங்கள் | 25 | 10 | 15 |
| மொத்தம் .. | **32** | **12** | **20** |
| **1997-98** | | | |
| தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் | 5 | 1 | 4 |
| விவசாயம் சார்ந்த திட்டங்கள் | 20 | 7 | 13 |
| மொத்தம் .. | **25** | **8** | **17** |
| **1998-99** | | | |
| தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் | 3 | .. | 3 |
| விவசாயம் சார்ந்த திட்டங்கள் | 10 | 3 | 7 |
| மொத்தம் .. | **13** | **3** | **10** |

மேலே பிரிவு 4-ல் காட்டப்பட்ட 47 மனுதாரர்களின் விண்ணப்பங்களும் வங்கியாளர்களால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

97—

## சாதிச் சான்று

**வினா 37175—திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 10

(அ) கல்வராயன் மலைப் பகுதியில் வாழும் பழங்குடி இன மக்களுக்கு சாதிச் சான்று வழங்குவதில் காலதாமதம் ஆகிறது என்று அரசுக்குத் தெரியுமா?

(ஆ) எவ்வளவு நாட்களில் விண்ணப்பம் செய்தால் சாதிச் சான்று வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கல்வராயன் மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களிடமிருந்து சாதிச் சான்று கோரி வரும் மனுக்களை சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி அறிக்கை பெற்ற பின்னர், சம்பந்தப்பட்ட பகுதிக்குச் சென்று கோட்டாட்சியரின் நேரடி விசாரணை முடிந்து, பெற வேண்டிய சான்று ஆவணங்களைப் பெற்று முறைப்படி உரிய காலத்திற்குள் சான்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. சில சந்தேகத்திற்கு இடமளிக்கக்கூடிய இனங்களில், பெற்றுள்ள சான்றாவணங்களின் சாதி குறித்து முரண்பாடுகள் இருந்தால் அவைகளின் பேரில் தீர இரகசிய விசாரணை செய்து சான்றளிக்க காலதாமதம் ஏற்பட வாய்ப்பாக உள்ளது. பழங்குடியினர் பட்டியலில் கண்ட சாதி குறித்து தீர்க்கமான ஆதாரங்கள் இருக்கும் இனங்களில் ஒரு மாதத்திற்குள் சான்று அளிக்கப்பட்டு வருகின்றது.

98—

### ஒன்றியத்திற்கு சமுதாயக் கூடம்

**வினா 38293—திரு. க. வேல்சாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வீதம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு முதல் திட்டம் தொடங்கப்படுமா?



2000 நவம்பர் 10]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமுதாயக் கூடம் கட்டும் பணி ஒரு தொடர் திட்டமாக இருப்பதாலும் ஒவ்வொரு நிதி ஆண்டும் ரூ. 20 இலட்சம் வீதம் 4 சமுதாயக் கூடங்கள் கட்டப்படுவதாலும் அரசின் நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டும் ஆதிதிராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வீதம் கட்டித் தருதல் இயலாது.

99—

### விடுதிக் கட்டடம்

**வினா 39217—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் ஆதி திராவிடர் நலத் துறை விடுதிகள் பல வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேலூர் மற்றும் வாணியம்பாடி ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்குக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. கரும்பூர், பில்லாந்திப்பட்டு மாணவர்/மாணவியர் விடுதிகளுக்குத் தற்போது தாட்கோவினால் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள வாடகைக் கட்டடங்களில் இயங்கும் விடுதிகளுக்கு நிதி நிலைமைக்கேற்ப அரசுக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2000 நவம்பர் 10

100—

**சுற்றுலா அலுவலர் நியமித்தல்**

**வினா 24787—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்திற்கென்று தனியாக சுற்றுலா அலுவலர் நியமிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இம்மாவட்டத்திற்கென்று சுற்றுலா அலுவலர் ஒருவரை நியமிக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்திற்கென்று தனியாக சுற்றுலா அலுவலர் நியமிக்கப்படவில்லை. இம்மாவட்டத்திற்கென்று சுற்றுலா அலுவலர் ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு சுற்றுலாத் துறையிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்

## 2. தகவல் கோரல்

### (அ) சத்துணவுப் பணியாளர்கள் தங்களை நிரந்தரப்படுத்தக் கோரி உண்ணாவிரதம்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்கள் தங்களை நிரந்தரப்படுத்தி, முழுநேர அரசாங்க ஊழியர்களாக மாற்ற வேண்டுமென்று இன்று உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். அதுசம்பந்தமாக தங்களிடம் நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். தாங்கள் அனுமதி தந்தால் நான் அதுகுறித்துப் பேசுவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி மறுக்கப்படுகிறது.



2000 நவம்பர் 10]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பத்திரப் பதிவு அலுவலகங்களில் விட்டுமனை ஆவணங்களைப் பதிவு செய்ய உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெறுவதில் இடர்ப்பாடுகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரப் பதிவு அலுவலகங்களில் ஆவணங்களைப் பதிவு செய்ய உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ்—N.O.C.—பெற வேண்டியது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. கே. சுப்பராயன் அவர்களும், காலம் தாழ்த்தி கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. இரா. விசுவநாதன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். மூன்று பேரையும் பேச அனுமதிக்கின்றேன். அனைத்தையுமே சிறப்புக் கவன ஈர்ப்பாக அனுமதித்து, முதலில் திரு. சி. ஞானசேகரனைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு Commercial Taxes Department மூலமாக 22-9-2000 தேதியன்று, அரசாணை எண் 150-ன்படி தமிழகத்தில் வீட்டுமனைகளை, அங்கீகரிக்கப்படாத மனைகளாக இருக்குமேயானால் அவற்றை எந்த Registrar அலுவலகத்திலும் பதிவு செய்யக்கூடாது, அப்படி பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால் உள்ளாட்சி அமைப்புகளான, ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களிலே N.O.C.—தடையில்லாச் சான்று—எடுத்து வந்தால்தான் அதைப் பதிவு செய்ய வேண்டும் என்றவொரு ஆணையை அது பிறப்பித்திருக்கிறது. Unapproved lay-outs என்பது ஒரு தீராத வியாதியாக தமிழகத்திலே இருந்து கொண்டிருப்பதை நிச்சயமாக நாங்களும் உணர்ந்து இருக்கிறோம், தமிழ் மாநில காங்கிரஸ் அதை வரவேற்கவும் தயாராக இல்லை. இருந்தாலும்கூட இந்த Unapproved layouts பல இடங்களிலே உருவாகி சிலபேர் — ஏற்கெனவே Real Estate செய்து கொண்டிருந்தவர்கள் — மனைகளை விற்று விட்டிருக்கிறார்கள். அந்த மனைகளை விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டிருப்பவர்கள், மீண்டும் ஏதோ ஓர் அவசர காலத்திற்கு, ஒரு பெண்ணினுடைய திருமணத்திற்கோ அல்லது பையனுடைய படிப்பிற்கோ — நானேகூட சென்ற சட்டமன்றத் தேர்தலில் நின்றபோது ஒரு வீட்டுமனை இருந்ததை விற்றுவிட்டுத்தான் அதற்குச் செலவு செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டேன்—அப்படி ஒரு அவசர வேலைக்காக நாம் நம்முடைய மனைகளை விற்க நேரிடுகிறபோது, ஒரு தனி மனிதருக்கு இருக்கக்கூடிய உரிமைகளை கழுத்தை நெரிப்பதைப்போல அரசாங்கம் போடுகிற உத்தரவுகள் தனி மனித உரிமையைப் பறித்துவிடக் கூடாது.

[திரு. சி. ஞானசேகரன்] [2000 நவம்பர் 10

முற்பகல் 10-30

Unapproved lay-outs-ஐ எப்படியெல்லாம் தடைசெய்ய வேண்டும், அது எதனால் உருவாகிறது என்பதையும் இந்த அரசு கொஞ்சம் கருத்திலே கொள்ள வேண்டும் என்பது ஒரு தலையாய கடமை என்பதை நான் இந்த இடத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குருவிக்குக்கூட ஒரு கூடு இருக்கிறது. மனிதருக்கு வீடு கண்டிப்பாக வேண்டும் என்பதுதான் இந்த ஆட்சியினுடைய தாரக மந்திரமாகவும், ஒரு கொள்கையாகவும் வைத்திருக்கிறீர்கள். அதற்காகத்தான் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் போன்றவர்களுக்கெல்லாம் இப்போது வீட்டுமனைகளை அரசாங்கம் பல கோடி ரூபாயைக் கொடுத்து நிலங்களை private negotiations மூலமாகக்கூட வாங்கி கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இப்படி வீட்டு மனைகளை ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிற அரசாங்கம் unapproved lay-outs ஏன் வருகிறது என்பதையும் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் approval என்று வைத்திருக்கிற அந்த பிளானுக்கு approval வாங்கித்தான் விற்கவேண்டுமென்று சொன்னால், அதிலே எவ்வளவோ பல strict provisions-களை வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைக்கு நீங்கள் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள் என்று சொன்னீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நேற்றைக்கு என்றால் இரண்டு நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால் இன்றைக்குக் கூடவா? சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Plan-ஐ approval செய்வதற்கு பல strict provision-களை இந்த அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் இப்போது பலபேர் approval-க்கே போகாமல் வீட்டுமனைகளைக் குறைந்த விலைக்கு விற்கிறபோது, பாமர மக்கள், ஏழை எளியவர்கள் குறைந்த விலையிலே ஒரு வீட்டுமனை கிடைக்கிறது என்று சொன்னால், approval இல்லாவிட்டாலும்கூட பரவாயில்லை என்று வாங்கிவிடுகிறார்கள். ஆகவே ஒரு மனிதனுக்கு வீடு என்பது முக்கியம். ஆனால் அந்த வீட்டைப் பெறுவதற்கு அரசாங்கம் கடுமையான நிபந்தனைகளை வைத்திருக்கிற ஒரு நிலையைத் தளர்த்தினால், அந்த unapproved lay-outs, அந்த வீட்டுமனைகள் எப்படி குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றனவோ



2000 நவம்பர் 10] [திரு. சி. ஞானசேகரன்]

அதைவிட ஏதோ கொஞ்சம் கூடுதலாக, Approved Plots கிடைக்குமானால் எல்லோருமே அந்த Approved Plot-களை வாங்கச் செல்வார்கள்.

ஒரு Plan-ஐப் போடுகிறபோது அதற்கு முதலில் முகப்பு ரோடு என்று வருகிறபோது, 45 அடி இருக்க வேண்டும், 35 அடி இடம் வேண்டும் என்று போடுகிறீர்கள். ஆனால் 30 அடிதான் ஏற்கெனவே அந்த ஊரில் இருக்கும். அதனால் நாங்கள் approve செய்ய முடியாது என்று பல நிபந்தனைகளை வைத்துவிடுகிறீர்கள். ஆகவேதான் இதுபோன்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. இப்படி அந்த Plot-களையெல்லாம் பதிவு செய்ய முடியாத காரணத்தால் அரசாங்கத்திற்கு கடந்த மாதம் மட்டுமே கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் நட்டம் என்று சொல்கிறார்கள். 400 ஆவணப் பதிவு அலுவலகங்கள் - Registrar Offices - நம்முடைய தமிழகத்தில் இருக்கின்றன. அவையெல்லாம் வேலையற்ற ஒரு நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. ஒரு வீட்டில் எலி இருந்தால் அதை உடனடியாகப் பிடிக்க வேண்டும். அப்படி பிடிக்க முடியவில்லையென்றால், வீட்டையே கொளுத்திட முடியாது. அதுபோன்ற lay-outs போட்டு, approve பண்ணுவதற்கு அதற்கு ஏதாவது விதிமுறைகளை வையுங்கள். அதற்காக plot-டே விற்கக் கூடாது, அப்படி விற்க வேண்டுமென்று சொன்னால், 'தடையில்லாச் சான்று' என்று சொண்டு வந்தால்தான், இதைக் கொண்டு வர முடியும் என்று நீங்கள் இந்த G.O. போட்டிருப்பது ஒரு தனி மனிதனுடைய உரிமையை நிச்சயமாகப் பறிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ஏற்கெனவே சிலபேர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த வீட்டுமனைகளை approve-ஆகச் செய்வதற்கான நிபந்தனைகளை கொஞ்சம் தளர்த்துங்கள். இரண்டாவது, குறைந்த விலைக்கு வீட்டுமனைகளை விற்கக்கூடிய அளவிற்கு நீங்கள் ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தால் இதுபோன்ற unapproved lay-outs பிற்காலத்தில் வராது. Unapproved lay-out ஆக இருந்தாலும்கூட அதிலே முக்கால்வாசிப் பேர் விற்று இருக்கிறார்கள். இன்னும் ஒரு கால் பாகம் Plot-கள் விற்காமல் இருக்கக்கூடும். அதை இப்போது விற்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு N.O.C. வாங்கித்தான் விற்க வேண்டுமென்று சொல்லும்போது அதில் சிக்கல் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது சொந்த அனுபவம் உங்களுக்கு உண்டா?

[2000 நவம்பர் 10

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் தொகுதியை எடுத்துக்கொண்டால்கூட, ஒரு தெருவே Unapproved ஆக இருக்கிறது.. அந்தத் தெருவில் பல மாடி வீடுகள் வந்துவிட்டன. இடையிலே இருக்கக்கூடிய ஒரு மனையை அந்த மனையின் உரிமையாளர் அவசரத்திற்கு விற்க வேண்டுமென்று சொன்னால் அதை விற்க முடியாத ஒரு சூழ்நிலையில் சிக்கித் தவிக்கிறார். ஆகவே இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால், ஒன்று நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற வரையில் அந்த G.O. 150-னுடைய செயலாக்கத்தை இந்த அரசு தடுத்து நிறுத்தி வைக்கலாம், இல்லையென்று சொன்னால் குறைந்தபட்சம் ஆறு மாத காலம்—சிலபேர் குறைந்த விலையிலே நிலம் கிடைக்கிறது என்று நானேகூட ஒரு agreement போட்டிருக்கலாம் — அந்த நிலத்திற்கு approval வரக்கூடிய சூழ்நிலை இல்லையென்று சொன்னால், எதிர்காலத்தில் வேண்டுமானால் இனி approval இருக்கக்கூடிய நிலத்தைத்தான் விற்க வேண்டுமென்று நீங்கள் வையுங்கள். ஆனால் இப்போதைக்கு ஆறு மாத காலத்திற்கு இந்த G.O. 150, நாள் 22-9-2000 என்பதை நிறுத்தி வைப்பதற்காகவாவது அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், பல தமிழக மக்கள் இப்போது பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்வதெல்லாம் அரசு ஆறு மாத கால தவணை கொடுக்க வேண்டும். இந்த வீட்டுமனையை விற்பவர்கள் unapproved lay-outs வைத்திருப்பவர்கள், வேண்டுமானால் விற்று முடித்துக்கொள்ளட்டும். இனி unapproved lay-outs, plots-களே வராத அளவிற்கு வேண்டுமானால் கடுமையான சட்டங்களைக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22-9-2000 அன்று மாநில அரசு வெளியிட்ட 150 ஆம் எண் ஆணை பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. அடிப்படையில் அந்த ஆணை வெளியிடுவதற்குரிய நோக்கம் மிகச் சிறந்தது, நல்லது என்றாலும், நோக்கம் நல்லதாக இருந்தால் மட்டுமே எந்தவொரு காரியமும் வெற்றி பெற்றுவிடுவதில்லை. நல்ல நோக்கத்தை, மிகச் சிறந்த நல்ல நடைமுறைகளின் மூலமாகத்தான் நிறைவேற்ற முயல வேண்டும். நோக்கம் நல்லதாக இருப்பதனாலேயே அது வெற்றி பெற்றுவிடுவதில்லை,



2000 நவம்பர் 10] [திரு. கே. சுப்பராயன்]

நிறைவேறிவிடுவதில்லை. அவற்றை நிறைவேற்றுவதற்கான வடிவமும் மிகச் சிறந்ததாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் இங்கே இந்த ஆணையைப் பார்க்கிறபோது, ஒரு நல்ல நோக்கத்திற்காக வெளியிடப்பட்ட மிக மோசமான ஆணை இந்த ஆணை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். நான் தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தில் வலியுறுத்தி வருகிறேன். Unapproved lay-outs என்பது தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உருவாகியிருக்கிறது. Unapproved lay-outs உருவாவதற்கான காரண காரியங்கள் என்ன என்பதைப்பற்றி விவரித்துப்பேச இப்போது நான் விரும்பவில்லை. அதற்குரிய நேரமும் இதுவல்ல. ஆனால், ஏராளமான இடங்களில் unapproved lay-outs உருவாவதன் மூலம் பொதுமக்கள் நேரடியாக பாதிக்கப்படுகிறார்கள். unapproved lay-outs உருவாவதற்கு யார் யார் காரணம் என்கிற விவரங்கள் விரிவானவை. ஆனால், unapproved lay-outs உருவாவதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதேயில்லை. யார் தண்டிக்கப்படுகிறார்கள் என்றால் — குற்றவாளிகள் தப்பித்துவிடுகிறார்கள் — அப்பாவிகள் தண்டிக்கப்பட்டுவிடுகிறார்கள். அதுதான் சட்டத்தின் இனம் புரிந்துகொள்ள முடியாத நீண்ட தொடர்கதையாகும். இன்றைக்கு வரையிலும் அவை நிகழந்து கொண்டிருக்கின்றன.

குடியிருக்கிற பொதுமக்களுக்கு சாக்கடை வசதியில்லை, சாலை வசதியில்லை, விளக்கு வசதியில்லை, வேறு அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுவதில்லை. உள்ளாட்சி அமைப்புகள் இது அங்கீகரிக்கப்படவில்லை, எனவே இந்த இடத்தில் எங்கள் நிதியைச் செலவழிக்க சட்டத்தில் இடம் இல்லை, நாங்கள் செலவழிக்கமாட்டோம் என்று சொல்லிவிடுகின்றன. ஆனால், பிரச்சினையைத் தட்டிக்கழிக்கிறார்களே தவிர, தப்பித்துக்கொள்கிறார்களே தவிர, பிரச்சினைக்குத் தீர்வளிக்க கடமைப்பட்டவர்கள் அல்லவா அந்த உள்ளாட்சி அமைப்பினர்? ஆனால், அந்த உள்ளாட்சி அமைப்பினர், இதிலிருந்து தப்பித்துக்கொள்வதால் பிரச்சினைக்குத் தீர்வு வந்துவிடுகிறதா என்றால் இல்லை. எனவே, இந்த ஆணை மூலம் ஏற்படுகிற விளைவுகள் என்ன என்று நாம் பார்த்தோமேயானால் unapproved lay-outs பல இடங்களில் — நான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக குறிப்பிட விரும்புகிறேன் — பல்வேறு பகுதிகளில் — unapproved lay-outs-ல் வாழ்கிற மக்களின் வாழ்க்கை எப்படியிருக்கிறது? ஒருவேளை உண்மையில் ஒரு நரகம் என்று இருந்தால் அது எப்படியிருக்கும் என்பதை நடைமுறையில் அனுபவிக்கிற இடம் unapproved lay-outs. Unapproved lay-outs-ல் வாழ்வதுதான் நரக வாழ்க்கை. அவர்கள் தங்கள் வீடுகளில்

[திரு. கே. சுப்பராயன்] [2000 நவம்பர் 10

இருந்து வெளியேற்றுகிற கழிவுநீரை வீட்டுக்கு முன்னாலேயே ஒரு கிணறு தோண்டித் தேக்கி வைத்துக்கொண்டு அந்தச் சாக்கடைத் தண்ணீரைச் சுமந்துகொண்டு வெளியே கொண்டுபோய் கொட்டுகிறார்கள். வீட்டுக்குத் தேவையான தண்ணீரை வெளியிலிருந்து சுமந்து கொண்டுவர வேண்டிய அளவுக்கு நெருக்கடிக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். இதில் உள்ளாட்சித் துறையை, மாநில அரசை நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஆனால், அதற்குரியபடி செய்யவில்லை. உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? இந்த விஷயத்தில் அதிகாரிகளின் ஆலோசனைகளை நிராகரிக்க வேண்டும் என்பதை நான் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்த விரும்புகிறேன். அதிகாரிகள் வெறும் சட்டப் புத்தகங்களில் ஊறிக் கிடக்கின்ற ** தவிர, அவர்கள் நடைமுறையில் மக்களின் நெருக்கடிகளை உணர்ந்துகொள்கிற அனுபவ ஞானமற்றவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்பதற்கு அழகாக இருக்கிறது. இருந்தாலும் நீங்கள் ஒரு மூத்த சட்டமன்ற உறுப்பினர். அதிகாரிகளையெல்லாம் ** என்று பேசுவது அவ்வளவு முறையல்ல. அந்த வார்த்தையைத் திரும்பப் பெறுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** போன்ற மனிதர்கள் என்று திருத்திக்கொள்ளலாம். அது கொஞ்சம் பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். ஏனென்றால், பல இடங்களில் பிரச்சினைகளைச் சொல்கிறபோது அவர்கள் கேட்பதில்லை. அவர்கள் mis-lead செய்கிறார்கள். அரசாங்கத்தையே mis-lead செய்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய தொகுதியிலேயே ஒரு அனுபவம். இந்தமாதிரி unapproved lay-outs-களில் இருக்கின்ற வீடுகள் பூராவும் அதிகாரிகள் கட்டியிருக்கின்ற வீடுகள். அதுதான் பிரச்சினை. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனுமதியற்ற இடங்களை எப்படித்தான் அனுமதியாக்குவது? அது எந்தக் காரணத்தினால் ஆகியிருந்தாலும் இனிமேல் எப்படிச் செய்வதென்று ஆக்கப்பூர்வமான ஆலோசனை சொல்லி அமர்ந்தால் கொஞ்சம் நலமாக இருக்கும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2000 நவம்பர் 10]

முற்பகல் 10-40

**திரு. கே. சுப்பராயன்:** அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே செயல் துடிப்பு உள்ளவர். அதை நான் மறுக்கவே இல்லை. அக்கறையும் உள்ளவர்தான். நான் என்ன ஆலோசனை சொல்ல விரும்புகிறேன் என்றால், இதுவரையிலும் தோன்றியுள்ள unapproved lay-outs அனைத்தையும் ஒரு Special G.O. போட்டு அங்கீகரிக்க வேண்டும். இது first....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இனிமேல் இதுபோல் ஏற்படாமல் இருப்பதற்காகவும் அது உபயோகப்பட வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் என்னைப்போல வேகமானவர்கள். நான் அடுத்ததற்கு செல்வதற்குள்ளேயே அவர்கள் எழுந்துவிட்டார்கள். நான் அடுத்து என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், Central Act திருத்தப்பட வேண்டும். மத்திய பத்திரப் பதிவுச் சட்டத்தில் un-approved lay-outs எதிர்காலத்தில் உருவாகாதவாறு பொருத்தமான ஷரத்துக்களை உள்ளடக்கிய சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்றும் நான் வலியுறுத்துகிறேன். ஆனால், அதற்குரிய கால வாய்ப்புத் தருகிறபோதுதான், நடைமுறையில் இருக்கக்கூடிய பிரச்சினையை உணரவேண்டும். Real Estate போட்டவர்கள் மற்றும் இந்தமாதிரி வியாபாரிகள், வாங்குகிற பொதுமக்கள், இப்படி பல்வேறுதரப்பட்டவர்களும் பாதிக்காத அளவிற்கு ஒரு கால வாய்ப்புத் தந்து, இந்த நிலைமைகளில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். இதில் ஒரு மிக முக்கியமான விஷயத்தை தங்கள் முன் நான் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், தொழில் நகரங்களில் பெரும் பிரச்சினையாக இருப்பது, unapproved lay-outs தான். unapproved lay-outs இருக்கிற காரணத்தினால், பெரும்பகுதி இடங்களில் எதையுமே நிறைவேற்ற முடியவில்லை; Disposal point இல்லாமல் சாக்கடை தேங்கியிருக்கிறது. எனவே, இப்போதும் Real Estate போட்டு இருக்கிற பலர் ஒரு பகுதியை விற்றுவிடுகிறார்கள்; நம்முடைய ஞானசேகரன் அவர்கள் சொன்னது உண்மைதான்; ஒரு பகுதியை விற்றுவிட்டார்கள்; இன்னொரு பகுதியை விற்றுவிட முடியாமல் திணறுகிறார்கள். எனவே, இந்தத் திணறல்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ஞானசேகரனுக்கு சொந்த அனுபவம் அதிகம், உங்களுக்கும் உண்டா?

[2000 நவம்பர் 10

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு அப்படி அனுபவம் இல்லை. நான் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முழு நேர ஊழியர் என்ற முறையில் அத்தகைய வேலைகளில் ஈடுபடுவதற்கு எங்கள் கட்சி எங்களை அனுமதிப்பது இல்லை. எனவே, அத்தகைய கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் போன்று நாங்களும் முழு நேர தமிழ் மாநில காங்கிரஸ்காரர்களாக இருக்கின்ற காரணத்தினாலே எங்களுக்கும் அந்தத் தொழில் இல்லை. விளையாட்டாக தாங்கள் சொன்னதை, அவர்கள் அப்படியே எடுத்துக்கொண்டார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** நிறைவாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இன்னொன்றையும் சொல்ல வேண்டியது இந்த நேரத்தில் அவசியம். திரு. ஞானசேகரன் சொன்னபடி, இதில் ஏதாவது பொருத்தமாக ஒரு மாற்றத்தை செய்து, நடைமுறையில் ஏற்பட்டு இருக்கிற நெருக்கடிகளுக்குத் தீர்வு காண அரசு முயல்வதோடு, Town and Country Planning—அதாவது ஊழல் நடவடிக்கை எங்கு அதிகம் இருக்கிறது என்று வலைவீசிப் பிடித்து, சல்லடையில் எடுத்துச் சலித்து, நாய்த் தோலில் வடித்தால் மிஞ்சுகிற கடைசித் துறை Town and Country Planning—இந்த Town and Country Planning—மாதிரி ஊழலில் முழுக்க நனைந்த ஒரு துறை, அரசு துறைகளிலேயே இல்லை. unapproved Lay-outs உருவாக்குவதில் பிரதான குற்றவாளிகளின் பட்டியலில் இடம்பெற்ற Town and Country Planning—துறைதான். Town and Country Planning—துறையில் bargain பண்ணுவதற்காகவே, காலதாமதம் செய்கிறார்கள். இதுபற்றி பல இடங்களில் இருந்து reports வருகின்றன. இதைப்பற்றியெல்லாம் இப்போது நான் பேசியோ—அல்லது நானே நாளைக்கு வந்து அமைச்சராக உட்கார்ந்தாலும், அதையெல்லாம் உடனடியாகத் திருத்திவிட முடியுமா என்பதெல்லாம் வேறு விஷயம். ஆனால் நெருக்கடி எப்படி ஊறி புரையோடிக் கிடக்கிறது என்பதற்காக நான் சொல்ல விரும்புகிறேன்.

எனவே, இத்தகைய நிலைமைகளில் மாற்றம் கொண்டுவருவதற்கு அரசு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். 45 நாட்கள் என்றால், அதற்குள் approve ஆகவேண்டும், ஆனால், approve ஆவதில்லை; அதனாலேயே பல நெருக்கடிகள் இருக்கின்றன. எனவே, ஏற்பட்டிருக்கிற இந்த நெருக்கடிகளில் பாதிக்கப்பட்டவர்களையும் அழைத்துப் பேசி, இந்த 150 எண்ணுள்ள அரசாணையில் ஒரு பொருத்தமான மாற்றத்தைச் செய்து,



2000 நவம்பர் 10] [திரு. கே. சுப்பராயன்]

நான் முன்னரே குறிப்பிட்டதுபோல, special G.O. போட வேண்டுமென்று என்னுடைய முழு வலிமையைத் திரட்டி வலியுறுத்துகிறேன்; எல்லோர் சார்பிலும் வலியுறுத்துகிறேன்; ஒரு special G.O. போட்டு unapproved Lay-outs முழுவதையும் அங்கீகரிக்க மாநில அரசு உத்திரவிட்டால், உங்கள் பாதங்களைத் தொட்டு தலைதாழ்த்தி வணங்கத் தயாராக இருக்கிறோம். அருள்கூர்ந்து இதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, எதிர்காலத்திலும் unapproved lay-outs உருவாகாமல் இருப்பதற்கு நீங்கள் சட்டத் திருத்தம் செய்யுங்கள். இப்போது இந்த 150 எண்ணுள்ள அரசாணை மூலம் ஏற்பட்ட விளைவுகளுக்கும் தீர்வு தாருங்கள் என்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு.கோ.சி.மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசும்போது, ஒரு பகுதியை விற்றுவிட்டார்கள்; மறு பகுதியை விற்கிறபோது சங்கடம் வருகிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதுவே unapproved Lay-out. அந்த Lay-out-ல் ஒரு பகுதியை எப்படி விற்க முடியும்? ஏற்கெனவே அந்த சான்று பெற்றுத்தானே விற்று இருக்க வேண்டும்? எப்படி விற்க முடியும்? எப்படி ஒரு பகுதியை விற்றுவிட்டு, மறு பகுதிக்குப் போக முடியும்? தயவுசெய்து இதுபற்றிச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....(குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** என்னிடம்தானே அமைச்சர் அவர்கள் கேள்வி கேட்டு இருக்கிறார்கள்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பாராயனிடம் கேள்வி கேட்டால், திரு. ஞானசேகரன் ஏன் பதில் சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை. நாங்கள் மிக நெருங்கிய நண்பர்கள். உதவுவதற்காக அவர் வருகிறார். அதைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அமைச்சர் அவர்கள் அக்கறைப்பூர்வமாக கேட்கிறார்கள். ஆனால், ஏன் ஒரு பகுதியை விற்றுவிட்டார்கள் என்றால், சாதாரணப்பட்டவர்கள், கொஞ்சம் விலை மலிவாகக் கிடைக்கிறது என்று வாங்கிக்கொள்கிறார்கள். (குறுக்கீடு) அது பதிவாகி முடிந்துவிட்டது. 2 மாதங்களுக்கு முன்னர்தான் இந்த G.O. வந்திருக்கிறது. அதற்கு முன்னர் பதிவாகிக் கொண்டு இருந்தது. அமைச்சர் அவர்கள் கேட்டது பொருத்தமான கேள்விதான். கடந்த 2 மாதத்திற்கு முன்னர் விற்றது

[திரு. கே. சுப்பராயன்] [2000 நவம்பர் 10

எல்லாம் பாதி பாதியாக நிற்கிறது. Real Estate-காரர்களிடம் agreement போட்டு இருக்கிறார்கள். 6 மாதங்களுக்குள் இந்த இடத்தை வாங்கிக்கொள்கிறேன் என்று agreement போட்டுவிட்டு, 6-வது மாதம் பணத்தைக் கொண்டு போகிறபோது, N.O.C. கேட்கிறார்கள். இப்போது வாங்கியவனுக்கும் நெருக்கடி; விற்றவனுக்கும் நெருக்கடி; இனி விற்கப்போகிற இடத்திற்கும் நெருக்கடி; இப்படி ஏக நெருக்கடி இருக்கிறது. எப்படித் தீர்வு செய்வது என்பதை நீங்களே சொல்லுங்கள்.

முற்பகல் 10-45

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு ஆலோசனையையும் குறிப்பிட்டார்கள். இதுபோல அவர்களை அழைத்து வைத்துப் பேசி, ஒரு சுமூக முடிவெடுத்து இப்போது இருப்பதை முறைப்படுத்தி, இனிமேலும் அதுமாதிரி எழாதவண்ணம் ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று விரும்பிச் சொன்னார்கள்.

ஆனால் கோயம்புத்தூர் மாநகராட்சியில் இந்தப் பிரச்சினை வந்தபோது, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் என்னிடத்திலே ஒரு கோரிக்கை வைத்து, நானும் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே தெரிவித்து, அவர் இருவரையும் அழைத்து வைத்துப் பேசி, அதற்குப் பிறகு கோவை மாநகராட்சியில் சில உறுப்பினர்கள் அதுபோலவே சிலர் இதில் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களை அழைத்து வைத்து, அவர்களது விருப்பத்தை ஒரு மணி நேரத்திற்கு மேல் உட்கார்ந்து விசாரித்துக் கேட்டு அவர்களுக்கும் பதில் சொல்லி, நாங்களும் சொல்லி, அதிகாரிகளையும்கூட வைத்துக்கொண்டு, பேசி முடிவெடுத்து, அவர்களது விருப்பத்திற்கே, ஒரு முடிவு உருவானது. ஆனால் அதைக் கேட்டுக்கொண்டு போனவர்கள், அதற்குப் பிறகு ஒப்புக்கொண்டபடி, நடவடிக்கையை ஏற்றுக்கொண்டார்களா என்றால் இதுவரை இல்லை. நேற்றுகூட நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களிடத்திலே நான் விரும்பிக் கேட்டேன். 'இதுபோல் நீங்கள் இப்படிச் செய்தீர்களே, அது நடைபெறவில்லை என்ன செய்வது? இனிமேலும் நீங்கள் ஒருமுறை முயற்சித்தால், எழுத்து மூலமாக அவர்களிடத்தில் இருந்து பெற்றுத்தாருங்கள், முதலமைச்சரிடத்தில் அதனை எடுத்துச்சென்று அதற்குரிய நடவடிக்கையை நான் எடுக்கிறேன்' என்றும் தெரிவித்திருக்கிறேன். இதுதான் தற்சமயம் இதற்காகச் சொல்லக்கூடிய முடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.



2000 நவம்பர் 10]

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளில் தடையில்லாச் சான்று பெற்றுத்தான், வீட்டுமனைகளைப் பதிவு செய்ய வேண்டுமென்று அரசு வெளியிட்டிருக்கின்ற ஆணையின் காரணமாக இப்போது தமிழ்நாட்டிலே பொதுமக்கள் எண்ணற்ற இடையூறுகளுக்கு ஆளாகியிருக்கின்றார்கள்.

மனிதனுக்கு மிக முக்கியத் தேவை உணவு, உடை, இருப்பிடம். இந்த அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றானது வீடு. ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்த வீடு வைத்துக்கொள்ள வேண்டுமென்ற கனவு உண்டு. இந்தக் கனவை நிறைவேற்றுவதற்கு இடையூறாக, தடையாக இப்போது வெளியிட்டிருக்கின்ற அரசாணை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் கிராமப்புறங்களாக இருந்தாலும் சரி, நகர்ப்புறங்களாக இருந்தாலும் சரி, ஒரு survey number-ல் சில பகுதிகளை அந்த உரிமையாளர் விற்று, அதை வாங்கியவர் அதிலே பல வீடுகளைக் கட்டிவிட்டு, மீதிப் பகுதிகளிலே இருக்கின்ற நிலத்திலே இப்போது வாங்கியவரும் புதிய வீடு கட்டுவதற்கு அல்லது பதிவு செய்வதற்கு முயற்சித்தால் அது இயலாமல் போய்விடுகிறது. இப்படிப்பட்ட நிலையிலே ஒரு நிலத்திலே பாதிப் பகுதியை விற்றவர்கள், மீதிப்பாதிப் பகுதியை விற்க இயலாமலும் advance அளவிலே கொடுத்துவிட்டு, பத்திரம் பதியாமல் வைத்திருப்பவர்கள், அதைப் பதிவு செய்ய முடியாத ஒரு இக்கட்டான நிலைமையிலும் இருக்கின்றார்கள். அதேபோல, நகர்ப்புறங்களிலும் சரி, ஒரு பூர்வீகச் சொத்திலே இடங்கள், குறிப்பாக ஒரு சிறிய இடத்திலே அண்ணன் தம்பி இரண்டு பேர் இருக்கிறார்கள் என்றால், சிறிய இடமாக இருக்கும்போது, அவர்கள் வாயளவிலே பங்கைப் பிரித்துக்கொண்டு, அதிலே வீடு கட்ட முயற்சித்தால், பத்திரம் பதிய, அதற்கும் Lay-out கேட்கிறார்கள். அந்தமாதிரி சமயங்களில் அவர்கள் வீடு கட்டுவதற்கு நடைமுறைச் சிக்கல்கள் அங்கு ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட பிரச்சினைகளில் எல்லாம் Lay-out பெறுவதிலே நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. கிராமப் பகுதிகளாக இருந்தாலும் சரி, நகரப் பகுதிகளாக இருந்தாலும் சரி, இந்த அரசாணை மூலமாக் எண்ணற்ற நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த நடைமுறைச் சிக்கல்களை

எல்லாம் தீர்ப்பதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட வழிமுறைகளைச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். குறைகளை மட்டும் சொல்லாமல், அதற்குரிய வழிமுறைகளையும் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில், அரசு இந்த அரசாணையை திரும்பப் பெற்றுக்கொண்டு, பத்திரப் பதிவுத் துறை, உள்ளாட்சித் துறை, வருவாய்த் துறை, பத்திரப் பதிவு எழுத்தாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, மக்களுக்குத் தடையாக இருக்கின்ற இந்த அரசாணையை திரும்பப் பெற்றுவிட்டு ஓர் உயர்மட்டக் குழு ஏற்படுத்தி, அதன்மூலமாக புதிய அரசாணையை வெளியிட வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

முற்பகல் 10-50

அதேபோல, அரசாணை எண்150-ஐ திரும்பப் பெற வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, இன்றைக்கு பத்திரப் பதிவு எழுத்தாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த 5000-க்கும் மேற்பட்டவர்கள் சென்னைக்கு வந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த அரசாணையைத் திரும்பப் பெறுவதோடு மட்டுமல்லாமல் அவர்களுடைய கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும். இந்த நேரத்திலே கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசு கௌரவம் பார்க்காமல் அவர்களையும் அழைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கைகளையும் பரிவுடன் பரிசீலித்து நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அரசாணையைத் திரும்பபெற வேண்டுமென்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மீண்டும் வலியுறுத்தி அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. இ. பெரியசாமி.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே உரையாற்றி இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கின்ற கருத்துகளுக்கு அரசினுடைய சார்பாக சில விளக்கங்களைத் தர நினைக்கின்றேன். குறிப்பாக, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய வீட்டுமனைகளைப் பதிவு செய்வதற்குத் தடையின்மைச் சான்று வாங்க வேண்டுமென்பதை இங்கே



சுட்டிக்காட்டினார்கள். கிராம நத்தத்தைப் பொறுத்த அளவிலே தடையின்மைச் சான்று வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்லாமல் சகோதரர்கள் பிரிவினை செய்கின்ற நேரத்திலே—குறிப்பிட்ட ஒரு குடும்பத்திலே பிரிவினை செய்கின்ற நேரத்திலே அதற்கு Lay-out வாங்க வேண்டிய அவசியம் இல்லை. இதிலே குறிப்பிட்டுச் சொல்லப்போனால், இந்தச் சட்டம் ஏற்கெனவே 1986 ஆம் ஆண்டு நம்முடைய தமிழக அரசினுடைய சார்பாக நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 542, மூலமாக வெளியிடப்பட்ட ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகியவற்றின் எல்லைகுட்பட்ட, வரைபடங்களுக்குட்பட்ட, அதிலே குறிப்பிட்டிருக்கிற இடங்களை வீட்டுமனைகளாகப் பதிவு செய்கிறபோது அந்தப் பதிவு பத்திரங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுப்பி 45 நாட்கள் அவகாசத்திலே அதிலே மறுப்பின்மைச் சான்றைப் பெற்று பதிவு செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த அரசாணையின்படி பார்த்தால், இந்த அரசாணை எண் 542-ன்படி தடையின்மைச் சான்று வாங்கி பதிவு செய்ய வேண்டுமென்ற காலக்கட்டத்தில் அங்கீகரிக்கப்படாத மனைகள் விற்பனையைத் தடுக்க முடியவில்லை.

இந்த அரசாணையினுடைய சந்து பொந்துகளில் நுழைந்து அதுவும் குறிப்பிட்டுச் சொல்லப்போனால், அந்த நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சிகள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், வரைபடங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு அப்பாற்பட்டு இருக்கிற இடங்களில் உள்ள விவசாய நிலங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அரசினுடைய அனுமதியே பெறாமல் Lay-out போடாமல், அரசினுடைய முறையான அனுமதி பெறாமல் 542 G.O.-படி அனுமதி பெறாமல், குறைந்த விலைக்கு வாங்கி Real-Estate செய்யக்கூடியவர்கள் அதிக விலைக்கு விற்ற காரணத்தால்தான் இந்த அரசாணை பயனற்றுப் போய்விட்டது. இதைத் தொடர்ந்து இந்த 542 அரசாணையை நீக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்திலே பல்வேறு writ மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு 10 ஆண்டுகாலம் நடந்தது.1996 ஆம் ஆண்டு அந்த writ மனுக்கள் மீது தீர்ப்பு வந்தது. தீர்ப்பு வந்தபோது, உயர்நீதிமன்றம் அதிலே ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது.அரசாணை பயனற்றுப் போய் இருக்கிற காரணத்தாலும்,அங்கீகரிக்கப்படாத மனைகள் வளர்ந்து கொண்டே செல்கிறதாலும், அரசுக்கு நகராட்சிகளைப் பொறுத்த

அளவில், உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்த அளவில், அங்கீகரிக்கப்படாத மனைகளுக்கு அடிப்படை வசதிகளை செய்துதர வேண்டுமென்றால் அரசுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. உள்ளாட்சி மன்றங்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது என்ற காரணத்தாலும், இன்னும் சொல்லப்போனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் சொன்னதைப்போல அப்பாவி ஏழை எளியவர்கள் தனக்கு ஒரு வீடு, இடம் வேண்டுமென்று வாங்கினால், அது அங்கீகரிக்கப்பட்ட மனையா அல்லது அங்கீகரிக்கப்படாத மனையா என்று தெரியாமலே வாங்கிவிட்டால் அவர்களுக்கு அடிப்படை வசதிகளை அரசு, உள்ளாட்சி மன்றங்கள் செய்ய முடியாத நிலை ஏற்படுகிற காரணத்தாலும், இதற்கு ஒரு முறையான சட்டத்திருத்தம் கொண்டு வந்தால் நிச்சயமாக உயர்நீதி மன்றம் தலையிடாது என்று உயர்நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

அந்த அடிப்படையிலேதான்—இந்தச் சட்டமானது—ஏற்கெனவே 1994 ஆம் ஆண்டு வந்த அந்த 542 G.O 1996-லே இரத்து செய்யப்பட்டுவிட்டது. முறையான சட்டம் கொண்டுவர வேண்டுமென்று—அதற்குப் பின்னால் 1994 ஆம் ஆண்டு இதற்கு சட்டம் இதே பேரவையிலே இயற்றப்பட்டு குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் 1997 ஆம் ஆண்டு அதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள்.அதற்குப் பின்னர்தான் இப்போது செப்டம்பர் 2000 ஆண்டு இந்த அரசு அந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே, குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலின் அடிப்படையிலே அரசு கொள்கைக்கு எதிராக பதிவு செய்யக்கூடிய items என்னென்ன என்கிறது. கோவில் நிலங்கள், அரசாங்க நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், வக்ஃபீக் போர்டு நிலங்கள் இன்னும் சொல்லப்போனால், unapproved இந்த புறம்போக்கு நிலங்களையே சிலபேர் என்ன செய்கின்றார்கள் என்றால், அதையே பட்டா போட்டு விற்கக்கூடிய நிலை இருக்கிறது. இப்படி எது எது அரசாங்கத்தினுடைய கொள்கைக்கு எதிராக இருக்கின்றதோ, அதற்கெல்லாம் எந்தெந்த items என்று குறிப்பிட்டு அதிலே unapproved Lay-out-ம் சேர்த்து இப்போது நாங்கள் சட்டம் போட்டிருக்கிறோம்.

முற்பகல் 10-55

இன்னும் இதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையிலே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்ற நிலையிலே, இந்த அரசைப் பொறுத்த அளவிலே, இந்தச் சட்டம் எதிர்காலத்திலே சாதாரண ஏழை எளிய மக்கள்



பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான்—சட்டவடிவம் ஆகிவிட்டால் எல்லோரும் மதிப்பார்கள், அரசாணை என்று சொன்னால், ஏதோ அரசாணைதானே எப்படியும் மாற்றப்படலாம்—இப்போது சொன்னார்கள், இந்த அரசாணையை உடனே வாபஸ் வாங்க வேண்டுமென்று, இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே ஏதோ நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் நம்முடைய பதிவுத் துறைக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால், நான் கடந்த மாதம் அதற்கான ஒப்பீட்டைப் பார்த்தபோது—அக்டோபர் மாதம் நம்முடைய வருவாய்—பதிவுத் துறையின் மூலமாக 1999 ஆம் ஆண்டின் வருவாய் என்ன, இந்த ஆண்டின் வருவாய் என்ன என்று ஒப்பிட்டுப் பார்த்ததிலே 2.53 கோடிதான் மொத்த வித்தியாசம் வருகிறது. 2000 ஆண்டில் 68.57 கோடி ரூபாய் வருவாய். ஆனால் அதேசமயத்தில் அக்டோபர் 1999-ல் 71.10 கோடி ரூபாய் வருவாய், மொத்தம் 2.53 கோடிதான் வித்தியாசம், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இந்த அரசைப் பொறுத்த அளவில்....(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாணை வந்தது 22-9-2000-ல். அதற்குப்பிறகு நீங்கள் கணக்கெடுத்துப் பார்த்தால் 400 Registration அலுவலகங்களில் இப்போது registration-னே வராத நிலை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போன வருடம் அக்டோபருக்கும் இந்த வருடம் அக்டோபருக்கும் உள்ள கணக்கைத்தான் அமைச்சர் சொல்கிறார்கள்.

**திரு.சி. ஞானசேகரன்:** இதை நீங்கள் எப்படிப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அதாவது 22-9-2000 மாதத்திற்கும் அதற்கு முந்தைய மாதத்திற்கும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வருடத்தைப் பார்க்காதீர்கள். வருடக் கணக்கைப் பார்த்தால் difference தெரியாது. அரசாணை வந்ததற்குப் பிறகும், அதற்கு முந்தைய மாதத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தால் தெரியும்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இது குறித்த வித்தியாசத்தை நாங்கள் எடுத்திருக்கிறோம். அக்டோபர் மாதம்தான் எடுத்திருக்கிறோம். அரசாணை 22-9-2000-லே போட்டிருக்கிறோம். அரசாணை எண் 150 நாள் 22-9-2000-த்தை அரசு வெளியிட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் பத்திரப் பதிவிலே மிகப் பெரிய சரிவு ஏற்பட்டிருப்பதாக பத்திரிகைகளிலே எல்லாம்

[திரு. இ. பெரியசாமி] [2000 நவம்பர் 10

படித்தோம். பத்திரிகைகளிலே வந்த செய்தியை வைத்து அக்டோபர் மாதம் என்ன வருவாய், 1999-க்கும், 2000-க்கும் என்ன வருவாய் என்று கணக்கிட்டுப் பார்த்ததிலே, இரண்டுக்கும் வித்தியாசம் 2.53 கோடி குறைவு ஏற்பட்டிருக்கிறது. குறைவு ஏற்பட்டிருக்கிறது என்றுதான் நான் சொல்லுகிறேன். கூட வந்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் செப்டம்பருக்கும் அக்டோபருக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கிறார். உங்களிடம் புள்ளிவிவரம் இருந்தால் சொல்லுங்கள். திரு. ஞானசேகரன், உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இந்த அரசைப் பொறுத்த அளவிலே, இந்தச் சட்டம உருவானால்தான், எதிர்காலத்திலே உள்ளாட்சித் துறைக்கு ஏற்படுகின்ற பளுவைக் குறைக்க முடியும் என்ற நல்ல நோக்கத்தோடும், அதேசமயத்தில் ஏழை எளிய மக்கள் ஏமாற்றப்படக்கூடாது என்ற ஒரு நல்ல எண்ணத்தோடும்தான் இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்லப்போனால் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாவிட்டால் இந்த அரசு எடுத்து வருகிற, உள்ளாட்சித் துறையிலே எடுத்து வருகின்ற திட்டமிட்ட வளர்ச்சிக்கு எதிர்காலத்திலே ஊறுவிளைவிக்கும் என்று கருத வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் இதை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். Real Estate செய்யக்கூடியவர்களை ஊக்குவிப்பதாகக்கூட அமையும். எதிர்காலத்திலே, தவறு செய்பவர்கள் தொடர்ந்து தவறு செய்வதற்கு வழிவகுப்பதாகக்கூட அமையும். அதனால்தான் இந்தச் சட்டத்தையே கொண்டுவந்திருக்கிறோம். எதிாகாலத்திலே இந்தத் தவறு வரக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். அதுவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக்கூடாது, இன்னும் சொல்லப்போனால் பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குச் செல்லுகிறபோது, வீட்டுமனை பதிவு செய்கின்றபோது அவர்களுக்கு அலைச்சல், தாமதம் போன்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்பதில்தான் இந்த அரசு அக்கறையாக உள்ளது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், தடையின்மைச் சான்றைப் பொறுத்த அளவில், அதன் முழு அம்சங்களையும் ஆராய்ந்து இந்த வீட்டுப் பதிவு முறையை, அங்கீகரிக்கப்படாத பதிவு முறையை எளிதாக்குவதற்கு அரசாங்கம்



2000 நவம்பர் 10] [திரு. இ. பெரியசாமி]

வழிகாட்டு நெறிமுறைகளை விரைவில் வகுக்கவுள்ளது. இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறீர்கள். உங்களுடைய கருத்துக்களை இந்த அரசு கவனமாக கருத்தில்கொண்டு உரிய முறையில் வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கவுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நாளைக்கு எத்தனை தடவை எழுந்திருப்பீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழிகாட்டி நெறிமுறைகள் வருகிற வரையிலாவது—நாங்கள் கோருவதெல்லாம், இந்த அரசாணையினுடைய நோக்கத்தை நாங்கள் குறையே சொல்லவில்லை—இது வரவேற்கப்பட வேண்டிய, நிச்சயமாக நிறைவேற்றப்படக்கூடிய ஒரு G.O. என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினராக இருந்தால், கொஞ்சம் உட்காருங்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கோவை மாவட்டத்திலே உட்கார்ந்து பேசி, இதுவரை நடந்த தவறுக்குப் பரிகாரம் காண்பதற்கு, ஏதோ முயற்சி செய்தேன் என்றார். இந்த முயற்சியை மாநிலம் முழுவதும் செய்ய வேண்டுமென்று நீங்கள் கேட்டுக் கொண்டால், அதுதான் முறை. அதைவிட்டு, எதிர்காலத்திற்கு தடுப்புச்சுவர் கட்டுவது தவறு என்று நீங்கள் சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் பேசியதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் சொன்னார், கோவையிலே இந்த முயற்சியை எடுத்தேன் என்று. ஆகையினால் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த முயற்சியை எடுங்கள் என்று சொல்லுங்கள். அதோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, நல்ல அறிவுரைகள் வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். நேற்றைய விவாதத்திலேகூட, பெருநகரக் குழுமத்திலேகூட application போடாததற்குக்கூட fine கட்டியிருக்கிறார்கள். இப்போது Real Estate Owners ஏற்கெனவே அவர்கள் ஆரம்பித்துள்ள எல்லா அங்கீகரிக்கப்படாத மனைகளையும் முழுமையாக அங்கீகரிக்க

வேண்டும் என்று சொல்கின்றார்கள். அது எப்படி நியாயமாக இருக்க முடியும்? நேற்றே, எவ்வளவு பணம் கட்டவேண்டுமோ அதிலே பணத்தைக் குறையுங்கள் என்று சொன்னார்கள். பெருநகரக் குழுமத்திற்கு ஒரு நியதி; இதற்கு ஒரு நியதியா? நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். அதனால்தான் ஆக்கப்பூர்வமான உங்களுடைய அறிவுரைகளை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக பத்திரப் பதிவு எழுத்தாளர்கள் சங்கத்தினர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அந்த பத்திரப் பதிவு எழுத்தாளர்கள், அறவழிப் போராட்டத்தை, உண்ணாவிரதப் போராட்டத்தை, அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி இப்பொழுது சென்னையிலே நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அமைச்சரிடம் நேரடியாக கோரிக்கைகளெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அவற்றிலே முக்கியமாக அரசாணை 150-ஐ வாபஸ் பெறவேண்டுமென்ற கோரிக்கையும் உள்ளடங்கியது என்பதால், பத்திரப் பதிவு எழுத்தாளர்கள் சங்கத்தினரை அழைத்துப் பேசுவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களெல்லாம் அரசு ஊழியர்களா அல்லது காண்ட்ராக்ட் ஊழியர்களா என்ன சம்பந்தப்பட்டவர்கள் என்பதைத் தயவுசெய்து விளக்கினால் சரியாக இருக்கும்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள், கோரிக்கையை அரசு பரிசீலிக்கக் கூடாதா?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒரு முக்கியமான கோரிக்கை. பத்திர எழுத்தாளர்கள், தமிழ்நாடு முழுவதும் தங்களுக்கு என்று தனி வாரியம் வேண்டுமென்று, அவர்கள் பணம் கட்டுகிறோம் என்றும் கேட்டிருக்கிறார்கள். அதிலே அரசுக்குக்கூட பெரிய அளவிலே நஷ்டம் இல்லை. அதிலே ஒரு ஆக்கப்பூர்வமான ஆலோசனையை முன்வைத்துத்தான் இன்றைக்கு அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்களை அழைத்து அமைச்சர் அவர்கள் பேசினால் ஒரு தீர்வு வரும்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் எப்பொழுதும் நியாயமான





கோரிக்கைகளாக இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைகளைக்கேட்டு, அழைத்துப்பேசுவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோன்று மாறிமாறிப் பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? என்ன சொல்லுங்கள்?

## 2. தகவல் கோரல்-தொடர்ச்சி

### (ஆ) ஓர் அமைச்சர்மீது கொடுக்கப்பட்ட புகார்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1 ஆம் தேதி அன்று, அரூரிலே அமைச்சர் முல்லைவேந்தன் அவர்கள், எங்களுடைய மகளிர்அணியைச் சேர்ந்தவர்களை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். என்னிடம் வந்து அறையிலே கேட்டீர்கள். ஓர் உறுப்பினர் இன்னோர் உறுப்பினர் மேலே என்பது மாதிரி, இன்னொரு அமைச்சராக இருந்தாலும், உறுப்பினராக இருந்தாலும், ஒரு குற்றச்சாட்டு சொன்னீர்கள். ஆகையினாலே, அந்த அமைச்சரைக் கூப்பிட்டு விசாரணை பண்ணினேன். அப்படி எந்த நிகழ்வும் நடக்கவில்லை என்று அவர் சொல்லிவிட்டதாலே உங்கள் உரிமைப் பிரச்சினைக்கு அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டேன். அதற்கு மேலே நீங்கள் திரும்பவும் எதற்குப் பேசுகிறீர்கள்? உங்கள் பிரச்சினை என்ன ஆனது என்று கேளுங்கள். அதற்கு நான் அனுமதி மறுத்துவிட்டேன் என்று சொல்கிறேன், தீர்ந்துபோயிற்று.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதுதான், அந்த ** பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த ** என்ற வார்த்தையை நான் ஒத்துக்கொள்ள முடியாது. அந்த வார்த்தை அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் எடுக்கும்போதே விவகாரத்திலே ஆரம்பித்தால் நான் பேசவே அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) நீங்கள் இதுவரைக்கும் முறையாக நடந்துகொண்டீர்களா? நேற்றைக்கு என்னை வந்து கேட்டீர்கள். நேற்றைக்கு முந்தைய நாள் வந்து என்னைக் கேட்டீர்கள். நான் அமைச்சருடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விளக்கத்தைப் பெற்றுவிட்டு முடிவு சொல்கிறேன் என்று சொன்னேன். நான் விளக்கம் வாங்கிவிட்டேன். அனுமதி மறுத்துவிட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை வேண்டுமானால் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனை இல்லை என்று அவர் மறுத்துவிட்டார். ஆகையினால் நான் அனுமதி மறுத்துவிட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** mike கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் வேண்டாம் என்று சொல்ல வில்லை, கொடுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Mike கொடுத்தால்தானே பேசமுடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, Mike இல்லாமலேயே நீங்கள் நன்றாகப் பேசுவீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, அதைப்பற்றி உண்மை நிலையைத்தான் நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அது நடந்திருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி நாம் விவாதிக்க வேண்டும், உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், ஒரு சட்டமன்ற...

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை விவாதிக்க அனுமதிக்கவில்லை. நான் அந்தத் தீர்மானத்திற்கே அனுமதி கொடுக்கவில்லை. ஆகையினால், உங்கள் எதிர்ப்பை வேண்டுமானால் காண்பியுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில், ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஒரு குற்றச்சாட்டு சொல்லும்போது சம்பந்தப்பட்டவர் மறுத்துவிட்டால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த அவையினுடைய மரபு. அப்படி இருக்கும்போது மாண்புமிகு பேரவைத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தலைவராகிய நீங்களே அந்த அமைச்சரைக் கூப்பிட்டு, விசாரித்து, நீங்கள் கொடுத்த தீர்ப்பிற்குப் பிறகும் இப்படி அவர் பேசுவது முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவது முறையில்லை என்பதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரத்திடம், "நான் நீங்கள் எழுதிக் கொடுத்ததற்காக, அமைச்சரைக் கூப்பிட்டு விளக்கம் கேட்டேன்; அதை அவர் மறுத்துவிட்டார்" என்று சொல்லி, "ஆகையினால், உங்களுக்கு அனுமதி கிடையாது" என்று சொன்னேன். இதற்குப் பிறகு உறுப்பினர் பேசுவதில் அர்த்தம் இல்லை. என்னுடைய தீர்ப்பிற்கு வருத்தம் தெரிவித்தோ, உங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்தோ, வேறு நடவடிக்கை எடுப்பதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், நீங்கள் கண்டபடி பேச நான் அனுமதிக்கமாட்டேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நீங்கள் அனுமதிக்காததைக் கண்டித்து எங்களுடைய கட்சியின் சார்பாக நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

*(அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய முதலமைச்சர், சென்னாரெட்டியைக் களங்கப்படுத்தியமாதிரி, இந்த அமைச்சரையும் இவர்கள் களங்கப்படுத்துகிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2000-2001 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று நூறாவது முதல் முன்னூற்று ஐந்தாவது வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2000 நவம்பர் 10

(ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பா. மு. முபாரக்.

**திரு. பா. மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2000-2001 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் இருபத்தாறாவது மற்றும் இருபத்தேழாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அறிவிப்பு

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.



2000 நவம்பர் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பன்னிரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பன்னிரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பன்னிரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[2000 நவம்பர் 10

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஈ) தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2000 நவம்பர் 10]

"2000 ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 2000-2001 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1999-2000, விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.என்.பாலசுப்பிரமணியன் அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையிலே பேசக்கூடிய வாய்ப்பு கொடுத்தமைக்காக தங்களுக்கு எனது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்து, எனக்குத் தெரிந்த ஒருசில கருத்துகளை இந்த மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

குறிப்பாக, அனல் மின் நிலையத்தின் மூலமாக, எரிவாயு மூலமாக, காற்றாலைகள் மூலமாக, புனல் மின் நிலையங்கள் மூலமாக, இப்படி பல்வேறு நிலைகளில் மின்சார உற்பத்தியை அதிகமாக செயல்படுத்திக்கொண்டிருக்கக் கூடிய இந்தச் சூழ்நிலையில் 1997 ஆம் ஆண்டு அறிக்கையிலேயும், 1998 ஆம் ஆண்டு அறிக்கையிலேயும், கொள்கை விளக்கக் குறிப்புகளிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2000-க்குள்ளாக தனியார் மூலமாக முழுமையாக தன்னிறைவு பெறப்பட்டுவிடும் என்ற

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [2000 நவம்பர் 10

சூழ்நிலையை எல்லாம் தெள்ளத்தெளிவாகக் கூறியிருந்தார்கள். ஆனால், சொன்னவை இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாத சூழ்நிலையிலே இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என நான் கருதுகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்— தலைமை)*

அதற்கு மேலாக, இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையிலே, மிகக் குறைந்த அளவிலே இருக்கக்கூடிய, செலவு குறைவாக இருக்கக்கூடிய காற்றாலைகள் மூலமாக, செங்கோட்டை கணவாய் வழியாக, பாலக்காட்டுக் கணவாய் வழியாக, ஆரல்வாய்மொழி கணவாய் வழியாக, 2000 மெகாவாட் மின் உற்பத்தியைச் செய்ய முடியும் என்கின்ற குறிப்பைத் தங்களது கொள்கை விளக்கக் குறிப்புகளிலே, 1997-லே, 1998-லே மற்றும் 1999-லே இன்றும் தெள்ளத்தெளிவாகக் கூறியிருக்கின்றீர்கள். ஆனால், கடந்த ஆண்டிற்கு முன்பாகவே, 720 மெகாவாட் மின்சாரம் தனியார் மூலமாக, அரசின் மூலமாக 19 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதாகக் கூறிய நிலையில், இப்போது 2789 தனியார் காற்றாலைகள் மூலமாக, 765.65 மெகாவாட்டும், அரசின் மூலமாக 19.35 மெகாவாட்டும் உற்பத்தி செய்ததாகக் கூறி இருக்கின்றீர்கள்.

ஆகவே, செலவு குறைவான நிலையிலே இருக்கக்கூடிய காற்றாலைகள் மூலமாக பயன்பெறக்கூடிய வாய்ப்பு இருக்கக்கூடிய, இந்தக் காற்றாலைகளை முழுமையாக முயற்சி எடுத்து வருங்காலத்திலாவது 2000 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய நிலையை, தனியார்களை இன்னும் ஊக்கப்படுத்தி, கொள்முதல் செய்யக்கூடிய விலையை 2.70 என்ற நிலையை இன்னும் கூடுதலாக்கியாவது எதிர்காலத்திலே அவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டி, ஊக்கத்தை ஊட்டி நமது தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்துகொள்வதற்கு நிதியாதாரம் அரசின் மூலமாக இல்லாத இந்தச் சூழ்நிலையிலே, தனியாரை முழுமையாகப் பயன்படுத்தி, அந்தக் காற்றாலைகள் மூலமாக முழுக்க முழுக்க பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் பயன்படுத்தி, 2000 மெகாவாட் மின்சாரத்தை வருங்காலத்தில் உற்பத்தி செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, நிலக்கரியினுடைய, மொத்த கொள்முதலினுடைய விலை 9770 கோடி ரூபாய். ஆனால் அதைக் கொண்டு வருவதற்கும் மற்ற செலவுகளுக்கும் 1327 கோடி ரூபாய் என்று தங்களது கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கின்றீர்கள். அதுவும் கொள்முதல்



2000 நவம்பர் 10] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியண்]

செய்யக்கூடிய நிலக்கரி தரம் வாய்ந்த நிலக்கரியாக இல்லாமல், சாம்பல் அதிகமாக கலந்திருக்கக்கூடிய சூழ்நிலையிலே இருக்கிறது என்பதையும் தங்கள் குறிப்பிலே தெள்ளத்தெளிவாகக் கூறியிருக்கின்றீர்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய தலைவராக ஒரு நேர்மையான அதிகாரி இருக்கக் கூடிய நிலையில், அங்கே கொள்முதல் செய்யக்கூடிய இடங்களில் எல்லாம் ஒரு நல்ல நேர்மையான அதிகாரியை நியமனம் செய்து, நல்ல நிலக்கரி எதிர்காலத்திலே வருவதற்குண்டான ஏற்பாட்டைச் செய்து, போக்குவரத்து மற்றும் இதர செலவினங்கள் 1327 கோடி ரூபாய் என்பதை எந்த அளவிற்கு குறைக்க முடியுமோ அந்த அளவிற்கு குறைத்து செவ்வனே சிறப்பாக நிர்வாகத்தை தலைமையிடத்திலேயிருந்து செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு நிலைகளிலே பேசுகின்ற நேரத்திலேயும் மற்றும் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுக்கக்கூடிய நேரத்திலேயும், 2000 கோடி ரூபாய்க்கு இலவச மின்சாரம் வேளாண்மைத் துறையிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு கொடுப்பதனாலும் ஒரு விளக்கு திட்டத்திற்கு இலவசமாகக் கொடுப்பதனாலும், அந்த 2000 கோடி ரூபாய் இழப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று கூறுகின்றார்கள். இந்த இடத்திலே அன்போடு நான் சொல்லிக்கொள்வதெல்லாம், இந்த நாட்டினுடைய பொருளாதாரமே முழுக்க முழுக்க 65 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காடு விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய நாடு. வேளாண்மைத் துறை மூலமாகத்தான் நாட்டினுடைய அடித்தள பொருளாதாரமே விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறது.

ஒரேயொரு உதாரணத்தைச் சொல்கிறேன். அதிகமான நேரம் இல்லாத காரணத்தினாலே, அதிகமாக உள்ளே செல்லாமல் சொல்லுகிறேன். குறிப்பாக கரும்பை எடுத்துக்கொண்டால்கூட, பர்சேஸ் சேல்ஸ் டாக்ஸ் டன்னுக்கு 65 ரூபாய் கொடுக்கின்றார்கள். அதன்மூலம் உற்பத்தி செய்யக்கூடிய மொலாசஸின் மூலமாக பல்வேறு நிலைகளில் — எரிசாராயத்தின் மூலமாக மதுபான வகைகள், இப்படியெல்லாம் பல்வேறு நிலைகளிலே — வருமானம் நேரடியான வரி மூலமாக, Excise Duty மூலமாக கோடிக்கணக்கான, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வேளாண்மைத் துறை மூலம் — கரும்பை ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன் — இப்படி விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் மூலமாக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வரக்கூடிய இந்தச் சூழ்நிலையில், விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய இந்த நாட்டிலே, அந்த விவசாயிகளுக்கு முழுமையாக, கண்டிப்பாக அந்த இலவசத் திட்டத்தைத்

தொடர்ந்து கொடுப்பதோடு மாத்திரமல்லாமல், பகல் நேரத்திலேயும் முழுமையாக மின்சாரத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, 31-3-2001-க்குள்ளாக நமது மின்சாரத் தேவைக்குப்போக 89 million unit மின்சாரம் மீதமாகும் என்று கொள்கை விளக்கக் குறிப்புகளிலே நீங்கள் எல்லாம் கூறியிருக்கின்றீர்கள். எதிர்காலத்திலே இன்னும் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச ஆரம்பித்து இப்போதுதான் 3 நிமிடங்கள் ஆகிறது. தயவுசெய்து கொஞ்சம் பேசவிடுங்கள். ஆகவே, இந்த நிலையிலே தயவுசெய்து விவசாயிகளுக்கு முழுமையாக 31-3-2000-க்குப் பின் வரக்கூடிய காலக் கட்டங்களிலேயாவது தேவையான அளவிற்கு பகல் நேரத்திலே மின்சாரம் கிடைக்க இந்த மாமன்றத்திலே தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

குறிப்பாக, இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் மின் இழப்பு 16.75 விழுக்காடு என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கின்றீர்கள். மின் இழப்பு என்பது சுமாராக 65 கோடி ரூபாய் அளவுக்கு என்று நான் கருதுகின்றேன். அதாவது 320 million unit. இதிலே எந்தெந்த அளவு Capacitors போடுவது, எங்கெங்கே துணை மின் நிலையங்கள் அமைப்பது, எங்கெங்கெல்லாம் transformers அமைப்பது, எங்கெங்கெல்லாம் கம்பி மீட்டர்கள் அமைப்பது என்ற நிலையை எடுத்து வருவதாக உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கின்றீர்கள். 16.75 விழுக்காடு என்ற நிலையைக் குறைந்தது 13 விழுக்காடு என்ற அளவிற்கு, எந்த அளவிற்கு குறைக்க முடியுமோ அந்த அளவிற்குக் குறைத்து, அதிகமாக சேமிப்பைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 5 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சியிலே பேசுவதற்கு 3 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதனாலே உங்களுக்கு 7 நிமிடங்கள்தான் கொடுக்க முடியும். போனால் போகட்டும் 1 நிமிடம் தருகிறேன். சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** குறிப்பாக கிராமப் பகுதியிலே மின்தடை ஏற்படுவதால் அங்கு யாரும் குடியிருப்பதில்லை. மாலை 5 மணிக்கு fuse போய்விட்டது என்றால், கேட்பாரே இல்லை. தயவுசெய்து அந்தந்த கிராமங்களிலே குடியிருப்பவர்களுக்கு மின்தடையை நீக்க மின்சார வாரியத் தலைவர் அவர்கள், அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக ஏற்பாடு செய்ய வேண்டும். காரணம் 5 கிலோமீட்டர், 10 கிலோமீட்டருக்கு அப்பால் இருந்தால், ஒன்றும் செய்ய முடியாது. கணக்கீட்டாளர்கள் யாரும் வந்து 2 மாதமாக மின்சார மீட்டரை பார்ப்பதில்லை. கணக்கெடுப்பதில்லை. 1 மாதம் 3,000 ரூபாய் கட்டினால், 2 மாதம் கழித்து வந்து அதே 3,000 ரூபாயை நீங்கள் கட்டுங்கள், இல்லையென்றால் நீங்களே கணக்கு எடுத்துக்கொண்டு வாருங்கள் என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. நேற்று பேசப்பட்ட கூடங்குளம் அணு மின்நிலையத் திட்டத்தின் மூலமாக ரஷ்யா உதவியோடு மாசுக் கட்டுப்பாட்டிலே எந்தவிதத் தவறும் ஏற்படாத அளவிற்கு பாதுகாப்போடு, கண்டிப்பாக மின் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

பிரான்ஸ் நாட்டிலே முழுக்க முழுக்க அணு மின் நிலையத்தின் மூலமாக ஒவ்வொரு தனி மனிதனுக்கும் 6,100 unit என்கிற நிலைமை இருக்கும்போது, இங்கே 270 unit மின்சாரம்தான் உபயோகிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தத் தேவைகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும். ஒகேனக்கல் திட்டத்தை கர்நாடக மாநில அரசோடு பேசி கண்டிப்பாக நமக்குப் பாதியாவது, 350 மெகாவாட் மின்சாரமாவது கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

சர்க்கரை ஆலைகள் அத்தனையிலேயும் சக்கையை முழுமையாகப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும். அதேபோல 1989-லே பதிவு செய்த விவசாயிகளுக்கு இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லை. கண்டிப்பாக, உடனடியாக விவசாயிகளுக்கு மின் இணைப்பு முழுக்க முழுக்க கிடைக்கச் செய்ய வேண்டும். 50,000 ரூபாய், 75,000 ரூபாய் கட்டக்கூடியவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்க வேண்டும். அதேநேரத்திலே இலவசமாகக் கிடைக்கக் கூடிய...... (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கும், கழகத் தலைவர் அவர்களுக்கும்

என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரம் என்பது மிக முக்கியமான ஒன்று. முதன் முதலிலே ரஷ்யாவிலே அரசாட்சி ஏற்பட்டபொழுது லெனின் அவர்கள்தான் மின்சாரத்தை முதன் முதலிலே உபயோகப்படுத்த எந்த வழியைச் செய்ய வேண்டுமென்றும், உற்பத்திச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தார். அதேபோல, இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகாலத்திலே மின்சாரம் என்பது மிக முக்கியமான ஒன்று என்று சொல்லி, கலைஞர் அவர்கள்தான் இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்த காலத்தில் அத்தனை கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்ற திட்டத்தை அறிவித்தார்கள். இது எப்படி இயலும் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் அன்றைக்குக் கேட்டார்கள். ஆனால் கொடுத்து முடித்தார் கலைஞர் என்ற பெருமையை இந்த அரசும் பெற்றது, கலைஞர் அவர்களும் பெற்றார்கள். அதேபோல, பல்வேறு ஆண்டுகளுக்குப் பிறகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக மூன்றாவது முறையாக 1989-லே வந்த பின்னாலேதான் மின்சார வாரியம் கொஞ்சம் பூரணத்துவம் பெற்றது. அதற்குப் பின்னாலே 1996-லே வந்த பின்னால் உற்பத்தியைப் பெருக்கி, மின்சாரத்தை விநியோகிக்கச் செய்ய வேண்டுமென்று சொன்னால், உற்பத்தி இருக்க வேண்டும். உற்பத்தி இல்லாமலே மின்சாரத்தை எப்படி விநியோகிப்பது என்ற நடைமுறையை மாற்றி, நம்முடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்களும், அமைச்சர் ஆற்காட்டார் அவர்களும் மிகச் சிறப்பாக அடுத்த ஆண்டு முழுவதும் எந்த அளவிற்கு மின்சாரம் தேவை என்று அறிந்து, ஒரு நாளைக்கு 199 million unit இன்றைக்குத் தேவைப்படுகிறது என்று சொன்னால், அதற்கு மேலாகவே உற்பத்தி செய்து ஒரு தன்னிறைவு பெற்ற தமிழ்நாடாக ஆகுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் ஒரு பெரிய புரட்சியையே அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 50 ஆண்டு காலமாக மின்சார வாரியத்தில் இல்லாத ஒன்றை ஒரே நாளிலே இன்று காலையிலே மனு கொடுத்தால், நாளைக்கு மின்சார இணைப்பு வீடுகளுக்கு என்று சொல்லி, ஒரு அதிசயமான திட்டத்தை அறிவித்து, அந்த அதிசயத்தை நடைமுறைப்படுத்தி காட்டியிருப்பது பாராட்டத்தக்கது. மக்கள் எல்லாம் மிகச் சிறப்பாக இப்போது அதைப் போற்றுகிறார்கள் என்பதிலே எந்தவிதமான இடர்பாடும் இல்லை.

அதுமட்டுமல்ல. ஒரு வீட்டிற்கு மின்சாரம் பெற வேண்டும் என்று சொன்னால், அதற்கு நடுவிலே தரகர்கள்போல் Licensed Electrician-னுடைய



கையெழுத்து இருந்தால்தான் அதைப் பெறமுடியும் என்கிற சூழ்நிலையை எல்லாம் மாற்றி ஒரு நல்ல சூழ்நிலையாக வீட்டுக்காரரே ஒரு affidavit கொடுத்தாலே இப்பொழுது கொடுக்கலாம் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இப்பொழுது மின்சார வாரியத்திலே இருக்கிற தலைவரும், அமைச்சரும் M.R.G. என்கிற முறையையே மாற்றியிருக்கிறார்கள். முன்னால் எல்லாம் வீடுகளுக்கு மின்சாரம் வேண்டும் என்று சொன்னால் அவர்களே மீட்டர் வாங்கி கொடுக்க வேண்டும். ஆனால் இப்பொழுது அப்படி அல்ல. வாரியமே மீட்டரைக் கொடுத்து, அதுவும் மிகவும் நல்ல மீட்டராகக் கொடுத்து, 5 ஆண்டுகாலம் உத்தரவாதத்தின் பேரிலே இப்போது இணைக்கப்படுகிறது. அதையெல்லாம் பார்க்கிறபோது சிறப்பாக இருக்கிறது. அது பழுதுபட்டால்கூட அவர்களே மாற்றியமைக்கலாம் என்ற சூழ்நிலை வருகிறபொழுது அந்த வீட்டுக்காரர்களுக்கெல்லாம் சிரமம் இல்லாமல் ஒரு நல்ல நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-20

அதேபோல, அந்த முறையையே transformer-லேயும் கொஞ்சம் பின்பற்றினால் நன்றாக இருக்கும். இப்பொழுது transformers எல்லாம் பழுதாகிப்போய் சில இடங்களிலே திடீரென்று எரிந்துவிடுகின்றன. பழுதாகிவிடுகின்றன. ஓர் உத்தரவாதமான முறையிலே transformer-ஐ ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த மின் அமைப்பு என்பது மிகச் சிறப்பாக பயன்படும்.

இப்போது கணினிமயத்தை மின்சாரத்திலே ஆரம்பித்திருக்கிறீர்கள். மின்சாரத்திலே இன்னும் பல இடங்களிலே கணினிமயத்தை நீங்கள் தொடங்கிவீட்டீர்களேயானால் மிகச் சிறப்பாக அந்தப் பயனை பெறலாம். ஏனென்று சொன்னால இப்பொழுது எந்த இடத்திலே பழுதாகிறது எந்த இடத்திலே அது கெட்டுவிடுகிறது என்பது புரியாமல் மின்சார வாரியத்திலே பணியாற்றுகிறவர்கள் மிகச் சிரமப்படுகிறார்கள். கிராமத்திலே ஒரு முறை பழுதாகிவிட்டது. எங்கே பழுதாகியிருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்கே சிரமப்படுகிறார்கள். கணினி முறையை ஏற்படுத்தித் தருவீர்களேயானால், இன்ன இடத்திலே பழுதாகியிருக்கிறது என்று உடனே கண்டு பிடித்து சரி செய்து கொடுப்பதற்குள்ள ஒரு வாய்ப்பை இப்போது ஏற்படுத்த முடியும்.

அதுமட்டுமல்ல. இப்பொழுது பல்வேறு காரியங்களிலே கிட்டத்தட்ட ஆயிரத்து சில்லரை கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. மின்சார

வாரியத்தினுடைய செலவினங்கள் கூடுதலாகின்றது. 8,700 கோடி ரூபாய் கிட்டத்தட்ட செலவாகின்றது. வருமானம் என்று சொன்னால் குறைவாக இருக்கிறது. இப்பொழுது தனியார்கள் அந்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குகூட நாம் கூடுதலாகக் கொடுக்கிறோம். அதை மக்களுக்கு கொடுக்கிறபோது குறைவாகக் கொடுக்கிறோம். இப்படி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்கிற எண்ணத்திலேதான் இந்த அரசு நடைபெறுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதுமட்டுமல்ல விவசாயிகளுக்கு மின்சாரம் இலவசம் என்று சொன்ன காரணத்தினாலேதான் இப்போது தமிழக அரசு பெருவாரியான கோடி இழப்பை பெற்றிருக்கிறது. நாமே அதற்கு கொடுக்கிறோம். இப்பொழுது துணை மானியத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை மின்சார வாரியத்திற்கு கொடுக்கிற சூழ்நிலை வருகிறது என்று சொன்னால், அந்த இழப்பை ஏற்படுத்திக்கொள்கிற சூழ்நிலை வருகிறது என்று சொன்னால் விவசாயத்திற்காகத்தான் இதைச் செய்கிறோம் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது கலைஞர் கொண்டு வந்த திட்டம். இந்தியாவிலே இந்தத் திட்டம் எங்குமே இல்லை. இப்பொழுதுதான் மற்ற மாநிலங்களில் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி வந்த பின்னாலேதான் 230 KV என்னுடைய தொகுதியிலே திருக்காணப்பட்டியில் இப்பொழுது சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருக்கிறது.

அதேபோல ஊரணிபுரத்திலே நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதிலே ஒரு sub-station-ஐ 2000-2001-ல் அமைத்துக் கொடுக்கிறோம் என்று சொல்லி உத்தரவாதத்தை அளித்திருக்கிறார்கள். அதை விரைவிலே எங்களுக்கு செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். அந்தப் பகுதியிலே மின் அழுத்தம் ரொம்ப குறைவாக இருக்கிறது. எனவே, ஊரணிபுரத்திலே sub-station-ஐ அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே, ஒரத்தநாடு பகுதியிலே உக்கநாடு கீழூரிலே அதற்கு கால்கோல் விழா நடந்துவிட்டது. திருக்காட்டுப்பள்ளியிலே நம்முடைய திருவையாறு M.L.A. வினுடைய பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் வேண்டியிருக்கிறது. அதை அங்கு ஏற்படுத்தினால்தான் மின் அழுத்தத்தை குறைத்து சரியான நிலைக்குத் தர முடியும். ஆகையினால் துணை மின் நிலையங்கள் நிறைய ஆரம்பிப்பது என்பது நல்ல முறை. அந்த முறைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.



அதுமட்டுமல்ல. nearing post, one post, single post, nearing electric connection இவற்றிற்கெல்லாம் திட்டங்களை வைத்துக்கொள்ளலாம். 10,000 ரூபாய் கட்டினால் one post, single post-லேகூட nearing post சிஸ்டத்தைக்கூட கடைப்பிடித்தால் அதற்காக எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் கட்டி மின்சார இணைப்பைப் பெறுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் மக்கள். ஏனென்று சொன்னால் ஒரு மின்சார இணைப்பு கொடுப்பது என்பது ஒரு குடும்பத்திற்கு ஒரு பிள்ளைக்கு வேலை கொடுப்பது போன்று.

ஆக பல்வேறு காரியங்களை செய்து கொண்டிருக்கிற நம்முடைய மின்சார வாரியத்தை எந்த வகையிலும் பாராட்டலாம். சிறந்த மின்சார வாரியமாக தகுதி பெற்று இப்போது நாட்டிலே மிகச் சிறப்பாக நடைபெற்று கொண்டிருப்பதை பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறைய விஷயங்களை பேச வேண்டிய அவசியமும், தேவையும் இருந்தாலும் அதற்குரிய காலம் இல்லை. மின்சாரத் துறையை பொறுத்தவரையிலும் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனுபவங்கள், வளர்ந்து வருகிற தேவைகள் இவை பற்றியெல்லாம் விவரித்து சொல்ல வழியே இல்லை. எனவே, சுருக்கமாக ஒருசில விஷயங்களை நான் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

முதலில், நேர்மையும் திறமையும் நிறைந்த ஓர் அதிகாரி மின் வாரியத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டிருக்கிற நிலையில் கடந்தகால அனுபவங்களைப்போல அடிக்கடி Chairman-ஐ மாற்றுவது என்கிற நடைமுறை கைவிடப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் செய்யப்பட வேண்டிய விஷயம் எது என்று பார்த்தால், வளர்ந்தும், விரிந்தும் வருகிற மின்சாரத் தேவைகளுக்கு ஈடு கொடுக்கின்ற முறையில் மின் உற்பத்திகளுக்கு எந்தெந்த வழிமுறைகளில் திட்டங்கள் இடலாம் என்பது குறித்து விரிவான அறிவியல்பூர்வமான ஆய்வு நடத்தப்பட வேண்டும்.

அதேபோல, அனல் மின் நிலையங்களின் மூலமாக மின் உற்பத்தி செய்யப்படுவதில் ஏற்படுகிற இழப்பின் எல்லைகளைச் சுருக்கிக்

[திரு. கே. சுப்பராயன்] [2000 நவம்பர் 10

குறைப்பதற்கும் பொருத்தமான வழிமுறை எது என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.

மூன்றாவதாக, மின் இழப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகுந்த திறமையோடும் பொருத்தமான வழிமுறைகளின் மூலமும் குறைப்பதற்கான தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்றாலும்கூட, இந்த மின் இழப்பின் சதவீதத்தை நாம் குறைப்பதில் வெற்றி பெறுவதைப் பொறுத்துத்தான், இந்த மின் வாரியத்திற்கு ஏற்படுகிற இழப்பையும், மின் தேவைகளை ஈடுகட்டுவதிலேயும் ஓரளவுக்கு நம்மால் முன்னேற முடியும். எனவே, அதுகுறித்தும் நவீன அறிவியல் யுக்திகளைக் கைக்கொண்டு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அது தவிர, அனல், புனல் மின் உற்பத்தி தவிர பிற வழி முறைகளில் உற்பத்தி செய்ய தமிழ்நாட்டிலுள்ள வாய்ப்புகள் எவை? அவற்றைப் பயன்படுத்துகிற வழிமுறை என்ன என்பது குறித்தும் பரிசீலிக்க வேண்டும். இதில் குறிப்பாக ஒரு விஷயத்தை நான் வலியுறுத்த விரும்புவது, 200 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட கூடங்குளம் அணுமின் நிலையம் எந்தவகையான நிர்ப்பந்தங்களுக்கும் இரையாகாமல் ... (குறுக்கீடு) மன்னிக்கவும், 2000 மெகாவாட் உற்பத்தியில், அந்த இரண்டு திட்டங்களையும், 1000 மெகாவாட் என்ற முறையில் அமைந்துள்ள அந்த இரண்டு திட்டப் பணிகளையும் காலதாமதமின்றி, எந்தவிதமான நிர்ப்பந்தங்களுக்கும் இரையாகாமல் நிறைவேற்ற வேண்டும். தமிழ்நாட்டின் தேவைகளுக்கு அவை அதிமுக்கியத்துவம் உள்ளவை. அதாவது அனல், புனல் ஆகிய வழிமுறைகளிலும் பலவீனப்பட்டு இருப்பதால் அது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது என்று நான் நம்புகிறேன். எனவே அதை, விரைவுபடுத்துவதற்குப் பொருத்தமான வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உற்பத்திச் செலவு என்ற முறையிலே பார்த்தால் தூத்துக்குடி, எண்ணூர், வடசென்னை, மேட்டூர் ஆகிய அனல் மின் நிலையங்களுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் 150 இலட்சம் டன் நிலக்கரி தேவைப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் என்ன பிரச்சினை என்றால் இவற்றின் தரம் குறைவு, சாம்பல் சத்து அதிகம், வெப்ப ஆற்றலும் குறைவாக இருக்கிறது; அதாவது, தரம் குறைந்த நிலக்கரி சப்ளை செய்யப்படுவதால் அனல் மின் நிலையக் கருவிகளின் ஆற்றல் அதற்குரிய காலத்திலேயே ஆற்றலை இழந்து விடுவதும், மிக அதிகமாக மோசமடைகிற, தேய்மானம்



2000 நவம்பர் 10] [திரு. கே. சுப்பராயன்]

அடைகிற ஒரு நிகழ்ச்சி போக்கு நடந்து வருகிறது என்பது சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்திற்கு, இதனுடைய தேவைக்குப் பொருத்தமான வேகத்தோடு செயல்பட்டு இவற்றிற்கொரு தீர்வு காண வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன். இதில் ஒரு சிக்கலான பிரச்சினை என்ன என்றால் 1999-2000 ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட நிலக்கரியின் விலை 977 கோடி ரூபாய். இதற்காக வாரியம் செய்துள்ள, போக்குவரத்துச் செலவு, பிற செலவுகள், கையாள்வதற்கான செலவுகளையெல்லாம் பார்த்தால் ரூபாய் 1327 கோடி ஆகிறது.

கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். 'சுண்டைக்காய் கால் பணம்; சுமைகூலி முக்கால் பணம்' என்று. இதை ஏன் சொல்கிறேன் என்றால், 977 கோடி ரூபாய் நிலக்கரிக்காக நாம் விலை கொடுத்தது; ஆனால் அந்த நிலக்கரியைக் கொண்டு வந்து சேர்ப்பதிலேயும், அவற்றைக் கையாள்வதிலேயும் நாம் செய்த செலவு 1327 கோடி ரூபாய் என்றால் இதுகுறித்து போர்க்கால வேகத்தோடு நாம் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

அதேபோல, மின் உற்பத்தியின் இடுபொருள்களின் விலை உயர்வு தனியார் மின்சாரம் வாங்குவதில் பிரச்சினை, இதுபற்றியெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்களின் குறிப்பு சொல்கிறது. இதற்கு மிக முக்கிய காரணம் என்ன? ஏன் இந்த நெருக்கடி? தனியாரிடமிருந்து வாங்கினாலும் விலை அதிகம்; மின் உற்பத்தியினுடைய இடுபொருள்களின் விலை உயர்வு; மின்சாரம் வாங்குவதிலும் பிரச்சினை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் 1195.62 கோடி பற்றாக்குறை என்று மதிப்பிடப்படுகிறது. இந்தத் துண்டு விழுவதற்கு என்ன காரணம்? இதுபற்றி நம்முடைய அமைச்சர் அவர்களின் குறிப்பிலேயே அது இடம் பெற்றிருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக மின் உற்பத்திக்குரிய பொருட்கள் முழுவதும் விலை உயருகிறது. எனவே மாநில அரசின் குறி தவறக்கூடாது என்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு மின் வாரியத்திற்கு உற்பத்திச் செலவு அதிகரிப்பதற்கான காரண கர்த்தாக்கள் பொதுமக்கள் அல்ல, மத்திய அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற கொள்கைகள் இந்த மாநிலத்தில் மின் உற்பத்திக்கு அதிகச் செலவை ஏற்படுத்துகிறது. எனவே மாநில அரசு குறி பார்க்க வேண்டிய கழுத்து மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாதார கொள்கை என்பதை மறந்துவிட வேண்டாம். ஆனால்

துரதிருஷ்டம் என்ன தெரியுமா? நெருக்கடியைக் குறி பார்த்து கழுத்தைக் குத்த வேண்டிய இந்த மாநில அரசு, யார் நம்முடைய மாநில மின் உற்பத்திக்கு அதிகச் செலவை ஏற்படுத்துகிறார்களோ அவர்களோடு கை குலுக்கிச் கொண்டிருப்பது வரலாற்றிலே ஏற்பட்ட ஒரு விபத்து என்று நான் கருதுகின்றேன். அதனால்தான் இந்த நெருக்கடி இப்போது ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

முற்பகல் 11-30

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, கடைசியாக ஓர் அபாய அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது அமைச்சருடைய குறிப்பில். அந்த அபாய அறிவிப்பில் தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சீரமைப்பது பற்றிய தேவைகளை ஆய்வு செய்வதற்காக Emst & Young என்ற ஓர் ஆலோசனை நிறுவனத்தை அமர்த்தியுள்ளது. இந்நிறுவனம் தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்து நான்கு தேர்ந்தெடுப்பு உரிமைகளை வலியுறுத்தியுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்குதான் அபாய அறிவிப்பு உள்ளடங்கியிருக்கிறது என்பது என்னுடைய கருத்து. ஆந்திராவிலும், உத்திரப்பிரதேசத்திலும் ஏற்பட்ட மோசமான அனுபவங்களை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மிகத் தந்திரசாலி மட்டும் அல்ல திறமைசாலியும்கூட. என்னுடைய அந்த உரையில் ஒரு பகுதியைப் படித்துவிட்டு முடிவைச் சொல்லாமல் உட்காருகிறார். அந்த முடிவையும் அவர் சேர்த்துப் படித்தால் நன்றாக இருக்கும்.

**திரு. கே. சுப்பராயன்:** முடிவைப் படிப்பது உங்களுக்கு வலுவூட்டிவிடும். முடிவை விட்டுவிடுவது எனக்கு வலுவூட்டிவிடும். எது எங்கே வலுவூட்டுமோ அதை நாம் எடுத்துக்கொள்வது பொருத்தம் என்ற முறையில் நான் சுட்டிக்காட்டினேன். என்னுடைய கண்கள் எப்போதும் எது பலவீனமோ அதைத்தானே பார்க்க வேண்டும்? அதுதானே என்னுடைய இயல்பு? எனவே நான் அந்த அடிப்படையிலே .. (குறுக்கீடு) எதிர்க்கட்சிகளின் இலக்கணம் என்ற முறையில் மட்டும் அல்ல, நான் இந்த விஷயத்தைக் குறிப்பிடக் காரணம், இதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. Profit and Responsibility Centres என்ற முறையில் மூன்று மையங்களாக இவற்றை உருவாக்குவது Generation, Transmission & Distribution என்ற முறையில் இவற்றைப் பிரித்துத் தனியாருக்குக்



கொடுப்பதற்குரிய வழிமுறைகள் எதுவும் இப்போது தெரியவில்லை என்றாலும் அதற்குரிய நிலைமைகள் எதிர்காலத்தில் வரக்கூடும். அது நம்முடைய விருப்பத்தைப் பொறுத்தது அல்ல. மத்திய அரசின் நிர்ப்பந்தத்தைப் பொறுத்தது. எனவே அதற்கும் ஒரு முடிவு காண வேண்டும். மத்திய அரசினுடைய நிர்பந்தத்தினால் விவசாயிகளுக்கு வழங்குகிற இலவச மின்சாரம் ரத்து என்கிற அபாயம் ஏற்பட இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு முக்கியமான விஷயத்தை நான் வெளிப்படுத்த விரும்புகிறேன். வடசென்னை மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையங்களுக்கு கடல் நீரைக் குளிரூட்ட எடுத்துச் செல்லும் பணியில் இருந்த தொழிலாளர்கள் 358 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார்கள்.

V.A.Os. மற்றும் மாவட்ட ஆட்சியர் சான்றிதழோடும், T.N.E.B.-ன் ஒப்புதலோடும்தான் அந்த 358 தொழிலாளர்களும் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்படி நிறுத்துவதற்குரிய அபாயம் தெரிகிறது என்று கடந்த ஓராண்டுக்கு முன்னர் அவர் பேசுகிறபோது குறிப்பிட்ட போதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி ஏதும் வர வழியில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலுரையை அளிக்க இருக்கிறேன் என்றாலும் சிலவற்றிற்கு அப்போதைக்கப்போது பதில் அளிப்பது நல்லது என்று நான் கருதுகின்றேன். கடந்த கால ஆட்சியிலே வட சென்னை அனல் மின் நிலையத்தில் 800 பேர் நியமிக்கப்பட்டார்கள். அந்த 800 பேர்களையும் வீட்டுக்கு அனுப்பிவிடவில்லை. அரசாங்கத்திற்கு சில புகார்கள் வந்தன. அந்தப் புகார்களில் மிக முக்கியமானது யாருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று ஒரு கொள்கையை வரையறுத்தபோது அங்கே வாழ்கின்ற மீனவர்களுக்கு — ஏனென்றால் அந்தத் தொழிலிலே அவர்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தினாலே — வேலை கொடுக்க வேண்டும். அது ஒன்று. இரண்டாவது அந்த வேலைக்குத் தகுதியான கல்வி அறிவு இருக்க வேண்டும் என்பது. இதை அடிப்படையாகக் கொண்டு வேலை கொடுத்தார்கள். ஆனால் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரும், மின்சார வாரிய அதிகாரிகளும் ஒன்றாக உட்கார்ந்துகொண்டு அவர்களுடைய qualifications certificate-களை எல்லாம் verify செய்தபோது 448 பேர் தகுதி படைத்தவர்களாக இருந்தார்கள். அவர்களை

வேலைநீக்கம் செய்யவில்லை. ஆனால், வேலை வாங்குவதற்கென்றே பொய்யான சர்டிபிகேட்டுகளை, படிக்காமலேயே படித்ததாக அல்லது S.S.L.C. படிப்பதற்குப் பதிலாக எட்டாம் வகுப்பு படித்துவிட்டு, S.S.L.C. சர்டிபிகேட்டுகளை forgery செய்து, வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். அரசாங்கத்திலே வேலைக்குச் சேரும்போது forgery certificate கொடுத்தால் அவர்கள் வேலையிலே நீடிக்கலாம் என்று சுப்பராயன் அவர்கள் சொல்வார்களேயானால், எதிர்காலத்திலே Original Certificate-காரர்கள் வேலை பெற முடியாது. Forgery Certificate-காரர்கள்தான் வேலை பெறுவார்கள். ஏனென்றால் இந்த technique தெரிந்துகொண்டவர்களுக்கு வேலை எப்படி பெறுவது என்றும் தெரியும். அதை ஊக்குவிக்கிறாரா என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி நான் ஒன்றும் Forgery-யை ஊக்குவிக்க முடியாது; கூடாது. அதுவல்ல என்னுடைய நோக்கம். இவர்களுடைய பிழைப்பு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவுள்ளம் கொண்டவர்கள், ஆனால், ஏனோ இந்த 358 பேர் மீது பரிவுள்ளம் அவருக்கு இல்லையே . . . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரிவுள்ளமா, அல்லவா என்பதல்ல; சட்டப் பிரச்சினை. இருந்தாலும்கூட உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களிடத்திலே நான் வாக்குறுதி தந்தேன். அரசாங்கம் என்ற காரணத்தாலே உங்களுக்கு வேலைவாய்ப்பு தரமுடியாதே தவிர, அதே வட சென்னை பகுதியிலே தனியார் மின் நிலையங்கள் வரவிருக்கின்றன, 358 பேருக்கும் முதல் உரிமை கொடுத்து அந்தத் தனியார் மின் நிறுவனங்கள் உங்களை வேலையிலே சேர்ப்பதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்து தருகிறோம் என்ற உத்தரவாமும் நான் தந்திருக்கிறேன். இதைவிட வேறு என்ன செய்ய முடியும்?

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, தனக்கெதிராகச் செயல்படுகிற அரசியலைச் சேர்ந்தவர்களுக்குக்கூட எதிரிக்கும் இரங்கும் மன உணர்வு படைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் பிழைப்பு நிலைக்கே, தங்களுடைய குடும்ப ஜீவனத்திற்காகச் சிரமப்பட்டுள்ள அந்த 358 பேர்களை நிச்சயமாக மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்



என்று நான் ஏன் வலியுறுத்துகிறேன் என்றால், அவர்கள் அனைவரும் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். நான் டெக்னிக் என்ற முறையிலேயும் சொல்கிறேன். நீதிமன்றத்திற்குப் போனால், நிச்சயமாக அவர்களை, அரசு terminate செய்தது செல்லாது என்று தீர்ப்பு வந்தால், back-wages-ஓடு அவர்களுக்கு மீண்டும் employment கொடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுவது நல்லதல்ல.

நுண்மான் நுழைபுலத்தோடு ஊடுருவிக் கண்டறிந்து எதிர்கால இடையூறுகளையும் தவிர்க்க நான் friendly ஆலோசனையாகச் சொல்கிறேன். எனவேதான், அவர்களை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த 358 பேர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** frontly-யா, friendly-யா?

**திரு.கே. சுப்பராயன்:** நட்பு ரீதியாகச் சொல்கிறேன். எனவே, அந்த 358 பேர்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஒரேயொரு விஷயத்தோடு உரையை முடித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள் பிரச்சினையில்—ஒரே நிமிடத்திலே முடித்துக் கொள்கிறேன்—அதாவது, வேளாண்மை மின்மோட்டார்களுக்கு மின் இணைப்பு தருவதில் ரூபாய் 50 ஆயிரம் வரையிலான செலவை வாரியமே ஏற்றுச் செயல்படுகிறது. 50 ஆயிரம் ரூபாய்க்குமேல் போனால் 55 ஆயிரம் என்று வைத்துக் கொள்ளுங்கள், அந்த 55 ஆயிரம் என்று வைத்தால், அந்த 55 ஆயிரத்தையும் விவசாயிகளிடமே வசூலிக்கிறார்கள். நான் இங்கே என்ன ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன் என்றால் 50 ஆயிரத்திற்கு மேல் வருகிற தொகைகளை மட்டும் விவசாயிகளிடம் வசூலித்துக் கொண்டால் அது விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில், தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையிலே எல்லாம் சிக்கலான அறிவிப்பை வெளியிட்டுவிடாதீர்கள். எனவே, 50 ஆயிரத்துக்கு மேலே வருகிற செலவை மட்டும் விவசாயிகள் கட்டினால் போதும் என்ற மகிழ்ச்சி நிறைந்த அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

***திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்ற வாய்ப்பு தந்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை

அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டை மின்வெட்டே இல்லை என்கின்ற ஒரு மாநிலமாக உருவாக்கித் தந்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மின்வாரிய அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகின்றபோது Ernst and Young என்ற நிறுவனத்தின் அறிக்கையைப் பற்றி கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையின் பிற்பகுதியையும் சேர்த்து வாசிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் அதை மறுத்த காரணத்தினால், அதன் பிற்பகுதியை, அது எங்களுக்கு வலுவூட்டுவதாக இருக்கின்ற காரணத்தினால் நான் சொல்ல விரும்புகிறேன்.

அந்த அறிக்கையினுடைய அடிப்படையில், அந்தத் தொழிற் சங்கங்களினுடைய கருத்துக்களைப் பெற்ற பின் வாரியம் 'அ1'—ஆப்ஷன் ஏ-1 என்ற உரிமையைத் தேர்வு செய்துள்ளது. இதன்படி மின் உற்பத்தி இலாப நோக்கு மையம், மின் தொடர் இலாப நோக்கு மையம் மற்றும் மின் பகிர்மான இலாப நோக்கு மையம் போன்ற தனித்தனி அமைப்புகள் தமிழக மின் வாரிய அமைப்பின் அங்கங்களாக, நம்பகத் தன்மை, உற்பத்திப் பெருக்கம், பயனீட்டாளர் திருப்தி ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு அமைக்கப்பட அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது. மின் வாரியத்தின் பரிந்துரை தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, இந்தப் பிற்பகுதி தமிழக அரசிற்கும், மின் துறை அமைச்சரவர்களுக்கும் வலுவுள்ளது. எனவே அதை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

மேலும் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகின்றபொழுது கருணை உள்ளம் கொண்ட மின் துறை அமைச்சரவர்களிடம் சில தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதற்குரிய வேண்டுகோளை வைத்தார்கள். இந்த அரசுதான், கலைஞருடைய அரசுதான் — மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்கள்தான் — கடந்த ஆண்டு 4 அனல் மின் நிலையங்களில் பணியாற்றிய 7704 ஒப்பந்தத்



தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்தார்கள் என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோன்று 159 தொழிலாளர்கள் எரிவாயு சுழலியிலே பணியாற்றினார்கள். அவர்களையும் கலைஞர் அரசுதான் பணி நிரந்தரம் செய்து அந்தக் குடும்பங்களையும், தொழிலாளர்களையும் காப்பாற்றியது என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்பொழுது மின்சாரத்தினுடைய அடிப்படையில்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. சம்சாரம் இல்லாமலும் வாழ்ந்து விடலாம்; ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது. சம்சாரத்தோடு சந்தோஷமாக வாழ்வதற்குக்கூட மின்சாரம் அவசியம் என்ற இந்தக் காலகட்டத்தில் மின் துறையை மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்களும், அதிகாரிகளும் பல நெருக்கடிகளுக்கிடையே—நிர்வாக நெருக்கடிகள், நிதி நெருக்கடிகளுக்கிடையே—மிகத் திறம்படப் பணியாற்றி, செயலாற்றி, பல நன்மைகளை இந்தத் தமிழக மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதிலே ஒன்றுதான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம். இரண்டாவது, கிராமத்திலேயிருக்கின்ற கோயில்களுக்கு இலவச மின்சாரம். அதேபோன்று, குடிசை வீடுகளுக்கு ஒரு விளக்கு மின்சாரத் திட்டம். இந்த திட்டங்களை அமல்படுத்துவதிலே பல சிரமங்கள் இருந்தாலும், தமிழக மக்களுடைய வாழ்வில் என்றும் ஒளி வீச வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்தத் திட்டங்களை மின்வாரியம் தொடர்ந்து அமல்படுத்தி வருகிறது என்பதை பெரு மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்று இந்த நான்காண்டுக் காலத்திலே மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். மின்னிணைப்பு வேண்டுமானால் விண்ணப்பம் கொடுத்த 24 மணி நேரத்திலே மின்னிணைப்பைத் தமிழக அரசு மக்களுக்கு வழங்கி வருகிறது. அதேபோன்று பெயர் மாற்றம்—name transfer; இந்த name transfer என்பது மிகப்பெரிய பிரச்சினையாகத் தமிழகத்திலே இருந்தது. Name transfer-க்கு முன்பெல்லாம் ஒரு வருஷம், 2 வருஷம்கூட ஆகும். ஆனால் தற்பொழுது ரூ.500 கட்டினால் போதும். 3 நாட்களுக்குள்ளாக name transfer-ஐ மின் வாரியம் செய்து கொடுக்கிறது.

அதேபோன்று, மீட்டர் மாற்றுவது—change of meter. முதலிலே மீட்டர் பழுதடைந்து, அந்த மீட்டரை மாற்ற வேண்டுமானால், அந்த மீட்டரை மாற்றுகின்ற காலத்திற்கு 12 மாதத்திலே சராசரி மின்

கட்டணத்தை வசூலித்தார்கள். அதனால் மின் வாரியத்திற்கு பெரிய இழப்பு ஏற்பட்டது. மின் பயனீட்டாளர்களுக்கும் பல குறைகள் ஏற்பட்டன. இந்தக் குறைகளை நீக்குவதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆலோசனை செய்து மாற்றியிருக்கிறார்கள். இப்பொழுது ரூபாய் 100 கட்டினால் போதும்; 3 நாட்களுக்குள்ளாக உடனடியாக அந்த மீட்டரை மின்சார வாரியம் மாற்றிக் கொடுக்கிறது.

அதேபோன்று Licensed Electrician. ஒரு வீட்டுக்கு மின்னிணைப்பு பெற வேண்டுமானால் தேவையற்ற முறையிலே இடைத்தரகர்கள் போன்று Licensed Electricians சான்றிதழ் பெற வேண்டுமென்ற ஒரு நிலைமை இருந்தது. அந்த நிலைமை இப்பொழுது மாற்றப்பட்டுள்ளது. வீட்டு உரிமையாளரே தான்தான் உரிமையாளர் என்று ஒரு affidavit கொடுத்தால் போதும், அந்த அடிப்படையிலே உடனடியாக எந்தவிதமான இடைத்தரகர் பிரச்சினையும் இன்றி அவர்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று tariff மாற்றம். ஒரு வீட்டிலே ஏற்கெனவே கடைகள் இருக்கும். அதற்குப் பின்னால் அந்தக் கடைப் பகுதி வீடுகளாக மாற்றப்படும். கடைப்பகுதியாக இருக்கின்றபொழுது tariff மின் கட்டணம் அதிகம். வீடுகளாக மாற்றுகின்றபொழுது மின் கட்டணம் மிகக் குறைவு. இந்தச் சூழ்நிலையிலே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் ரூபாய் ஆயிரம் கட்டினால் போதும்; 3 நாட்களுக்குள்ளாக commercial tariff என்பதை வீட்டுக் கட்டணத்திற்கு மாற்றி பிரச்சினையில்லாத ஒரு நிலையை உருவாக்கி உள்ளார்கள்.

அதேபோன்று, பலப் பல நன்மைகளையும் தமிழக மக்களுக்கு இந்தத் துறை இப்பொழுது வழங்கிக் கொண்டு வருகிறது. இப்பொழுது ரூபாய் இருபத்தைந்தாயிரம் கட்டினால் விவசாயிகளுக்குப் பலயிடங்களிலே மின்னிணைப்பு உடனடியாக வழங்கப்படுகிறது. அதிலே target வைத்திருக்கிறார்கள். 25,000 ரூபாய் கட்டினால் மின் இணைப்பு கொடுப்பதற்கான target முடிந்து விட்டது என்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, 25,000 ரூபாயை யார் கட்டினாலும், அவர்கள் எந்த மண்டலத்திலே இருந்தாலும் அவர்களுக்குத் தொடர்ந்து மின்னிணைப்பைக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை விவசாயிகள் சார்பாக நான் அமைச்சரவர்களுக்கு வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.





அதேபோன்று இப்பொழுது சென்னை நகரத்திலே இரண்டு பெரிய திட்டங்களை மாண்புமிகு அமைச்சரவர்களும் அதிகாரிகளும் அமல்படுத்தியிருக்கிறார்கள். அதாவது இருவழித் தகவல் தொடர்பு சாதனம். மின்தடை, குறைகளைக் கேட்டுப் பதிவு செய்து அதை உடனடியாக நிவர்த்தி செய்வது. Interactive Voice Response System என்ற ஒன்றை இப்பொழுது அமல்படுத்தியிருக்கிறார்கள். இதன்மூலம் ஒரு வீட்டிலோ அல்லது ஒரு பகுதியிலோ மின் குறைபாடு ஏற்பட்டால், அது உடனடியாக மின் துறையால் பதிவு செய்யப்பட்டு அந்தக் குறைபாடு ஒரு மணித்துளிக்குள்ளாக தீர்க்கப்படுகிறது. அதைத் தமிழகம் முழுவதும் விரைவிலே அமல்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, SCADA System (Supervisory Control And Data Accounting System) என்ற ஒன்றை இப்பொழுது அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஏதாவது ஓர் இடத்தில் line fault ஏற்பட்டுவிட்டால், அது உடனடியாக துறை அதிகாரிகளுக்கு விரைந்து தெரியப்படுத்தப்படுகிறது. உடனடியாக அதிகாரிகள் தாங்கள் இருந்த இடத்திலிருந்தே, எந்த இடத்தில் அந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறதோ அந்த இடத்திற்கு அதிகாரிகளை விரைந்து அனுப்பி அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்குண்டான வழிவகைகளை இப்போது கண்டிருக்கிறார்கள். அதையும் தமிழகத்தில் அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

மின் பயனீட்டாளர்களின் பல கோரிக்கைகள், மின் இணைப்புப் படிவங்கள், பெயர் மாற்றுப் படிவங்கள், மின் கட்டண விகிதங்கள் போன்றவற்றை இப்போது கணினி வலையிலே புகுத்தியிருக்கிறார்கள். ஆதலால் மின் பயனீட்டாளர்கள் அந்தப் பயன்களை நன்கு அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், 50-க்கும் மேற்பட்ட transformers இந்த நான்காண்டு காலத்தில் நிறுவப்பட்டிருக்கின்றன. எங்கெல்லாம் இல்லை என்று கோரிக்கை வைக்கிறோமோ அங்கெல்லாம் நிறைவு செய்திருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆனால் ஊரில் ஆக்கிரமிப்புகளை அகற்றுகிற நேரங்களில், அங்கே உள்ள மின் கம்பங்கள் அகற்றப்படுவதில்லை. குறிப்பாக விருத்தாசலத்திலே என்னுடைய தொகுதியிலேயே இரண்டு ஆண்டுகளாக மின் கம்பங்கள் நடு ரோட்டிலேயே

இருக்கின்றன. அதை நான் அமைச்சரிடத்திலே எடுத்துச்சொல்லி, பலமுறை அவர்கள் நேரடியாக அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் போதிய பணம் இல்லை, அதற்கு Estimate போட்டு, பணத்தை நகராட்சி கொடுப்பதா, யார் கொடுப்பது என்ற பிரச்சினையில் அதை அதிகாரிகள் செய்ய மறுக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் மேலதிகாரிகளுக்கு உத்தரவிட்டும்கூட அதைச் செய்துகொடுக்கவில்லை. அந்த நிலைமை தமிழகம் முழுவதும் இருக்கிறது. அந்த மின் கம்பங்களை சாலை ஓரத்திற்கு மாற்றுவதால் மின் வாரியத்திற்கு எந்தவித இழப்பும் இல்லை. ஆகவே இதை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி உடனடியாக விருத்தாசலத்திலாவது செய்துகொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல எனது தொகுதிக்கு இரண்டு துணை மின் நிலையங்கள் 16 கோடி ரூபாயில் தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் அதற்கு இடம் வாங்குவதில் பிரச்சினை இருக்கிறது. அந்த இடங்களை நாங்கள் அரசாங்கத்திடம் காட்டினாலும்கூட, heavy machines எடுத்துப் போக வேண்டும் என்றும், எனவே அதற்குரிய இடத்தை நீங்கள் தரவேண்டுமென்றும் கேட்கிறார்கள். நாங்கள் முயற்சி செய்தும்கூட, அந்தக் குறிப்பிட்ட வேலைக்கு நகர்ப்புறத்திலே, கிராமத்திலே, இடம் கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் முகாசாப்பரூர், இருப்புக்குறிச்சி போன்ற இடங்களில் அந்தப் பணிகளை விரைவுபடுத்தி அங்கே துணை மின் நிலையங்களை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருவெறும்பூர் என்ற கிராமத்தில் விவசாயிகள் சார்பில் நாங்களே இடத்தை வாங்கி, மின் வாரியத்திடம் ஒப்படைத்துவிட்டோம். அங்கே உடனடியாக துணை மின் நிலையம் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட வேப்பங்குறிச்சி, வடக்குவள்ளூர் என்ற கிராமங்களில் ரோடு ஓரத்திலிருந்து தள்ளி, ஊர்ப்பகுதியிலே 50 வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி பல ஆண்டுகளாகக் காத்திருக்கிறார்கள். அவர்கள் வருவாய்த் துறையில் தடையின்மைச் சான்றிதழ் கேட்டால் தர மறுக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையினரும் தர மறுக்கிறார்கள். ஆனால் இதனால் நெடுஞ்சாலைத் துறைக்கோ வருவாய்த் துறைக்கோ எந்தவிதமான இடைஞ்சலும் பிரச்சினையும் இல்லை என்பதால் அந்தக் கிராம வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும். நம்முடைய மின் வாரியத்தை "மாதிரி மின் வாரியமாக" மாற்றுவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே மிகவும் முன் மாதிரியான முறையில், முன்னேற்றமான முறையில் தமிழ்நாடு மின் வாரியம், நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் இயங்கி வருகிறது. தொடர்ந்து தமிழக மக்களுக்கு அது சிறப்பாக சேவை செய்ய வேண்டுமென்று சொல்லி, அதற்காக என்னுடைய விழைவினைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனிதனுடைய வாழ்க்கையில் மிக முக்கியமானது மின்சாரம் என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற நேரத்திலே, 'நீர் இன்றி அமையாது உலகு' என்று சொல்வார்களே, அதுபோன்று இன்றைய காலகட்டத்திலே, "மின் இன்றி அமையாது உலகு" என்று சொல்லக்கூடிய அளவுக்கு, மனிதனுக்கு மின்சாரத்தினுடைய தேவை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அதைப் போலவேதான் ஒருவன் சம்சாரம் இல்லாமல் கூட வாழ்ந்துவிடலாம். ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழமுடியாது என்ற அளவிற்கு அவசியத் தேவை என்று கருதக்கூடிய நேரத்திலே, இப்படி இந்த மின்சாரத்தைப் பெறக்கூடிய சூழ்நிலையில், நகர்ப்புறங்களில் இருக்கக்கூடியவர்கள், வசதி படைத்தவர்கள் எல்லாம் எளிய முறையிலே தேவையான அளவுக்கு மின்சாரத்தைப் பெறமுடிகிறது. ஆனால் கிராமப் புறங்களில் வாழக்கூடியவர்கள் இன்றும் மின்சாரத்தைப் பெறுவதில் எட்டாக்கனியாகப் பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய நிலைமையை நாம் நேராகக் கண்டுகொண்டிருக்கிறோம்.

உதாரணத்திற்கு, நான் இந்த சட்டமன்றத்தின் முதல் கூட்டத்தொடரில் பேசுகின்றபோது, என்னுடைய பெண்ணாகரம் என்ற மிகப் பின்தங்கிய பகுதியிலே மின்சார வாடையே இல்லாத கிராமங்கள் இருக்கின்றன என்று சுட்டிக் காட்டினேன். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், மின் துறைக்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே, பாராட்டக்கூடிய வகையிலே செயலாற்றிக் கொண்டிருக்கக் கூடிய நேரத்திலே அதையும் சுட்டிக்காட்டி, அந்த நேரத்திலே அதைப் போக்குவதாக அன்றைக்கு வாக்குறுதி அளித்தார்கள். அமைச்சர் அவர்களுடைய வாக்குறுதிக்கேற்ப சில பணிகள் நடந்தாலும் கூட, இன்னும் சில கிராமங்களுக்கு மின்சாரம் செல்லவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களில் தெரு விளக்குகள் அமைப்பதில் materials இன்னும் வந்து சேரவில்லை என்று சொல்கிறார்கள். 20 கம்பங்கள், 30 கம்பங்கள் என்று தேவைப்படுகின்றன. அங்கே. கம்பங்கள் இல்லை. இன்னும் கம்பிகள்கூட இல்லை என்று சொல்லக்கூடிய நிலையையெல்லாம் அறிந்து அதைப்போக்குகிற வகையில், கிராமப்புறங்களுக்கு உடனடியாக அதை நிவர்த்தி செய்வதற்கு வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அதைப்போலவே தெருவிளக்குகள் அமைக்கின்ற நேரத்திலே ஊராட்சியிலே, உள்ளாட்சித் துறையிலே நிதி செலுத்த வேண்டுமென்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே, ஊராட்சியிலே, உள்ளாட்சித் துறையிலே பணம் இல்லாத காரணத்தினாலே, நிறைய கிராமங்களுக்குத் தெரு விளக்குகள் அமைக்க முடியாத நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. அதைப்போலவே வீடுகளுக்கு மின் இணைப்புப் பெறுவதிலே, கிராமங்களிலே கஷ்டங்கள் நிறைய இருக்கின்றன. அதையெல்லாம் போக்குவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, கிராமப்புறங்களுக்கு மின்னொளி வழங்குவதற்காக 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' என்ற திட்டத்தின்கீழே கடந்த காலங்களிலே அதிக அளவு மின் இணைப்பு வழங்கப்பட்டு வந்தது. இப்போது தொகுப்பு வீடுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் மற்ற ஏழையெளிய மக்கள், மிகவும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய கிராமப்புறப் பகுதிகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தை இன்னும் விரிவாக்க வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, மின் உற்பத்தித் திட்டங்களிலே ஏறக்குறைய 849 பேர்களுக்குமேல் இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். நம்முடைய குறிப்பிலே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்விலே உள்ளதாகச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது விவசாயிகளுக்கு அவர்களுடைய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கக்கூடிய நேரத்திலே—நான் ஏதோ எனக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று சொல்வதற்காகச்



சுட்டிக்காட்டவில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன்—நாங்கள்கூட 1984-லே மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்து, இதுவரையிலே பெற முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதைப்போல, விவசாயிகள், ஏழையெளிய மக்கள், சாதாரண மக்கள் ரூ. 25000-கட்டுவது என்பது மிகக் கடினமாக இருக்கிறது. மற்ற துறைகளிலே, பல்வேறு பணிகளுக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அல்லது வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதைப்போல, இதிலேயும் மானிய முறையைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விவசாயிகள் அவர்கள். ஆகவே, எந்த நேரத்திலே அவர்கள் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தாலும்கூட, விவசாயத்திற்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரப் பற்றாக்குறை இருக்கக்கூடிய அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்திலேகூட விவசாயத்திற்கு என்று சொன்னால் மற்றவற்றைக் காட்டிலும் இதற்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த மாநிலத்தைப் போல, மின் துறையிலே தமிழ்நாடும் முன்னணி மாநிலம்; சிறப்பு வாய்ந்த அமைச்சரைப் பெற்றிருக்கின்ற காரணத்தினாலே, அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஜீவன்தாரா திட்டத்திலே கிணறு வெட்டியவர்களுக்கு இப்போது மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அது குறைந்த எண்ணிக்கையிலே வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் நிறையப் பேர்கள் விண்ணப்பித்தும் பெற முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, எந்த ஆண்டிலே அவர்கள் ஜீவன்தாரா திட்டத்திலே கிணறு வெட்டியிருந்தாலும்கூட, அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், யாராக இருந்தாலும்கூட, அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் பெருமையோடு சொல்லிக்கொள்வது, மேட்டூர் அனல் மின் நிலையம், தூத்துக்குடி, வட சென்னை போன்ற அனல் மின் நிலையங்களிலே மிகக் குறைவான எரி எண்ணெயை உபயோகப்படுத்தி நிறைவான மின் உற்பத்தியைப் பெற்று வருகின்றார்கள். அதற்காக நம்முடைய அரசு பாராட்டுதலைப் பெற்று, பரிசுகளைப் பெற்றிருக்கிறது.

அதற்காக நம்முடைய அமைச்சரவர்களை இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டுகிறேன். அப்படிப் பாராட்டக்கூடிய அதேநேரத்தில், மின்சாரத்தை குறைந்த செலவிலே உற்பத்தி செய்யக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மேட்டூர் அணைக்குக் கீழே, கீழ் மேட்டூர் நீர் மின் உற்பத்தித் திட்டங்கள் நிறைய செயலாற்றி வருகின்றன. சிறப்பாக இருக்கின்றன. அதைப்போல, பவானிக்குக் கீழே, ஆறுகளிலே பவானி கட்டளை தடுப்பு அணை கட்டுவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைக் கூடிய விரைவிலே நிறைவேற்றுவீர்கள் என்று சொன்னால் இன்னும் மின் உற்பத்தியைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதால், அதை விரைந்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே ஒகேனக்கல்லில் குறைந்த செலவில் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெறக்கூடிய நல்ல சூழ்நிலை இருக்கிறது. அது நிலுவையிலே இருக்கக்கூடிய நீண்டகாலத் திட்டம். கர்நாடக அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் எல்லைப் பிரச்சினை இருந்தாலும்கூட, இன்றைய சூழ்நிலையிலே நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட ஓர் அசம்பாவித சூழ்நிலை, வேதனையான சூழ்நிலை இருந்தாலும்கூட, இரு மாநில அரசுகளுக்கும் ஒரு சுமூகமான நல்லுறவு இருந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சொன்னால், நிச்சயமாக நிறைவேறும் என்ற காரணத்தினாலே இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றையதினம் முன்னாள் மத்திய மின்துறை அமைச்சர் மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் உயிரோடு இல்லை என்று சொன்னாலும்கூட, அவரை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அவர்களிடத்திலே அடிக்கடி பேசிய நேரத்திலே, அவர்கள் பலமுறை சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சரிடத்திலே பேசுங்கள், உடனடியாக நிறைவேற்றுகிறேன் என்று வாக்குறுதி எல்லாம் அளித்த அவர் இன்று இல்லாத நேரத்திலே, நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதை விரைந்து நிறைவேற்ற வேண்டும். அது பயனுள்ள திட்டம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



முற்பகல் 11-55

ஜெயங்கொண்டத்திலே அமைய உள்ள அனல் மின் நிலையம். அதை பாட்டாளி மக்கள் கட்சி மனதார வரவேற்கிறது. அதற்குத் தடை ஏதுமில்லை. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சொல்லிக்கொள்வதெல்லாம் அங்கே இருக்கக்கூடியவர்கள் சிறு விவசாயிகள். வறண்ட மேட்டு நிலத்தையே நம்பி வாழக்கூடியவர்கள். அவர்களுக்கு அதை விட்டால் தொழில் செய்வதற்கு, பிழைப்பதற்கு வேறு வழியில்லை. ஆகவே, அந்த மண்ணின் மைந்தர்களுக்கு கூடுதலான விலை கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோமே தவிர வேறு எதையும் சொல்லவில்லை. ஆகவே கூடுதலான விலை கொடுக்க வேண்டும். அப்படி நிலம் கொடுத்த குடும்பத்தில் வீட்டுக்கு ஒருவருக்கு கட்டாயம் வேலை கொடுக்க வேண்டும். மற்ற நிலைமைகளிலே, மற்ற துறைகளிலே வாக்குறுதி அளித்துவிட்டு அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இருப்பதைப் போல இல்லாமல் விரைந்து அதை நிறைவேற்ற வேண்டும். பாட்டாளி மக்கள் கட்சி அதற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

***திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானது மின்சாரம் என்பது நாடறிந்த உண்மை. தொழில் துறையில் குறிப்பாக தொழில் துறை முன்னேற்றத்திற்கு இந்த மின்சாரத் துறை பெரிதும் உதவி செய்து வருகிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில் துறையானது மின்சாரத்தினுடைய அதிகக் கட்டணத்தினாலும், மின் பற்றாக்குறையாலும் தற்போது கடினமாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய அண்டை மாநிலமான கேரளத்தில் தொழில் துறைக்கு ஒரு யூனிட்டிற்கு ரூ. 2.10 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் ரூ.4.35 வசூலிக்கப்படுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தென் மாவட்டங்களில் 24 Flouride Factory-கள் இயங்கி வந்தன. இந்த Factory-கள் எல்லாம், இந்த மின் கட்டணத்தை கட்டமுடியாத நிலையில் பாண்டிச்சேரிக்கும் கேரளத்திற்கும் மாற்றப்பட்ட அவல நிலை ஏற்பட்டு 24 Flouride Factory-கள் இருந்ததில் தற்போது நான்கே நான்கு Factory-கள் தான் தமிழகத்திலே செயல்பட்டு வருகின்றன. இந்த அளவில் இந்த மின்சாரக் கட்டணம் கூடியதற்கு ஒரு முக்கியமான காரணம் மின் உற்பத்தி

இல்லாதது. இதுவொரு காரணமாகும். அடுத்து, நாம் எதிர்ப்பார்த்த அளவிற்கு மிக அதிகமான அளவு மின் உற்பத்தி செய்யப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய தலைவர் அவர்களும் இணைந்து நன்றாகச் செயல்படுகிறார்கள். எங்களுக்கு அதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முன்பு கூறியது எனக்கு நினைவுக்கு வருகிறது. மின் உற்பத்தி இல்லாமலேயே கம்பியை நீட்டிக் கொண்டே இருக்கிறது இந்த அரசு என்று அவர் சொன்னதுபோன்று மின் உற்பத்தியை அதிகப்படுத்தாமல் நீங்கள் அதிகமான அளவு மின் இணைப்பு கொடுத்தால் யாருமே தெளிவான முறையில் வியாபாரத்திற்கோ, தொழிலுக்கோ, விவசாயத்திற்கோ மின்சாரத்தை பயன்படுத்த முடியாது என்பது என்னுடைய கருத்து. இதை மனதில் வைத்துத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு முழுமையாக மின் உற்பத்தியைச் செய்ய முடியாத நிலையில் 16 தனியார் தொழில் முனைவர்களை கண்டறிந்துள்ளது என்று 1996 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சிறப்பாகச் சொல்லி, 16 தொழில் முனைவர்களும் 10,878 மெகாவாட் மின் உற்பத்தி செய்வார்கள். இந்த ஆண்டு அவர்கள் தொழிலை தொடங்குவார்கள் என்று சொன்னார்கள். 1997 ஆம் ஆண்டு, 5 தனியாரிடமிருந்து ஒப்பந்தம் செய்யப்பட்டு, 2250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். 1998 ஆம் ஆண்டு தனியார் மூலம் 5792 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று சொன்னார்கள். அரசு மூலம் 1996-97-லிருந்து 2000 வரையான வரவு-செலவு திட்டங்களில் கிட்டத்தட்ட 16,871 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தும் ஏனோ வடசென்னையில் இருக்கிற Basin Bridge அனல் மின்நிலையத்திலிருந்து 230 மெகாவாட் மின்சாரம்தான் பெறப்படுகிறது என்று நினைக்கிறேன்.

அடுத்து, காற்றாலை மூலம் எங்கள் பகுதியிலே 235 மெகாவாட் மின்சாரம்தான் இந்த 4½ ஆண்டு காலத்தில் இந்த அரசு உற்பத்தி செய்திருக்கிற மொத்த மின்சாரத்தினுடைய அளவு. இதற்கு என்ன காரணம்? உலக வங்கியில் எல்லாம் பல கோடி ரூபாய்....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் ஓர் அருமையான கருத்தை, ஆனால் நல்ல கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக TIDCO



மூலமாக டெண்டர்கள் call for செய்யப்பட்டு, தனியார் மின் உற்பத்தி செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்தது. அதற்குப் பிறகு ஏன் இதுவரையில் அதை நடைமுறைப்படுத்தவில்லை என்று கேட்கிறார்கள். .

நண்பகல் 12-00

நாம் டெண்டர் கேட்டு, விண்ணப்பங்களை பரிசீலித்து, எந்த நிறுவனத்திற்கு இந்த அனுமதியை கொடுக்கலாம் என்று நினைத்தபோது, மத்திய அரசு நமக்குத் தேவையான நாப்தாவை வழங்கவில்லை. 800 மெகாவாட்டுக்குத்தான் அன்றையதினம் நாப்தாவை வழங்கினார்கள். அந்த நாப்தாவை வாங்கிய அந்த நிறுவனங்களும் அந்தத் தொழிற்சாலைகளை அமைக்கலாம் என்று நடவடிக்கை எடுத்தபோது, திடீரென்று உலக அளவிலே நாப்தாவினுடைய விலை நான்கு மடங்காக உயர்ந்துவிட்டது. அப்படி நான்கு மடங்காக உயர்ந்துவிட்டதால், ஒரு Unit மின்சாரத்திற்கு ரூ.5-60 கொடுக்க வேண்டிய சூழ்நிலை மின்சார வாரியத்திற்கு ஏற்படுகிறது. இப்படி அதிகமான கட்டணம் கொடுத்து மின்சாரத்தை வாங்கினால் ஏற்கெனவே நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற மின்சார வாரியத்தை மேலும் மூடவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதனால்தான் அந்த அனுமதி பெற்றவர்களிடம்கூட இப்போதைய சூழ்நிலையில் நாப்தாவைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்தால் எங்களுக்கும் லாபம் இல்லை, உங்களுக்கும் நட்டம் என்று சொன்னோம். ஆகவே Natural Gas இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி நாங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்று நினைக்கிறோம், அதற்கு நீங்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுங்கள் என்றார்கள். நாங்களும் பரிந்துரை செய்து இரண்டு நிறுவனங்களுக்கு இப்போது Natural Gas வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போல படிப்படியாக Natural Gas-ஐ பயன்படுத்தக்கூடிய அத்தகைய தொழிற்சாலைகளை இந்த அரசு அனுமதிக்கும். ஏனென்றால், Natural Gas-ஐ பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்தால், அதிகபட்சம் ரூ.2-50-க்குள்ளாக மின்சாரம் வாரியத்திற்குக் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-ல் 100 மெகாவாட் திறனுள்ள 20 ஆலைகள் அமைக்கப்படும், அவை 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் என்று வரவு-செலவுத் திட்டத்தில் நீங்கள் அறிவித்தீர்கள். அப்போது நான் பதில் சொல்கிறபோது கூடச் சொன்னேன், பெட்ரோலிய அமைச்சராக நம்முடைய அமைச்சர்

இருக்கிறார். ஆனால் பெட்ரோலியப் பொருட்களினுடைய விலையிலே fluctuations எப்போதும் உண்டு. அது உங்களுக்கு ஈடு கொடுக்குமா, உங்களால் அதை இலாபகரமாகச் செய்ய முடியுமா என்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொன்னார்கள்.

நிலக்கரி மூலமோ அல்லது பழுப்பு நிலக்கரி மூலமோ செய்வதற்கு நீண்ட காலம் ஆகும், ஆனால் நாப்தா மூலமாகச் செய்தால் இரண்டு ஆண்டுகளில் மின்சார உற்பத்தியை செய்வோம் என்று ஓர் உறுதிமொழியை அளித்தீர்கள். ஆனால் இப்போது அந்த உறுதிமொழி பொய்த்துப் போய், 5 ஆண்டுகால பதவி முடிகிறபோது, இப்போது எங்களால் முடியவில்லை என்று சொன்னால், அதனால் தொழில் வளர்ச்சி பாதிக்காதா? ஏன் மின்சார வாரியம் இதனைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை? பெட்ரோலியப் பொருட்களினுடைய விலையிலே fluctuations வரும் என்பது உங்களுடைய அதிகாரிகளுக்குத் தெரியாதா? பின் எப்படி அவர்கள் உங்களுக்கு இந்த உறுதிமொழியை அளித்தார்கள்? அதை எப்படி நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் அப்போதே fluctuations இருக்கும் என்று நான் சொன்னேனே என்று இங்கே குறிப்பிடுகிறார்கள். அப்போதுகூட G.M.R.Vasavi என்ற நிறுவனம் 196 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி பெற்று இப்போதும் LSHS (Low Sulphur Heavy Stock)-ல்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் மற்ற நிறுவனங்கள்—முதலீடு செய்கின்றவர்கள்—நாப்தாவிலை திடீரென்று இவ்வளவு விலை உயர்ந்துவிட்ட காரணத்தாலே எதிர்காலத்திலே இது ஒரு பிரச்சினையாக ஆகிவிடும் என்று அவர்கள் தயங்கினார்கள். எங்களிடத்திலும் வந்து பேசினார்கள். அதற்குத்தான் அவர்களுக்கு மாற்று ஆலோசனையைச் சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் திரு. அழகிரி போன்றவர்களுக்கும், திரு. அப்பாவு போன்றவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். இந்த அரசு அதற்காக மின்சாரத்தை உற்பத்தி செய்யாமல் இல்லை. எந்த அளவுக்கு நமக்குத் தேவையோ அதைவிட கூடுதலாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு—இன்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன், இந்த ஆண்டு மார்ச் மாதம் 400 மெகாவாட் மின்சாரம் நமக்கு surplus-ஆக இருக்கும். இந்தியாவில் சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு, முதல் தடவையாக



தமிழ்நாடு Surplus State-ஆக ஆகப்போகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்பாவு பேசுங்கள். டாக்டர் இராமன், நேரம் இல்லை. ஒவ்வொருவரும் விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி? அவரும் உங்கள் கட்சிக்காரர்தானே?

**திரு. மு. அப்பாவு:** அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவிப்பதோடு, இப்போது காற்றாலை மூலம் தமிழகத்தில் 800 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. பாரதப் பிரதமர் வாஜ்பேயி அவர்கள் கயத்தாறிலே வந்து 5 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் காற்றாலை மூலம் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட இப்போது 800 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு 4 ஆயிரம் கோடி ரூபாய் தனியார் மூலதனம் செய்திருக்கிறார்கள். யூனிட் 1-க்கு ரூ.2.70-க்குதான் அவர்கள் அந்த மின்சாரத்தை மின்வாரியத்திற்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆந்திரா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத் போன்ற வெளிமாநிலங்களில் காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்கின்றவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் Sales tax, எவ்வளவு ரூபாய்க்கு அவர்கள் மூலதனம் செய்கின்றார்களோ அந்த அளவுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

ஆனால், தமிழகத்தில் அந்த வாய்ப்பு இல்லை. மற்ற மாநிலங்களில் மூன்றாவது நபருக்கு விற்கின்ற உரிமை இருக்கிறது. அந்த உரிமையை நாம் கொடுக்கவில்லை. Reacting power 10 பைசா இருந்தது முதலில். (மணியடிக்கப்பெற்றது) மற்றவர்கள் பேசியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவற்றையெல்லாம் சேர்த்து கணக்கிட்டுத்தான் சொல்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** நான் இரண்டு நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். ஆக, நம்முடைய 10 பைசா Reacting power-ஐ 30 பைசாவாக ஆக்கி, இப்போது ஒரு ரூபாயாக ஆக்கியாகிவிட்டது. அந்த wind mill போடுகிறவர்கள் எல்லாம் இப்போது எங்கே போகிறார்கள் என்றால், நம்முடைய பகுதியிலே அதிகமான காற்று இருந்தும்கூட, மற்ற மாநிலங்களுக்குப் போகிறார்கள். ஆகவே, இந்தக் காற்றாலை மூலம் மின்

உற்பத்தி செய்கின்றவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய பம்ப்செட்டுக்கு 4 இலட்சம் பேர் 15 ஆண்டுகளாக காத்திருப்போர் பட்டியலில் இருக்கின்றார்கள். அவர்கள் என்ன ஞாபகத்தில் இருந்திருக்கிறார்கள் என்றால், நமக்கு நிச்சயமாக ஒருநாள் இலவச மின்சார இணைப்பு வழங்கப்படும் என்று, 1996 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆண்டுக்கு 40 ஆயிரம் மின் இணைப்புகள் வீதம் வழங்கப்படும் என்று கூறியதை நம்பியிருந்தார்கள். அந்த 4 இலட்சம் மின் இணைப்புகள் பெறுவதற்கு காத்திருப்பவர்களுக்கு நீங்கள் ஒரு ரூபாய்கூட கட்டாமல் மின் இணைப்பு கொடுக்க வேண்டும். 50 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என்பதெல்லாம் அவர்களால் கட்ட முடியாது. விவசாயிகள் மிக வறுமையில் இருக்கிறார்கள். அந்த 4 இலட்சம் பேர்களுக்கு, காத்திருப்பவர்கள் பட்டியலில் இருப்பவர்களுக்கு மட்டும், அவர்களிடமிடருந்து ஒரு குறைந்த தொகையை 5 ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொண்டு, மின் இணைப்பு வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நேரத்திலே உறுதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய பகுதியிலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் செல்லக்குமார். (குறுக்கீடு) 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. டாக்டர் செல்லக்குமார். (குறுக்கீடு) உங்கள் கட்சியிலே மூன்று பேர் பேசியிருக்கிறீர்கள். டாக்டர் செல்லக்குமார். (குறுக்கீடு) அவரை உட்காருங்கள் என்று நீங்கள் சொல்லக் கூடாது. டாக்டர் செல்லக்குமார். நீங்கள் பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** தொகுதி பற்றி மட்டும் பேசுகிறேன். கூடங்குளம் அணுமின் நிலையம் பற்றிப் பேசிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கூடங்குளம் அணுமின் நிலையம் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள்.

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு 15 ஆண்டுகளுக்கு முன்னால் 10 ஆயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்தப் பணி ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். கடலை ஒட்டிய அந்தப் பகுதியிலே, கடலைத் தொட்டு மிகப் பெரிய அரணாக சுண்ணாம்புக் கற்களால் கொண்ட 20 அடி உயரத்திற்கு பாறைகள் இருக்கின்றன. அதைத்



தாண்டி மின்சாரம் தயாரிக்கின்ற கூடங்குளம் அணுமின் நிலைய திட்டம் வருகின்ற இடம் இருக்கிறது. தற்போது, அந்தச் சுண்ணாம்புக் கற்களை இந்த ஆண்டு அந்த இடத்திலிருந்து India Cement நிறுவனத்தினர் அப்புறப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த அரண் சென்றுவிட்டால், கடல் தண்ணீர் புகுந்து பாதுகாப்பு இல்லாமல் சென்றுவிடும். அந்தப் பகுதியில் இருக்கின்ற குடியிருப்புகளிலும் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய தலைவர் அவர்களும் சென்று, பார்வையிட்டு இந்த அனுமதியை வழங்கினார்களா? அல்லது எந்த வழியில் அவர்களுக்கு இந்த அனுமதியை வழங்கினார்கள்? அந்தச் சுண்ணாம்புக் கற்கள் எடுக்கின்றதை நிறுத்திவிட்டு, இந்த அரசு எப்போது இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க இருக்கின்றது? இந்தத் திட்டத்திற்கு கிட்டத்தட்ட 20 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ரஷ்ய அரசு எங்களிடம் ஒரு ரூபாய்கூட கிடையாது, நீங்கள் பணம் தந்தால் உடனே செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறது. மத்திய அரசு 20 ஆயிரம் கோடி ரூபாய் கொடுக்கிறதா, இல்லை மாநில அரசுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் கொடுக்கின்ற அளவுக்கு வசதி இருக்கிறதா? எப்போது இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கப் போகிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கைமீது பேசுகின்ற வாய்ப்பு பெற்றதற்கு நன்றி கூறி, திறமையான அதிகாரிகளைப் பெற்றிருக்கின்ற இந்த மின்சார வாரியம் இப்போது நஷ்டத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற கணக்கினை இந்த நிதிநிலை அறிக்கை தந்திருக்கிறது. நான் இதுகுறித்து அதிகம் உள்ளே செல்ல விரும்பாவிட்டாலும், சில இடங்களில் இருக்கின்ற ஓட்டைகளை இந்த அரசு அடைத்திருந்தால்கூட இந்த நஷ்டத்தை ஒருவேளை சரிகட்டியிருக்க முடியுமோ என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்று மின்சார வாரியத்திலே ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. உருவாக்கப்பட்டு ஆண்டு ஒன்று முடிந்துவிட்டது. இந்த அமைப்புக்கு என்று தலைவர் அறிவிக்கப்பட்டார்.

ஆனால், அறிவிக்கப்பட்ட தலைவர் அதற்கு பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. மறு தலைவரை அறிவிப்பதற்குள் ஓராண்டுக் காலம் முடிந்துவிட்டது. மாதம் 3 இலட்சம் ரூபாய் இந்த தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு என்று அன்றாடச் செலவுக்காக செலவு செய்யப்படுகிறது. ஓராண்டு, ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய் செலவு செய்துவிட்டீர்கள். இந்த அமைப்பு எதற்காக உருவாக்கப்பட்டது, எந்த அடிப்படையிலே உருவாக்கப்பட்டது என்பதைவிட, இந்த அமைப்பிற்கு என்ன பணியை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு தலைமையில்லாமல், அதற்கான உறுப்பினர் இல்லாமல் 40 இலட்சம் ரூபாய் இந்த மின்சார வாரியம் நஷ்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது இன்னொரு பக்கம் செலவுக் கணக்கிலே செய்யப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், இதுபோன்ற செலவுகளைக் குறைத்திருந்தால்கூட ஒருவேளை மின்சார வாரியத்தை லாபத்தில் கொண்டு சென்று இருக்க முடியுமோ என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது.

பிற்பகல் 12-10

அதைப்போல, ஆற்காடு அருகிலே இருக்கின்ற மாம்பாக்கம் என்ற பகுதி அமைச்சருக்குச் சொந்த ஊர் என்று கேள்விப்பட்டேன். அங்கே ஒரு sub-station 33 கே.வி. அமைப்பிலே ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிகாரிகளுக்கு என்று அங்கே இருப்பிடம் அமைக்கப்பட்டு இருக்கின்றது. இப்போது மின்சாரம் அந்தப் பகுதியிலே சரியான முறையிலே விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக அந்த 33 கே.வி. sub-station-ஐ upgrade செய்து 110 கே.வி. sub-station-ஆக கொண்டுவர வேண்டுமென்று செய்து இருக்கிறீர்கள். அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து ஒன்றும் இல்லை. ஆனால், ஏற்கெனவே 33 கே.வி.-யில் sub-station செயல்பட்டுக்கொண்டு இருக்கிற அந்த இடத்திலேயே நீங்கள் தொடர்ந்து செயல்பட்டு அதை upgrade செய்து இருந்தீர்கள் என்றால் மின்சார வாரியத்திற்கு குறைந்தது 30 இலட்சம் ரூபாய் லாபத்தை ஈட்டிக் கொடுத்து இருக்க முடியும். ஆனால், அதற்குப் பதிலாக, அதை அந்த இடத்திலிருந்து மாற்றி, இன்னும் 4 கிலோமீட்டர் தொலைவிலே கொண்டு சென்று, அங்கே புதிதாக இன்னொரு sub-station-ஐ உருவாக்குகின்றபோது, அங்கே அதிகாரிகளுக்கென்று இருப்பிடம், இன்னும் பல்வேறு அடிப்படை



வசதிகளையும், கட்டமைப்புகளையும் அங்கே செயல்படுத்துகின்ற போது, மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டு இருக்கின்ற இழப்பு சுமார் 40 இலட்சம் ரூபாய் என்று நான் கேள்விப்படுகிறேன். எனவே, இதுபோன்ற செலவுகளைக் குறைப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமே தவிர, இதுபோன்ற செலவுகளைக் குறைப்பதற்குப் பதிலாக, மக்களுக்கு இலவசமாக மின்சாரம் கொடுப்பதிலேதான் இந்த அரசுக்கு நஷ்டம் என்று சொல்லிக்கொண்டிருந்தால், நாம் யாரை ஏமாற்றுகிறோம் என்பது எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாம்பாக்கம் துணை மின் நிலையத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாம்பாக்கம் என்னுடைய சொந்த ஊர் என்றும் குறிப்பிட்டார்கள். மாம்பாக்கம் எனக்கு சொந்த ஊர் இல்லை. இரண்டாவது, மாம்பாக்கத்திலே 33 கே.வி. sub-station 30 ஆண்டுகளுக்கு முன்னாலே போடப்பட்டது; காமராஜர் முதலமைச்சராக இருந்த காலத்தில் போடப்பட்டது. அதற்குப் பிறகு கிட்டத்தட்ட 40 கிராமங்கள் அந்தச் சுற்று வட்டாரத்திலே மின்சார வசதி பெற்று இருக்கின்றன. அதனுடைய தேவை மிகுதியாக இருக்கிறது. எப்படி தமிழ்நாட்டிலே பல இடங்களில் 33 கே.வி.-ஐ 110 கே.வி.-ஆக மாற்றி இருக்கிறோமோ, அதுபோல் ஒரு வேண்டுகோள், ஒரு தேவை அங்கே ஏற்பட்டது. அப்போது அங்கு இந்த 110 கே.வி. sub-station-ஐ ஏற்கெனவே 33 கே.வி. sub-station இருந்த இடத்திலே மாற்றி வைக்கலாமா என்று பார்த்தபோது, அதற்கான இடம் இல்லை. இப்போது புதிதாக வைத்து இருக்கின்ற இடம் அரசாங்க நிலம்தான். அதற்காக 30 இலட்சம் ரூபாயோ, 40 இலட்சம் ரூபாயோ அதிகமாக ஒன்றும் செலவு செய்யவில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்த புதிய sub-station செய்யார்-ஆரணி மெயின் ரோட்டிலே இருக்கிறது; மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே இருக்கிறது. பழைய sub-station ஓரத்திலே இருந்தது. இதையெல்லாம் கருதித்தான்—இதை அமைச்சரோ, முதலமைச்சரோ செய்யவில்லை. மின்சார வாரியமே செய்தது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** எங்களைப் பொறுத்தவரையில் அதை upgrade செய்தது தவறு என்று நாங்கள் சொல்லவில்லை; அதை upgrade செய்ய வேண்டும். ஆனால் அதே இடத்தில் ஓர் இடத்தைப் பார்த்து நாம் செயல்படுத்தி இருப்போம் என்று சொன்னால், செலவைக் குறைத்து இருக்க முடியும் என்பதுதான் என்னுடைய கருத்து.

அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது இயற்கை எரிவாயுவின் மூலமாக மின் உற்பத்தி செய்வதிலே நாங்கள் கவனம் செலுத்துகிறோம்; ஏனென்று சொன்னால், பெட்ரோலியப் பொருட்களின் விலை நிரந்தரமாக இல்லை; அது fluctuation ஆக இருக்கிறது; எனவே, நாங்கள் இயற்கை எரிவாயுவின் மூலமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருகிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். தேசிய அனல் மின்நிலையம்-NTPC ஏற்கெனவே இயற்கை எரிவாயு மூலமாக மின் உற்பத்தி செய்கின்ற நான்கு திட்டங்களை நடைமுறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் அந்தத் திட்டம் தோல்வி அடைகின்ற சூழ்நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது என்று Rethinking-க்கு மறுபரிசீலனைக்கு அந்த NTPC வந்து இருக்கிறது என்று நாங்கள் அறிகிறோம். ஏனென்றால், இந்த இயற்கை எரிவாயு மூலமாக உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு குறைந்தது 5 ரூபாய் வருகிறது என்று அவர்கள் கணக்கு போட்டு இருக்கிறார்கள். இப்படி ஒரு யூனிட்டுக்கு 5 ரூபாய் வருகிறது என்பதை NTPC நிறுவனம் ஒபபிட்டுவிட்டு, புதிதாக நான்கு இயற்கை எரிவாயு திட்டம் கொண்டுவருவதற்கு மறுபரிசீலனை செய்து, அது வேண்டாம் என்று அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறபோது, தமிழக அரசு, இப்போது மின்சாரத்தை இயற்கை எரிவாயு மூலமாக உற்பத்தி செய்ப இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறது. அதிலும் குறிப்பாக ஒரு யூனிட் மின்சாரம் 3 ரூபாய்க்கு உற்பத்தி செய்து தருகிறோம் என்று அவர்கள் சொல்லி இருப்பதாக நீங்கள் சொல்கிறீர்கள். என்னுடைய கேள்வி என்னவென்று சொன்னால், இது நடைமுறையிலே சாத்தியமாக இருக்கிறதா என்பதை தேசிய அனல் மின் கழகத்திடம் NTPC நீங்கள் கேட்டிருக்கலாம். இல்லையென்று சொன்னால், மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற, தனியார் குறிப்பிட்டிருக்கின்ற—3 ரூபாய்க்கு ஒரு யூனிட் மின்சாரத்தை நாங்கள் விநியோகம் செய்கிறோம் என்று சொல்லியிருக்கின்றார்களே—இது நடைமுறையிலே சாத்தியமா என்று மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் நீங்கள் கேட்டிருக்கலாம். இவையெல்லாம் கேட்கப்படவில்லை.

பிற்பகல் 12-15

இப்போது அவர்கள் 3 ரூபாய்க்கு தருகிறோம் என்று சொல்வார்கள். பிறகு, பல்வேறு பொருட்களின் விலை உயர்வு, பல்வேறு காரணங்களுக்காக, உற்பத்தியைத் தொடங்குகின்றபோது, அதனுடைய விலையை அவர்கள் உயர்த்தி, இந்த விலையிலேதான் நாங்கள் தர முடியும்



என்று சொல்வார்கள் என்று சொன்னால் அதனுடைய பாதிப்பு இந்த நாட்டு மக்களுக்கு இருக்கிறது. எனவே, இப்போது 3 ரூபாய் என்று....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, Power Purchase Agreement போடும்போது, அவர்கள் ஒரு விலைக்கு மின்சாரம் வழங்குகிறோம் என்று சொல்லிவிட்டு, அப்போதைக்கப்போது விலையை மாற்றிக்கொள்ளக்கூடிய அந்த அனுமதியை மின்சார வாரியம் யாருக்கும் வழங்கவில்லை. எனவே, மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே குறைந்த விலையில் எங்கே மின்சாரம் கிடைக்கிறதோ, அந்தத் திட்டங்களை ஊக்குவித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது இயற்கை எரிவாயு திட்டம்தான், தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, குறைந்த விலையிலே மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய திட்டமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அந்தத் திட்டம், அதிகமான காசு கொடுத்து வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்குமானால் அந்தத் திட்டத்தினை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அரசு பதவி ஏற்றபோது, 20 IPP Project 'நாப்தால்'-ஐ அடிப்படையாகக் கொண்டு நாங்கள் உற்பத்தி செய்கிறோம் என்று நீங்கள் சொன்னீர்கள். அதற்கு ஒரு கட்டணம் அன்றைக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. 5 ஆண்டு முடிகின்ற இந்தத் தருவாயிலே இப்போது 'நாப்தால்'-உடைய விலை 4 மடங்கு உயர்ந்துவிட்டது. எனவே நாங்கள் கைவிட்டுவிட்டோம்; நாங்கள் இயற்கை எரிவாயுவிற்கு சென்றுவிட்டோம் என்று நீங்கள் சொல்கிறீர்கள்.

இதேபோல, இயற்கை எரிவாயு மூலமாக உற்பத்தி செய்கின்றபோது, இன்னும் 4 ஆண்டுகளுக்குப் பிறகு, மின்சார உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்று அவர்கள் சொல்வார்கள் என்று சொன்னால், அப்போது தமிழகத்தினுடைய எதிர்காலம் என்னவென்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

5 ஆண்டுகள் ஆகி இருக்கின்றன. பெட்ரோலியப் பொருட்களுடைய விலையில் fluctuation உள்ளது என்பதைத் தெரிந்து கொள்வதற்கே உங்களுக்கு 5 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. இப்போதுகூட சொல்கிறேன். இப்போது L.N.G. Power project-லே நீங்கள் ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.2.76-க்கு வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்திருக்கிறீர்கள். 750 மெகாவாட்

மின்சாரத்தை வாங்குவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வது, ஒரு யூனிட் மின்சாரம் ரூ.2.76-க்கு L.N.G.யினால் விநியோகம் செய்ய முடியுமென்றால், இன்னும் எதற்காக அதிகமான விலை கொடுத்து மற்ற நிறுவனங்களிடம் சென்று நாம் ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்பதுதான் எனக்குப் புரியவில்லை. குறைவான விலைக்கு அவர்கள் தருவதற்கு.....

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாம் L.N.G. நிறுவனத்தோடு, L.N.G. Project தயார்செய்து, எண்ணூரிலே, உற்பத்தி ஆகவிருக்கின்ற அந்த மின்சாரத்தை ஏன் முழுவதுமாக வாங்கவில்லை; 750 மெகாவாட் வரையிலும் வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்திருக்கிறீர்கள்; ரூ.2.76 என்பது குறைவான கட்டணமல்லவா என்று உறுப்பினர் கேட்கிறார். அந்த எண்ணூர் L.N.G. Project, 4 ஆண்டுகள் கழித்துதான் வரப் போகிறது. இப்போது அது வரப் போவதில்லை. இப்போதுதான் அடிக்கல் நாட்டுகிறார்கள். அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு இன்னும் குறைந்தது 4 ஆண்டு காலமாகும். 2004 அல்லது 2005 ஆம் ஆண்டிலேதான் நமக்கு அந்தத் திட்டம் வரும். அதற்குள்ளாக நம்முடைய திட்டங்களின் மூலம் கிட்டத்தட்ட 3,000 மெகாவாட் அளவிற்கு மின்சாரம் நம்மிடத்திலேயே இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், 2004-2005-ல் 1,000 மெகாவாட் surplus-ஆக இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் முழுவதையும் வாங்கிக் கொண்டால் அந்த மின்சாரத்தை யாருக்கு விற்பது என்பது தெரியாத காரணத்தினால்தான் Power trading Corporation என்ற ஒரு புதிய அமைப்பு மத்திய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த அமைப்பு அதை வாங்கி வேறு மாநிலங்களுக்கு வழங்க ஒப்பந்தம் செய்திருக்கிறது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த L.N.G. மின் திட்டத்தினுடைய அடிப்படையிலே பார்க்கிறபோது, அவர்கள் வாங்குகின்ற அந்த Crude oil price US Dollar 12 per barrel என்கின்ற அளவிலே அவர்கள் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தியதாக அறிகிறேன். RAS Gas of Qatar என்கின்ற நிறுவனத்திடமிருந்து அவர்கள் அந்த Crude oil-ஐ விலைக்கு வாங்குவதற்கு அரசுக்குக் கொடுத்திருக்கின்ற விலை......(மணியடிக்கப்பெற்றது) இப்போது நடைமுறையிலே அந்த Crude oil-னுடைய விலை ஒரு barrel-க்கு 33 அமெரிக்கன் டாலர் என்று Internet-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீங்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். 12 ரூபாய்க்கு என்று அவர்கள் விலை



நிர்ணயித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் 2.76 என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய நிலவரப்படி அந்த Crude ஆயிலினுடைய விலை 33 அமெரிக்கன் டாலர் என்று சொன்னால், அந்த 2.76 விலைக்கு அவர்களால் விநியோகம் செய்ய முடியுமா என்பதையும் இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12-20

அதோடு நான் இன்னொன்று கேள்விப்படுகிறேன். இன்றைய நிலவரப்படிகூட "RAS Gas of Qatar" என்கிற நிறுவனத்தோடு இதுவரை ஒப்பந்தம் கையெழுத்து ஆகவில்லை என்றுகூட நாங்கள் தகவலாகக் கேள்விப்படுகிறோம். இதையெல்லாம் அரசுக்கு எதற்காகச் சொல்கிறோம் என்று சொன்னால் இப்போதுகூட எண்ணூரில் இரண்டாவது அனல் மின் நிலையத்தில், ஏற்கெனவே, ஒரு நிறுவனத்தோடு நீங்கள் ஒப்பந்தம் செய்துவிட்டு, இப்போது அந்த நிறுவனத்திடமிருந்து நீங்கள் அதற்கான ஒப்பந்தத்தை இரத்து செய்திருக்கிறீர்கள். இன்னொரு நிறுவனத்தோடு நீங்கள் ஒப்பந்தம் செய்ய இருக்கிறீர்கள். அவர்கள் ஏற்கெனவே ஐந்தாண்டு காலம் கடத்திவிட்டார்கள். இந்தத் திட்டத்தை செயல்படுத்த இருப்பதற்கு ஐந்தாண்டுகள் கடந்து, இன்னும் 1 மாதத்தில் நாங்கள் அந்தத் திட்டத்தைத் தொடங்க இருக்கிறோம் என்று சொல்கிறபோது, புதிதாக ஒரு நிறுவனம் இப்போது அதிலே தலையிட இருக்கிறது. இனி அவர்கள் இங்கே வந்து தங்களுடைய கட்டமைப்புகளை உருவாக்கி, அதற்குப் பிறகு, நிதி நிறுவனங்களோடு அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்குப் பிறகு பல்வேறு வழிகளிலே இதற்கு அரசு ஒப்பந்தங்களையெல்லாம் அவர்கள் செயல்படுத்திய பிறகு, அதற்கான பணியைத் தொடங்க இருக்கிறபோது இன்னும் ஒரு ஐந்தாண்டுகள் கடந்துவிடும். நம்முடைய தேவை என்ன என்று சொன்னால், அமைச்சர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். 4 ஆண்டுகளுக்குப் பிறகுதான் L.N.G. நிறுவனம் மின்சார உற்பத்தியைச் செய்து தமிழகத்திற்குத் தரமுடியும். எனவேதான் நாங்கள் வேறு நிறுவனங்களோடு ஒப்பந்தம் போட்டோம் என்று கூட இங்கே சொன்னார்கள். அப்படி என்று சொன்னால், அடுத்த மாதமே தொடங்க இருக்கிற ஒரு நிறுவனத்திற்கு நீங்கள் அனுமதியை இரத்து செய்துவிட்டு புதிதாக இனி ஒரு நிறுவனத்தை இங்கே புகுத்தி அதன் மூலமாக அவர்கள் 4 ஆண்டுகள் இதிலே மறுபரிசீலனை செய்து அவர்கள் நிதியாதாரங்களை எல்லாம் கொண்டுவந்து என்றைக்கு அந்த நிறுவனம் மின் உற்பத்தியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளமுடியும் என்பதை இந்த அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். பெட்ரோலியப் பொருட்களுடைய விலையை இன்றைக்கு உலக அரங்கில் பார்க்கின்றபோது நிலக்கரியினுடைய விலை மட்டும்தான் கடந்த ஐந்தாண்டுகளாக 1995-லிருந்து நிலக்கரியினுடைய விலைதான் ஆண்டுதோறும் குறைந்து கொண்டு இருக்கிறதே தவிர, பெட்ரோலியப் பொருட்களுடைய விலை உயர்ந்துகொண்டு இருக்கிறது என்பதைத்தான் இன்றைக்கு நடைமுறையில் பார்க்கிறோம்.

பல்வேறு நிறுவனங்களுடைய விலைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக நீங்கள் 'Crisil' நிறுவனத்திடம் கொடுத்திருக்கிறீர்கள், அந்த 'Crisil' organization-லே அவர்களாக ஆய்வு செய்து அவர்கள் ஒரு விலையை நிர்ணயம் செய்தது இல்லை. தமிழக மின்வாரியம் என்ன புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறதோ அந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேதான் அவர்கள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் மின்சார விநியோகத்திற்கு என்ன விலை என்று நிர்ணயம் செய்திருக்கிறார்களே தவிர, அந்தந்த நிறுவனங்கள் அவர்கள் வாங்குகின்ற Raw materials-உடைய விலையை வைத்து அல்லது அதை இங்கே கொண்டு வருவதற்கான Import duty, Customs duty-யை வைத்து அல்லது பல்வேறு செலவுகளை வைத்து அவர்களிடம் ஆய்வு செய்து அந்த 'Crisil' நிறுவனம் இந்த விலையை நிர்ணயம் செய்யவில்லை. அந்த 'Crisil' நிறுவனமே தமிழ்நாடு மின்வாரியம் எங்களுக்குத் தந்திருக்கிற புள்ளிவிவரங்களின் அடிப்படையில்தான் நாங்கள் இதைச் சொல்லியிருக்கிறோமே தவிர, நாங்கள் நேரடியாக இதிலே ஆய்வு செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறது. இந்த ஆய்வறிக்கையில்கூட இது மின்சாரம் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுடைய விலையை நிர்ணயம் செய்வதற்காக இதை எடுத்துக்கொள்ள முடியாது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 'Crisil' நிறுவனம் மின்சாரக் கட்டணத்தை நிர்ணயம் செய்யும்போது மின்சார வாரியம் தனியாக புள்ளி விவரங்களை தானாக, கற்பனையாக கொடுப்பதில்லை. ஒவ்வொரு நிறுவனமும், Power purchase Agreement செய்யும்போது, நிலத்தினுடைய விலையிலிருந்து கடைசியாக அவர்கள் அந்தத் திட்டத்தை முடித்து மின்சார வாரியத்திற்கு எவ்வளவுக்கு மின்சாரம் கொடுப்போம் என்று சொல்கிறார்களோ அதுவரையிலே அந்த நிறுவனம் கொடுத்த புள்ளிவிவரங்களைத்தான் அப்படியே நாங்கள் 'Crisil' நிறுவனத்திற்குக் கொடுக்கிறோம். அதிலேயும் Videocon நிறுவனம் நாங்கள் கொடுத்த புள்ளிவிவரங்கள் தவறோ





என்னவோ என்று அவர்களாக கற்பனை செய்து கொண்டு, அவர்களே நேரடியாகப் போய் 'Crisil' நிறுவனத்திடம் அவர்களும் அந்தப் புள்ளிவிவரங்களைக் கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த அந்தப் புள்ளிவிவரங்களையும் கணக்கிலே எடுத்துக்கொண்டுதான் 'Crisil' நிறுவனம் ஓர் அறிக்கை தந்திருக்கிறது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் பணியிலே ஈடுபடுத்தப்போகிறது என்று அறிவித்தது. ஆனால் இதுகாறும் அவர்களை அதில் நியமனப்படுத்தவில்லை என்பதுமட்டுமல்ல. கடந்த காலங்களில் அவர்களுக்கு வழங்கிவந்த போனஸைக்கூட இந்த ஆண்டு வழங்கவில்லை என்று நாங்கள் அறிகிறோம். இராணிப்பேட்டை sub-division-ல் இருக்கிற ஒழுகூர் சாலை போன்ற பகுதிகளில் பணியாற்றுகிற 150 பேருக்கு மேலாக உள்ளவர்களுக்கு அந்த போனஸ் வழங்கவில்லை. சிதம்பரம் போன்ற பகுதிகளிலும் அது வழங்கப்படவில்லை என்று நாங்கள் அறிகிறோம்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** முடித்துவிடுகிறேன். அதைப்போல, விவசாயிகளுக்காக நீங்கள் சிறப்பு முன்னுரிமைத் திட்டத்தின் அடிப்படையிலே அவர்களுடைய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கிறீர்கள். 25 ஆயிரம் ரூபாய் செலுத்தினால் அவர்களுக்கு மின்னிணைப்பில் முன்னுரிமை கொடுக்கிறார்கள். விவசாயிகளின் சார்பாக ஒரு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த 25 ஆயிரம் ரூபாயை நாங்கள் கட்டுவதற்கு தயாராக இருக்கிறோம், ஆனால் அந்த 25 ஆயிரம் ரூபாயை 3 தவணைகளில் கட்டுவதற்கு எங்களுக்கு வாய்ப்புத் தருவீர்கள் என்று சொன்னால், அது கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு முழுமையாக பயன் உள்ளதாகவும், அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாகவும் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த 25 ஆயிரம் ரூபாயை 3 தவணைகளில் கட்டுவதற்கு ஏற்றவகையில், விவசாயிகளுக்கு நீங்கள் அந்தச் சலுகையைத் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர். (குறுக்கீடு) 16 நிமிடங்கள் ஆகிவிட்டன. டாக்டர் செல்லக்குமார் உட்காருங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** ஒரே நிமிடத்தில் உரையை முடித்து விடுகிறேன். E.B. licence வழங்குகிறார்கள். அது இந்த Department-ல் வரவில்லையென்றாலும்கூட, அரசினுடைய .Electrical Department-ல் அது வழங்கப்படுகிறது. அவர்களே அதை வழங்குவதில் காலதாமதப்படுத்துகிறார்கள், 6 மாதங்கள், ஒரு ஆண்டு, 1½ ஆண்டு, இரண்டு ஆண்டுகள் கூட அந்த அனுமதிக்காகக் காத்திருந்து, அதிலே கையூட்டு கொடுத்தால்தான் அனுமதி கிடைக்கும் என்ற சூழல் இப்போது நடைமுறையிலே இருக்கிறது. எனவே, அதிலே நீங்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்து, அந்த காலதாமதத்தைத் தவிர்த்து உடனடியாக licence வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறைய உறுப்பினர்கள் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பேசியிருக்கிறார்கள். என்னுடைய நீண்டநாள் கோரிக்கை, விவசாயிகள், எல்லாம் விவசாயம் பொய்த்துப் போய் ஏராளமானவர்கள் கோழிப்பண்ணைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த கோழிப் பண்ணைக்கான Tariff-ஐ Commercial tariff-ஆக போட்டிருக்கிறார்கள். அதைக் குறைத்து—வீட்டு tariff வேண்டாம்—வீட்டு tariff-க்கும் Commercial tariff-க்கும் நடுவில் தயவுசெய்து tariff போடவேண்டுமென்று நாங்கள் 4½ ஆண்டுகளாகக் கேட்டு வருகிறோம். மின்வாரியத் தலைவர் அவர்கள் ஒரு நிறைந்த மனிதர், ஒரு பூரணமான மனிதர், சென்ற வருடம் கேட்டபோது 'நீங்கள் குறைப்பதற்கே சிபாரிசு செய்கின்றீர்களே' என்று கேட்டார்கள். கோழிப்பண்ணைகள் எல்லாம் மூடப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. இலட்சக்கணக்கான கோழி முட்டைகளை உடுமலைப்பேட்டையில் ஆற்றிலே கொட்டியதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நான் புறப்பட்டு வருகின்றபோது விவசாயிகள் என்னிடம் எங்களுக்கு சலித்துப்போய்விட்டது. அந்த 25 ஆயிரம் ரூபாயைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம். அதை 3 தவணைகளில் கட்டுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டார்கள். இந்த இரண்டையும் பரிசீலனை செய்து இந்த மன்றத்திலேயே அறிவிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் அமர்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை விவர அறிக்கை மற்றும் 1999-2000 ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு குறித்து மன்றத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களிலே இருந்து 18 உறுப்பினர்கள் அரிய கருத்துக்களை மின்சார இலாகா மேலும் தன்னுடைய பணியை சிறப்பாகச் செய்வதற்காகத் தெரிவித்ததற்கு முதலிலே என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய அருமை நண்பர், மாண்புமிகு மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள் 10 நாட்களாக மருத்துவமனையிலே கவலைக்கிடமாக இருந்தாலும் கூட இப்போது அவருடைய உடல்நிலை நல்ல முன்னேற்றம் அடைந்து வருகின்ற இந்தச் சூழ்நிலையில், இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்து கொள்ள முடியுமோ, முடியாதோ என்று நினைத்த சூழ்நிலையில், மன்றத்தை நாம் மதிக்க வேண்டும், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களைக் கேட்க வேண்டுமென்ற அந்த அடிப்படையிலேதான் இந்த விவாதத்திலேகூட நான் கலந்துகொண்டு உரையாற்ற வேண்டிய ஒரு சூழ்நிலையிலே இருக்கின்றேன்.

மின்சார வாரியம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்று சில உறுப்பினர்களும், இன்னும் குறைபாடுகள் இருக்கின்றன என்று ஒரு சிலரும் சுட்டிக்காட்டியதை நான் மறுக்கவில்லை. மின்சார வாரியம் நூற்றுக்கு நூறு அப்பழுக்கற்ற வாரியமாக, குறைகளே இல்லாத வாரியமாக, முழுக்க முழுக்க நாணயமாக, நேர்மையாகச் செயல்படுகிறது என்று நான் எந்த இடத்திலேயும் குறிப்பிடவும் இல்லை, சொல்லத் தயாராகவும் இல்லை. தவறுகள் மனித சமுதாயத்திலே எங்கேயும் நடக்கும். அப்படி ஒரு சில தவறுகள் மின் வாரியத்திலேயும் நடக்கலாம். ஆனால் அந்தத் தவறுகளைக் கண்டுபிடித்து, உடனுக்குடன், நடவடிக்கை எடுத்து, தேவைப்பட்டால் கைது செய்து வழக்குப் போடுகின்ற அளவுக்கு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவரோடு நம்முடைய ஞானசேகரன் அவர்களும் சேர்ந்துகொண்டு, ஜெயங்கொண்டம் மின்திட்டம் வருமா, வராதா, என்ன ஆயிற்று என்றெல்லாம் கேட்டார்கள். நான் எத்தனையோ பதில்கள்

சொன்னேன். ஆனால், ஞானசேகரன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஜெயங்கொண்டம் மின் திட்டத்திற்கு ஏன் ESCROW கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். ஜெயங்கொண்டம் மின் திட்டத்திற்கு ESCROW கொடுப்பது என்று மின் வாரியம் முடிவெடுத்து மூன்று மாதமாகிறது. எனவே, அந்தத் திட்டம் வரவேண்டும் என்றுதான் நாங்கள் நினைக்கிறோம்.

பிற்பகல் 12-30

இங்கே மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சி நில ஆர்ஜிதம் செய்வதற்கு ஒத்துழைப்பு தருவோம் என்று சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள், அந்தத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அவருடைய கட்சியிலே இருக்கக்கூடிய ஒருசிலர்கூட அதிக விலை கேட்டாலும், அவர்களையெல்லாம் கூப்பிட்டுக் கண்டித்து, அந்தத் திட்டம் வருவதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தீரன், நேற்றையதினம் ஏக்கருக்கு 5 இலட்சம் ரூபாய் கேட்டாலும்கூட, அவரும் அதை வற்புறுத்த மாட்டார் என்று நான் கருதுகின்றேன்.

அதைப்போலவே, ஆற்காடு பி.என். சுப்பிரமணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அங்கே ஒரு 110 கிலோவோல்ட் துணை மின் நிலையம் வேண்டும் என்று கேட்டார்கள். அதுகுறித்து அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில், குடிநீருக்கு அந்தத் தொட்டிகள் கட்டிவைக்கப்பட்டிருக்கின்றன; ஆனால், இணைப்புக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இணைப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒருசில இடங்களிலே TWAD BOARD விண்ணப்பங்கள் கொடுக்கவில்லை. அதைக் கொடுத்தவுடனேயே மின் இணைப்பு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். VIDEOCON நிறுவனம், இந்த அளவிற்கு அன்றையதினம் தாங்கள் ஒப்பந்தம் செய்ததை அமல்படுத்தாமல் இருக்கிறார்களே; ஏன் அதிலே ஒரு soft-corner-ஆக இருக்கின்றீர்கள் என்று கேட்டார்கள். நான் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே சொல்கிறேன்; Videocon அல்ல, எந்தக் 'CON'-ஆக இருந்தாலும் Soft Corner-ஆக அல்லது அவர்களோடு ஒப்பந்தம் செய்துகொள்வதற்குத் தயாராக இல்லை என்பதை மட்டும் நான் இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய விளக்கங்களைப் பின்னாலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.



டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, மீட்டர்கள் வாங்குவதிலே சில குறைபாடுகள் இருந்தன என்று சொன்னார்கள். அதற்கும் நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, குத்தாலம் கல்யாணம் அவர்கள், வைத்தீஸ்வரன்கோவிலில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் என்ன ஆயிற்று என்றார்கள். இந்த ஆண்டிற்குள்ளாக நிச்சயம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, தன்னுடைய பகுதியிலே H.T. Service இல்லை என்று சொன்னார்கள். அங்கே H.T. line இருக்கிறது. அதற்குத் தேவையான தொழிலதிபர்கள் யாரையாவது அழைத்துவந்து இணைப்புக் கேட்டால், 15 நாட்களுக்குள்ளாகக் கொடுப்பதற்கு மின் வாரியம் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் மணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, low voltage கன்னியாகுமரியிலே இருப்பதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே 231 இடங்களிலே low voltage இருக்கிறது. 23 இடங்களிலே இப்போது சரி செய்துவிட்டோம். மீதியிருக்கிற பகுதிகளிலேயும் டிசம்பர் மாதத்திற்குள்ளாக தமிழ்நாட்டிலே low voltage எங்குமே இருக்கக்கூடாது என்பதற்கான நடவடிக்கைகளை மின் வாரியத் தலைவர் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. வேலாயுதன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், கன்னியாகுமரி மாவட்டத்திலே அரசுக்குச் சொந்தமான இடத்திலே ஆலயம் கட்டினோம்; ஆனால், N.O.C இல்லாமல் மின் இணைப்புக் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் ஒரு Indemnity Bond எழுதிக் கொடுத்து, நாளைக்கே அனுமதி கேட்பாரேயானால், அந்த ஆலயத்திற்கு இரண்டு நாட்களுக்குள்ளாக மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் அவர்கள், இரண்டு பிரச்சினைகளை வலியுறுத்தினார்கள். ஒன்று, நரிமணம் திட்டத்தை மூடுவதாக இருக்கிறீர்களா என்று கேட்டார்கள். எந்தத் திட்டத்தையும் இந்த அரசாங்கம் மூடுவதாக இல்லை. நரிமணம் திட்டம் தொடர்ந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கோ ஓர் இடத்திலே wire தொங்கிக் கொண்டிருந்து, அறுந்துவிழுந்து, பக்ருதீன் என்ற ஒரு தோழர் இறந்துவிட்டார்; அவருக்கு compensation வழங்கவில்லை என்று சொன்னார்கள். மின்சார இலாகாவினுடைய குறைபாட்டால் எங்கேயாவது, யாராவது இறந்துபோவார்களேயானால்,

அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை மின்சார வாரியம் வழங்குகிறது. குறைந்தபட்சம் 25,000 ரூபாய். அதிகபட்சம் 2 இலட்சம் ரூபாய். இறந்தவருடைய வயது, வருமானம் இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, அந்த Compensation-ஐ வழங்கிக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் அவர்கள், சம்பந்தப்பட்டவர்களுடைய குடும்பத்திலிருந்து ஒரு விண்ணப்பத்தை வாங்கிக் கொடுப்பாரேயானால், ஒரு வார காலத்திற்குள்ளாக நிச்சயமாக அந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)*

மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் மேட்டூர் மின் நிலையத்திற்காக நில ஆர்ஜிதம் செய்தீர்கள்; அப்போது ஓர் ஒப்பந்தம் செய்தோம்; யார்யார் நிலம் கொடுக்கிறார்களோ அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்தோம்; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் பக்கத்திலே'பிருந்துதான் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது; எல்லோருக்கும் வேலை கொடுத்துவிட்டார்கள்; ஆனால் 12 பேர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன். அந்த 12 பேர்களுக்கும் உடனடியாக வேலை கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-35

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் கூடங்குளத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். இங்கே நம்முடைய தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் அந்தத் திட்டத்தை நிச்சயமாக அமல்படுத்த வேண்டும்; ஆனால், அதேநேரத்திலே மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அதை முறையாகக் கண்காணிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மக்களுக்குப் பாதிப்பு இல்லாதவகையில் நிச்சயம் அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றுவோம். அணு மின் நிலைய வாரியம்—அந்தக் கழகம்—அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. ரஷ்ய அரசும், நம்முடைய இந்திய அரசும் அதற்கான ஒப்பந்தங்களையெல்லாம் செய்தாகிவிட்டது. அடுத்த ஆண்டு 2001-லே அந்தத் திட்டத்தைத் தொடங்க இருக்கிறார்கள்.



நான் திரு.. மு. அப்பாவு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 7 ஆண்டுக் காலத்திலே, 2000 மெகாவாட் மின்சாரத்தை அந்த நிலையம் உற்பத்தி செய்யும். அது உண்மையிலேயே, தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்கின்ற மற்ற நிலையங்களைவிட மலிவான முறையிலே மின்சாரத்தை வாரியத்திற்குக் கொடுக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வாரியத்தினுடைய வரவு-செலவைப் பற்றி ஒருசிலர் குறிப்பிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள்கூட 1272 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மூலதனக் கணக்கிலே நாம் மொத்தத்தையும் பார்த்தால், ரூ.1536.35 கோடி வருவாய் வரவு இருக்கிறது; ரூ.1459.94 கோடி செலவு இருக்கிறது. உபரியாக ரூ.76.41 கோடி மூலதனக் கணக்கிலே இருக்கிறது. ஆனால், வருவாய்க் கணக்கிலே பார்த்தால், வரவு ரூ. 7424.55 கோடியாகவும், செலவு ரூ.8,696.58 கோடியாகவும், இடைவெளி ரூ.1272.03 கோடியாகவும், ஏற்கெனவே மூலதனக் கணக்கிலே ரூ.76.41 கோடி ரூபாய் உபரியாகவும் இருக்கிற காரணத்தினால், அதைக் கழித்துக் கொண்டால், மொத்த நட்டம் ரூ. 1195.62 கோடியாக இருக்கிறது. ஏன் இந்த நட்டம் வருகிறது என்பதற்கான காரணங்களை எல்லாம் சில மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். விவசாயத்திற்கு இலவச மின்சாரம் தருகிறோம்; அது ஒரு காரணம். இரண்டாவது காரணம், 15 இலட்சம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் தருகிறோம், ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ். அதைவிட ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கு 2 ரூபாய் 55 காசு ஆகிறது. ஆனால், அப்படி அந்த அளவுக்குச் செலவு செய்து மின்சாரத்தை உற்பத்தி செய்து, 30 இலட்சம் குடும்பங்களுக்கு ஒரு யூனிட் 75 பைசா என்று மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். யார் 50 யூனிட்டுகளுக்குக் குறைவாகப் பயன்படுத்துகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் 75 பைசாதான் வசூல் செய்கிறோம். யார் 100 யூனிட்டிலிருந்து 300 யூனிட் வரையிலே செலவு செய்கிறார்களோ, அவர்களுக்கு இரண்டு ரூபாய் இருபது காசு வசூல் செய்கிறோம்.

ஆகவே, உற்பத்திச் செலவைவிட, குடியிருப்பவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையிலே, அவர்களுடைய ஏழ்மை நிலையின் அடிப்படையிலே குறைந்த விலையிலே மின்சாரம் கொடுக்கிற காரணத்தினாலே, அதனாலேயும் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப் பல்வேறு காரணங்களினாலே மின்சார வாரியத்திற்கு ஏற்படுகின்ற இந்த இழப்பை எப்படியாவது குறைக்க வேண்டுமென்று மின்சார வாரியத்தினுடைய

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 நவம்பர் 10

தலைவர் திரு. பூரணலிங்கம், I.A.S. அவர்கள், கடந்த ஓராண்டு காலத்திலே எடுத்த மிகச் சிறந்த நடவடிக்கைகளின் காரணமாக, ஓரளவுக்கு செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். G.M.R. Vasavi என்ற நிறுவனம் 196 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. அது நாப்தாவைப் எரி பொருளாகப் பயன்படுத்துகிறது. அந்த மின்சாரத்தை மின் வாரியம் அதிகக் கட்டணம் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே நமக்கு இரவு நேரத்திலே மின்சாரம் அதிகம் தேவையில்லை. ஏனென்றால் பகல் நேரத்திலேதான் demand அதிகமாக இருக்கிறது. அதை மனதிலே கொண்டு, ஒரு தொழிலதிபர் தன்னுடைய தொழிற்சாலையிலே எப்படி ஒவ்வொரு ரூபாய் நட்டத்தையும் குறைக்க வேண்டுமென்று நினைப்பாரோ, அதேபோல் மின்சார வாரியத்தின் தலைவர், அந்த மின் உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசி, "எங்களுக்கு இரவு நேரத்திலே மின்சாரத்தை உற்பத்தி செய்து கொடுக்காதீர்கள்; பகல் நேரத்திலே மட்டும் மின்சாரத்தை உற்பத்தி செய்யுங்கள்" என்று வேண்டுகோள் வைத்ததன் காரணமாக—அந்த வேண்டுகோளை வைத்தால், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல; ஏனென்றால், Powerload Factor என்று நாம் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அவர்கள் செய்கின்ற உற்பத்தியிலே 75 சதவிகிதம் வாங்க வேண்டுமென்று இருக்கிறது. இருந்தாலும்கூட, மின்சார வாரியத்தினுடைய நிலையைப் பார்த்து, வாரியத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கேற்ப அவர்கள் இரவு நேரத்திலே 100 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதைக் குறைத்துக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். அதனாலே ஒரு மாதத்திற்கு மின்சார வாரியத்திற்கு 9 கோடி ரூபாய் மிச்சம் ஏற்படுகிறது. அப்படியென்றால், ஆண்டுக்கு 108 கோடி ரூபாய் இதன்மூலமாக மட்டும் மிச்சம் ஏற்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

நமது மின்நிலையங்களின் உற்பத்தித் திறன் 1999-2000 ஆண்டில் 14 சதவிகிதம் அதிகரித்ததன் காரணமாக, நாம் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கிக் கொண்டிருந்த மின்சாரத்தை நிறுத்திவிட்டோம். மகாராஷ்டிராவிலிருந்து வாங்கினோம். பஞ்சாப்பிலிருந்து வாங்கினோம். மூன்று, நான்கு மாநிலங்களிலேயிருந்து வாங்கினோம். இந்த 14 சதவிகிதம் மின்சாரம் நாம் கூடுதலாக உற்பத்தி செய்கின்ற காரணத்தினாலே நமக்கு வேறு மாநிலங்களிலிருந்து மின்சாரம் தேவையில்லை என்று சொன்ன



2000 நவம்பர் 10] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

காரணத்தினாலே, இந்த ஆண்டு 60 கோடி ரூபாய் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போல, மின் விநியோகத்தில் பல மேம்பாடுகளைச் செய்ததன் பயனாக மின் தடைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக, வருவாய், மாதத்திற்கு 10 கோடி ரூபாய்க்கு அதிகரித்து இருக்கிறது. இதற்கு முன்னால் எப்போது மின்சாரம் வரும், எப்போது மின்வெட்டு ஏற்படும் என்று தெரியாத ஒரு சூழ்நிலை இருந்தது. அதற்குப் பல காரணங்கள். ஒன்று நம்முடைய இலாகா மட்டுமல்ல. பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திரா மாநிலம், கர்நாடகா மாநிலம் இவர்கள் எல்லாம் மின்சாரத்தை உறிஞ்சிவிடுவார்கள். அப்படி உறிஞ்சுகின்ற நேரத்திலே, திடீரென்று மின் தடை ஏற்படும். அதையெல்லாம் சரி செய்வதற்காக நானும் மின் வாரியத் தலைவரும், நம்முடைய முன்னாள் மத்திய மின்துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களும், தென்னகத்திலே இருக்கக்கூடிய எல்லா மின்வாரியத் தலைவர்களும் பெங்களூரில் கூடிப் பேசி, எந்தக் காரணத்தைக் கொண்டும், நம்முடைய Grid Maintenance சரியாக இருக்க வேண்டும். 50 Cycles-ஆவது வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் காரணமாக, இப்போது அப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படாத காரணத்தினாலே, இப்போது அதிலே ஓரளவிற்கு 10 கோடி ரூபாய் மாதத்திற்கு வருவாய் அதிகரித்து இருக்கிறது. ஏனென்றால், தொடர்ந்து மின்சாரம் இருந்தால்தான் தொழிற்சாலைகள் செயல்படும். அவை செயல்பட்டால்தான் மின்சார வாரியத்திற்கு வருவாய் வரும். அதன் மூலமும், மாதத்திற்கு 10 கோடி ரூபாய் உபரியாக வருமானம் வந்து கொண்டிருக்கிறது. இவை எல்லாவற்றையும்விட, கடந்த காலத்திலே, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்களே, நிலக்கரியினுடைய விலை குறைவு, அதைக் கொண்டு வந்து மின் நிலையங்களிலே சேர்ப்பதிலே இருக்கிற செலவு இருக்கிறதே அதற்காகும் செலவு அதைவிட இரண்டு மடங்கு. அதையெல்லாம் குறைக்க வேண்டுமென்று திட்டமிட்டு, அதை டெண்டர் மூலமாகப் பெற நாம் நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, ஆண்டு ஒன்றிற்கு 125 கோடி ரூபாய் நிலக்கரி வாங்கி, கொண்டு செல்வதிலே மிச்சம் செய்திருக்கின்றோம்.

அதைப்போல, வட்டி விகிதத்திலே, வங்கிகளோடு பேசி, 5 கோடி ரூபாய் குறைத்து இருக்கின்றோம். இப்படி பல நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, ஆண்டு ஒன்றிற்கு கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் இந்த வாரியம் தன்னுடைய செலவுகளிலே மிச்சப்படுத்தி இருக்கிறது என்ற

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 நவம்பர் 10

அந்த மகிழ்ச்சியான செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது மின்சார வாரியம் மூன்று பணிகளைச் செய்கிறது. ஒன்று மின் உற்பத்தி, இன்னொன்று மின் செலுத்துகை, இன்னொன்று மின் விநியோகம். இந்த மின் உற்பத்தியைப் பொறுத்தவரையிலே எந்த அளவிற்கு நாம் வெற்றி பெற்றிருக்கின்றோம் என்று சொன்னால், நீர் மின்சாரம், அனல் மின்சாரம், அணு மின்சாரம், இன்னும் நம்முடைய சுப்பராயன் அவர்கள் கேட்டார்களே, எதிலேயிருந்து எல்லாம் மின்சாரம் தயாரிக்கிறீர்கள் என்று, தன்பயன் மின்னாக்கி (Captive Power) என்று ஒன்று கொடுத்தோம். யாராவது தொழில் அதிபர்கள் இருந்தால், அவர்களுக்கு வசதி இருந்தால் அவர்களே மின்சாரத்தை உற்பத்தி செய்து, தங்களுக்குத் தேவையான மின்சாரம் போக, மின்சார வாரியத்திற்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2.25-க்கு அவர்கள் மின்சாரத்தைக் கொடுப்பார்களேயானால், அதையும் ஊக்கப்படுத்தினோம். அந்த ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். காற்றாலை மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்ய நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஏன் அதை ஊக்குவிக்கவில்லை என்று திரு. மு. அப்பாவு போன்றவர்கள் எல்லாம் கேட்டார்கள். நாங்கள் ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

இரண்டு மாதங்களுக்கு முன்னாலேகூட, அவர்களுடைய பகுதியிலே, நம்முடைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் வருகை தந்து ஒரு பெரிய நிறுவனத்தின் மூலம் கிட்டத்தட்ட 25 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இன்னும் சொல்லப்போனால், கன்னியாகுமரி, தூத்துக்குடி, இந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய காற்றைவிட அதைப் போலவே நம்முடைய கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய காற்றைவிட, தேனி மாவட்டத்திலே வீசுகின்ற காற்றின் அளவு அதிகமாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு 15 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான அனுமதியைக் கேட்டார்கள். அதையும் தந்து இருக்கின்றோம். அதற்கான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

சூரிய ஒளி மூலமாகவும் உற்பத்தி செய்கின்றோம். ஆனால் அதிக அளவிலே செய்ய முடியவில்லை. காரணம் முதலீடு அதிகமாகத் தேவைப்படுகிறது. அதைப்போலவே தாவரம் மற்றும் விவசாயக் கழிவுகள், வேர்கடலைப் பொட்டு போன்ற, அதைப்போலவே தவிடு போன்ற பொருட்களிலேயிருந்தும்கூட, மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்று



2000 நவம்பர் 10] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சொல்லி, Bio-Mass மூலமும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். நகராட்சி குப்பைகள் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்து இருக்கின்றோம். அதைப்போல L.N.G. மூலமாகவும் உற்பத்தி செய்கின்றோம். அனல் மின் திட்டம் மூலம் உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். இதையெல்லாம் இல்லாமல் மத்திய அரசினுடைய தொகுப்பிலேயிருந்து ஏறக்குறைய 1893 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆக, இப்படி மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையிலே இப்போது எந்தவிதமான குறைபாடும் இல்லை என்பதை இந்த அவைக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நாட்டிற்கும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள்ளாக நமக்கு மேலும் 979 மெகாவாட் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. பிள்ளைபெருமாள்நல்லூர், கோயில்களப்பால், எண்ணூர் போன்ற இடங்களிலிருந்து, நம்முடைய தேவை கிட்டத்தட்ட 6,300 மெகாவாட் ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அதைவிட இன்னும் ஒரு 400 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கூடுதலாக இந்த ஆண்டு கிடைக்கும். அப்படி கிடைக்குமானால், அதை மற்ற மாநிலங்களுக்கு விற்பதைவிட நாங்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறோம் என்றால்—அதை விற்கலாம்—விற்றால் மின்சார வாரியத்திற்கு இலாபம்கூட கிடைக்கும்—ஆனால், நாம் சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுகாலமாக கோடைக்காலம் என்று சொன்னால், விவசாயிகளுக்கு 4 மணி நேரம்தான் மின்சாரத்தை வழங்குகிறோம். ஆனால், மீதி நேரங்களிலே 6 மணி நேரம் பகலிலே, 8 மணி நேரம் இரவிலே வழங்குகிறோம். கோடைக்காலத்திலே மட்டும் 4 மணி நேரம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு 2001-க்குப் பிறகு, கோடைக் காலத்திலே, விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் வழங்குவோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் என்று சொன்னால், விவசாயிகளுடைய வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்குவதற்காக இந்த நடவடிக்கையை எடுப்பது என்று முடிவு செய்தோம். அதிகாரிகள்கூட சொன்னார்கள். வருமானம் இல்லாத விவசாய பம்பு செட்டுக்கு நீங்கள் இதைப் பயன்படுத்துகிறீர்களே, 400 மெகாவாட் மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்கு விற்றால் ஆண்டுக்கு நானூறு கோடி ரூபாய் நமக்கு வருமே என்று சொன்னார்கள். விவசாயிகளுக்குக் கொடுப்பது என்பது இலவசம் என்று நாம் நினைத்தால்கூட விவசாயிகள் அதை வீணாக்கவில்லை. கிணற்றிலே இருக்கக்கூடிய நீரைக் கொண்டு வந்து உணவு உற்பத்தி செய்து நாட்டுக்குத் தேவையான உணவுப் பொருளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்கின்ற காரணத்தினாலேதான்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 நவம்பர் 10

இப்போது தன்னிறைவு பெற்ற மாநிலமாக நாம் விவசாயத்திலே இருக்கிறோம்.

பிற்பகல் 12-45

வேளாண்மைத் துறை அமைச்சர் எடுத்த நடவடிக்கையின் காரணமாக ஒருபக்கம் உணவு உற்பத்தி பெருகுகிறது என்று சொன்னாலும்கூட ஆற்றுப் பாசனத்தின் மூலமாக ஓரளவிற்கு நாம் பயன்பெறுகிறோம் என்று சொன்னாலும்கூட, 16 இலட்சம் பம்ப் செட்டுகள் மூலமாக இப்போது உற்பத்தி செய்கின்ற அந்த விவசாயிகள் ஏராளமான நெல்லை உற்பத்தி செய்கின்ற காரணத்தினாலேதான் தமிழக அரசிற்கு உணவுப் பிரச்சினை இல்லாமல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதை நஷ்டம் என்று பார்க்காமல் விவசாயிகளுடைய நன்மைக்காகச் செய்ய வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சென்ற கோடையைவிட இந்தக் கோடையில் நமக்குக் கூடுதலாக மின்சாரம் கிடைக்கின்ற காரணத்தினாலே நாம் ஒரு பக்கத்திலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் 6 மணி நேரம் கொடுக்கிறோம் என்று சொன்னாலும், தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறோம். யார் விண்ணப்பம் போட்டாலும் அவர்களுக்கு முதல் அனுமதி என்று சொல்லி தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இன்னும் 3 ஆண்டுகளிலே இந்த மின்சார உற்பத்தி தவிர மத்திய அரசும் நமக்கு 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து தருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்தால், 2002, 2003, 2004 வரையிலே நமக்கு மின்சாரப் பற்றாக்குறையே இருக்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்கூட எடுத்துச்சொன்னார்கள். அனல் மின் நிலையங்களை மிகச்சிறந்த முறையிலே பராமரிக்கின்ற காரணத்தினாலே நாம் கேடயம், ரொக்கப் பரிசு, வெள்ளிப் பதக்கம் எல்லாம் பெற்றிருக்கிறோம். தூத்துக்குடி, எண்ணூர், மேட்டூர் ஆகிய இடங்களிலே நாம் மிகச் சிறந்த முறையிலே மின் நிலையங்களை பராமரிக்கின்ற காரணத்தினாலும், அங்கே பயன்படுத்துகின்ற எண்ணெயை சிக்கனமாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினாலும், இந்திய அளவிலே மத்திய அரசாங்கம் நம்மைப் பாராட்டி நமக்கு 39 இலட்சம் ரூபாய் பரிசு



2000 நவம்பர் 10] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

வழங்கி வெள்ளிப் பதக்கம் கொடுத்திருக்கிறது. நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன், இப்போது மின்சார வாரியத் தலைவர் அவர்களும், Member (Generation) அவர்களும் எடுக்கின்ற நடவடிக்கையின் காரணமாக 80% P.L.F. (Plant Load Factor) என்றிருப்பதை 85 சதவிகிதமாக இந்த ஆண்டு உயர்த்தி, அடுத்த ஆண்டு ரொக்கப் பரிசும், தங்கப் பதக்கமும் பெற இருக்கிறோம் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மின்சாரத்தைக் கொண்டு போவதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதிலே மிக முக்கியமாக Low Voltage இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டிலே 1990-க்கு முன் இருந்த 230/110 K.V. Sub-Stations 900 தான் இருந்தது. இந்த 5 ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து ஆண்டுக்கு 60 துணை மின் நிலையங்கள் கட்டுவது என்று நாம் எடுத்த நடவடிக்கையின் காரணமாக 250 துணை மின் நிலையங்கள் செயலுக்கு வந்து விட்டன. இயங்கிக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் போன்றவர்களுக்கு, திரு. ஜி. பழனிசாமி போன்றவர்களுக்கு எல்லாம் தெரியும். யார், யார் உறுப்பினர்கள் கேட்டார்களோ அவர்களுடைய தொகுதிகளிலே எல்லாம் புதிய sub-stations கொடுத்திருக்கின்றோம். இன்னொரு 50 sub-stations-களில் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது பிப்ரவரி மாதத்திற்குள்ளாக முடிந்து விடும். ஆக, 1,200 sub-stations-களையும் நாம் நிறுவி, அவை செயல்பட ஆரம்பித்தால் நிச்சயமாகச் சொல்கிறேன் Low voltage என்ற பிரச்சினை வராது. இதுபற்றி திருவாளர்கள் குத்தாலம் கல்யாணம், டி.மணி போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள், நம்முடைய உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் அருமையான ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் இதையெல்லாம் சொல்கிறீர்கள், மகிழ்ச்சிதான். ஆனால், ஒரு தரமான மின்சாரம் வேண்டாமா என்று கேட்டார்கள். இந்த நாட்டிலே தரமான மின்சாரம் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். 2001 இறுதிக்குள்ளாக தரமான மின்சாரத்தை தமிழ்நாட்டிலே கொடுப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரத்தையே தரமான மின்சாரம் வேண்டும் என்று சொல்கின்ற திரு. வி.கே. லட்சுமணன் போன்றவர்கள் தமிழ்நாட்டில் தரமான ஆட்சியும் வேண்டும் என்று சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 நவம்பர் 10

பிற்பகல் 12-50

இந்த மின் விநியோகத்திலே இழப்பு ஏன் ஏற்படுகிறது என்ற ஒரு நல்ல கேள்வியை மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். இந்தியாவிலேயே மின் இழப்பு என்பது 21% மற்ற மாநிலங்களிலே. இன்னும் சில மாநிலங்களிலே 26,30% என்று இருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத்திலே 16.75% நமக்கு அடுத்தபடியாக பஞ்சாப் மாநிலத்திலே 17.8% ஆனால் பஞ்சாப் மாநிலத்திலே 17.8% என்று இருந்தாலும்கூட அவர்களுடைய மின் அழுத்தத் தொடர் நீளம் எவ்வளவு என்று பார்த்தால் 2,57,114 கிலோமீட்டர். மின் கம்பிகளை இழுத்துக் கொண்டு போகிறோமே அதனுடைய நீளம் பஞ்சாபில் 2,57,114 கிலோ மீட்டர். ஆனால் தமிழ்நாட்டில் அதைவிட இரண்டு மடங்கு 5,52,069 கிலோ மீட்டர். இவ்வளவு நீளம் உள்ள மின் பாதைகள் இருந்தும்கூட மின் இழப்பைப் பொறுத்தவரையிலே இந்தியாவிலேயே நாம்தான் குறைவு என்று சொல்லி இப்போது மத்திய அரசாங்கம் நமக்குப் பரிசுகள் வழங்கியிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னமும் இந்தத் துணை மின் நிலையங்களையெல்லாம் சீர் செய்து, செப்பனிட்டு—நல்ல மின்சாரம் கிடைப்பதற்கு—மாண்புமிகு உறுபபினர் திரு. வி.கே. லட்சுமணன் சொன்னதைப்போல தரமான மின்சாரம் கிடைப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Internet மூலமாக இப்போது பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். சென்னை நகரத்திலே நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதற்கு முன்னாலே எங்கேயாவது திடீரென்று மின் தடை ஏற்பட்டால் telephone செய்வார்கள். அந்த Telephone Operators யாரும் கோபித்துக்கொள்ளமாட்டார்கள் என்பதற்காக Telephone-ஐ எடுத்து கீழே வைத்துவிடுவார்கள். தொடர்ந்து telephone-ல் engaged sound வந்து கொண்டிருக்கும். யாரும் அதை எடுத்து குறைகளைக் கேட்க மாட்டார்கள். இதைப் போக்குவதற்காக நானே ஒரு மின்சார இணைப்பை என்னுடைய வீட்டிலே வைத்து ஒரு ஆளை நியமித்து, யார் வேண்டுமானாலும் மின் தடை ஏற்பட்டால் என்னுடைய வீட்டிற்கு telephone செய்யுங்கள் என்று சொல்லி இரவு எந்த நேரம் telephone வந்தாலும் அதை நிவர்த்தி



2000 நவம்பர் 10] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறேன் இன்று வரையிலே. ஆனால் மின் வாரியத் தலைவர் அதற்கு கோபித்துக்கொண்டார்கள். இது ஓர் அமைச்சர் செய்ய வேண்டிய வேலையா? நீங்கள் இதைச் செய்யக்கூடாது என்று கூடச் சொன்னார். அதற்குப் பிறகு அவர் நடவடிக்கை எடுத்தார். நேராக Telephone Exchange-க்கு திடீரென்று போய் பார்த்தால் Telephone Receiver எல்லாம் கீழே எடுத்து வைக்கப்பட்டு இருந்தன; உடனே அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தார். எச்சரிக்கை செய்தார். இனிமேல் இப்படி வருகின்ற Telephone-ஐ attend செய்யாமல் நீங்கள் கதை பேசிக்கொண்டிருந்தால் உங்களை வேலையிலிருந்து நீக்கி விடுவேன் என்று சொல்லிவிட்டார். அதற்கு பிறகு இப்போது மின்சார வாரியத்தில் அந்தக் குறைபாடுகள் குறைந்து இருக்கின்றன.

ஆனாலும்கூட Telephone மூலம் செய்வதைவிட Internet-ஐ பயன்படுத்தலாம் என்று முடிவு செய்துள்ளோம். ஏனென்றால் சென்னை நகரத்திலே ஏராளமாக இப்போது Computer-ஐ பயன்படுத்துகிறார்கள்.Internet-ஐ பயன்படுத்துகிறார்கள்—Internet-லே ஒரு புகார் அனுப்பினால் புகார் செய்யப்பட்ட எண், அந்த விலாசம், அந்த account number இவற்றையெல்லாம் Feed செய்த உடனே 20 நிமிடத்திலே அந்தப் புகார் எடுத்துக்கொள்ளப்பட்டு நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைவிட இப்போது இந்தியாவிலேயே முதன் முதலில் சென்னையிலே ஒரு புதிய திட்டத்தை நாம் அறிவித்திருக்கிறோம். அந்தத் திட்டத்தை ஆந்திர முதலமைச்சர் பார்த்துவிட்டு, அவர் அமெரிக்கா சென்று திரும்பிய நேரத்திலே கேள்விப்பட்டுவிட்டு, என்னிடத்திலே நீங்கள் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலே உள்ள திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியிருக்கிறீர்களாமே, என்ன என்று கேட்டார். நான் சொன்னேன். 'SCADA' என்று அதற்குப் பெயர். Supervisory Control and Data Acquisition System. இதை A.D.B. (Asian Development Bank) வங்கி மூலமாக 19 கோடி ரூபாயைப் பெற்று முதலிலே சென்னையிலே தொடங்கினோம். அது வெற்றிகரமாகிவிட்டது. சென்னையிலே 95 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். மயிலாப்பூரில் இருக்கக்கூடிய துணை மின் நிலையத்தில் surplus power இருக்கும். ஆனால் பெரம்பூரில் இருக்கக்கூடிய sub-station-ல் குறைவான power இருக்கும். சென்னையிலுள்ள 95 sub-stations-களையும் ஒன்றாக இணைத்து, இந்தக் கருவி என்ன செய்கிறது என்றால் எங்கே excess power இருக்கிறதோ அங்கேயிருந்து அந்த துணை மின் நிலையத்திலிருந்து மாற்றி எங்கே low

power இருக்கிறதோ அதற்கு மாற்றி சீராக இந்த மின்சாரத்தை கண்காணித்துக் கொண்டிருக்கிறது. யாருடைய தயவும் இல்லாமல் ஒரே ஆள் ஒரு சின்ன அறையிலே உட்கார்ந்து கொண்டு, கணினியை வைத்துக்கொண்டு இதை இப்போது Control செய்து வருகிறார். இதை நாங்கள் பார்த்தவுடனே இப்படிப்பட்ட ஒரு அருமையான திட்டத்தின் மூலம் மின் இழப்பு ஏற்படுவது இல்லை; அதற்கான அவசியமும் இல்லை. இதற்கு முன்னாலே எங்கேயாவது ஒரு இடத்திலே அதிகமான மின்சாரம் ஒரு sub-station-லே இருந்தால், விளக்குகள் எரிந்து, உடைந்துவிடும். சில நேரங்களிலே நல்ல டிவி.கூட பழுதாகிவிடும். இப்படியெல்லாம் நம்முடைய பொதுமக்களுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டன. அதைத் தவிர்க்க வேண்டுமென்று மின்சார வாரியத் தலைவரும், Member (Distribution)-ம் அங்கே இருக்கக்கூடிய பொறியாளர்களும் எடுத்த நடவடிக்கையின் காரணமாக சென்னை நகரத்திலே இப்போது சீர்செய்யப்பட்டு விட்டது.

பிற்பகல் 12-55

சென்னையிலே மட்டும் இது சீரானால் போதுமா, தமிழ்நாடு முழுவதும் இதைச் செய்ய வேண்டாமா என்று எண்ணி, இப்போது தமிழ்நாடு முழுவதற்கும் 1200 sub-stations-களுக்கும் கணிணி மூலமாக இந்த இணைப்புத் தந்து, எங்கே அதிகமாக மின்சாரம் இருக்கிறதோ, அதை எங்கே குறைவாக மின்சாரம் இருக்கிறதோ, அந்தப் பகுதிக்கு மாற்றிச் சீரான மின்சாரம் தமிழ்நாடு முழுவதும் கொடுப்பது என்று முடிவு செய்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக 100 கோடி ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். 100 கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை, திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் சொன்னதைப்போல தரமான மின்சாரம் கொடுப்போம் என்று சொல்லி இந்தத் திட்டத்தையும் அமல்படுத்தினோம். அடுத்த நவம்பர் மாதத்திற்குள்ளாக தமிழ்நாடு முழுவதும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு திட்டம். அதாவது, 24 மணி நேரத்திலே வீடுகளுக்கும் கடைகளுக்கும் மின்சாரம் வழங்குவது. பல உறுப்பினர்கள் பாராட்டு தெரிவித்தார்கள். உண்மையிலேயே நான் மகிழ்ச்சியோடு சொல்கிறேன்; என்னுடைய வாழ்க்கையிலே இந்த அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப்பிறகு ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றால் அது 24 மணி நேரத்திலே மின்சாரம் வழங்கக்கூடிய அந்தத் திட்டத்திலே பெற்றிருக்கின்ற வெற்றிதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இதில் எவ்வளவு குறைபாடுகள் இருந்தன என்பதை அந்த இலாகாவிலேயே



பணியாற்றியவன் என்ற காரணத்தினாலே எனக்குத் தெரியும். ஒரு வீட்டிற்கு மின் இணைப்புத் தேவை என்று இதற்கு முன்னாலே கேட்டால், இந்த ஆட்சியிலேயேகூடச் சொல்கிறேன்; ஏதோ நாங்கள் வந்து எல்லோரும் திருந்திவிட்டார்கள் என்று சொல்லவில்லை. கடந்த கால ஆட்சியிலேயும் சில தவறுகள் நடந்திருக்கலாம்.

**திரு. ச. அழகிரி:** தலைவர் அவர்களே,...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி கேட்டவர் ஒருவர், பேசுகிறவர் இன்னொருவர், அது ஏன்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது, 24 மணி நேரத்திற்குள் மின் இணைப்புக் கொடுப்பதை, அவர்கள் ஒரு சாதனையாக இங்கே சொன்னார்கள். பாராட்டுகிறோம். ஆனால், நீங்கள் meter பொருத்துவதற்கு, உடனே செய்வதற்கென 500 ரூபாய்; tariff-ஐ மாற்றுவதற்கு என்று 500 ரூபாய் என்று வாங்குகிறீர்கள். இது நீங்கள், அரசாங்கம் நிச்சயமாகத் தொடர்ந்து செய்ய வேண்டிய ஒரு கடமை. ஆனால், அதற்காக ஒரு தனிக் கட்டணத்தை நீங்கள் வசூல் செய்துவிட்டு செய்கிறீர்கள் என்கிற வருத்தம் தமிழ்நாட்டு மக்களுக்கு இருக்கிறது. ஆகவே, அவற்றையெல்லாம் நீங்கள் வாங்காமல் உடனடியாகச் செய்தால் நாங்களும் அதைப் பாராட்டுவோம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குழம்பியிருக்கிறார் என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்திலே அப்படி யாரையும் வற்புறுத்துவதில்லை. (குறுக்கீடு) நான் முழுவதுமாகச் சொன்னதற்குப் பிறகு நீங்கள் கேட்கலாம். இதற்கு முன்னாலே ஓர் இணைப்பு வேண்டுமென்று கேட்டால் குறைந்தது 2000 ரூபாய் செலவு செய்ய வேண்டும். ஒரு Flat-ஆக இருந்தால் Multi-storeyed building-ல் Flat ஆக இருந்தால், 5000 ரூபாய் 10,000 ரூபாய் என்று செலவு செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தது. அதுமட்டுமல்ல, அந்த மின்சார வாரிய ஊழியர்கள் என்ன சொல்வார்கள் என்றால் meter இல்லை என்பார்கள். உடனேபோய் meter வாங்கிக் கொண்டு வர வேண்டும். Meter-ஐ வாங்கிக் கொண்டு கொடுத்தால், Cable இல்லையென்று சொல்வார்கள். அதற்கு என்ன செய்யவேண்டுமென்று கேட்டால், 1000 ரூபாய் கொடுங்கள், நான் போய் Cable வாங்கி வருகிறேன் என்று சொல்வார்கள். அந்த Cable-ஐக் கடையிலே வாங்கமாட்டார்கள்.

மின்சார வாரியத்திலே இருந்துதான் கொண்டுபோய் கொடுப்பார்கள். இப்படி நடந்து கொண்டிருந்தது. இதையெல்லாம் நான் என்றைக்காவது ஒரு நாள் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று நினைத்தேன்.

கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சரோடு சிங்கப்பூருக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த நேரத்திலே முதலமைச்சர் பல தொழிலதிபர்களோடு பேசி, தமிழ்நாட்டிற்குத் தொழில் தொடங்க வாருங்கள் என்று அழைப்பு விடுத்தார்கள். அந்த நேரத்திலே இந்த விவரங்களையும் அவர்கள் கேட்டறிந்தார்கள். அவர்களிடம், உங்களுடைய நாட்டிலே எதையெதை, எப்படிப் பெறுகிறீர்கள் என்று கேட்டபோது ஒரு தொழிலதிபர், சொன்னார் காலையிலே telephone வேண்டுமென்று கேட்டால் மாலைக்குள்ளாக எங்களுடைய நாட்டிலே telephone இணைப்புக் கிடைத்துவிடும்; வீடுகளுக்கு காலையிலே மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால், 24 மணி நேரத்திலே மின் இணைப்புக் கிடைத்துவிடும்' என்று சொன்னார். உண்மையாகவா என்று இன்னும் சிலபேரைக் கேட்டுத் தெரிந்துக்கொண்டார்கள், முதலமைச்சர் அவர்கள். அப்போது, இரவு நேரத்திலே என்னோடு பேசும்போது முதல்வர் அவர்கள் 'இப்படியொரு நிலைமை தமிழ்நாட்டிலே வராதா? எப்போதைக்கு வரும்?' என்று கேட்டார்கள். அதுவும் என் மனதிலே பதிந்தது.

நான் வந்தவுடனே மின் வாரியத் தலைவரிடத்திலே கலந்து பேசினேன் இங்கேயும் இதையெல்லாம் செய்ய முடியாதா என்று கேட்டேன். செய்ய முடியும். ஆனால் நமக்கு மூலதனம் தேவை என்றார். அதை அமல்படுத்துவதற்கு 24 மணி நேரத்திலே விண்ணப்பம் கொடுத்தவுடனே செய்யவில்லை என்றால் உடனே பத்திரிகைகளில் எழுதுவார்கள். இத் திட்டத்தை அமல்படுத்த தேவையான meter-கள் இருக்க வேண்டும். Conductors இருக்க வேண்டும். Cable இருக்க வேண்டும். எங்கேயாவது மின்சாரம் பற்றாக்குறை இருந்தால் அதை மாற்றுவதற்கு transformers இருக்க வேண்டும். இவ்வளவும் இருந்தால் செய்துவிடலாம் என்று சொன்னார். இவற்றை எல்லாம் செய்வதற்கு எவ்வளவு ரூபாய் தேவைப்படும் என்றேன். கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் இருந்தால் அதைச் செய்துவிடலாம் என்று சொன்னார். எங்கேயாவது கடன் வாங்கியாவது அதைச் செய்வோமே என்றேன். எனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு இப்போது முதன்முதலில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிய பகுதி கோவை மாவட்டம். அங்கே இருக்கக்கூடிய ஒரு தலைமைப் பொறியாளர் போல நேர்மையாக நாணயமாக இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பதிலே ஆர்வம் காட்டி அங்கே இருந்த சில இடையூறுகளை மீறி



அவர்கள் அமல்படுத்தினார்கள். சில தொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். பொறியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். அதைப்பற்றி எல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு அவர் முதன்முதலிலே தொடங்கினார். அதைப் பார்த்தவுடனே மதுரை தலைமைப் பொறியாளர் நானும் தொடங்குகின்றேன் என்றார். பிறகு திருச்சி, இப்படி தமிழ்நாடு முழுவதும் இப்போது இந்த 24 மணி நேரத்திலே வீடுகளுக்கு மின்சாரம் வழங்கக்கூடிய திட்டம் மிகச் சிறந்த முறையிலே அமல்படுத்தப்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

பிற்பகல் 1-00

இப்போது 60,228 மின் இணைப்புகள் 4 மாத காலத்திலே கொடுத்திருக்கிறோம். குறைந்தது அடுத்த ஆண்டு முதற்கொண்டு 2 இலட்சம் வீடுகளுக்கு இந்தத் திட்டத்தின் மூலமாக மின்இணைப்புகள் கிடைக்கும் என்று நான் நம்புகின்றேன். எனவே இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்றதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எப்படி வீடுகளுக்கு மின்சாரம் 24 மணி நேரத்திலே கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோமோ அதைப்போல தொழிற்சாலைகளுக்கும் கொடுத்தால் என்ன என்று விவாதித்தோம். அதற்கு மின் வாரியத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நாம் வீடுகளுக்கு மின்சாரம் கொடுப்பது என்பது வேறு, தொழிற்சாலைகளுக்குக் கொடுப்பது என்பது வேறு. தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கின்ற நேரத்திலே transformer-லே load இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். பிறகு அந்த sub-station-லே load இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இதையெல்லாம் பார்க்க வேண்டும் என்று சொன்னார். அதற்காக transformers எவ்வளவு தேவைப்படும் என்கிற விவரங்களை எல்லாம் கேட்டு, தேவையான transformer-களை வாங்குங்கள் என்று சொல்லி இப்போது 5 H.P.-க்கு—5 Horse Power-க்குக் கீழே இருந்தால் ஒரே நாளிலே தொழிற்சாலைகளுக்கு மின்சாரத்தைக் கொடுத்து விடுகிறோம். 5 Horse Power-வரை நாம் தொழிற்சாலைக்கு கொடுக்க வேண்டும் என்றால் ஒரே நாளிலே கொடுத்துவிடுகிறோம். 150 H.P. வரையிலே வேண்டும் என்றால் அதிகபட்சம் 15 நாட்கள் ஆகும். இதற்கு முன்பு 6 மாதம், ஒரு வருடமாகும். அதை 15 நாட்களிலே கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதைப்போல 500 K.V.A.-க்கு

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 நவம்பர் 10

மேல் யாருக்காவது தொழில் அதிபர்களுக்கு மின்சாரம் தேவை என்று விண்ணப்பித்தால் ஒரு மாத காலத்திற்குள்ளாக மின் இணைப்பைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இந்த அறிவிப்பு வந்ததற்குப் பிறகு ஏராளமான தொழில் அதிபர்கள் இப்போது அந்தத் திட்டத்தை வரவேற்று, அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகின்றேன்.

இங்கே 'ஒரு விளக்கு' திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்களும், திரு. விஸ்வநாதன் அவர்களும் தெரிவித்தார்கள். அதைப்போலவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். குடிசைகளுக்கு ஒரு இலட்சம் விளக்குகள் கொடுக்கப் போவதாகச் சொன்னீர்களே, 4 ஆண்டுகள் முடிந்துவிட்டதே ஏன் இன்னும் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். அவர்களுக்குச் சரியான தகவல் கொடுக்கவில்லையோ என்று நான் கருதுகின்றேன். இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு இந்த 4½ ஆண்டு காலத்திலே 2 இலட்சத்து 4 ஆயிரத்து 329 குடிசைகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இணைப்புகள் வழங்குகின்ற காரணத்தினாலே ஆண்டு ஒன்றுக்கு மின்சார இலாகாவிற்கு 40 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, தெரு விளக்குகளைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். தெரு விளக்குகளைப் பொறுத்தவரையிலே இந்த 4½ ஆண்டு காலத்தில் 2 இலட்சத்து 72 ஆயிரத்து 12 தெரு விளக்குகள் மின்சார இலாகாவால் பொருத்தப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலே தெரு விளக்குகள் பொருத்துகின்ற நேரத்திலே யாரோ இது என்னுடைய நிலம் என்று சொல்லி தகராறு செய்து 3 கம்பங்களை உடைத்து விட்டதாகச் சொன்னார்கள். உடனே இலாகா அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு கேட்டேன். அந்த தனிப்பட்டவருக்கு அந்த நிலம் சொந்தமில்லை. எப்படியாவது நிலத்தை அபகரிக்க வேண்டும் என்று நாட்டிலே உள்ள சில பேரில் அவரும் ஒருவராக இருக்கிறார். எனவே, அவர்மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டு, உடைந்துபோன 3 மின் கம்பங்களையும் மாற்றி, உடனடியாக இணைப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர், இந்த மாத இறுதிக்குள்ளாக அந்த இணைப்பைக் கொடுக்காவிட்டால் எனக்கு ஒரு கடிதமாவது எழுத வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



2000 நவம்பர் 10] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இவ்வளவு பணிகளைச் செய்து கொண்டிருக்கிற மின்சார இலாகாவில் அதனுடைய தொழிலாளர்களுடைய நலனையும் நாங்கள் மறந்துவிடவில்லை. இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, 1-12-1998 முதல் அதனுடைய ஊதிய விகிதங்களை எல்லாம் மாற்றியமைத்திருக்கிறோம். நான் பெருமையோடு சொல்கிறேன். தமிழ்நாட்டிலே வேறு எந்த இலாகாவிலும் பெறாத ஊதிய விகிதம் மின்சார வாரிய ஊழியர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி பெற்று கொடுத்திருக்கிறோம்.

பிற்பகல் 1-05

மின்சார வாரியத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள், இரவு பகலாகப் பணியாற்றுகிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துகிறோம். எனவே, இந்த ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு கொடுக்கின்ற முதல் ஊதிய உயர்வைக் கணிசமாகக் கொடுப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதன்பேரில், 40 சதவீதம் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுத்திருக்கின்றோம். மின்சார இலாகா நஷ்டத்திலே இயங்குகிறது. ஆகவே போனஸ் வழங்க வேண்டுமா என்றுகூட அதிகாரிகளில் சிலர் கேட்டார்கள். நானும், மின்வாரியத் தலைவரும் கலந்துபேசி, இழப்பு என்பது கோடிக்கணக்கிலே, ஆனாலும் நம்மிடத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுடைய வயிற்றிலே நாம் அடிக்கக் கூடாது, அவர்களுக்கு அதிகபட்சமான போனஸ எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுப்போம் என்று சொன்னேன். கடந்த ஆண்டு 20 சதவீதம் போனஸ் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டும் 20 சதவீதம் போனஸ் வழங்கப்பட்டது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் சொன்னார்கள். அதிலேயும் நம்முடைய உறுப்பினர் ஒருவர் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு தொழிலாளர்களை நிரந்தரமே செய்யவில்லை என்று சொன்னார். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காலித் கமிஷன் அறிக்கையின் படி 1998-99 ஆம் ஆண்டில் மட்டும் 13 ஆயிரத்து 54 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, மேட்டூர், தூத்துக்குடி, வடசென்னை, எண்ணூர் போன்ற அனல் மின் நிலையங்களிலே வேலை செய்துகொண்டிருந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள், எங்களையும் நிரந்தரம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 நவம்பர் 10

செய்ய வேண்டும் என்று கேட்டபோது, நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், தி.மு.க. தொழிற் சங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் மற்றும் த.மா.கா. கட்சித் தோழர்கள் எல்லாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒப்பந்தத் தொழிலாளர்கள் 7,855 பேர் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்த்ததற்குப் பிறகு நீர் மின் நிலையங்களிலே-Hydro-பணியாற்றக்கூடிய 850 பேர் நாங்களும் மின்சார உற்பத்திதானே செய்கிறோம். அனல் மின்நிலையங்களிலே பணியாற்றக்கூடிய அவர்களை நிரந்தரம் செய்தீர்களே, எங்களையும் நிரந்தரம் செய்யக்கூடாதா என்று எல்லா தொழிற்சங்கங்களும் கேட்டபோது, மின்சார வாரிய அதிகாரிகளோடு Chairman-னுடன் கலந்துபேசி, 850 பேர் நீர் மின்நிலையங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றுகிறவர்களும் 1-12-2000 முதல் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, இந்த அளவிற்கு தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டுள்ள இந்த அரசு மறுபடியும், 1-12-2000 முதல் புதிய ஊதிய விகிதத்தைத் திருத்தியமைக்க வேண்டும். அது ஒரு ஒப்பந்தம். தொழிலாளர்களுக்கும் மின் வாரியத்திற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம். நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை சம்பளத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பது. நாம் 1998-லேதான் கொடுத்தோம் என்றாலும்கூட, அது ஏற்கெனவே 1996-முதல் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தோம். இப்போது மறுபடியும் 1-12-2000-லே கொடுக்க வேண்டும். அதற்காக, பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, தொழிற்சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்த Accounts Member, Member (Distribution), Chief Engineer (Personnel) ஆகிய மூன்று பேரைக் கொண்ட ஒரு குழுவை மின் வாரியத் தலைவர் நியமித்திருக்கிறார். அந்த மூன்று பேரும், தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் சம்மேளனம், தமிழ்நாடு மின்சார வாரிய கணக்காயர் மற்றும் களப் பணியாளர் சங்கம், தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், தமிழ்நாடு மின் தொழிலாளர்கள் மத்திய அமைப்பு, தமிழ்நாடு மின் வாரிய அண்ணா பொதுத் தொழிலாளர்கள் சங்கம், தமிழ்நாடு மின் வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம், தமிழ்நாடு தேசிய மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம், தமிழ்நாடு மின் வாரிய பொறியாளர்கள் சங்கம், தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் காங்கிரஸ், தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் ஐக்கிய சங்கம், தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர்கள் சங்கம், தமிழ்நாடு மின்சார வாரிய நிதி மற்றும் கணக்கு அலுவலர் சங்கம்; இவ்வளவுதான், அங்கே இருக்கிற சங்கங்களே, இந்தச் சங்கங்களிலே எது



2000 நவம்பர் 10] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பெரியது எது சிறியது என்று பார்க்காமல், யாருக்கு எவ்வளவு strength இருக்கிறது என்று பார்க்காமல், அத்தனைச் சங்கங்களோடும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றேன்.

நம்முடைய உறுப்பினர் திரு. மணி கேட்கிறார். பாட்டாளி மக்கள் கட்சி என்ன பாவம் செய்தது என்று. அவர்கள் இதுவரையிலே விண்ணப்பம் கொடுக்கவில்லை. அவர்களும் விண்ணப்பம் கொடுப்பார்களேயானால் அவர்களையும் அதிலே சேர்த்துக்கொண்டு அவர்களோடும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று மின்சார வாரியத்திற்கு அறிவுரை வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-10

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்பொழுது, மீட்டர்கள் வாங்கியதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன; தவறு நடந்திருக்கிறது என்று சொன்னார்கள். அது பற்றி நான் அவைக்கு விளக்குவது என்னுடைய கடமை.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் எப்பொழுதும் மீட்டர் பற்றாக்குறை இருந்து வருகிறது. வாங்கப்பட்ட மீட்டர்கள் மின் அளவைச் சரியாகப் பதிவு செய்வதில்லை; விரைவில் பழுதாகிவிடுகின்ற ஒரு சூழ்நிலை இருந்து வந்தது. இதனால் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தால் மீட்டர்களுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்று ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு புதியதாக வாங்கப்படும் மீட்டர்களுக்குத் தர நிர்ணயம் Specification செய்யப்பட்டது. இந்தத் தர நிர்ணயத்தின் அடிப்படையில் வெளி ஒப்பந்தப் புள்ளிகள்—open tenders— கோரப்பட்டு பல நிறுவனங்கள் அதிலே போட்டியிட்டன. தகுதிபெற்ற ஆறு நிறுவனங்களுக்கும் மீட்டர் supply order தரப்பட்டன. அவர் சொன்னதைப் பார்த்தால் யாரோ ஒருவருக்குக் கொடுத்துவிட்டதைப் போல் இருந்தது. அந்த டெண்டரில் 6 பேர் பங்கேற்றார்கள். 6 பேரையும் கூப்பிட்டு—ஏனென்றால் 5 இலட்சம் மீட்டர் ஒருவரே சப்ளை செய்ய முடியாது; எனவே 6 பேரையும் கூப்பிட்டு—ஒரு நிபந்தனை விதித்தோம். ஒருவர் மீட்டர் விலை 800 ரூபாய் என்றால், ஒருவர் 810 என்பார்; ஒருவர் 830 என்பார்; இன்னொருவர் 850 என்று சொல்லியிருப்பார். 6 பேருக்கும் நாங்கள் order கொடுக்கிறோம். ஆனால் L-1 rate-க்குத் தான் எல்லோரும் சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த 6 பேர்களும் L-1 rate-க்கே நாங்கள் supply செய்கிறோம் என்று சொன்ன காரணத்தினாலே 6 பேர்களுக்கும் order கொடுக்கப்பட்டது. அதிலே India

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 நவம்பர் 10

Meter என்று ஒன்றைச் சொல்லி அதற்குக் கொடுக்கவில்லையே என்றார்கள். India Meter-க்கும் Order வழங்கினோம். Order கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட Supply order படி மீட்டர்கள் இன்று வரையிலே supply செய்யவில்லை. Order கொடுக்கவில்லை என்பது தவறு. கொடுத்திருக்கின்றோம். இந்த மீட்டர்கள் Electro Magnetic Suspension முறையிலே தயாரிக்கப்பட்டவை. இதற்கு முன்னால் குறைந்த விலையிலே வாங்கப்பட்ட மீட்டர்கள் bearing பொருத்தப்பட்டவை. இந்த bearing-குகள் நாளாவட்டத்திலே தேய்ந்துபோய் விடுகின்ற காரணத்தால் மீட்டர்களின் துல்லியத் தன்மை குறைந்து விடுகிறது. இதனால் மின் வாரியத்திற்குப் பெரும் இழப்பு ஏற்படுகிறது. தற்பொழுது வாங்கப்பட்ட மீட்டர்களில் bearing-குகள் ஏதும் இல்லை என்பதால் அவை பல ஆண்டுகளுக்கு மின்சாரத்தைச் சரியாகக் கணக்கிடும்.

மேலும் இந்த மீட்டர்களுக்கு பத்தாண்டுகளுக்கு உத்தரவாதம் வாங்கப்பட்டுள்ளது. இந்த மீட்டர்களில் குறைகள் ஏதேனும் இருந்தால்—நான்கூட நேற்றைய தினம் 5 ஆண்டுகள் என்று சொன்னேன்; பத்தாண்டுகள் மீட்டர்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த மீட்டர்கள் பழுதானால் உடனடியாக நிறுவனத்தால் மாற்றப்படும். ஏதாவது குறை இருக்குமானால் அந்த மீட்டரை எடுத்துக்கொண்டு வேறு மீட்டர்கள் தருவார்கள். மின்சாரத்தைத் திருடாமல் இருப்பதற்கு இந்த மீட்டர்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. Unit Directional Facility என்ற ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது. பல இடங்களில் இந்த மீட்டர்கள் பொருத்தப்பட்டதால் கிட்டத்தட்ட 20 சதவீதம் அதிக வருவாய், வாரியத்திற்குக் கிடைக்க வழி ஏற்பட்டிருக்கிறது.

நம்முடைய மாநிலத்திலே இதை அமல்படுத்தியவுடனே இதே போன்று மீட்டர் தர நிர்ணயத்தை மற்ற மாநிலங்களான, ஆந்திரா, மராட்டியம், ஒரிசா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்து பொறியாளர்கள் இங்கே வந்து நம்முடைய Specifications-ஐப் பார்த்துவிட்டு, இப்பொழுது அந்த மாநிலங்களிலேயும் இப்படிப்பட்ட மீட்டர்கள்தான் வாங்குவது என்று முடிவு செய்திருக்கிறார்கள். Harel என்ற நிறுவனமும் மீட்டர்களை சப்ளை செய்யும் நிறுவனத்திலே ஒன்று. Harel என்ற நிறுவனம் ஏதோ Elimer என்ற நிறுவனத்திற்கு அப்பா, மகன் என்றெல்லாம் சொன்னார். அது ஒரு நிறுவனம். (குறுக்கீடு) மாமனோ, மருமகனோ, அப்பாவோ, தந்தையோ, ஆனால் Harel என்ற நிறுவனம் மீட்டர்களை சப்ளை செய்யும் நிறுவனமாகும். இவர்கள் சப்ளை செய்யும் மீட்டர்களில் எந்தவிதப் பிரச்சினையும் இதுவரையிலே



2000 நவம்பர் 10] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

வரவில்லை. சப்ளையும் நல்லமுறையிலே இருக்கிறது. Elimer என்ற நிறுவனம் Harel நிறுவன உரிமையாளரின் மகனுக்குச் சொந்தமானது என்று தெரிய வருகிறது. இவர்களும் இந்த ஒப்பந்தப்புள்ளியிலே பங்கேற்றனர். ஆனால் தகுதி இல்லாத காரணத்தால் இவர்களுடைய ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்பட்டு விட்டது. மேலும் Elimer நிறுவனம் தமிழ்நாடு மின் வாரியத்தால் black-list செய்யப்படவில்லை. இங்கே black-list செய்ததாகச் சொன்னார்கள். Black-list செய்யப்படவில்லை. ஆனால் அவர்கள் கொடுத்த sample தகுதியற்றவை. ஆகவே, அவர்களுக்கு உத்தரவு வழங்கவில்லை. மீட்டர்கள் தமிழ்நாடு மின் வாரியத்தின் பணப் பெட்டகம் Cash chest. ஆகையால் மின் வாரியத்திற்கு வருமானம் வர வேண்டுமென்றால் மீட்டர்கள் நன்றாக இருக்க வேண்டும். எனவே அது Cash chest-ஆக இருக்கின்ற காரணத்தினாலே தரமான மீட்டர்களை வாங்குவது மிக அவசியமாகும். அதுமட்டுமல்ல, குறைந்த விலையில் மீட்டர்களை சப்ளை செய்ய ஒப்புக்கொண்டு அந்த விலையில் போதிய மீட்டர்களை மின் வாரியத்திற்கு supply செய்வதில்லை. ஆனால் அதே மீட்டர்களை அதிக விலையிலே நுகர்வோருக்கு விற்று வந்தனர். இந்த நிலை மாற்றப்பட்டு, வாரியத்திற்குத் தேவையான அளவில் தரமான மீட்டர்கள் வாங்கப்பட்டு இருப்பில் இருக்கின்றன. விண்ணப்பித்த ஒரே நாளிலே அனைவருக்கும் இப்பொழுது மீட்டர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

மீட்டர்கள் மட்டுமல்ல; எதுவாக இருந்தாலும் டெண்டர்தான். Nomination-முறையே இப்பொழுது கிடையாது. இது அரசாங்கத்தினுடைய உத்தரவு. அமைச்சரவையினுடைய உத்தரவு. எனவே,

Meter, Cable, Conductor, transformer-இதில், எதுவாக இருந்தாலும் Open tender மூலம்தான் பொருள்களை வாங்குகிறோமே தவிர தனியாக யாரிடத்திலும் பேரம் பேசி வாங்குவதில்லை.

பிற்பகல் 1-15

அடுத்து Videocon Power Limited தொடர்பான செய்திகளை மாண்புமிகு உறுப்பினர்கள் செல்லக்குமார் அவர்களும் விஸ்வநாதன் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். நாட்டினுடைய நன்மைக்காகவும் இந்த அவையினுடைய நன்மைக்காகவும் அதுகுறித்து சில விளக்கங்களை நான் தெரிவிப்பது நல்லது என்று கருதுகின்றேன்.

Videocon Power Limited என்ற நிறுவனத்துடன் தமிழ்நாடு மின்சார வாரியம் 2-2-1998-ல் செய்து கொண்ட மின் கொள்முதல் ஒப்பந்தம் (Power Purchase Agreement) மற்றும் அந்த நிறுவனத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருமான அடிமான ஒப்பந்தமும் (Escrow Agreement) காலாவதியாகிவிட்டன. இது தொடர்பாக அந்த நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. அந்த வழக்கில் தேவையான பதிலுரைகள் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. Videocon Power Limited நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் விலை பிற தனியார் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் விலைகளோடு ஒப்பிடுகையில் அதிகமாக உள்ளது. மின்சாரத்தின் விலை குறைவாக இருப்பதின் அடிப்படையில் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களை முன் உரிமைக்காக வரிசைப்படுத்துவதே சரியானது என்கிற நிலை, இந்திய உச்சநீதிமன்றத்தால், வழக்கு எண்.எஸ்.எல்.பி.(சி) எண். 9770 முதல் 9772 வரை, 1999 ஆம் ஆண்டு போடப்பட்ட வழக்கு 9795 முதல் 9797 வரையில், பிறகு 14792 முதல் 14853 வரை, என்று மூன்று வழக்குகள் உச்சநீதிமன்றத்திலே தொடுக்கப்பட்டன. உச்சநீதிமன்றம் இது குறித்து ஒரு முடிவை அறிவித்திருக்கிறது. மத்தியப் பிரதேச அரசுக்கு எதிரான இந்த வழக்கு, Indian Thermal Coal Limited என்ற நிறுவனம் தொடர்ந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் இந்த நிலையினை உறுதி செய்துள்ளது. உச்சநீதிமன்றம் இதில் தன் தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

“தொடர்புடைய சூழ்நிலைகளையும் உண்மை நிலைகளையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, மின் கொள்முதல் விலை குறைவு என்ற அளவுகோல் நல்லதோர் அளவுகோல் அல்ல என்ற வாதத்தையும், இது போலியானதும் தன்னிச்சையானதுமான ஒரு அளவுகோல் என்ற வாதத்தையும் எங்களால் ஏற்க இயலவில்லை.” இது உச்ச நீதிமன்றம் சொன்ன தீர்ப்பு. “Having considered all the relevant facts and circumstances, it is not possible for us to agree with the contention that the least tariff criterion was not a good criterion as it was unrealistic and arbitrary”

மேற்கண்டவாறு கூறிய இந்திய உச்சநீதிமன்றம், குறைந்த மின் கட்டணம் என்ற அளவுகோலைக் கருத்திலே கொண்டு தனியார் மின் நிறுவனங்களை முன்னுரிமை வரிசைப்படுத்துவது நீதியின்பாற்பட்டது என்றும் ஒட்டுமொத்த பொது நிலையை அடிப்படையாகக் கொண்டது என்றும் உறுதிப்படுத்தியுள்ளது.



இதன் அடிப்படையிலேதான் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு முடிவை எடுக்கவேண்டியிருந்தது. அதோடுகூட நிதியாதாரங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும். டாக்டர் செல்லக்குமார் . அவர்கள் குறிப்பிட்டதைப்போல அவர்கள் சொன்ன Crisil நிறுவனத்திடமிருந்தும் புள்ளிவிவரங்களைப் பெற்றோம். ஒரு யூனிட் மின்சாரம் 3 ரூபாய் 94 காசுக்குத்தான் அவர்கள் நமக்குக் கொடுப்பார்கள் என்று அவர்கள் தெரிவித்தார்கள். அந்த Crisil நிறுவனம் தெரிவித்திருக்கிறது. இதையெல்லாம் நாங்கள் பார்த்தோம். 3 ரூபாய் 94 காசு கொடுத்து மின்சாரம் வாங்கினால் அந்த Videocon Power Limited நிறுவனம் 30 ஆண்டுகளுக்கு அவர்கள் நமக்கு மின்சாரம் வழங்க இருக்கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேறினால் 3 ரூபாய் 94 காசு கொடுத்து வாங்கினால், அதற்கு அடுத்துள்ள மின் திட்டத்தோடு இதை ஒப்பிட்டுப் பார்த்தால் ஆண்டுக்கு 900 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. ஓர் ஆண்டுக்கு 900 கோடி ரூபாய் என்று சொன்னால் 30 ஆண்டுக்கு 27 ஆயிரம் கோடி ரூபாய் இதனாலே மின் வாரியத்திற்குக் கூடுதலாகச் செலவு ஏற்படும். தமிழக அரசுக்கும் நஷ்டம், மின் வாரியத்திற்கும் நஷ்டம், பொதுமக்களுக்கும் நஷ்டம். எனவேதான் இப்படிப்பட்ட அதிகக் கட்டணம் கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை. அதுமட்டுமல்ல, அந்தத் திட்டம் காலாவதி ஆனதற்கு நாம் காரணம் அல்ல, குறிப்பிட்ட நேரத்திலே அவர்கள் financial closure-க்குப் போகவில்லை. Escrow ஒப்பந்தம் என்றைக்கு, செய்கிறோமோ அன்றிலிருந்து 6 மாதத்திற்குள்ளாக financial closure-செய்திருக்க வேண்டும். இது விதிமுறை. இந்த விதிமுறையையும் அவர்கள் பின்பற்றாத காரணத்தால், இரத்து செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதே தவிர, விஸ்வநாதன் அவர்கள் சொன்னதைப்போல இந்த அரசாங்கத்திற்கு அவர்களிடத்தில் ஒரு soft-corner இல்லை.

Videocon power Limited நிறுவனம் மட்டுமல்ல. இந்தத் தமிழகத்திலே யாரோடும் இப்படிப்பட்ட விவகாரங்களிலே நாங்கள் soft-corner ஆக இருக்கமாட்டோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: டாக்டர் செல்லக்குமார், உங்கள் இரண்டு பேருக்குள் பேசிக்கொள்ளக்கூடாது. என்னிடம் அனுமதி கேட்க வேண்டும். கேளுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்தத் தனியார் நிறுவனத்திற்கும் கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. நான் பேசும்போது தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில்தான் என்னுடைய வாதமும் அமைந்திருந்தது. குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள்ளாக அமைச்சர் அவர்கள் சொல்லிய காரணத்தால் நான் சொல்கிறேன். அவர்கள் 'Escrow' ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு 6 மாதத்திற்குள்ளாக அவர்கள் அதை நிறைவேற்றவில்லை. எனவே ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். 1992-ல் அனுமதி வழங்கப்பட்ட 2, 3 நிறுவனங்கள் குறிப்பிட்ட கால அவகாசத்தைத் தாண்டி, அந்த எல்லையைத் தாண்டி, அவர்களுக்கு 5 ஆண்டுகள் என்று சொல்வதற்குப் பதிலாக 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள் கடந்த பிறகுகூட அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, அவர்கள் தங்களுடைய மின் உற்பத்தியை இப்போது தொடங்கியிருக்கிறார்கள். சிறிய அளவிலே 200 மெகாவாட், 250 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களுக்குக்கூட 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள் கால அவகாசத்தை இந்த அரசு கொடுத்திருக்கிறது. ஆனால், அமைச்சரவர்கள் குறிப்பிட்ட அந்தத் தனியார் நிறுவனம் 1050 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற ஒரு தனியார் நிறுவனம். அவர்களுக்குக் கொடுத்திருக்கிற கால அவகாசம் என்பது 5 ஆண்டுகள். இந்த 5 ஆண்டுகள், அவர்கள் வெளிநாட்டிலே இருந்து—பல்வேறு மேலை நாடுகள்—இத்தாலி, சுவிட்சர்லாந்து போன்ற பல மேலை நாடுகளிலிருந்து—அவர்கள் அதற்கான நிதி ஆதாரத்தை அரசு மூலமாக இந்த அரசுக்கு ஒப்படைத்திருக்கிறார்கள். மேலை நாட்டினுடைய பல்வேறு வங்கிகள், இந்தியாவினுடைய I.C.I.C.I. நிறுவனம் உட்பட பல்வேறு நிறுவனங்கள் நிதி ஆதாரங்களையும் திரட்டிக் கொடுத்திருக்கின்றன.

பிற்பகல் 1-20

இவற்றையெல்லாம் கொடுத்து இறுதியான நிதித் திட்டத்திற்கு வருவதற்கு, கையொப்பமிடுவதற்கு இருக்கின்ற காலகட்டத்திலேதான், இது இரத்துச் செய்யப்பட்டது என்பது மட்டுமல்ல, இன்னொன்று, குறைந்த விலையிலே மின்சாரம் வாங்க வேண்டும் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. அதைத்தான் நான் தெளிவாகச் சொன்னேன்; இயற்கை எரி வாயுவின் மூலமாக நீங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்யப்போகிறோம்—என்று சொன்னீர்களே, N.T.P.C. நிறுவனம் ஏற்கெனவே 4 நிறுவனங்கள் மூலமாக



இயற்கை எரி வாயுவின் மூலமாக மின்சார உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. இந்திய நாட்டினுடைய N.T.P.C. என்று சொல்கின்ற தேசிய அனல் மின் நிலையம், இப்படி எரி வாயு மூலமாக உற்பத்தி செய்கிற மின்சாரத்திற்கு ஐந்து ரூபாய் ஒரு கிலோவாட்டிற்கு வருகிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அது அதிகமான விலை இல்லையா என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து ரூபாய் கொடுத்து மின்சாரத்தை வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் இந்த அரசாங்கம் நிச்சயமாக வாங்காது. அதை உறுதியாகச் சொல்லுகிறேன். இன்னொன்று, சொன்னார்கள். ஐந்து ஆண்டுகள்தான் ஆகின்றன ஒப்பந்தம் செய்து என்று. ஐந்து ஆண்டு அல்ல, இந்தத் திட்டங்களெல்லாம் கையெழுத்திட்டதே நம்முடைய நரசிம்மராவ் அவர்கள் பிரதமராக இருந்தபோது; மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது; 1993-ஆம் ஆண்டு எல்லோருமே அப்போதுதான் M.O.U.-வில் Sign செய்தார்கள். (குறுக்கீடு) ஒவ்வொன்றாக நான் சொல்லுகிறேன். எல்லாவற்றிற்கும் ஆதாரம் இருக்கிறது. அப்போதுதான் எல்லாத் திட்டங்களுமே வந்தன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வது, 7 ஆண்டுகளா, 8 ஆண்டுகளா, 10 ஆண்டுகளா என்பது அல்ல. எந்த ஒரு மின் திட்டமாக இருந்தாலும் கடைசியாக Power Purchase Agreement செய்து, Escrow அனுமதி பெற்று விட்டால், Escrow பெற்ற ஆறு மாதங்களுக்குள்ளாக financial closure-க்குப் போக வேண்டும் என்பதுதான் விதி. ஆனால், அவர்கள் போகவில்லை. அது நம்முடைய குற்றமில்லை. அந்த நிறுவனத்தினுடைய குற்றம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்அவர்களுக்கு இதிலே ஏதாவது 1% சந்தேகம் இருந்தால்கூட மின் வாரியத்தினுடைய அத்தனை கோப்புகளையும் அவருக்கு அனுப்பி வைக்கிறேன். அவர் பார்க்கலாம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார வாரியத்திற்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் இருக்கின்றனவே, அதைப்பற்றி இப்போது சொன்னேன். Open Tender மூலமாகத்தான் நாங்கள் வாங்குகிறோம் என்று. முன்பெல்லாம் நம்முடைய பெரியவர்கள் சொல்வார்கள், 'திருமணங்கள் சொர்க்கத்திலே நிச்சயிக்கப்படுகின்றன' என்று. அதைப்போல, கடந்த காலத்திலே எந்தப் பொருள் வாங்குவதாக இருந்தாலும், அது கோட்டையிலேதான் நிச்சயிக்கப்படும். ஆனால், இந்த ஆட்சியிலே எந்த டெண்டராக இருந்தாலும் கோட்டைக்கு வரவே கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றையும் மின்சார வாரியமேதான் முடிவு செய்ய வேண்டும்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 நவம்பர் 10

இன்னும் பெருமையோடு சொல்கிறேன். இங்கே தலைவர் பூர்ணலிங்கம் இருக்கிறார். இதற்கு முன்னாலே நான்கு தலைவர்கள் இருந்தார்கள். நானோ, முதலமைச்சரோ அல்லது எந்த அமைச்சரோ, இதுவரையிலே மின்சார வாரியத்திலே, இந்த ஐந்து ஆண்டு காலத்தில் சுமார் 10 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு நிலக்கரியிலே இருந்து மீட்டர் வரை வாங்கியிருப்பார்கள். ஒரு டெண்டரிலேகூட நாங்கள் தலையிட்டதில்லை என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இறுதியாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இலாகாவைப் பாராட்டினார்கள். என்னையும், முதலமைச்சரவர்களையும் பாராட்டினார்கள். இவ்வளவு பெருமைகளுக்கும் காரணம் முதலமைச்சரவர்கள்; மின்சாரத் துறை அமைச்சர் என்று சொன்னார்கள். இந்தப் பெருமைக்கு நாங்கள் உரியவர்களாக இருக்கலாம். ஆனால் நாங்கள் இரண்டு பேர் மட்டுமே இந்தச் சாதனைகளைச் செய்துவிட முடியாது. இந்தச் சாதனைகளுக்கு எல்லாம் காரணம் மின் வாரியத்தினுடைய தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே வாரிய உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர்கள், அங்கே உள்ள பொறியாளர்கள், மின்சார ஊழியர்கள். அவர்கள் அத்தனைபேரும் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத்தான். தமிழ்நாடு ஒரு காலத்திலே கலைஞர் ஆட்சிக்கு வந்தால் இருண்ட காலமாக மாறிவிடும் என்று சொன்னவர்களுடைய கூற்றைப் பொய்யாக்கி ஒளிமயமாக இந்தத் தமிழகத்தை ஆக்கியிருக்கிறோம். எனவே, இதற்காக ஒத்துழைத்த மின்வாரியத் தலைவரிலிருந்து அத்தனை பேருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-11-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

71. செங்கற்பட்டில் உள்ள திருவாளர்கள் போர்டு இந்தியா லிமிடெட் நிறுவனம் 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்



2000 நவம்பர் 10]

*கீழ், செலுத்தத்தக்க வரியை சில நிபந்தனைகளுக்குட்பட்டு 1-12-1999 ஆம் நாளிலிருந்து 30-11-2013 ஆம் நாள் வரையிலான பதினான்கு ஆண்டு காலஅளவிற்கு தள்ளிவைப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 12-9-2000 நாளிட்ட 145 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

72. *செங்கற்பட்டு மற்றும் விழுப்புரம் அங்காடிக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டது குறித்து வேளாண்மைத் துறையின் 5-5-2000 நாளிட்ட 137 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]*

78. *1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வேளாண்மைத் துறையின் 25-5-2000 நாளிட்ட 161-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

74. *உரிமையியல் நீதிபதி (முதுநிலைப் பிரிவு) செல்வி எஸ். மாலதி அவர்களை கோயம்புத்தூர் தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் அமர்வு) கூடுதல் உறுப்பினராக (நீதித் துறை) நியமிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 20-9-2000 நாளிட்ட அரசாணை (2டி) எண் 149-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

75. *1998-99-ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].*

76. *1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்*

[2000 நவம்பர் 10

(மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

77. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

78. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

79. 1996-97 மற்றும் 1997-98 ஆகிய ஆண்டுகளுக்கான வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

39. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. (2000-2001)

40. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. (2000-2001)

41. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. (2000-2001)

42. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. (2000-2001)

43. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூறாவது அறிக்கை. (2000-2001)

44. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று ஒன்றாவது அறிக்கை. (2000-2001)

45. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று இரண்டாவது அறிக்கை. (2000-2001)



2000 நவம்பர் 10]

46. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று மூன்றாவது அறிக்கை. (2000-2001)

47. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று நான்காவது அறிக்கை. (2000-2001)

48. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று ஐந்தாவது அறிக்கை. (2000-2001)

49. மனுக்கள் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை. (2000-2001)

50. மனுக்கள் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை. (2000-2001).

222457
V211,31 800
800.110-2